

# தெளிந்த நிலவு

சத்யா இராஜ்குமார்

# தெளிந்த நிலவு



## 1

''வாவ் அண்ணா...''

''ஹாய் அண்ணா!''

''ஹலோ ஹரிவர்தன்!''

''ஹரியா வா வா...''

அனைத்துக் குரல்களும் ஒருசேர ஒரே நேரத்தில் பல விதமாக ஒலிக்க, யாருக்கு முதலில் பதில் சொல்வதென்று தெரியாமல் அனைவரையும் புன்னகையுடன் பார்த்தான் ஹரிவரதன்.

''என்னப்பா இத்தனை பேர் பேசறோம் நீ பேச மாட்டியா?''

அத்தை காஞ்சனா கேட்க, ''ம் இப்பப் பேசலாம் அத்தை. சொல்லுங்க எல்லாரும் எப்படியிருக்கீங்க?'' என்று கேட்டான்.

அதற்கு அவனுடைய அத்தை காஞ்சனா பதில் சொல்வதற்கு முன்பாகவே இடையில் புகுந்திருந்தாள் அவனுடைய சித்தப்பா பெண் ஸ்மிர்த்தி.

''நாங்க எல்லாரும் ஃபைன். நீங்க ரிசப்ஷனுக்கு வருவீங்கன்னு நினைச்சுக் கூடப் பாக்கல ரொம்ப சந்தோஷமா இருக்குண்ணா'' என்று உணர்ந்து சொன்னாள்.

அந்த ஸ்மிர்த்தியின் உடன் பிறந்த தமக்கை ஸ்ரீநிதிக்கு தான் அப்பொழுது திருமண வரவேற்பு நடந்து கொண்டிருந்தது.

ஒரு வாரத்திற்கு முன்பே மாப்பிள்ளையின் சொந்த ஊரில் திருமணம் முடிந்திருக்க, இப்பொழுது மணப் பெண்ணின் ஊரான சென்னையில் மிகப் பிரமாண்டமான முறையில் அவர்களுக்கே உரித்தான வகையில் திரு மண வரவேற்பு சிறப்பாக நடந்து கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் வெளிநாட்டிலிருந்து வந்த ஹரி வரதனைத் தான் அனைவரும் ஆச்சரியத்துடன் வர வேற்றதும்,

அதிலென்ன ஆச்சரியம் என்று யோசிக்கிறீர்களா.

தனது கனவு ப்ராஜக்ட் ஒன்றிற்காக ஒரு மாதப் பயண மாக வெளிநாடு சென்றிருந்த ஹரிவரதன், இப்பொழுது பதினைந்து நாட்களிலேயே திரும்பி வந்திருக்கிறா னென்றால் அது திருமண ரிஷப்சனுக்காகத் தானே இருக்க முடியும்.



அதில் தான் அனைவருக்கும் ஆச்சரியமே.

பிஸினஸ் என்று வந்து விட்டால் ஹரிவரதனுக்கு மற்ற அனைத்துமே இரண்டாம் பட்சம் தான்.

அது அவனுடைய சொந்தங்கள் நட்பு வட்டம் என அனைவருமே அறிந்தது தான்.

அதுவும் இரகசியமாக யாரும் அறியாமல் வேறு வந்திருக்கிறானே.

அவனுடைய வருகையில் தான் அனைவருக்கும் எவ்வளவு சந்தோஷம்.

பின்னே, ஹரிவரதனென்றால் சும்மாவா,

ஒரு நிமிடம் தன்னுடன் பேச மாட்டானா, தங் களுடைய வீட்டு விசேஷத்திற்கு வர மாட்டானா, ஒரு நாள் லஞ்ச் சாப்பிடத் தங்களுடன் வர சம்மதிக்க மாட்டானா என்றெல்லாம் தெரிந்தவர்கள் சொந்தங்கள் முதல் தொழில் வட்டம் வரை அனைவரும் எவ்வளவு ஆவலுடன், அவனை எதிர்பார்ப்பார்கள்.

முடிந்த அளவு அனைவரிடமும் பேசிவிட்டுச் சற்றுத் தள்ளி அமர்ந்திருந்த தனது தாயை நோக்கி வந்தான், ஹரிவரதன்.

''வாடாப்பா.''

''வரலாம்மா, எப்படியிருக்கீங்க?''

''எல்லாரும் நலம், என்ன திடீர் ஆச்சரியம்?''

''போன வேலை திருப்தியா முடிஞ்சதுமா, ஆனாலும் ரிசப்ஷனுக்கு வந்து சேர முடியுமான்னு சந்தேகமா இருந்தது. ஒருவேள சொன்ன நேரத்துக்கு வர முடிஞ் சிருக்கலேன்னா அதுதான் இந்த சஸ்பென்ஸ்.''

''நினைச்சேன். ஆனாலும் ட்ரை பண்றேன்னு ஒரு வார்த்த சொல்லியிருக்கலாமேப்பா. கேக்கறவங்களுக்கு பதில் சொல்லி ஓயல...''

''அதெப்பிடிமா சொன்ன மாதிரி வர முடியாமப் போயிடுச்சுன்னா'' என்று கேட்ட மகனைப் பெருமை யுடன் பார்த்தார் அவனுடைய தாய் வசந்தி.

அவனுடைய ஒரு சிறு வார்த்தை கூடத் தவறாகி விடக் கூடாதென்று பார்க்கிறானே.

அது மட்டுமா சிறுசிறு விஷயங்களிலும் கூட எவ்வளவு கவனம்.

இதனாலெல்லாம் அல்லவா அவன் தொழிலில் எப்பொழுது நம்பர் ஒன்னாக இருக்கிறான். ஏன் தொழில் மட்டுமா.

அவர் மீண்டும் நடப்பிற்கு வந்து பார்த்த போது அவருடைய மகன் அங்கு இருக்கவில்லை.

மணமேடையில் மணமக்களுடன் பேசிக் கொண் டிருப்பது தெரிந்தது.

பளிச்சென்று ராஜா போல அருகில் இருப்பவர்களை யெல்லாம் குள்ளமாக்கிக் கொண்டு எவ்வளவு கம்பீரமாக நிற்கிறான்.

''அட ஸார் எப்ப வந்தார்...''

யாரோ ஏதோ கேட்பது காதில் விழ, மீண்டும் நடப்பிற்கு வந்தவராய்த் திரும்பிப் பார்த்தார்.

கணவன் நின்றிருக்க, ''வாங்க'' என்று எழப் போனார்.



''நீ உக்காரு...'' என்று மனைவியை விடாமல் அருகில் இருந்த சேரில் அமர்ந்தார் கமலநாதன்.

''ஹரி வந்துட்டான் பாத்தீங்களா?''

''அதத்தான் பாத்துட்டிருக்கேனே, நீ கட்டுக்கடங்காத பெருமையோட மத்தவங்க பேசறது கூடக் காதுல விழாத அளவுக்கு உன் மகனப் பாத்துட்டிருக்கறத...''

''அப்பிடியல்லாம் பாக்கலையே'' என்று சிரித்தவர் ''கிளம்பி வரப் போறேன்னு இவன் ஒரு வார்த்த சொல்லியிருக்கலாம்'' என்று ஒரு சிறு குறைபோலச் சொன்னார்.

''சொல்லலேன்னு உனக்கெப்பிடித் தெரியும்?''

அப்படிக் கேட்ட தன்னை மனைவி ஆச்சரியத்துடன் பார்க்க, ''ஹரிதான் யார்கிட்டயும் சொல்ல வேண்டாம்னு சொல்லிட்டான்'' என்றார் கமலநாதன்.

''எங்கிட்டக் கூடவா?''

''உங்கிட்டதான் முக்கியமா சொல்லவே கூடாதுன்னு கேட்டுக்கிட்டான்.''

''அப்பாவும், மகனும் சேந்து கடைசில என்ன நல்லா முட்டாளடிச்சட்டிங்க இல்ல?''

''அப்பிடியில்லமா...''

''என்ன அப்பிடியில்ல ஒருத்தரா ரெண்டு பேரா கேக்கறவங்க எல்லார்கிட்டயும் இன்னும் பத்து நாளாகும் பதினஞ்சு நாளாகும்னு சொல்லிட்டிருக்கேன். ஆமா உங்ககிட்டயும் எல்லாரும் கேட்டிருப்பாங்களே நீங்க என்ன சொன்னீங்களாம்...''

''நானும் உன்ன மாதிரி தான். ஆனா இத்தன நாள்னு குறிப்பிட்டு எதயும் சொல்லல வேல முடிஞ்சதும் கிளம்பிடுவான்னு சொன்னேன்.''

மனைவியின் முகத்தில் நம்பாமை தெரிய, ''எனக்கும் அவன் இன்னைக்கே வந்துடுவான்னு தெரியாது'' என்று பாதி உண்மையை உறைத்தவர் ''நிச்சயமாத் தெரியாத ஒன்ன உங்கிட்ட சொன்னா நீயும் எதிர்பார்த்து உன் ஹெல்த்த ஸ்பாயில் பண்ணிக்குவியோன்னு ஹரிக்கு பயம்'' என்றார்.

''ஹரிக்கு மட்டும்தானா, ஏன் உங்களுக்கு இல்லையா?'' என்று கேட்டுக் கொண்டே கணவனின் தங்கை காஞ்சனா வந்து அருகில் அமர, ''வாம்மா இவ்வளவு நேரமா எங்க போயிருந்த உன்னக் காணலியே'' என்று நாத்தனாரை வரவேற்றார் வசந்தி.

''ஆமா அண்ணி இப்பக் கொஞ்சம் முன்னாடி தான் வந்தேன், ஹரியக் கூடப் பாத்துப் பேசினேன். திடீர்னு ஹரியப் பாத்ததுல என்னால நம்பவே முடியல, எனக்குன்னு மட்டுமில்ல எல்லாருக்குமே ஆச்சரியம் தான்.''

தங்கையிடம் தானும் சில வார்த்தைகள் பேசிய கமல நாதன் பிறகு தனக்கு முன் இருக்கையில் வந்து அமர்ந்த தங்கை கணவனிடம் பேசத் தொடங்கி விட்டிருந்தார்.

கமலநாதனுக்கு இரண்டு தங்கைகள், ஒரு தம்பி அவர் மூத்தவர்.

அந்தத் தம்பியின் மூத்த மகளுக்குத் தான் இப்பொழுது திருமண வரவேற்பு நடந்து கொண்டிருந்தது.



''என்ன அண்ணா நான் கேட்ட கேள்விக்கு நீங்க இன்னும் பதிலே சொல்லலியே'' என்று தங்கை காஞ்சனா கேட்க, ''என்னமா?'' என்றார் கமலநாதன்.

''இல்ல அண்ணி ஹரிய எதிர்பாத்து உடம்பக் கெடுத்துக்குவாங்கன்னு ஹரிக்கு மட்டும் தான் அந்த பயமாக்கும்?'' என்று மீண்டும் தங்கை காஞ்சனா கேட்க ''எனக்கும் தான்'' என்று உண்மையை மறைக்காமல் சொன்னார் கமலநாதன்.

''அதானே, ஆனாலும் நீங்க ரொம்ப லக்கி அண்ணி அன்பான கணவன். தொழில்ல நாளுக்கு நாள் வளந்துட்டே போற மகன். அவனும் உங்களுக்காக எவ்வளவு பாக்கறான், மொத்தத்துல அழகான குடும்பம்.''

ஏன் சாதாரண ஒன்றை இவ்வளவு மிகைப்படுத்திப் பேசுகிறாளென்று வசந்தியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை, கமலநாதனுக்கும்.

அடுத்து பேச்சு எப்படி திசை மாறும் என்பதும்,

''ஆமா, சுமிதா ஏதேதோ சொல்லிட்டிருக்காளாமே கேள்விப்பட்டேன். அவ சொல்ற மாதிரி செய்யலேன்னா வக்கீல் நோட்டீஸ் கூட அனுப்பறதா பேசிட்டிருந்தாளாம்...''

மனதிற்குள் அஞ்சியது போலவே நடந்திருக்க, தான் பரவாயில்லை ஆனால் வம்பர்களின் மத்தியில் பாவம் மனைவி மாட்டிக் கொள்ளக் கூடாதே என்று பார்த்தார் கமலநாதன்.

கணவனின் கவலை புரிய, ''ஹரி கூப்புட்றான் பாருங்க, சரி வாங்க அவன் ஸ்டேஜ்ல இருக்கும் போதே

போய் ஃபேமிலி போட்டோவ எடுத்துட்டு வந்துடலாம். அவன் தான் கல்யாணத்துக்கும் வரலியே. இதுக்காவது சேந்து எடுத்துக்கலாம்'' என்று வசந்தி எழுந்திருந்தார்.

''இப்ப வந்துட்றோம்'' என்று பொதுவாகச் சொன்ன வசந்தி கணவனுடன் நடக்க, ''புருஷன் பொண்டாட்டி ரெண்டு பேரும் எந்த அளவுக்கு இருக்காங்க பாருங்க. ஊருக்கு தெரிஞ்ச விஷயம் நமக்குத் தெரியக் கூடாதாம். நாம என்ன அந்த அளவுக்கா கேவலமாப் போய்ட்டோம்'' என்று காஞ்சனா தனது கணவனிடம் ஆக்ரோஷமாகச் சொல்ல, ''அது ஏன்னு உங்களுக்கே புரியலையாம்மா?'' என்று கேட்டான் அவருடைய மகன் ராம்.

''ஏனாம்?''

''ம், வம்பு பேசறவங்ககிட்டக் கொஞ்சம் தள்ளியே இருந்துக்கலாம்னு பாக்கறாங்க. இனிமேலாவது ரோஷம் வந்து நமக்கேன் மத்தவங்க பிரச்சனைன்னு இருந்துடுங்க பாக்கலாம்...''

''என்னடா வாய் நீளுது...''

''அட என்னமா நீங்க, நான் உண்மையத் தான் சொன்னேன். எனக்குத் தெரிஞ்சு அத்தை மாமா, ஹரி அத்தான் எல்லாருமே ரொம்ப நல்ல டைப், மறந்தும் கூட மத்தவங்க விஷயத்துல மூக்க நுழைக்கறதோ இல்ல தப்பாப் பேசறதோ கிடையாது. எல்லாத்துக்கும் மேல ஒரு விசேஷம், நல்லது கெட்டதுன்னு வந்துடக் கூடாதே போய் பெரிய மூட்டையும் கட்டிட்டு வந்துட் றீங்க. நீங்களும் சரி, பெரியம்மாவும் சரி அண்ணன்னு உரிம கொண்டாடிட்டுப் போய் பணமாவும், நகையாவும் மட்டும் எவ்வளவு கறந்துட்டு வர்றீங்க. ஏன் மாமாவுக்கு வேணும்னா நீங்க ரெண்டு பேரும் கூடப் பிறந்தவங்களா இருக்கலாம். ஆனா அத்தைக்கு? அவங்க மட்டும் குடுக்கக் கூடாதுன்னு ஒரு வார்த்தை சொன்னா அதுக்கப்புறம் அங்கிருந்து உங்க ரெண்டு பேராலையும் ஒரு பைசா கொண்டு வர முடியுமா சொல்லுங்க?''



''என்னடா, பாவமே என்னதான் சொல்றான்னு கேட்டுக்கிட்டிருந்தா பெரிய மனுஷன் மாதிரி ஏதேதோ சொல்லிட்டிருக்க. ஊர் உலகத்துல நடக்காதத்தான் நாங்க செய்யறோமா...''

''ஆமாம், எதுக்கெடுத்தாலும் இப்படி சொல்லியே வாய அடச்சுடுங்க'' என்று அலுத்துக் கொண்டவன், ''அது சரி நான் ஹரி அண்ணாகிட்டப் பேசணும்'' என்று நகர்ந்தான்.

அதே நேரம் சற்று முன்பு அங்கு வந்த அவனுடைய தம்பி லஷ்மனிடம் அதாவது தன்னுடைய சின்ன மகனிடம் ''பாருடா அவன் என்னவெல்லாம் சொல் லிட்டுப் போறான்னு'' என்று குற்றம் சாட்டினாள் காஞ்சனா.

''என்னதான் உண்மையா இருந்தாலும் இவ்வளவு ஹார்ஸா சொல்லியிருக்க வேண்டியதில்லதான்'' என்று அவனும் அண்ணனைப் போலவே சொல்ல, ''நீயுமா? சரிதான் ரெண்டுமே ஒரே குட்டைல ஊறின மட்டைங்க தான'' என்று சலித்துக் கொண்டாள்.

''ச்சேச்சே, அதுக்காக உங்கள நீங்களே ஏம்மா திட் டிக்கறீங்க...''

''போடா நீயும் போய்ப் பேச வேண்டியதிருந்தாப் போ...''

''பின்ன ஹரி அண்ணாகிட்ட ஏன் அத்தெ, மாமா கிட்டயெல்லாம் பேசி எத்தன நாளாச்சு. வர்றேம்மா'' என்று சின்னவனான லஷ்மனும் செல்ல திரும்பி தனக்கு முன் வரிசையில் அமர்ந்திருந்த கணவனைப் பார்த்தாள் காஞ்சனா.

அவர் தனக்கு எதற்கடா வம்பு என்று நினைத்தாரோ என்னவோ. வெகு மும்முரமாக மணவறையை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க சரிதான் மகன்களாவது ஒருவிதத்தில் பரவாயில்லை வாயையாவது திறந்தார்கள் என்று எரிச்சலுடன் நினைத்துக் கொண்டாள்.

மிகவும் நெருங்கிய சொந்தங்கள் மட்டும் அப்பொழுது வந்திருக்க, பெருமளவு மண்டபம் காலியாகத்தான் இருந்தது.

ஆனால் சில நிமிடங்களிலேயே ஒவ்வொருவராக வரத் தொடங்கியிருக்க அப்பொழுது தான் உள்ளே வந்த தனது தமக்கையை சற்று உரக்க அழைத்த காஞ்சனா, தான் இருக்குமிடத்தை சைகையால் தெரிவித்தாள்.

அதற்குள் அருகில் வந்திருந்த கல்பனா, தங்கையிடம் ''நீ எப்ப வந்த?'' என்று கேட்டாள்.

அப்படியே தங்கை கணவனிடமும் சில வார்த்தைகள் பேசியவள், ''ஸ்டேஜ்க்குப் போய்ட்டு வந்துடலாமா?'' என்று தங்கையைப் பார்த்தாள்.

''இன்னும் கொஞ்சம் போகட்டுமே.''

''சரிதான் இன்னும் எல்லாரும் வந்துடட்டும், எப்பிடியும் எல்லாரும் ஒன்னா நின்னு பெரிய குரூப்



போட்டோ எடுக்காம தம்பி விடமாட்டான். அட ஹரி வந்துட்டான் போலிருக்கு.''

''ஆமா. அவன் வர்றது உனக்கும் தெரியாதா?''

''ம்கூம், காலைல அண்ணங்கிட்டப் பேசும்போது கூட அவர் ஒண்ணும் சொல்லலியே...''

''எப்படி சொல்லுவாங்க? குடும்பப் பிரச்சனை சமாளிக்கத் தெரியாம, ம்கூம் முடியாம மகன அவசரமாக் கிளம்பி வரச் சொல்லியிருப்பாங்க. ஹரி குணத்துக்கு அவன் எடுத்த வேலைய பாதில விட்டுட்டு வர்றவனும் கிடையாது. மகன் வர்றான்னு சொல்லிப் பின்ன இல்லாம போயிடுச்சுன்னா... அதான் அம்மாவும் ஐயாவும் வாயே திறக்கல...''

''இருக்கலாம். ஆமா காஞ்சனா பெரிய பிரச்சன நடந்துட்டிருக்கும் போலிருக்கு. அதப்பத்தி உனக்கு ஏதாவது தெரியுமா?'' என்று கேட்டாள் கல்பனா.

''அரசல் புரசலாக் கொஞ்சம் கேள்விப்பட்டேன். அதக் கேக்கப் போகத்தான் உடனே எழுந்து போய்ட்டாங்க...''

''சரி விடு. இப்ப இல்லேன்னா இன்னும் சில நாள்ல தெரியப் போகுது. அதுவும் ஹரி வந்துட்டான்ல்ல இனி எல்லாம் துரிதமா நடக்கும்.''

''ஆமா சுமிதாவுக்கு இப்ப மூணு மாசமாம் தெரியுமா?'' - கல்பனா.

''அப்படியா? இந்த விஷயம் இத்தன நாளும் நமக்குத் தெரியாமப் போயிடுச்சே'' காஞ்சனா.

''எனக்கே நேத்து நைட் தான் தெரியும், சுமிதா ஊர்க்காரங்க எங்க வீட்டுக்குப் பக்கத்து வீட்ல குடியிருக்

கறவங்களுக்கு ரொம்பவும் சொந்தம் அவங்க தான் நேத்து பேசிட்டிருந்தப்ப சொன்னாங்க...''

''எல்லாம் சரிதான் ஆனா இந்த விஷயத்த யாரோ மூணாவது மனுஷங்க சொல்லியா நாம தெரிஞ்சுக் கறது?''

நானொன்னும் எதயும் காட்டிக்கல, குறிப்பா எங் களுக்கும் எல்லாமே தெரியும். சுமுகமான போக்குவரத்து இருக்குங்கற மாதிரி தான் அவங்ககிட்டக் காட்டிக்கிட் டேன்'' என்றாள் கல்பனா.

''ஆனாலும் மனசு கேக்க மாட்டேங்குதுக்கா. சுமிதா விசேஷமா இருக்கறது கூடவா இவங்களுக்குத் தெரியாம இருக்கும், அண்ணா கூட வாயத் திறக்கல பாரு...''

''எப்பிடிச் சொல்லுவாங்க? அத சொன்னா அப்புறம் எல்லாத்தையுமே சொல்ல வேண்டியது வரும். சொந்த மகளே முகத்துல கரியப் பூசறான்னு வெளிய சொல்றது பெருமையாவா இருக்கும்?''

''ஏன் அவங்க சொல்லலேன்னாலும் கூட இப்ப நீ சொன்ன விஷயத்தத் தவிர நமக்கும் மத்ததெல்லாமே தெரியுமே...''

''நீ சொல்றது சரிதான் காஞ்சனா. அதுவரைக்கும் தான் எல்லாருக்குமே தெரியுமே. ஏன் அத அண்ணனும் அண்ணியுமே கூட மறுக்கலியே...''

''ஆமாம் நல்ல அண்ணன் அண்ணி போ...''

''என்ன நீ இன்னைக்கு ரொம்பவும் அலுத்துக்கற?'' என்று கல்பனா தங்கை காஞ்சனாவைப் பார்க்க, ''அதெல் லாம் ஒண்ணுமில்லையே'' என்று பூசி மெழுகினாள் காஞ்சனா.



அதே நேரம் ''சரி இரு நான் போய் எல்லாரையும் ஒரு கண் பாத்துப் பேசிட்டு வர்றேன் முக்கியமா ஹரிகிட்ட'' என்று தமக்கையும் தன்னுடைய பதிலை எதிர்பார்க்காமல் எழுந்து செல்ல பற்றிக் கொண்டு வந்தது காஞ்சனா விற்கு.

சொன்னது போல அனைவரையும் பார்ப்பதற்கு முன் பாகவே அவள் ஹரியிடம் சென்று பேசத் தொடங்கி விட்டிருக்க, ''ம் இளிப்பைப் பார்'' என்றும்.

இந்த ஹரிவரதனிடம் அப்படி என்னதான் இருக்கிறது.

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனை வருக்குமே அவன் ஹீரோவாகத் தெரிகிறானே.

பேசுவதும் சில வார்த்தைகள் தான்.

அதிலேயே அனைவரையும் பைத்தியமாய் ஆக்கி விடுகிறானே,

சரிதான்.

இவனிடம் நிச்சயம் ஏதோ இருக்கிறது. அது அனை வரையும் அவனுடைய சொல்படி ஆடவும் வைக்கிறது.

என்ன முயன்றும் மனம் மீண்டும் பழைய உற்சாக நிலைக்கு வர மறுத்தது காஞ்சனாவிற்கு. சில நிமிடங்கள் சென்றிருக்கும் மீண்டும் தனது தமக்கையே வந்து அருகில் அமர ''என்ன எல்லாரையும் பாத்துப் பேசிட் டயா?'' என்று கேட்டாள்.

''ம், கிட்டத்தட்ட.''

''ஹரி என்ன சொன்னான்?''

''நாந்தான் அத்தை வயசுல பெரியவங்களத் தேடி வந்து பேசணும், சரியா. நான் கீழ வரலாம்னு இருக்கும்போது

நீங்களே வந்துட்டிங்கன்னு சொல்றான். என்னதான் தொழில்ல ரொம்பப் பெரிய இடத்துல இருந்தாலும் என்ன மரியாத பாத்தியா, நம்ம பசங்களும் தான் இருக்காங்களே ஹரி அளவுல பாதி வருவாங்களா?''

''என்ன நீ இன்னைக்கு அண்ணன் குடும்பத்தத் தூக்கித் தலமேல வெச்சுக் கொண்டாடிட்டே இருக்க, என்ன ஏதாவது காரியம் ஆகணுமா?''

எதனாலோ தங்கையின் கோபம் இன்னும் குறை யாதது தெரிய, ''எல்லாரையும் பாத்துப் பேசிட்டை யான்னு நீ கேட்ட கேள்விக்கு பதில் சொன்னேன். அவ்வளவுதான் உனக்குப் பிடிக்கலேன்னா விடு வேற விஷயம் பேசலாம்'' என்றாள்.

என்னதான் வேறு விஷயங்களைப் பற்றிப் பேசினாலும் அங்கே சுற்றி இங்கே சுற்றி மீண்டும் பேச்சு அண்ணன் குடும்பத்தில் தான் வந்து நின்றது.

''அப்புறம் சுமிதா அவளோட பங்கக் கேக்கறா தெரி யுமா?'' கல்பனா.

''தெரியாம என்ன அப்படியென்ன அவ தப்பாக் கேட் டுட்டா சொத்துல தன் பங்கத் தான, அதக் கேக்காமலே குடுத்திருக்க வேண்டியது இவங்க கடமையில்லயா?''

தங்கையின் பேச்சில் ''பாரு உனக்கு அடிப்படையே புரியல, அவங்கென்ன வீட்டுப் பொண்ணுக்கு அவ பங்கக் குடுக்க முடியாதுன்னா சொல்றாங்க?'' என்றாள்.

''பின்ன பேசாம குடுத்துட வேண்டியது தான.''

''வெறும் பணம், நகை இடம்னா பிரிச்சுக் குடுத் துட்டுப் போய்ட்டே இருக்கலாம். ஆனா சுமிதா



கேக்கறது கம்பெனிய, அதுவும் புகுந்த வீட்ல சொல்லிக் குடுக்கறதக் கேட்டுக்கிட்டு இப்படியெல்லாம் பண்றா...''

''இதுக்கெல்லாம் ஹரி என்ன சொல்றான்?''

''அதுதான் இப்பத்துக்கு எல்லாருடைய எதிர் பார்ப்பும்.''

''சரிதான் இன்னைக்கு தான வந்திருக்கான். இனிமேல் தான் குண்டு வெடிக்கும்'' என்று காஞ்சனா சொல்ல, ''எனக்கென்னவோ அவன் தங்கைக்குன்னா எல்லாத் தையும் பேசாம எடுத்துக் குடுத்துடுவான்னு தான் தோணுது'' என்றாள் கல்பனா.

''நிச்சயமா அது தொழில்னு வராத வரைக்கும்.''

''அப்புறம்?''

''இப்ப முதலுக்கே இல்ல மோசம் வந்துடுச்சு. என்ன தான் ஆனாலும் ஓரளவுக்கு இருந்தத இன்னைக்கு இவ்வளவு பெரிய நிலமைக்குக் கொண்டு வர்றதுக்கு ஹரி பட்ட பாடு கொஞ்சமா என்ன. அப்படி சிரமப்பட்டு வளத்த தொழில என்னதான் தங்கையானாலும் ஒரேயடி யாத் தூக்கிக் குடுத்துட முடியுமா என்ன? ஏன் அத அவனே நினைச்சாலும் முடியாதே.''

''சரிதான் எதுவானாலும் ரெண்டு நாள்ல தெரிஞ்சுடப் போகுது'' என்று கல்பனா சொல்ல, ''ஆனாலும் நம்ம அண்ணனுக்கு இந்த நிலம வந்திருக்க வேண்டாம்'' என்றாள் காஞ்சனா.

''ரொம்ப வருத்தப்படாத, ஹரிவரதனும் ஒண்ணும் சராசரி கிடையாது. தங்கைக்காக எல்லாத்தையும்

குடுத்துட்டு வெத்துக் காலோட வெளிய வரவும் அவன் தயங்க மாட்டான். அது மட்டுமில்ல அவனோட திறமைக்கு இதே மாதிரி இன்னொரு சாம்ராஜ்யத்தையும் உருவாக்கிக் காட்டுவான்.''

''அதெல்லாம் சரிதான், ஆனா அதையெல்லாம் இந்த அண்ணனும் அண்ணியும் தாங்குவாங்களா?''

''தாங்காம என்ன, குடுக்கறது மகளுக்குத் தான?''

''சரிதான் நீ சொன்ன மாதிரி பொறுத்திருந்து பார்ப்போம்'' என்ற காஞ்சனா தனக்கு அருகில் வந்து அமர்ந்த கணவனின் தூரத்து உறவான பாட்டியம்மாளிடம் பேசத் தொடங்கி விட்டிருந்தாள்.

சற்று முன்னர் போல அல்லாமல் இப்பொழுது மண்டபம் நிரம்பி வழிய, அதற்குப் பிறகு மீண்டும் அக்கா தங்கைக்குத் தனித்துப் பேசும் வாய்ப்புக் கிடைத்திருக்கவில்லை.



## 2

''ஸ்மிர்த்தி...''

''சொல்லுங்க மம்மி.''

''உன்ன ராம் தேடிட்டிருந்தானே போய் என்னன்னு கேளு.''

''போறேம்மா.''



''சொல்ற தான், ஆனா செய்ய மாட்டேங்கறியே.''

தாயின் வார்த்தைகளில் ''நான் வாணிக்காக வெயிட் பண்ணிட்டிருக்கேன்'' என்று சொல்லி விட்டுப் பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''யாருக்கு?''

''வாணி... என்ன மம்மி எதுக்கு ராம் அத்தான் என்னத் தேடிட்டிருக்கார்?''

''என்னக் கேட்டா, போய் கேளு.''

''போறேன் இருங்க.''

''நீ பண்றது கொஞ்சங் கூட நல்லா இல்ல...''

''ஏன் நானென்ன செஞ்சேன்?''

''கல்யாண மண்டபம் வரைக்கும் வர்ற வாணிக்கு, உள்ள வரத் தெரியாதா? நீ இப்படி வாசல்ல தவம் கிடக்கணுமா?''

''அதுக்கில்லமா...'' என்று மேலே பேசப் போனவள் சும்மாவே கோபப்படுகிறவர்களிடம் வேண்டவே வேண்டாமென்று வாயை மூடிக் கொண்டாள்.

நல்ல வேளையாக தொடர்ந்து சில வினாடிகளிலேயே எதையோ எடுக்க வந்த தாய் மீண்டும் மண்டபத்திற்குள் சென்று விட்டிருக்க, நிம்மதியுடன் தோழியை எதிர்பார்க்கலானாள் ஸ்மிர்த்தி.

வாணி வரவில்லையென்று தான் சொன்னாள். அதுதான் திருமணத்திற்கே வந்து விட்டேனே என்று அவள் எவ்வளவு மறுத்தும் விடாமல் நீ வந்து தான் ஆக வேண்டுமென்று ஒரேயடியாகச் சொல்லி விட்டிருந்தாள் ஸ்மிர்த்தி.

இதுவே வேறொருத்தி என்றால் வர முடியாது போடி என்று கூடச் சொல்லியிருப்பாளோ என்னவோ. ஆனால் வாணியின் குணத்திற்கு சில முறை மறுத்துப் பார்த் தவள், பிறகு தோழியின் மனம் வருத்தப்படக் கூடாதே என்று வருகிறேனென்று விட்டிருந்தாள்.

அது ஸ்மிர்த்திக்கும் புரியாமலில்லை.

அப்படியாவது கொஞ்சம் வெளியுலகத்தையும் வெளி மனிதர்களையும் வாணி வந்து பார்க்கட்டுமே என்பது அவளுக்கு.

இதை மற்றவர்களிடம் சொல்லிப் புரிய வைக்க முடியாது.

தாயிடமே என்றாலும்,

இது ஆழ்ந்த நட்பின் புரிதல்,

அப்படியே சொன்னாலும் அதை மற்றவர்களால் உள்ளபடி அப்படியே புரிந்து கொள்ள முடியுமென்றும் அவளுக்குத் தோன்றவில்லை.

வாணி என்கிற கலைவாணி,

ஸ்மிர்த்தியின் உயிர்த்தோழி.

கள்ளம் கபடமறியாத, பொய் சொல்லத் தெரியாத மிக வும் அழகான இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ பிரமாதமான குணங்களைத் தன்னுள்ளே கொண்டுள்ள நல்ல தோழி.

இதெல்லாம் பிரமாத தகுதியா என்று நீங்கள் நினைப்பது புரிகிறது.

ஆம், அது அப்படித்தான்.



நிச்சயம் இவையெல்லாம் வாணியின் தனிச் சிறப் புகள் தாம்.

அந்த அளவிற்கு மிகவும் நல்ல பெண் அவள்.

கல்லூரித் தொடக்க காலத்தில் இருந்து தான் வாணியை ஸ்மிர்த்திக்குத் தெரியும்.

அதிலிருந்தே இருவரும் பிரிக்க முடியாத உயிர்த் தோழிகளாகி விட்டிருந்தனர்.

ஏன் அப்பொழுதும்கூட, முதலில் ஸ்மிர்த்தியாகத் தான் வாணியின் நட்பை விரும்பி ஏற்றுக் கொண்டாள் எனலாம்.

பிறகு போகப்போக ஸ்மிர்த்தியின் உண்மையான நட்பில் வாணியும் அவளுடன் ஒன்றி விட்டாள்.

வாணிக்குத் தாய் தந்தை கிடையாது.

அவளுடைய தாயின் தூரத்து உறவான அத்தை மாமாவிடம் தான் வளர்ந்து வந்தாள்.

வாணி பிறந்த போதே பிரசவத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டு அவளுடைய தாய் இறந்து விட்டிருக்க, சற்றும் அன்போ, அரவணைப்போ இல்லாத தந்தையிடம் வளர்ந்தாள்.

அவரைப் பொறுத்தவரை தனது அன்பான உயிருக் குயிரான மனைவியின் உயிரைப் பறித்து விட்டிருந்த குழந்தையை அவர் விரும்பவில்லை.

அதற்காக ஒரேயடியாக வெறுத்தார். கொடுமைப் படுத்தினார் என்றும் சொல்வதற்கில்லை.

பசித்து அழுதால் உணவு தர வேலைக்காரி அமர்த்தப் பட்டாள்.

பெற்ற கடமைக்காக நகரத்தில் இருக்கும் மிகச் சிறந்த கான்வென்டில் சேர்த்துப் படிக்க வைத்தார்.

இவையெல்லாம் கூடத் தனது தாயின் அதாவது அவருடைய மனைவியின் சாயலில் தான் இருந்ததால் தானோ என்று பின்னாளில் வாணி தனது மூளையைக் கசக்கி ஆம் அப்படித்தான் இருக்க வேண்டுமென முடிவுக்கு வந்த ஒன்றே.

தாயைப் போல பிரமாத அழகியாக இல்லாமல் சராசரியாகப் பிறந்திருந்தால் தந்தை தன்னைக் குப்பைத் தொட்டியில் வீசியிருப்பாரோ என்று எத்தனையோ முறை தனக்குள் எண்ணி நடுங்கியும் இருக்கிறாள்.

குறைந்தபட்சம் ஏதாவது ஓர் அனாதை இல்லத்தி லாவது கொண்டு போய் விட்டிருப்பார் என்றும்,

தனது தாயின் நினைவுகளூடே வேண்டா வெறுப் பாகப் போனால் போகிறதென்று வளர்த்த தந்தையும் துரதிர்ஷ்டவசமாக அவளுடைய பத்தாவது வயதில் மறைந்து விட்டிருக்க, என்ன ஏதென்று சொல்லவும் கேட்கவும் கூடத் தெரியாத அந்த வயதில் யாருமற்ற அனாதையானாள் சிறுமி வாணி.

ஆனால் அதை எதிர்பார்த்தே இருந்தாற்போல தாயின் தூரத்து உறவான கமலம் அத்தையும், மாமாவும் வந்து தன்னை அழைத்துச் சென்று விட ஒரு வழியாக அந்த சூழ்நிலைக்குத் தன்னை மாற்றிக் கொள்வதற்குள் படாதபாடு பட்டுப் போனாள்.

தந்தையின் வீட்டில் அவர் எந்நேரமும் வெறுப்பையே உமிழ்ந்த போதும் பசித்தால் உணவும், வேலைக்காரியே



என்றாலும் பயப்படாமல் பாதுகாப்பாக உணர கண் பார்வை படும் தூரத்தில் ஒரு துணையும், நல்ல பள்ளிச் சூழலும், அது தரும் இனிமையான நினைவுகளும் என அந்த வீட்டின் சூழ்நிலைக்கு ஒன்றிப் போயிருந்த வாணிக்குத் தான் புதிதாக வந்து சேர்ந்த கமலம் அத்தை யின் வீடு பெரும் நடுக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

அதற்குக் காரணமும் கமலமே.

மருந்திற்கும் அன்பு என்று ஒன்றை அறியாத சூழலில் வளர்ந்திருந்தாலும் அமைதியாக ஆர்ப்பாட்டமில்லாமல் வளர்ந்திருந்த வாணிக்குக் கமலத்தின் கர்ண கொடூரக் குரலும் எப்போதாவது தான் என்றாலும் கோபம் வந்து விட்டால் கம்பை எடுத்துக் கண்மண் தெரியாமல் விளாசி விடுகிற அவளுடைய ஈவு இரக்கமற்ற செயலும் வாணியைத் தூக்கத்திலும் கூட விசித்து அழச் செய் திருந்தன.

ஆனால் 'அதென்ன எதற்கெடுத்தாலும் அழுகை, அனாதைச் சிறுக்கிக்கு ரோஷம் ஒரு கேடா' என்று அதற் கும் கமலம் கம்பை எடுத்து விளாசுவதை வழக்கமாக்கிக் கொண்டு விட்டிருக்க, அது தந்த வலியில் துடித்துப் போவாள் சிறுமி.

ஆனாலும் நல்ல அறிவுள்ள பெண் என்பதால் அடிக் கும் வலிக்கும் பயந்தே முடிந்த அளவு உணர்ச்சிகளைத் தனக்குள்ளேயே மறைத்துக் கொள்ளவும் முயன்று பழகிக் கொண்டாள்.

ஆனால் அது பழகும் வரை அவள் பட்ட பாடை இப்பொழுது நினைத்தாலும் வாணியின் உடல் அவளை யறியாமலேயே பதறிவிடும்.

வாணியின் தந்தையுடைய நண்பர் என்று யாரோ அவளுடைய படிப்புச் செலவை ஏற்றுக் கொண்டு விட, தொடர்ந்து அவள் படித்து வந்த பள்ளியிலேயே படிப்பு தொடர்ந்தது.

அதற்கு உன் தந்தையிடம் நான் பட்ட நன்றிக் கடனுக்காக என்று அந்த மனிதன் ஒரு முறை சொன்னது கூட இப்பொழுது போல நினைவிற்கு வந்தது.

ஆனால் தந்தை என்றதுமே அதற்கு மேல் எதையும் தெரிந்து கொள்ளும் ஆவல் அவளுக்கு வந்திருக்க வில்லை.

சரி தானென்று அவரைப் பற்றி மறந்தும் போனாள்.

ஆனாலும் அது ஓரளவு பெரிய பெண்ணாக வளர்ந்த பின் வாணியின் மனதை உறுத்தத் தொடங்கி விட் டிருந்தது.

என்னதான் நன்றிக்கடன் என்றாலும் அவர் செய்தது எவ்வளவு பெரிய உதவி. அவருக்குத் தான் நன்றி தெரி விக்காமல் விட்டோமே என்று மனதிற்குள் அவ்வப் பொழுது வருந்துவதும் உண்டு.

அத்தை மாமாவுக்கு செலவென்று பைசா வைக்காமல் பன்னிரெண்டாவது வரை படித்து முடித்த வாணிக்கு, அதற்குப் பிறகு தான் படிக்க முடியாமல் போகுமென்று அதாவது அப்படிப் படிக்கத் தான் மிகுந்த சிரமப்பட வேண்டியிருக்குமென்பது, அப்பொழுது தெரிந்திருக்க வில்லை.

ஒரேயடியாகப் படிக்கவே கூடாதென்று முடித்து விட்டிருந்த அத்தை மாமாவிடம் கெஞ்சிப் பார்த்தாள்



எவ்வளவோ எடுத்துச் சொல்லிப் பார்த்தாள்.

வீட்டு வேலைகள் அனைத்தையும் தானே செய்து விட்டு மீதியிருக்கும் நேரத்தில் கல்லூரி செல்கிறே னென்றும் கேட்டுப் பார்த்தாள்.

ஆனால் கல்மனம் கொண்டிருந்த கமலம் எதற்கும் மசியவில்லை.

அந்த நேரத்தில் தான் கடவுளாகப் பக்கத்து வீட்டுப் பெண்மணி உதவிக்கு வந்தாள்.

அவர் இனி மனதிற்குள் என்ன எண்ணி அப்படிச் செய்தாரோ, ஆனால் அவர் அவ்வாறு செய்தது வாணிக்கு வாழ்க்கையில் வசந்தத்தையே கொண்டு வந்து சேர்த்தது.

அதாவது அவர் செய்ததும் இதுதான்.

மிகவும் அதிகமான மதிப்பெண்கள் பெற்றிருக்கும் வாணியை பைசா செலவு இல்லாமல் உபகாரச் சம்பளத் திலேயே படிக்க வைக்க முடியும்.

அதற்கும் எத்தனையோ கல்லூரிகள் இருக்கின்றன.

அப்படி மட்டும் அவளைப் படிக்க வைத்து விட்டால், அதற்குப் பிறகு வாழ்க்கை முழுவதும் நீங்கள் சும்மா பந்தாவாக அமர்ந்து கொண்டே நாட்டாமை செய்யலாம். அந்த அளவிற்கு நல்ல சம்பளத்தில் வேலை உறுதி.

இத்தனை வருடங்கள் படிக்க அனுமதித்து முக்கால் கிணறு தாண்டி விட்டீர்கள், இன்னுமொரு கால் கிணறு தாண்டுமளவிற்குப் படிக்க வைத்தால் பலனையும் நீங்களே அல்லவா அனுபவிக்கப் போகிறீர்கள் என்று ஏதேதோ சொல்லிப் பார்த்தார்.

அவர் சொல்வது ஓரளவு உண்மை தான் என்பதால் தானும் அதே வழியைப் பின்பற்றி ஆசை காட்டிப் பேசினாள் வாணி.

ஒரு வழியாகத் தொடர்ந்து படிக்க அத்தை மாமாவின் சம்மதம் கிடைத்தது.

அதைத் தொடர்ந்து ஒரு பெரிய இன்ஜினியரிங் கல்லூரியில் இடமும்,

வாணியின் நல்ல நேரமோ என்னவோ கல்லூரி தொடங்கி சில மாதங்கள் சென்று விட்ட பின்னரும் கூட குறைந்த கட்டணத்தில் அதற்கு அவள் பெற்றிருந்த மதிப்பெண்கள் தான் காரணமென்றாலும் இடம் கிடைத்ததோடு, ஒரு நல்ல தோழியும் கிடைத்தாள்.

அந்தத் தோழி ஸ்மிர்த்தி.

அன்பென்று துளியும் அனுபவித்தறியாத வாணிக்கு அந்தத் தோழியின் அணுகுமுறையும், சிரித்த முகமும் மிகவும் பிடித்துப் போயின.

அதற்குப் பிறகு அவர்கள் இருவரும் உயிருக்குயிரான தோழிகளாகி விட்டிருந்தனர்.

தந்தையிடம் நன்றிக்கடன் பட்டதாகச் சொன்ன அந்த மனிதர், பக்கத்து வீட்டுப் பெண்மணி, தன்னுடைய சிரிப்பும், நிம்மதியுமே குறிக்கோள் என்பதைப் போல செயல்பட்ட தோழி ஸ்மிர்த்தி என வாணியின் வாழ்க்கையில் வசந்தம் தொடர்ந்தது.

ஆனால் அதெல்லாம் வீட்டிற்கு வெளியே தான்.



வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்து விட்டாலே பழைய வாணி ஆகி விடுவாள்.

அதிலும் கமலம் அத்தையின் ஆராய்ச்சிப் பார்வையிலும், அசிங்க அர்த்தம் கொள்ளும் விதமாக அதாவது தப்பு வழி செல்லாமல் காக்கிறேன் என்னும் போர்வையில் அவர் கேட்கும் கேள்விகளிலும் வாணியின் மெல்லிய மனம் கூசிப் போகும்.

ஆனாலும் மனதைக் கல்லாக்கிக் கொள்வாள்.

அப்பொழுது தான் மீண்டும் ஒரு பிரச்சனை எழுந்தது.

பள்ளி இறுதியாண்டு வரை புத்தகங்களைப் போலவே சீருடையும் பள்ளியிலேயே கொடுத்து விட்டிருந்த படியால் வாணிக்கு ஆடை பிரச்சனை வந்திருக்கவில்லை.

ஆனால் கல்லூரியில் அப்படியிருக்கவில்லை.

அதிலும் அவள் சேர்ந்தது மிகவும் புகழ்பெற்ற பெரிய கல்லூரி என்பதால், அங்கு படித்த மாணவிகளும் பெரும்பாலும் நல்ல வசதி படைத்தவர்களாகவே இருந்தனர்.

அவர்களுக்கு மத்தியில் என்னதான் நன்கு துவைத்து தேய்த்துக் கட்டினாலும் கந்தல் போலத் தெரிந்த தனது ஆடைகளில் மனதளவிலும், உடலளவிலும் குன்றிப் போனாள்.

ஆனால் அதற்கும் சில நாட்களிலேயே தீர்வு கிடைத்தது, தோழி ஸ்மிர்த்தியின் வடிவில்...



# 3

ஒரு நாள் கல்லூரி முடிந்து தோழியை அப்படியே தனது வீட்டிற்கு அழைத்துப் போன ஸ்மிர்த்தி, தன்னுடைய அறைக்கும் அழைத்துச் சென்றாள்.

அங்கே குவித்து வைக்கப்பட்டிருந்த ஆடைகளைக் காட்டி இதெல்லாம் உனக்குத் தான் என்றாள்.

வாணியின் குணத்திற்கு அவளும் எவ்வளவோ மறுத்துப் பார்த்தாள். ஆனால் ஸ்மிர்த்தி கேட்பதாக இல்லை.

மாளிகை போலிருந்த ஸ்மிர்த்தியின் வீட்டை மலைப்புடன் பார்த்தாள் வாணி.

தான் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் மறுப்பதிலேயே கவனமாக இருந்த தோழியிடம் ''நீ தவறாக எடுத்துக் கொள்ள மாட்டாய் என்பதால் சொல்கிறேன் வாணி. இங்கிருக்கும் இந்த ஆடைகள் அனைத்துமே புதியவை தான் என்றாலும் ஏதோ ஒரு காரணத்திற்காக நானும் எனது தமக்கையும் பிடிக்கவில்லையென்று ஒதுக்கியவை'' என்று உண்மையை உறைத்தாள்.

''வருடக்கணக்கில் சேர்ந்து இவ்வளவு ஆகி விட்டது.

உன் குணம் தெரிந்ததாலேயே இந்த ஆடைகளுக்காகக் கையிலிருந்து பைசா நான் செலவழிக்கவில்லை.



என்ன இவற்றையெல்லாம் நீ மறுத்தால் இல்லாதவர்கள் யாருக்காவது அனுப்பி வைக்கப்படும்.

அப்படி நீ மறுத்தாலும் எனக்கு ஆட்சேபணை ஒன்றுமில்லை. ஏன் சந்தோஷமும் கூட. நாளைக்கே நாம் இருவரும் போய் இப்போதுள்ள டிஸைன்கள் மற்றும் வண்ணங்களில் புதிய ஆடைகளைத் தேர்ந்தெடுத்து வாங்கிக் கொள்ளலாம். எப்படி உன் வசதி'' என்று கேட்டாள்.

மறுக்க வாய்ப்பே அளிக்காமல் ஸ்மிர்த்தி அன்று கொடுத்த ஆடைகளைத் தான் கல்லூரி இறுதி ஆண்டு வரை அணிந்தாள் வாணி. ஏன் அவற்றில் எத்தனையோ ஆடைகள் இன்னும் கூட எடுக்கப்படாமல் புதிது போல அப்படியே இருக்கவும் செய்தன.

போகப்போக ஸ்மிர்த்தியின் செல்வ வளமும் புரிந்து, அவள் எப்பொழுதும் எதையும் மிகைப்படுத்திச் சொல்லியிருக்கவில்லை என்பதும் புரிந்தது.

இவ்வளவு பிரமாதமான தோழி கிடைக்கத் தான் மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டுமென்று நினைத்து நினைத்து ஆனந்தப்படுவாள்.

ஆனால் ஸ்மிர்த்தியோ அதை வெளிப்படையாகவே செயலிலும் காட்டினாள். உன்னைப்போல அன்பான ஒரு தோழி கிடைக்க நான் என்ன தவம் செய்தேனோ, பிரதிபலன் பாராமல் வெகுளித்தனமான உன் நட்பிற்கு ஈடாகக் கொடுக்க என்னைப் பொறுத்தவரை இந்த உலகத்தில் எதுவுமே இல்லையென்பாள், மிகவும் உணர்ந்து இன்னும் ஏதேதோ சொல்லுவாள்.

உடன் பயிலும் எத்தனையோ மாணவிகள் ஸ்மிர்த்தியின் நட்புக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்க, தன்னிடம் ஏன் இவ்வளவு பைத்தியமாக இருக்கிறாளென்று வாணிக்கு ஆச்சரியமாக இருக்கும்.

என்னதான் அதற்கான காரணங்களாகத் தன்னுடைய அழகு, எப்பொழுதும் முதல் மதிப்பெண் பெறுவது... என இப்படி இன்னும் எத்தனையோ இருந்தாலும் அவற்றையெல்லாம் பார்த்து பொறாமைப்பட்டு ஏளனம் செய்து சிரிப்பவர்களுக்கு மத்தியில் இதே சிறப்புகளுக்காகத் தன்னைத் தலை மேல் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறாளே இந்த ஸ்மிர்த்தி என்று உள்ளம் பூரித்துப் போகும்.

அது மட்டுமல்லாமல் யாருக்காகவும், எதற்காகவும் தோழியை விட்டுக் கொடுக்காததோடு யாராவது அவளை ஏதாவது சொல்லி விட்டால் வரிந்து கட்டிக் கொண்டு கிளம்பியும் விடும் ஸ்மிர்த்தியின் உண்மையான நட்பில் தனது கடந்த காலக் காயங்கள் கூட வெகு தூரத்தில் எங்கோ தெரியும் சிறு புள்ளிகளாகத் தேய்ந்து போகக் கண்டாள் வாணி.

ஆனால் அவற்றையெல்லாம் சுத்தமாக மறந்து போக விடாமல் அவ்வப்பொழுது தனது கூரிய வார்த்தைகள் என்னும் அலகுகளால் குத்திக் காட்டிப் புண்ணியம் தேடிக் கொண்டாள் கமலம் அத்தை.

வீட்டையும் அங்கே கிடைத்த கசந்த அனுபங்களையும் விடுத்துப் பார்த்தால் கல்லூரி நாட்கள் ஒரு இனிய பொற்காலமாகவே நகர்ந்தன வாணிக்கு.



அந்த நேரத்தில்தான் மீண்டும் ஒரு சோதனையை வாணி எதிர்கொள்ள வேண்டி வந்தது.

அது ஒரு புகழ்பெற்ற திறமை மிக்க மாணவர்களை உருவாக்கும் கல்லூரி என்பதால் அங்கு படிப்பை முடித்து வெளியே வருபவர்களை முன்னணித் தொழில் நிறுவனங்கள் அனைத்தும் தங்களுடைய நிறுவனங்களுக்குத் தேர்ந்தெடுத்துக் கொள்வது எப்பொழுதும் வழக்கமாக இருந்து வந்தது.

அப்படி வாணிக்கும் நல்ல சம்பளத்துடன் ஒரு முன்னணித் தொழில் நிறுவனத்தில் வேலை செய்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

ஆனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டியிருக்கவில்லை.

வெளியூரில் என்றதுமே கண்ணை மூடிக் கொண்டு போகக் கூடாது என்று தடை போட்டு விட்டிருந்தாள் கமலம்.

ஏற்கனவே கல்லூரியில் படிக்க வைத்ததே தவறோ என்று எண்ணி மனதிற்குள் புகைந்து கொண்டிருந்தவளுக்கு வாணி சொன்ன எந்த சமாதானங்களும் இனிக்கவில்லை.

ஏன் மேலும் உறுதியுடன் மறுத்து விட்டிருந்தாள் எனலாம்.

பள்ளி இறுதி ஆண்டு வரை இருந்த வாணி எங்கே, இப்பொழுதிருக்கும் வாணி எங்கே, மடுவுக்கும் மலைக்குமான வித்யாசமல்லவா.

அவ்வப்பொழுது கொட்டிக் கொண்டே இருந்தும்கூட உள்ளூரில் இருக்கும் கல்லூரியில் படித்ததற்கே

இவ்வளவு முன்னேறியிருக்கிறாள் என்னும் பொழுது இனி முழு சுதந்திரம் கொடுப்பதுபோல வெளியூருக்கும் போக நேர்ந்தால் அவ்வளவுதான்.

ஏற்கனவே வெள்ளைத் தோலும் சுண்டியிழுக்கும் அழகுமாக இருப்பவள் பிறகு தங்களை மதிப்பாளா,

ஏன் நீ யாரென்று கேட்டாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

அது மட்டுமா.

இன்னும் என்னவெல்லாம் ஊர் உலகத்தில் நடக்க வில்லை. தனக்கென்று ஒரு ஆண் பிள்ளையைத் தேடிக் கொண்டு வந்து நின்றால்,

அதிலும் இவளுடைய ஜாலத்திற்கும், திமிருக்கும் ஒருவனென்ன எத்தனைப் பேரை வேண்டுமானாலும் கைக்குள் போட்டுக் கொள்ள முடியுமே.

ஒரு நிமிடம் நன்கு யோசித்துப் பார்த்திருந்தால் கூட வாணி அப்படிப்பட்ட பெண் இல்லையென்பது கமலத்திற்கும் புரிந்து போயிருக்கும்.

ஆனால் தனது வீண் பிடிவாதத்தாலும் ஜம்பத்தாலும் ஒரு நல்ல பெண்ணுக்குக் கிடைத்திருக்க வேண்டிய பிரமாதமான வேலை வாய்ப்பைத் தட்டி விட்டதோடு, அதன் மூலம் தனக்குக் கிடைத்திருக்க வேண்டிய நல்ல வருமானத்தையும் சேர்த்தே தட்டி விட்டிருந்தாள் கமலம்.

கமலத்தின் குணம் தெரிந்ததாலேயே ஒரேயடியாக இடிந்து போய் அமர்ந்து விடாமல் சமாளித்துக் கொண் டாள் வாணி.



விஷயம் கேள்விப்பட்ட ஸ்மிர்த்திக்கும் ஒரு விதத் தில் நிம்மதியே, தோழியைப் பிரிய வேண்டியதில்லை என்பதே அது.

அதற்குப் பிறகு தனது திறமையால் உள்ளூரிலேயே ஒரு வேலையைத் தேடிக் கொண்டாள் வாணி.

தோழிகளின் நட்பும் இனிதே தொடர்ந்தது.

''ஸ்மிர்த்தி!''

''வாணி வா வா வா, என்னடி இவ்வளவு நேரம்?''

''ஸாரிப்பா, பஸ் கிடைக்கவே லேட்டாயிடுச்சு. அதுவும் எவ்வளவு கூட்டம் தெரியுமா அப்பப்பா...''

''ஏன்?''

''முகூர்த்த நாள்னா சும்மாவா...''

''அதுக்குத்தான் கார் அனுப்பறேன்னு சொன்னேன், என் தப்பு உங்கிட்டக் கேக்காமலே அனுப்பியிருக் கணும்.''

''என்ன ஸ்மிர்த்தி லேட் பண்ணிட்டேனா...''

''அடப் போடி, நீ ரொம்பவும் சிரமப்பட்டுட்டியேன்னு சொன்னேன். சரி சரி வா.''

நேராகத் தோழியை மணப்பெண்ணின் அறைக்கு அழைத்துச் சென்றிருந்த ஸ்மிர்த்தி, ஃபேஸ் வாஷைக் கையில் கொடுத்து முகம் கைகால் சுத்தம் செய்து கொண்டு வரச் செய்தாள்.

''அப்பாடா காலைல நான் சொன்ன மாதிரியே இந்த லேவண்டர் கலர் சில்க் ஸாரியக் கட்டிட்டயே, ரொம்ப நல்லார்க்குடி. இந்தா சீப்பு சீக்கிரம் தலையப் பின்னு'' என்று தானும் உதவினாள்.

நீண்டு இடை வரை விழுந்த வாணியின் கூந்தலை எப்பொழுதும் போலவே ஆசையுடன் வருடியவள், ''சீக்கிரம்பா'' என்றாள்.

''நீ வேணும்னா போ ஸ்மிர்த்தி, நான் கிளம்பி வந்துட்றேன்.''

''யாரு நீ? அப்படி வர்றவளா இருந்தா ஏன் உனக்காக வெயிட் பண்ணிட்டு இருக்கப் போறேனாம்'' என்றவள் பாதி பின்னி தோழி கொடுத்த சடையைத் தொடர்ந்து பின்னி பான்ட் போட்டாள்.

சில நிமிடங்களுக்குள்ளாகவே வாணி கிளம்பி விட்டிருக்க, ''பிரமாதம்டி... திரும்பு பூ வைக்கலாம்'' என்று அழகாக அவளுடைய ஆடைக்குப் பொருத்தமான செயற்கை இதழ்களுடன் சேர்த்துக் கோர்க்கப்பட்டிருந்த மல்லிகை சென்டை கீழிருந்து பின்னல் வழியாக மேலே கொண்டு வந்து தூக்கி வெளியே தெரியாதவாறு பின்களைக் குத்தினாள்.

அந்தத் தலை அலங்காரத்திலேயே மணப்பெண் போல ஜொலித்த வாணிக்கு மேக்கப் என்னும் பெயரில் இன்னும் எதையெதையோ செய்து அழகு படுத்தினாள் ஸ்மிர்த்தி.

''ஃப்ரண்ட்டுங்கறதுக்காக எதையெல்லாம் சகிச்சுக்க வேண்டியதிருக்கு முருகா...''

சிரிக்காமல் தோழி சொன்ன பாவனையில் ''ஆமான்டி அப்பிடி நீயும் சம்மதிச்சுட்டாலும். எதுவும் பேசாத ஏற்னவே நான் கோபமா இருக்கேன்'' என்றாள்.

''ஏனோ?''



''ம் இன்னைக்கு மட்டும் நீ ஒரு அரை நாள் லீவு போட்டிருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும். கடைசிக்கு ஒரு பர்மிஸனாவது...''

''ஏன் இந்தக் கொடும பத்தாதுன்னு...''

''பேசாதடி வாயிலையே ஒன்னு குடுத்துருவேன்...''

''வாவ் ஸ்மிர்த்தி உன் அலங்காரம் பிரமாதம்டி, நீ அது விடவும்...''

''இப்ப தான் மேடம்க்கு கண்ணு தெரிஞ்சதோ?''

''என்ன பண்றதுப்பா. என்னால பாவம் நீயும் வெயிட் பண்றையேன்னு அவசரமாக் கிளம்பினதுல உண்மையாவே நல்லா கவனிக்காம விட்டுட்டேன்...''

''சரிதான் ஆனா என்னுடையதெல்லாம் செயற்கை தான் வாணி. அதுவும் டூ அவர்ஸ் மேக்கப். ஆனா நீ மேக்ஸிமம் டூ மனிட்ஸ் மேக்கப்லையே தேவதை மாதிரி ஆயிட்டயேடி...''

''போதும் போதும் வா போலாம்'' என்று வாணி அழைக்க ''அட இருடி'' என்றவள் மேலிருந்து கீழாகத் தோழியை ஒரு முறை ஆராய்ந்தாள்.

திருப்திப்பட்டவள் போல சென்று தனது ஹேன்ட் பேக்கிலிருந்து வெள்ளைக் கற்களால் ஆன நெக்லஸ் ஒன்றை எடுத்து வந்து அணிவித்தாள்.

வாணி ஏற்கனவே அணிந்திருந்த மெல்லிய தங்கச் செயினை வெளியே தெரியாதவாறு எடுத்து உள்ளே போட்டவள், தோழியைப் பெருமை பொங்கப் பார்த்தாள்.

நகையெல்லாம் வேண்டாமென்று சொல்லிவிட நினைத்த வாணியால் தோழியின் சந்தோஷத்தைப் பார்த்த பிறகு முடியவில்லை.

''சரி இங்க வா'' என்று தோழியைத் தன்னருகில் நிறுத்திக் கண்ணாடியில் பார்த்தாள்.

''உம் பக்கத்துல நான் எவ்வளவு மட்டமா தெரிய றேன் பாத்தியா வாணி?''

''உளராத, அப்புறம் அறைஞ்சுடுவேன்...''

''அட, நீ இப்பிடியெல்லாம் பேசுவியா!''

''பின்ன முட்டாள்த்தனமா பினாத்திட்டிருக்க, உன் அழகு யாருக்கு வரும். அப்பிடியே பாத்துட்டே இருக் கலாம் போல எவ்வளவு அழகா இருக்க தெரியுமா?''

''சரிதான் மேடம் ரொம்பப் பார்க்காதீங்க, அப்புறம் நான் தேஞ்சுடுவேன்.

''நிஜம் ஸ்மிர்த்தி.''

''சரிதான் நம்பிட்டேன்...''

தனது வார்த்தைகளைத் தோழி நம்பாதது தெரிய ரோஷத்துடன் அவளுடைய தோற்றச் சிறப்புகளை அடுக்கினாள் வாணி.

''ஏய் ஏய் போதுன்டி, நான் அழகு தான் அதுல எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்ல. உம்பக்கத்துல நிக்கும் போது மட்டமாயிட்றேன்னு சொன்னேன் அவ்வளவு தான். போதும் போதும் திரும்பவும் பெருமைகளப் பாட ஆரம்பிச்சுடாத ஏற்கனவே காது ரெண்டும் வலிக்குது'' என்றாள்.



உடனே மீண்டும் ''பாரு உயரத்துல கூட நான் உனக்குக் காதளவு தான் இருக்கேன்'' என்று விட்டுப் பிறகு தோழியின் கோபப் பார்வையில் ''சரி இனி பேசல'' என்று வாயை மூடிக் கொண்டாள் ஸ்மிர்த்தி.

தோழியின் பாவனையில் என்ன முயன்றும் வாணி யால் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்க வில்லை.

நன்றாகவே சிரித்தாள்.

கூடவே வா என்னுடன் வந்து சேர்ந்து கொள் என் பதைப் போல அவளுடைய கண்களும் சிரிக்க, எப் பொழுதும் போல அந்தச் சிரிப்பை ஆவலுடன் பார்த் தாள் ஸ்மிர்த்தி.

''என்ன?'' - வாணி.

''இல்ல நீ மட்டும் பையனாப் பிறந்திருந்தா நிச்சயம் நான் உன்னப் பைத்தியமா லவ் பண்ணியிருப்பேன்டி.

''கடவுள் புண்ணியத்துல தப்பிச்சேன்.''

''நீ யாரையாவது லவ் பண்றியா வாணி?''

''வாட்?''

''அந்த லக்கி ஃபெல்லோ யாரோ தெரியல. ஆனா ஒண்ணு கொடுத்து வெச்சவனா இருப்பான்...''

''ஏய் போதும் வா பைத்தியக்காரி மாதிரி உளறிட் டிருக்காத'' - வாணி.

''ஏன், அப்படி நான் என்ன தப்பா சொல்லிட்டேன்.''

''வேண்டாம் விடு.''

''ம்கூம் விட மாட்டேன், உனக்காக ஒருத்தன் இனி மேலா பிறக்கப் போறான்...''

''போதும் ஸ்மிர்த்தி.''

''ஏன் நானென்ன தப்பாப் பேசிட்டேன்?''

''நடக்கவே முடியாததப் பேசறியே அதச் சொன்னேன்'' என்று விட்டுப் பிறகு தோழியின் பார்வையில் தன்னையே நொந்து கொண்டாள்.. வாணி.

''என்னடி, என்ன சொன்ன...''

''எல்லாரும் வெயிட் பண்ணிட்டிருப்பாங்க ஸ்மிர்த்தி உனக்காக, சீக்கிரம் வா...''

''அத விடு சொல்லு கொஞ்சம் முன்னாடி என்ன சொன்ன?'' என்று மீண்டும் கேட்டாள் ஸ்மிர்த்தி.

தோழியின் குணம் அறிந்த வாணிக்கு, இருந்திருந்து இப்படி வாயை விட்டோமே என்றிருந்தது.

''வாணி...''

''ஆமாம், எனக்காக ஒருத்தன் இந்தப் பிறவில பிறந்திருக்கவோ இல்ல இனி பிறக்கவோ முடியாது...''

''உளறாதடி...''

''நான் ஒண்ணும் உளறல.''

''பின்ன புத்திசாலித் தனமாப் பேசறதா நினைப்போ...''

''இன்னொரு அனாத உருவாகறத என்னால அனுமதிக்க முடியாது...''

அதற்கு மேல் வாணியால் பேச முடிந்திருக்கவில்லை.

இரண்டு பெரிய கண்ணீர்த் துளிகள் அவளுடைய கன்னங்களில் வழிந்து கீழே தெறித்திருந்தன.



தொடர்ந்து சில வினாடிகளிலேயே முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டவள், நாசூக்காகக் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

நிமிர்ந்தவளுக்குத் தோழியின் உணர்ச்சியற்ற முகம் தான் முதலில் தென்பட்டது.

''உன்ன நான் அறிவாளின்னு நினைச்சேன் வாணி.''

............

''ஏன் பெருமையாவும்...''

''இப்ப நான் அதுக்கெல்லாம் தகுதியில்லாதவன்னு தெரிஞ்சுடுச்சு இல்லையா ஸ்மிர்த்தி?''

''நீ பேசாதடி!''

''ஏன் இருக்கறதத் தான சொன்னேன்...''

''நீ ஒருநாளும் அனாதையில்ல...''

''இப்ப இல்ல...''

''எப்பவுமே...'' என்ற ஸ்மிர்த்தியால் என்ன முயன்றும் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை...

''உன் கோபத்துலிருக்கற நியாயம் புரியுது ஸ்மிர்த்தி, ஆனா நான் அனுபவிச்ச வேதனைகள், ஏன் இப்ப அனுபவிச்சுட்டும் இருக்கேனே அந்தக் கொடுமைகள் கொஞ்சமா என்ன...''

''அதுக்குக் காரணமும் நீயே தான். எப்பவோ உதவி செஞ்சாங்கன்றதுக்காக இன்னும் ஏன் அவங்களுக்கு அடிமையா ஊழியம் பண்ணிட்டிருக்க? அதான் நீயே சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டியே உன் சொந்தக் கால்ல

நிக்கப் பழகு, உன்ன சின்ன வயசுல வளத்த நன்றிக் கடனுக்காக உன்னால எவ்வளவு முடியுமோ அவ்வளவு அவங்களுக்குக் குடு. அது பணம், உதவி ஏன் இன்னும் என்னவா வேணும்னாலும் இருக்கட்டும்...

''சரிதான் ஸ்மிர்த்தி இப்ப லேட்டாயிட்டிருக்கு பாரு வா போலாம்...''

''வர முடியாதுடி.''

''ஏன்?''

''நீ அப்பிடிப் பேசினது தப்புன்னு சொல்லு.''

.............

''முடியாது இல்ல...''

''அப்பிடியில்ல ஸ்மிர்த்தி, நான்...''

''நீ பேசாதடி'' என்ற ஸ்மிர்த்தி முகத்தைத் திருப்பிக் கொண்டு எங்கோ பார்க்க, தன் மேல் தான் தோழிக்கு எவ்வளவு அக்கறை என்று நெஞ்சு உருகிப் போயிற்று வாணிக்கு.

''ஸாரி ஸ்மிர்த்தி...'' என்று அவளுடைய கையைப் பிடித்து மன்னிப்புக் கேட்டாள்.

''நான் அப்பிடிப் பேசினது தப்புதான்னு ஒத்துக் கறேன்...''

''அந்த மாதிரியொரு முட்டாள்த்தனமான எண்ணத்த இப்பவே உம்மனசுல இருந்து தூக்கியெறிஞ்சுட்டேன்னு சொல்லு...''

''முயற்சி பண்றேன் ஸ்மிர்த்தி...'' என்று உணர்ந்து சொன்னாள் வாணி.



தோழியின் பார்வையில் நம்பாமை தெரிய ''சின்ன வயசுல இருந்து வந்த கசப்பு ஸ்மிர்த்தி கொஞ்ச கொஞ் சமா தான் மாத்திக்க முடியும் நம்பு'' என்றாள்.

''நம்பறேன் நீ ஒன்ன சொன்னா அத செஞ்சுடு வேன்னு தெரியும். ஆனா எப்பிடி...'' என்றவள் ''சரி வாடி'' என்று தோழியுடன் வெளியே வந்தாள்.



# 4

தனது பெற்றோரின் விருப்பப்படி அவர்களோடு மணமக்களுடன் நின்று சில புகைப்படங்களை எடுத்துக் கொண்டான் ஹரிவரதன்.

அப்படியே தன்னுடன் புகைப்படம் எடுக்க விருப்பப் பட்ட இன்னும் சிலருடனும்,

''நீங்க ஏம்மா ரெம்ப நேரமா இங்க வந்து நின்னுட் டிருக்கீங்க?''

''போட்டோ எடுத்துக்க தான், ஏற்கனவே நீ கல் யாணத்துக்கும் இல்லையே ஹரி, அதான் இப்பவாவது எடுத்துக்கலாமேன்னு...''

''சரிதான்மா அதான் எடுத்துக்கிட்டாச்சே. வாங்க கீழ போலாம், முதல்ல வந்து உக்காருங்க எவ்வளவு நேரமா நின்னுட்டிருக்கீங்க'' என்று தாயுடன் மணவறையி லிருந்து கீழே இறங்கினான் ஹரிவரதன்.

''அதிருக்கட்டும்பா நீ சாப்டியா?''

''இன்னும் இல்லமா, நீங்க?''

''இன்னும் இல்ல ஹரி.''

''சரி வாங்க ரெண்டு பேரும் போய் சாப்டுட்டு வந்துடலாம்.''

''நீ எல்லார் கூடவும் பேசிட்டு வாப்பா, அப்புறமா சாப்பிடப் போலாம்...''

''ம்கூம், உங்களுக்கு எப்பிடியோ எனக்குப் பசிக்கிது வாங்க.''

''அப்ப நீ மட்டும் போய் சாப்புடுப்பா...''

''பார்த்தீங்களா, அட வாங்கமா...''

''அப்பா கிட்டப் பேசிட்டயாப்பா.''

''இல்லமா போட்டோ எடுக்கும்போது சில வார்த்தைகள் பேசினது தான்'' என்றவனுக்குத் தாயின் முகத்தில் தெரிந்த சோகம் கவனத்தில் படத் தவற வில்லை.

கவலைக்கான காரணம் அவனுக்கும் தெரிந்துதான் இருந்தது.

ஆனால் அதற்காகப் பார்க்கவே மெலிந்து கண்களில் ஒளி குறைந்து இந்த அளவிற்கு உருக்குலைந்து போக வேண்டுமா.

சமாளிக்க முடியாதது என்று கூட ஒன்று உண்டா என்ன.

அதே நேரம் உள்ளே வந்த தாயின் வயதையொத்த இரு பெண்கள் தனது தாயுடன் பேசத் தொடங்கி



விட்டிருக்க, அவரும் தனது தோழிகளுடன், அப்படித் தான் இருக்க வேண்டுமென்பது ஹரிவரதனின் யூகம், வெகு சுவாரஸ்யத்துடன் பேசத் தொடங்கி விட்டிருந்தது தெரிந்தது.

''அண்ணா...''

''வா ஸ்மிர்த்தி.''

''ஆனாலும் என்னால நம்பவே முடியலண்ணா.''

''எத?''

''இல்ல நீங்க இந்நேரம் ஜெர்மனில இல்ல இருக்கணும், ஆனா எப்பிடி...''

''மூளைய ஏன் போட்டுக் கசக்கற, அதுவே பாவம் நொந்து போயிருக்கு...''

''நொந்து போயிருக்கா, என்ன சொல்றீங்க நீங்க. ஒண்ணுமே புரியல?''

''அதத்தான் நானும் சொல்றேன். ஒண்ணுமே இல்லாத மூளைய வெச்சுக்கிட்டு கண்டதுக்கெல்லாம் கசக்கிட்டிருந்தா அப்புறம் இப்படிதான்...''

''போங்கண்ணா...''

''எங்க போறது, எப்படியோ இனி உன் ரூட் கிளியர் இல்லையா?''

''நான் நினைச்சா எனக்கு ரூட் எப்பவுமே கிளியர் தான்.''

''அது சரி, நீ யாரு என்ன விஷயம்...''

''ம் கரெக்ட், அப்புறம் அண்ணா என் ஃப்ரண்ட் வாணிய உங்களுக்கு இன்ட்ரட்யூஸ் பண்றேன் இருங்க''

என்றவள் சற்றுத் தள்ளி நின்றிருந்த வாணியை அருகில் அழைத்தாள்.

''இவ தான் அண்ணா கலைவாணி ஆனா வாணின்னு சொன்னாத்தான் எல்லாருக்கும் தெரியும்'' என்றவள் வாணிக்கும் தனது அண்ணன் ஹரிவரதனை அறிமுகப் படுத்தி வைத்தாள்.

அனாவசிய அலட்டல்கள், ஒப்பனைகள் என எதுவுமில்லாமல் எளிமையாக இருந்த வாணி என்னும் கலைவாணியிடமிருந்து அவனால் ஏனோ உடனே பார்வையைத் திருப்பிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஆனாலும் சில வினாடிகளில் திரும்பித் தங்கையைப் பார்த்தவன், ''உன் ஃப்ரண்டா நம்பவே முடியலையே?'' என்றான்.

''ஏன்?''

''உன் ஃப்ரண்ட்ஸ்னா ஜீன்ஸ் பேன்ட், ஸார்ட்ஸ், டி ஷர்ட்னு தான இருப்பாங்க...''

''அது சரிதான், ஆனா வாணி அப்படியில்ல. பேச்சு டிரஸ்ஸிங்னு எல்லாத்துலையுமே ரொம்ப ரிஸர்வ்ட், என் டியர் மோஸ்ட் ஃப்ரண்ட்டும் கூட'' என்று பெருமை யுடன் மீண்டுமொரு முறையும் சொன்னாள்.

''ரொம்ப சந்தோஷம் வேறென்ன?''

அப்படிக் கேட்ட ஹரிவரதனின் முகத்தில் எரிச்சல் இருந்ததோ என்பது வாணிக்கு.

ஸ்மிர்த்தியின் மீது கோபம் தான் வந்தது.

ஒரு முறை அறிமுகப்படுத்தியது. அதிகப்படி ஏன் அதைக்கூடப் பரவாயில்லையென்று விட்டு விடலாம்.



இரண்டாவது தடவையாகவும் எதற்காக என்று நினைக் காமல் இருக்க முடியவில்லை.

அதற்குள் வேறு யாருடனோ பேசிய வண்ணம் அந்த ஹரிவரதன் அங்கிருந்து செல்ல அதற்குப் பிறகு தான் வாணியால் மீண்டும் இயல்பாக சுவாசிக்க முடிந்த தெனலாம்.

''வா வாணி?''

ஸ்மிர்த்தி அழைக்க ''எங்க?'' என்று கேட்டாள்.

''ஸ்டேஜ்க்கு, போட்டோ எடுத்துட்டு வந்துடலாம்.''

''இன்னும் கொஞ்ச நேரம் போகட்டுமே.''

''ம்கூம், இப்பப் போனா ஃப்ரீயா எடுத்துட்டு வந் துடலாம் வா'' என்று கையைப் பிடித்து இழுத்தவளுடன் சென்றாள் வாணி.

ஒரு புகைப்படத்திற்கு மட்டும் நின்று விட்டுப் பேசாமல் வந்து அமர்ந்து கொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டே சென்றவள், அது போலவே வந்து அமர்ந்தும் விட்டிருந்தாள்.

சில நிமிடங்கள் சென்றிருக்கும்.

மீண்டும் ஸ்மிர்த்தி வந்து அழைக்க, ''எதுக்கு?'' என்று கேட்டாள்.

''எல்லாருக்கும் உன்ன இன்ட்ரட்யூஸ் பண்ணி வைக்க தான்.''

''ம்கூம், நான் வரல ஸ்மிர்த்தி.''

''ஏன்?''

''ப்ளீஸ் என்னக் கம்பல் பண்ணாத, எனக்கு ஏனோ சங்கடமா இருக்கு'' என்று சொன்ன தோழியின் அருகில் தானும் அமர்ந்திருந்தாள் ஸ்மிர்த்தி.

''என்ன வாணி என்னாச்சு உனக்கு?''

''இன்னும் கொஞ்ச நேரம் இப்பிடியே உக்காந்துட்டிருந்துட்டு நான் கிளம்பறேன்.''

''ஏன்டி?''

''சீக்கிரம் வீட்டுக்குப் போயாகணும்.''

''அதான் ஏன்?''

வீட்டில் தான் போய் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருந்தன. அதைச் சொன்னால் ஒன்று ஸ்மிர்த்தி கோபப்படுவாள் அல்லது இருந்து விட்டுப் போகட்டும் அதெல்லாம் மெதுவாகப் போய்ச் செய்து கொள்ளலாம் என்பாள்...

''என்ன வாணி?''

''ஸாரி ஸ்மிர்த்தி வீட்ல நிறைய வேலையிருக்கு. நான் போய் தான் எல்லாருக்கும் சமைக்கணும்...''

''என்னது, நீ போய் சமைக்கணுமா? என்னடி ஏற்கனவே வேலைக்கும் போய்ட்டு வந்துட்டு அத்தன பேருக்கும் இனி நீயே தான் போய்...''

''பாரு, இதுக்கு தான் சொல்லக் கூடாதுன்னு பாத்தேன்.''

''ஆமா நீ சொல்லலேன்னா எனக்குத் தெரியாது பாரு...''

''ஸ்மிர்த்தி அங்க பாரு, உன்னை யாரோ கூப்புட்றாங்க'' என்று தோழி சொன்ன திசையில் பார்த்தவள்



''வாவ் அக்கா... இதோ வந்துட்றேன்'' என்று எழுந்து சென்றாள்.

அனைவருக்கும் அறிமுகப்படுத்தி வைக்கிறேன் வா என்று எவ்வளவு சாதாரணமாக அழைக்கிறாள்.

ஏனோ அனைவரும் தன்னையே பார்ப்பதைப் போல ஒருவித பிரம்மை தோன்றிக் கொண்டே இருக்க, மிகவும் அவஸ்தைப்பட்டுப் போனாள் வாணி.

தனக்கு என்னவாயிற்று,

தான் ஏன் இப்படி இருக்கிறோமென்று அவளுக்கே புரிந்திருக்கவில்லை.

மிகவும் முயன்றே வாணியால் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடிந்தது.

சுற்றிலும் பார்வையைச் சுழல விட்டால் கொஞ்சம் இறுக்கம் தளருமோ என்று நினைத்தவள் அனைவரையும் முயன்று இயல்பாகக் கவனித்தாள்.

அப்படிப் பார்த்தவளுக்கு சற்றுத் தொலைவில் நின்றிருந்த அண்ணன் என்று ஸ்மிர்த்தி அறிமுகப்படுத்திய ஹரிவரதன் கண்களில் பட்டான்.

ஏனோ அவனிடமிருந்து மட்டும் உடனே பார்வையை அகற்றிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல எவ்வளவு கம்பீரமாக இருக்கிறான்.

அதிலும் அவனைச் சுற்றி ஒரு கூட்டமே மொய்த்துக் கொண்டிருக்க அனைவரிடமும் எவ்வளவு இயல்பாகப் பேசிக் கொண்டிருக்கிறான் என்றிருந்தது.

இப்படிப்பட்டவன் ஸ்மிர்த்தி தன்னை அறிமுகப் படுத்தும்போது மட்டும் ஏன் அப்படிச் சொன்னான்.

நியாயமாக யோசிப்பவள் என்பதால் அப்படி அவனும் எடுத்த உடன் எதுவும் சொல்லிவிடவில்லையே. மீண்டும் ஸ்மிர்த்தி தனது புகழ் பாடப் போகத்தானே அப்படிச் சொன்னானென்றும்,

மேலும் அவன் மட்டும் சிடுமூஞ்சியாக இருந்திருந் தால் அவனுடன் பேச இத்தனை பேர் ஆவலுடன் செல்வார்களா என்ன.

இதே எண்ணப் போக்குடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்த வாணி இன்னும் ஒரு வினாடி சென்றிருந் தால் கூடப் பார்வையைத் திருப்பிக் கொண்டிருந்திருப் பாளோ என்னவோ.

ஆனால் அதற்குள் யதேச்சையாகத் தன்னை நோக்கித் திரும்பியிருந்த ஹரிவரதனின் கண்களை நேருக்கு நேராக எதிர் கொண்டாள்.

ஒரு சில வினாடிகள் தான் என்றாலும் தன்னை மறந்து பார்த்துக் கொண்டிருந்தவள், திடீரென ஏதோ தோன்றிய வளாகப் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

மனம் படபடவென்று அடித்துக் கொள்ள பெரிய பெரிய மூச்சுகளை எடுத்துத் தன்னை சமனப்படுத்திக் கொண்டவளுக்கு அதற்குப் பிறகு பார்வையை அவ சியத்திற்குக் கூடத் திருப்பும் தைரியம் வந்திருக்க வில்லை.

இன்னும் அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருக் கிறானோ என்று குறுகுறுத்த மனதை முயன்று வேறு பக்கம் திருப்பினாள்.





# 5

“வாணி.”

“வா ஸ்மிர்த்தி.”

“ஏய் என்னடி ஏன் இப்பிடி இறுக்கமா உக்காந்திருக்க?”

“ம், நான் வந்து ஒரு மணி நேரத்துக்கும் மேல ஆயி டுச்சு தெரியுமா?”

“இருக்கட்டுமே, அதுக்கென்ன?”

“அது சரி, இனிமேலும் இப்படி ஏதாவது அவசியம்னா நான் வரணுமில்ல...”

“ஓ, அப்ப லேட்டாப் போனா இனிமேல் வர விட மாட்டாங்களோ. அப்பிடி நீயும் அங்கதான் இருந்தாக ணும்னு என்ன? பேசாம ஏதாவது லேடிஸ் ஹாஸ்ட லுக்குப் போயிடு. பாதிப் பணத்த செலவழிச்சாக் கூட மீதிய சேமிக்கலாம். முக்கியமா இப்பிடி செத்து செத்துப் பிழைக்க வேண்டியதில்ல. நிம்மதியா இருக்கலாம் நீ என்ன சொல்ற?”

“சொல்லி முடிச்சுட்டியா இல்ல இன்னும் இருக்கா?” என்று வாணி கேட்க, “ஏய் நானென்ன கதையா சொல் லிட்டிருக்கேன்?” என்று கேட்டாள் ஸ்மிர்த்தி.

“பின்ன?”

“உதைப்பேன்டி உன்ன...”

''போதும் ஸ்மிர்த்தி, எங்க போறதுன்னு தெரியாம அனாதையா நின்னப்ப உதவி செஞ்சவங்க அவங்க தான், அந்த நன்றிக்கடன் எனக்கும் இருக்கணுமில் லையா.''

''அதுக்கும் ஒரு அளவு இருக்கேப்பா, சரி அதுக்காக எத்தன நாள் பாப்ப?''

''முடியற வரைக்கும்.''

''அதுக்கப்புறம்?''

''அதுக்கப்புறம் உங்க வீட்டுக்கு வந்துட்றேன் போதுமா?''

''வாவ், ப்ளீஸ் ப்ளீஸ் இப்பவே வந்துடேன்.''

''இப்பிடியே சொல்லிட்டிரு, அப்புறம் ஒரு நாளைக்குப் பெட்டி படுக்கையோட வந்து உன் வீட்டுக் கதவத் தட்டப் போறேன்.''

''அந்த இனிய நாளுக்காக நான் காத்திருப்பேன்.''

''சரிதான் நீ செய்வ...''

''பின்ன வா வாணி போய் சாப்டுட்டு வந்துடலாம்'' என்ற ஸ்மிர்த்தியின் அழைப்பில் அவளுடன் சென்றாள் வாணி.

சிறிது நேரத்தில் உணவு முடிந்து வெளியே வந் தார்கள்.

''சரி வா வாணி உனக்கும் லேட்டாயிடுச்சு. முக்கியமா சில பேருக்கு மட்டும் உன்ன அறிமுகப்படுத்தி வைக் கிறேன். அதுக்கப்புறம் நீ கிளம்பிக்குவியாம்'' என்று அழைத்தாள் ஸ்மிர்த்தி.



எவ்வளவு மறுத்துப் பார்த்தும் முடியாமல் உடன் சென்றாள் வாணி.

அப்படி அழைத்துச் சென்றவள் அவளுடைய நெருங்கிய உறவினர்கள் நட்பு வட்டம் என அனை வருக்கும் வாணியைப் பெருமையுடன் அறிமுகப்படுத்தி வைத்தாள்.

நீங்கள் யாரும் அறிந்திராத இவ்வளவு அழகான அடக்கமே உருவான தோழியும் தனக்கு உண்டு என்று அனைவருக்கும் காட்டிவிடும் ஆவல் ஸ்மிர்த்திக்கு.

கூடவே வெளியுலகம் என்று அவ்வளவாக வந்து பழக்கப்பட்டிராத தோழிக்கும் இயன்ற அளவு அனைத் தையும், அனைவரையும் காட்டிவிட வேண்டுமென் பதும், தோழியின் சந்தோஷத்தைப் பார்த்த பிறகு வாணி யாலும் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

அத்தோடு நின்றிருந்தால் கூட எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்.

ஆனால் ஸ்மிர்த்தி விடவில்லையே,

சற்று தூரத்தில் நின்றபடி யாருடனோ பேசிக் கொண் டிருந்த ஹரிவரதனிடமும் அழைத்துக் கொண்டு போனாள்.

நெஞ்சுக்குள் பந்தயக் குதிரை ஓட, இன்னொரு முறையா எதற்கு என்று கேட்க வந்த வார்த்தைகள் கூட அவளுக்குத் தொண்டைக் குழியிலிருந்து வெளியே வந்திருக்கவில்லை.

இனம் புரியாத படபடப்பும் அவஸ்த்தையும் தோன்றி வதைத்தன.

தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள இயன்ற மட்டும் முயன்றாள்.

அப்படி முயன்றவள் வெற்றியும் பெற்றிருப்பாளோ என்னவோ,

ஆனால் அதற்குள் ''அண்ணா'' என்ற ஸ்மிர்த்தியின் அழைப்பில் திரும்பியிருந்த ஹரிவரதனின் பார்வையில் மீண்டும் நிலை குலைந்தாள்.

அதற்கு மேலும் ''என்ன வேணும்?'' என்ற அவனுடைய கேள்வியில் அப்படியே பூமிக்குள்ளேயே போய் விட மாட்டோமா என்றிருந்தது.

ஆனால் ஸ்மிர்த்திக்கு அப்படியெல்லாம் எதுவும் தோன்றவில்லை போலும்,

''அண்ணா ஒரு ஹெல்ப்'' என்றாள்.

''என்ன சொல்லு?''

''என் ஃப்ரண்ட் வாணி வீட்டுக்குப் போக டிரைவர் யாராவது இருந்தா கொண்டு போய் விட்டுட்டு வரச் சொல்ல முடியுமா?''

கடவுளே இனி இவனிடம் உதவி வேறா என்று தலையிறக்கமாகப் போய் விட்டது வாணிக்கு.

'அதெல்லாம் வேண்டாம் நானே போய்க்கறேன்' என்றவளின் வார்த்தைகள் பாதிக்கு மேல் அவளுக்கே கேட்டிருக்கவில்லை.

ஆனால் அதற்குள் ''ஷ்யூர்'' என்று மொபைலை எடுத்திருந்த ஹரிவரதன், யாரையோ அழைத்திருந்தான்.

அதே நேரம் ''இதோ ஒரு நிமிஷம் வந்துட்றேன்'' என்று வாணியின் பதிலை எதிர்பார்க்காமல் ஸ்மிர்த்தி.



எங்கோ செல்ல, ''நானும் வர்றேன் இரு...'' என்ற வாணியின் வார்த்தைகள் மீண்டும் காற்றோடு போயிற்று.

மீண்டும் மொபைலை பாக்கெட்டில் வைத்துக் கொண்டு தன்னைத் திருப்பிப் பார்த்தவனை, இன்னதென்று விளக்கிச் சொல்லிவிட முடியாத ஒருவித அவஸ்தையுடன் நோக்கினாள் வாணி.

கடவுளே தன் நிலை மட்டும் இவனுக்குத் தெரிந்தால்,

சுற்றியிருக்கும் அனைவரும் எவ்வளவு இயல்பாக இருக்கிறார்கள், தன்னால் மட்டும் ஏன் அதில் பாதியளவு கூட முடியவில்லை...

''நான் ஒண்ணு சொல்லலாமா?''

திடீரென்று அந்த ஹரிவரதன் அப்படிக் கேட்க, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பார்த்தாள்.

''நீ ரொம்ப அழகா இருக்க, அப்படியே சுண்டி இழுக்கற அழகு. ஏன் இந்த நிமிஷம் வரைக்கும் உன் அளவுக்கு வேற எந்தப் பொண்ணும் என்ன இப்பிடியெல்லாம் பேச வெச்சதில்ல'' என்று பல் வரிசை பளீரிட புன்னகை புரிந்தவனைப் பார்த்தபடி அப்படியே செய்வதறியாது நின்று விட்டிருந்தாள்.

நாற்புறமும் சூழ்ந்து தன்னை விழுங்க வரும் ஆழிப் பேரலைகளுக்கு நடுவில் கையைக் காலைக் கூட அசைக்க முடியாத வண்ணம், ஏன் அப்படியே முயன்றாலும் கூடப் பலனில்லையென்பது தெளிவாகி விட்ட வினாடியில் அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக அந்த சமுத்திரத்தின் பிடியில் மூழ்கிக் காணாமல் போகிறாள் வாணி.

சுற்றியிருக்கும் எதுவுமே தெரியவில்லை.

ஏன் எதைப்பற்றிய நினைவும் இல்லை.

அந்த நிலை எத்தனை வினாடிகள் நீடித்ததோ, அல்லது நிமிடங்களாகவும் இருக்கலாமோ.

அண்ணா என்று அருகில் கேட்ட ஸ்மிர்த்தியின் குரலில் தான் மீண்டும் சுற்றுப்புறம் உணர்ந்தாள்.

அதே நேரம் "ஸார் கூப்டிங்களா?" என்று டிரைவர் வந்து நிற்க, "இவங்கள அழைச்சுட்டுப் போய் அவங்க வீட்ல விட்டுட்டு வரணும்" என்று வாணியைக் கை காட்டிச் சொன்னான் ஹரிவரதன்.

"தேங்க்ஸ்னா" - ஸ்மிர்த்தி.

"அதெல்லாம் எதுக்கு உனக்கு வேண்டியவங்கன்னா ஒரு விதத்துல எனக்கும் வேண்டியவங்க தான?" என்று மீண்டும் புன்னகைப் புரிந்தவனை இப்பொழுது சற்றுப் பயத்துடன் பார்த்தாள் வாணி.

ஒன்றிலிருந்து விடுபட்டு சற்று இயல்பாக சுவாசிக்கத் தொடங்குவதற்குள் இன்னுமொரு சுழலா என்றிருந்தது.

எங்கே விட்டிருந்தால் இந்த முறையும் சுற்றுப்புறம் மறந்திருப்பாளோ என்னவோ, அதற்கு வழியில்லாமல் "வா வாணி கிளம்பலாம்" என்ற ஸ்மிர்த்தியின் அழைப்பில் முழுமையாக நடப்பிற்கு வந்திருந்தாள்.

"ரொம்ப நன்றி நான் வர்றேன்" என்று முயன்று திருவாய் மலர்ந்தவள் விட்டால் போதுமென்பதைப் போல வேகமாக நடந்தாள்.



தோழியுடன் விடைபெறும் பொழுது,

காரில் வரும் பொழுது,

காரை விட்டு இறங்கும் பொழுது என அந்த ஹரிவரதனின் புன்னகையே மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்த வண்ணம் இருந்தது வாணிக்கு.

அது மட்டுமா.

அவனைப் பற்றி நினைக்கும் பொழுது ஏன் இந்தக் குறுகுறுப்பு தவிப்பு எல்லாம்.

ஆனால் அதெல்லாம் அந்த வினாடி வரை தான்.

வீட்டிற்குள்ளிருந்து கேட்ட அத்தையின் குரலில் ஒரு பெரிய நீண்ட கனவிலிருந்து விடுபட்டாற் போல விழித்திருந்தவள் அடுத்த வினாடி வீட்டிற்குள்ளும் வந்திருந்தாள்.



# 6

அன்று இரண்டாவது முறையாக நெஞ்சுக்குள் பந்தயக் குதிரைகள் ஓடின வாணிக்கு.

அத்தை கமலம் யாருடனோ வெகு மும்முரமாக போனில் பேசிக் கொண்டிருக்க, அந்த நேரத்தில் போய் புது ஆடைகளை மாற்றிக் கொண்டு வந்து விடலாமென்று வேகமாகத் தன்னுடைய அறைக்கு வந்திருந்தாள்.

சற்று முன் அத்தையும் மாமாவும் தன்னைப் பற்றி அநியாயமாக என்னவெல்லாம் பேசினார்கள் என்பதை அறியாத வாணி அவசர அவசரமாக வீட்டில் வேலை நேரத்தில் அணியும் பழைய சுடிதார் ஒன்றை எடுத்து அணிந்தாள்.

அப்படி வாணியைப் பற்றி அபாண்டமாகக் கமலம் என்ன பேசியிருப்பாள் என்று தானே யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்,

அவை இது தான்.

''அந்த வாணி வரட்டும் இன்னைக்கு, ஒரு கை பாக்கறேன்.''

''என்ன கமலம் ஏன் இப்படி கோபப்பட்ற? ஒரு நாள் லேட்டா வரக்கூடாதா?'' என்றான் அவளுடைய கணவன் வினாயகம்.

''கூடாது ஒரு நாள் தான்னாலும் எங்கிட்ட அனுமதி கேட்டிருக்கணும். அப்படிக் கேட்டிருந்தா நானும் போனாப் போகுதுன்னு போய்த் தொலைன்னு கூட சொல்லியிருப்பேன்.''

''ஆனா என்ன தைரியம் எங்கிட்ட. சொல்லாமலே ஊர் மேயப் போயிருக்கா.''

''அவ வரட்டும் இன்னைக்கு இனி இப்படிப் போவியான்னு அந்தக் கால் முட்டி ரெண்டையும் பேத்துட்றேன். ஏதாவது வாயத் திறந்தா பேசற அந்த நாக்க இழுத்து வெச்சு அறுக்கறேன்...''

''கமலம்னா என்னன்னு நினைச்சா.''



''இவ பண்றதப் பாத்தா இந்தக் கமலத்து மேல இருக்கற பயம் குறைஞ்சு போன மாதிரியில்ல தெரியுது.''

''அது தப்பாச்சே.''

''அத வளர விட்டா அப்புறம் நம்மகிட்டயே திரும்பி நின்னு பேசக்கூட செய்வா.''

''ம்கூம்.''

''விடமாட்டேன்.''

''வரட்டும் இன்னைக்கு கம்பு எடுத்து விளாசற விளாசுல மூஞ்சி முகரையெல்லாம் பேத்துட்றேன்.''

''கமலம்னா யாருன்னு காட்றேன், அதுவும் அவளுக்கு நல்லாத் தெரிஞ்ச பழைய கமலத்த...''

''கமலம்...''

கணவனின் தயக்கம் கமலம் அப்போதிருந்த மன நிலைக்கு மேலும் எரிச்சலையே கொடுத்திருந்தது.

''அட என்ன சொல்லித் தொலைங்க...''

''இல்ல நீ ரொம்பக் கோபமா இருக்கற போலிருக்கு.''

''ம், சந்தோஷமா சிரிச்சுக்கிட்டு இருக்கேன்...''

''அதுக்கில்ல கமலம் நீ பாட்டுக்குக் கோபத்துல பேசி. அதுக்கு அவளும் சரிதான்னு திருப்பிக்கப் போறா.''

''ஓ, இனி அது வேறயா...''

''அட நான் சொல்றத முழுசா கேளு கமலம், மாச மானா பத்தாயிரம் சம்பளம். காலைல நாலு மணிக்கு எழுந்தா வேலைக்குப் போய்ட்டு வர்ற அந்த ஒன்பது மணி நேரம் தவிர நைட் பதினோரு மணி வரைக்கும்

வேலை. இப்படி சம்பளமே இல்லாத வேலைக்காரி ம்கூம் தப்பு தப்பு நமக்குப் பத்தாயிரம் சம்பளம் குடுத்து வேலையும் செஞ்சு குடுக்கற வேலைக்காரி கிடைப் பாளா? நீயும் கொஞ்சம் கோபப்படாம யோசிச்சுப் பாக்கணும்.''

''ஓ, அதுக்கு? நான் போய் அவ கால்ல விழுந்து கும்புடவா?''

''ஐய்யய்யோ, அசிங்கமா என்ன வார்த்தை சொல் லிட்ட? அந்த அநாதைக் கழுதைக்கு நம்மள விட்டா வேற கதியில்ல. ஆனாலும் நாமளும் கொஞ்சம் மூடி மறைச்சு நடந்துக்கலாமே. ஊர் உலகம் கெட்டுப் போய்க் கிடக்குது, சம்பாதிக்கவும் செய்யறாளேன்னு அவ மனச யாராவது மாத்திட்டா. அதனால் தான் சொல்றேன் அப்படியே கண்டும் காணாம நடந்துக்கோ. இன்னொரு தடவ இந்த மாதிரி வந்தா கம்பெடுத்து விளாசிடுவேன்னு கூட சொல்லு. ஏன் அப்படியே செய்யவும் தயங்காத. ஆனா இன்னைக்கு ஒன்றும் பேசாதயேன்...''

''சரி சரி, போய்த் தொலைங்க...''

''என்ன கமலம் நீ, நல்லதுக்கு சொன்னாக் கூடக் கோபப்பட்ற?''

''அப்புறம், இதெல்லாம் நீங்க சொல்லித்தான் எனக்குத் தெரியணுமா? அந்த அனாதைக் கழுதய வீட் டுக்குக் கூட்டிட்டு வந்து மீந்துன கஞ்சின்னாலும் எதுக்கு ஊத்தினோம். எல்லாம் இப்பிடி பின்னாடி உதவுவான்னு தான?''



''சரியா சொன்ன கமலம், உன் மூளையே மூள தான்.''

''அதுவும் என்ன ரோஷம் வருது அந்தக் கழுதைக்கு ஒரு நாள் அஞ்சு நிமிஷம் லேட்டா எழுந்துட்டான்னு கேள்வி கேட்டா அடுத்த நாள் அரை மணி நேரம் முன்னாடி எழுந்துட்றா. கோபமா ஏன் முகம் சுளிச்சு ஒரு வார்த்தை சொல்லிட்டா மஹாராணி தாங்க மாட்டாளே. அப்பிடியே கொரவலையப் புடிச்சு நசுக்கிடலாங்கற அளவுக்கு ஆத்தரம் வரும்.''

''இந்தக் காலத்துல இவ்வளவு ரோஷத்தோட இருந் தாப் பொழைக்க முடியாதுன்னு அப்ப அந்த அனாதைக் கழுதைக்கு ஏதோ ஒரு வகைல சூடு போட்டுட்டிருக் கும்போதே நிலம இப்படியிருக்கு.''

அதிக பட்சம் இரண்டு மணி நேரம் அதுவே மிகவும் அதிகப்படி தான், தனது வேலைகளுக்காக அந்தப் பெண் வாணி செலவு செய்தால் கூட, மீதியிருக்கும் பதினேழு மணி நேரங்களும் தங்களுக்காகவே ஓடாக உழைக் கிறாளே என்ற எண்ணம் துளியும் இல்லாமல் தனது குண்டு உடலை இயன்ற மட்டும் முறுக்கி மனைவி பேசியதை எப்பொழுதும் மனைவிக்கு ஒத்து ஊதும் வினாயகத்தால் கூட காது கொடுத்துக் கேட்க முடிந் திருக்கவில்லை. பாவம் அந்தப் பெண் என்றிருந்தது.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் சரி.

அடுத்த வினாடியே ''ரொம்ப சரி கமலம்'' என்று மனைவிக்கு ஜால்ரா அடிக்கத் தொடங்கி விட்டிருந்தார்.

''அப்புறம் கமலம்...''

''என்ன...''

''என் சகாக்கள் எல்லாரும் எனக்காகக் காத்துட்டிருப் பாங்க...''

''சரி சரி போய்த் தொலையுங்க. பத்து மணிக்குள்ள வந்தாகணும். இல்லன்னா கதவத் தொறக்க மாட்டேன் வாசல்ல தான் படுத்தாகணும்.''

''டான்னு பத்து மணிக்குள்ள வீட்ல இருப்பேன்'' என்று கணவன் கிளம்பியதும் இன்னும் கூட வந்து சேரவில்லையே எத்தனை வேலைகள் இருக்கின்றன என்று கோபத்தில் பல்லைக் கடித்த வண்ணம் சிறிது நேரம் வெளியே நின்று பார்த்துக் கொண்டிருந்து விட்டு அப்பொழுது தான் வீட்டிற்குள் வந்திருந்தாள் கமலம்.

அப்படி வந்தவள் கணவனின் கைப்பேசி ஒலித்ததில் ஏன் தனக்கு அழைத்துத் தொலைவதற்கு என்னவாம் என்று எரிச்சல் பட்டுக் கொண்டே சென்று பார்க்க, அதற்குப் பிறகு தான் அது ஊரிலிருக்கும் தனது தம்பி யிடமிருந்து என்பது தெரிந்தது.

உடனே எடுத்து மும்முரமாகப் பேசவும் தொடங்கி விட்டிருந்தாள்.

அந்த நேரத்தில் தான் வாணி வந்ததும்,

தொடர்ந்து சில நிமிடங்களில் ஆடைகளை மாற்றிக் கொண்டு வாணி வந்து சேரவும் கைபேசியை வைத்து விட்டுக் கமலம் வரவும் சரியாக இருந்தது.

''வாடிம்மா வா.''

''அத்தை...''

''என்ன இவ்வளவு சீக்கிரம் வந்துட்ட?''



''இல்ல அத்...''

''என்னமா என்னாச்சு?''

''என் ஃப்ரண்ட் ஸ்மிர்த்தியோட அக்காவுக்கு இன் னைக்கு மேரேஜ் ரிசப்ஷன். கல்யாணத்துக்கே போய்ட்டு வந்துட்டதால நான் போகக் கூடாதுன்னு தான் பாத்தேன் அத்தை. ஆனா விட மாட்டேனுட்டா...''

''இன்னும் என்ன கதையெல்லாம் வெச்சிருக்க?''

''நிஜமா தான் சொல்றேன்.''

''நீ சொல்றத நான் நம்பறேன், நீயென்ன பொய்யா சொல்லப் போற? நான் கேக்க வர்றது உன் ஃப்ரண்ட் இன்னும் என்னவெல்லாம் செஞ்சான்னு தான், ஆமா போனதும் தான் போன ஒரு போன் பண்ணிட்டுப் போயிருக்கக் கூடாது.''

''பண்ணினேன் அத்தை, அஞ்சரைக்கு ஒரு தடவ. ஆறு மணிக்கு ஒரு தடவ. உங்க மொபைல் ஸ்விட்ச் ஆஃப் ஆகியிருந்தது.''

''நினைச்சேன், அப்பவே உங்க மாமாகிட்டயும் சொன்னேன். வாணி பொறுப்பான பொண்ணு அப்படி யெல்லாம் போக மாட்டோன்னு... சரி வா அந்த அரிசிய எடு உல கொதிச்சுடுச்சு.''

''அத்தெ...''

''என்ன பாக்கற? இன்னும் சமயல் ஆகல. பசங்கெல் லாரும் பசியோட இருப்பானுங்க சீக்கிரம்...''

சில வினாடிகள் தான் நின்றிருப்பாள்.

உடனே வேலையில் இறங்கி விட்டிருந்தாள்.

கமலம் கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக கவே ஒரு உணவு விடுதியைத் தொடங்கி நடத்திக் கொண்டு வந்தாள்.

அதில் நிறையப் பேர் வருவதும் போவதுமாக இருந்தாலும் இப்பொழுது முப்பது பேர் இருந்தனர்.

காலை, மதியம் இரண்டு வேளைக்கும் சேர்த்து ஒரு குழம்பு, ரசம், பொரியல், மோர் என உணவு சமைத்து விடுவது வழக்கம்.

இரவு டிபன் இட்லி, ஊத்தாப்பம், உப்புமா, சேவை, சப்பாத்தி இப்படி எதையாவது சமைப்பதும்,

ஆனால் சமைப்பது எதுவானாலும் அதைச் செய்ய வேண்டியது நூற்றுக்கு நூறு சதவிகிதம் வாணி தான்.

அதைச் செய்ய அவள் எப்பொழுதும் அஞ்சியது கிடையாது, ஏன் தயங்கியதும்,

ஆனால் இப்படி அத்தி பூத்தாற்போல அதிசயமாக வெளியே சென்று விட்டு வரும் நாளில் கூடவா இவர்கள் எடுத்துச் செய்யக்கூடாது என்றிருந்தது வாணிக்கு.

அதற்காக அனைத்தையுமே வாணி தான் செய்தாக வேண்டுமென்று இல்லை.

கமலமும் செய்வாள்.

வெங்காயம் வெட்டிக் கொடுப்பது, சாம்பார், குழம் புக்குக் காய்கள் வெட்டிக் கொடுப்பது என சிலது செய்து கொடுப்பாள்.

அதில் கூட பொரியலுக்கு வாணி தான் காய்களை வெட்டியாக வேண்டும், காரணமும் வேறொன்று



மில்லை பொரியலுக்கு சாம்பார் குழம்புக்குப் போலல் லாமல் நிறையக் காய்களை அதுவும் பொடிப் பொடியாக வேறு வெட்டியாக வேண்டுமே,

"ம் சீக்கிரம் அந்தத் தாம்பாளத்த எடு மூடி வைக்க லாம். சாதம் சீக்கரம் வேகட்டும்."

"ம் இன்னைக்கு சப்பாத்தியும் மசாலும் செய்திருக்க வேண்டிய நாள், அரிசி பருப்பு சாப்பாடு செஞ்சிருக்கோம் பசங்க இனி என்ன சொல்லப் போறாங்களோ."

"சரி சரி அந்த வெறும் சாப்பாட்டையும், மோரையும் எடுத்து டேபிள் மேல வெச்சுடு. கூடவே ஊறுகாயை யும்."

தனது அத்தை சொன்னதுபோல அனைத்தையும் எடுத்து வைத்தாள்.

இனி அடுப்பிலிருக்கும் சாதம் தயாரானால் சரி, அனைவரையும் வரச் சொல்லி விடலாம்.

"என்ன..."

"தண்ணியிலிருந்து எல்லாமே எடுத்து வைச்சுட் டேன் அத்தை... நான் போய்க்கட்டுமா..."

"என்ன இன்னைக்கு தப்பிக்கவே பாக்கற, சரி சரி போ இனி பத்து நிமிஷத்துல தயாராயிடும் நான் பாத்துக் கறேன்."

ஒரே ஒரு வேலையை மட்டும் வாணி எப்பொழுதுமே செய்ய மாட்டாள்.

அது விடுதி மாணவர்களுக்கு உணவு பரிமாறுவது.

அதை அத்தையம்மாளே செய்யச் சொன்னால் கூட முடியாதென்று சொல்லி விடத்தான் வாணி நினைப் பாள்.

ஆனால் ஒரு முறை கூட அதற்கு அவசியம் வந்திருக்க வில்லை.

ஏனென்றால் அந்த ஒரு வேலையை மட்டும் அத்தையம்மாள் வாணியை எப்பொழுதும் செய்யச் சொன்னதே இல்லை.

அதற்குக் காரணமும் இருந்தது.

என்னதான் வாணி ஒழுக்கத்தில் நெருப்பு என்றாலும் வயதுப் பெண்.

அழகும், வனப்பும் வேறு பார்ப்பவர்களை இன்னொரு முறை திரும்பிப் பார்க்கத் தூண்டும்படியாய் இருக்க, வேண்டுமென்றே பிரச்சனையை இழுத்துக் கொள் வதற்கு கமலம் தான் முட்டாளா என்ன.

தங்க முட்டையிடும் வாத்து போல பிறர் கண் படாமல் வாணியைப் பொத்திப் பொத்தி வைத்தாள்.

தன்னுடைய சாதுர்யத்தால் தான் வாணி எந்தத் தப்பு வழியும் செல்லாது இருக்கிறாள் என்ற பெருமை வேறு.

அந்த மன்மதனே நேரில் வந்தால்கூட வாணியின் கவனத்தில் விழுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு ஏன் இல்லையென்றே சொல்லி விடலாமென்பது கமலத் திற்குத் தெரிந்திருக்கவில்லை.

தனது அத்தையின் சாமர்த்தியத்தையெல்லாம் அறிந்து கொள்ளுமளவிற்கு வாணிக்கும் சாமர்த்திய



மில்லாதபடியால் அவளும் தன்னளவில் நிம்மதியாகவே இருந்தாள்.

காலையில் நாலு மணிக்கு எழுந்தாளென்றால் அலுவலகத்திற்குக் கிளம்பும் வரை வேலையே சரியாக இருக்கும்.

பிறகு சென்று குளித்து விட்டு வேலைக்குக் கிளம்பி னால் மீண்டும் மாலை ஐந்தரைக்கெல்லாம் வீடு வந்து சேர்ந்து விடுவாள்.

வந்ததும் வராததுமாக அத்தை தனக்கென தயாராக வைத்திருக்கும் வேலைகளில் இறங்கினாள் என்றால் அவை முடிய இரவு பத்து பத்தரை கூட ஆகும். சில சமயங்களில் அதற்கு மேலேயும்,

அதற்குப் பிறகு சென்று வேலைச் சோர்வு, கசகசப்பு தீர தன் அறைக்குள்ளேயே இருக்கும் அட்டாச்டு பாத்ருமில் குளித்து, பிரஸ் செய்து விட்டு வந்து படுத் தால் மீண்டும் காலையில் விழிக்கும் வரை கட்டை யாகிப் போவாள்.

அதாவது அதிகாலை நான்கு மணி வரை,

வீட்டின் வெளிப்பக்கமாக கேட்டருகே தன் அறை இருப்பதால் காலையில் நான்கு மணிக்கு பால்காரர் வந்து ஜன்னலைத் தட்டும் பொழுது நன்றாகவே விழிப்பு வந்து விடும் வாணிக்கு.

பிறகு எழுந்தாளென்றால் மீண்டும் வழக்கம் போலத் தான்.

வாணியைப் பொறுத்தவரை அவள் எப்பொழுதும் வேலைகளுக்கு அஞ்சியது கிடையாது.

அதிலும் நல்ல ஆரோக்கியமான பெண்ணும் என்பதால் அனைத்து வேலைகளையும் ஒரு சவாலாகவே ஏற்றுச் செய்தாள்.

தொடக்கத்தில் இந்த வேலைகளெல்லாம் மலை போலத் தோன்றினாலும் எதையெதை எப்படித் திட்டமிட்டுச் செய்ய வேண்டுமென்று பழகி அதைச் செயல் படுத்தவும் தொடங்கி விட்ட பிறகு, அனைத்தும் சுலபமாகி விட்டிருந்தன.

இப்படித்தான் வாணிக்கு அங்கு நாட்கள் சென்று கொண்டிருந்தன.

எப்பொழுதும் என்றால் வருடம் முழுவதுமே அப்படித் தானென்று சொல்லி விட முடியாது.

ஏதாவது பண்டிகையென்று வந்து விடுதியிலிருப் பவர்கள் அனைவரும் ஊருக்குச் சென்று விட்டால் அப்பொழுது உணவு விடுதியில் வேலையிருக்காது.

அப்பொழுதும் அதற்குச் சரியாக வீட்டைச் சுத்தப் படுத்துவது அது இதென்று அத்தை வேறு வேலைகளை வைத்திருப்பாரென்றும் ஒரு மாறுதல் நிச்சயம்.

அது மட்டுமல்லாமல் எங்காவது கோவில் குளம் அல்லது உறவினர் வீட்டிற்குச் செல்கிறேனென்று வருடத்திற்கு ஒரு வாரம் பத்து நாட்கள் கணவனும் மனைவியுமாக மூட்டையைக் கட்டிக் கொண்டு கிளம்பி விடுவதும் உண்டு.

அந்த நாட்களில் வேண்டுமானாலும் முழு சுதந்திரம் கிடைக்கலாம்.



பக்கத்து வீட்டுப் பாட்டியம்மா வந்து இரவிற்கு துணைக்குப் படுத்துக் கொள்ள ஏற்பாடு நடந்திருக்கு மென்பதால் தனிமை பயமும் இருக்காது.

ஆனால் நிற்காமல் வேலை செய்யப் பழகிக் கொண்டு விட்டவளுக்கு அதுவும் அவஸ்தையாகவே இருக்கும்.

ஆனாலும் அந்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் ஏதாவது பர்ச்சேஸ் செய்வது, தோழியின் வீட்டிற்குச் சென்று வருவது, அவளுடன் சேர்ந்து கோவில், சினிமா, பிக்னிக் என வெளியில் எங்காவது சென்று வருவது எனத் தன்னை ரிலாக்ஸ் செய்து கொள்வாள். அதாவது ஸ்மிர்த்தி செய்ய வைத்து விடுவாள்.

இப்படி வருடத்தில் ஒரு பதினைந்து அல்லது இருபது நாட்கள் விடுமுறையும் கிடைத்து விடுவதால் தானும் மற்ற சராசரிப் பெண்களைப் போலத்தான், என்ன மற்றபடி கொஞ்சம் வேலைகள் அதிகம் அவ்வளவே என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்வாள்.

சில சமயம் கேட்க நேரும் அத்தையின் விஷம் தடவிய வார்த்தைகள், கூடவே அதிகப்படி வேலை என இவை இரண்டையும் விடுத்துப் பார்த்தால் அத்தை வீடு ஒரு நாளும் வாணிக்குக் கசந்ததில்லை.

ஏன் அந்த வீடு ஒரு அரண் போலத் தனக்கு பாதுகாப்புத் தருவதுடன், வெளியே நடக்கும் எத்தனை எத்தனையோ அநியாயங்களிலிருந்தும் துன்பங்களி லிருந்தும் வேறு தன்னைக் காத்துக் கொள்ள முடிகிறதே என்ற நிம்மதியும் கூட.

மேலும் தன் போன்ற ஆதரவற்றவர்களுக்கு இதற்கு மேலும் தான் வேறென்ன வேண்டுமென்றிருக்கும்,

வாணியைப் பொறுத்தவரை அவள் சராசரிப் பெண் இல்லை.

பிறந்தபோதே தாயை இழந்து, சிறு வயதிலேயே தந்தையையும் இழந்து பிறகு துளியும் பாசமென்று காட்டி அறியாத அத்தை மாமாவிடம் வளர்ந்தவள்.

அப்படி வளர்ந்ததாலேயே தைரியமானவளாக வளர்ந்திருந்தாள் என்றும் கூடச் சொல்லலாம்.

பரிவு பாசம் என்று கரிசனம் காட்டி கேட்டதை உடனே வாங்கிக் கொடுத்து, இம்மெனும் முன் சமாதானம் அறிவுரை சொல்லி அறியாதவள் என்பதால் தானே நல்லது கெட்டது பகுத்துணரும் ஆற்றலும் பெற்றவளாய் இருந்தாள்.

அதே சமயம் நகைச்சுவை கேட்டால் சிரித்து, நல்லதைப் பார்த்து சந்தோஷப்பட்டு, கெட்ட விஷயங்களென்றால் வாடி அது மற்றவர்களுக்கென்றாலும் தான், இப்படி சராசரியை விடவும் கூடச் சற்று அதிகமாகவே அனைத்து விதமான உணர்ச்சிகளும் அவளுக்கும் இருந்தன.

என்ன அதைக் காட்டி சொந்தம் கொண்டாட வழியிருக்கவில்லை அவ்வளவே.

அனைத்திற்கும் மேலாகக் கமலத்தின் கண்டிப்பும், சிடுசிடுப்பும் ஒரு வகையில் வாணிக்குப் பிடித்தே இருந்தது.

தனது இழப்பை எண்ணி வருந்திக் கொண்டிருக்க வழியில்லாமல் அதே சமயம் கேள்வி கேட்க யாருமில்லை



இஷ்டப்படி இருக்கலாம் என்று வழி மாறியும் போய் விடாமல் அது காத்தது எனலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாகப் பத்து வயதில் போக்கிடம் இன்றித் தான் நின்றபோது அடைக்கலம் கொடுத்தவர்கள்.

என்னதான் வேலைக்காரியைப் போலத் தன்னை நடத்தினார்கள் என்றாலும் ஏனோ ஒரேயடியாக அப்படித்தான் என்றும் வாணியால் நினைத்து விட முடியவில்லை.

வீட்டு வேலைகள் சற்று இல்லையில்லை மிகவும் அதிகப்படியே என்றாலும் அதை செய்து கொடுக்க வேண்டிய கடமை தனக்கும் இருக்கிறதென்றே நினைத்தாள்.

அப்படி எண்ணியதாலேயே லேடிஸ் ஹாஸ்டல் மாதிரி எங்காவது போய் இருந்து கொண்டு விடலாமே என்ற சிலரின் அறிவுரைகள் அவளுக்கு எப்பொழுதுமே உவப்பானதாக இருந்ததில்லை.

சிறு வயது,

உழைத்தால் ஒன்றும் பாதகமில்லையென்று தனக்குத்தானே மனம் சோர்வடையும் நேரங்களிலெல்லாம் சமாதானம் சொல்லிக் கொள்வாள்.

அத்தோடு அவர்களும் தான் மனிதாபிமானமே இல்லாதவர்களா என்ன.

வாணி கொடுக்கும் சம்பளப் பணத்தை அவளுக்காகத் தானே சேர்த்துக் கொண்டு வருகிறார்கள்.

என்ன வங்கியில் சேமித்து வரலாம்.

ஆனால் அப்படிச் செய்யாமல் அதை யாரோ உற வினர்களின் சிட் ஃபண்டில் கட்டிக் கொண்டு வந் தார்கள்.

''வாணி, ஏய் வாணி...''

வெளியே கேட்ட அத்தையின் குரலில் நடப்பிற்கு வந்திருந்தவள், ''என்ன அத்தை?'' என்று வந்தாள்.

''நாளைக்குக் காலைல என்ன சமையல்னு ஞாபக மிருக்கல்ல?''

''இருக்கு அத்தை...''

''அதுக்குத் தேவையான அரிசி பருப்பு காய்கறி யெல்லாம் எடுத்து வெச்சுட்டேன். நான் நாளைக்குக் காலை நேரத்துலயே ஊருக்குப் போக வேண்டியிருக்கு. நீ எல்லாத்தையும் செஞ்சு மட்டும் வச்சுடு மாமா எடுத்துப் பசங்களுக்குப் பரிமாறிடுவார்.''

''சரி அத்தை...''

''சரி சரி போ காலைல நேரத்துல எழற வேலையப் பாரு'' என்ற அதட்டலுடன் அத்தை கமலம் நகர, உள்ளே வந்தவள் இரவு உடைகளை எடுத்துக் கொண்டு குளிக்கச் சென்றாள்.

தானே தனியாகச் செய்ய வேண்டுமா என்று நினைத் தவளுக்கு உடனே சரிதான் அதெல்லாம் செய்து விடலாமென்ற நம்பிக்கை வந்திருந்தது.

அத்தை இல்லாத நாட்களில் கேட்காமலே பக்கத்து வீட்டுப் பாட்டியம்மாள் உதவிக்கு வந்து விடுவாரே.



என்ன கொஞ்சம் குழம்பு, ரசம் ஊற்றிக் கொடுத்து விட்டால் போயிற்று என்று நினைத்துக் கொண்டாள்.

என்ன அத்தையிருந்தால் அப்படியே கால் நீட்டி அமர்ந்து கொண்டு சில பொடி வேலைகளை அவர் செய்து கொடுப்பார். அவர் இல்லாததால் தானே என்றும்.

சிறிது நேரத்தில் குளித்து பிரஸ் செய்து விட்டு வெளியே வந்தாள் வாணி.

வழக்கம்போல என்றால் குளியலறையிலிருந்து வெளியே வரும் போதே கண்கள் சொருகும், அப்படியே படுக்கையில் சாய்ந்தும் விடுவாள்.

ஆனால் அன்று ஏனோ மனம் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்தது.

அதற்குக் காரணமும் அன்று வெளியே சென்று வர நேர்ந்தது தான்.

சரிதான், ஆனால் அது மட்டும் தான் காரணமா.

மனசாட்சி கேள்வி கேட்க உடனே இல்லையென் பதும் புரிந்தது.

பிறகு என்ன.

அது...

அது அந்த ஹரிவரதன் தான்.

அவனைப் பார்க்க நேர்ந்தது தான்.

வேலை விட்டால் வீடு, பிறகு அங்கும் நிமிர்ந்து பார்க்க முடியாத அளவிற்கு வேலைகள் என்றே பழகிப் போனவளுக்கு இந்தப் புது அனுபவம் இந்த அளவிற்குத் தன்னை அவஸ்தைக்குள்ளாக்கும் என்று தெரிந்திருக்க வில்லை.

எப்பொழுதும் படுத்த உடன் உறங்கி விடுபவளுக்கு அன்று தூக்கம் அருகில் கூட வரமாட்டேன் என்றது.

அந்த ஹரிவரதன் சொன்ன வார்த்தைகளே மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்த வண்ணம் இருந்தன.

ஒரு முறை இரு முறையல்ல.

எண்ணிலடங்கா எத்தனை எத்தனையோ முறை,

'நீ ரொம்ப அழகா இருக்க, அப்படியே சுண்டி இழுக்கற அழகு...' என்ற கம்பீரமான வார்த்தைகள் அப்பொழுது போல மீண்டும் காதுகளுக்குள் ஒலிக்க, அப்படியே எழுந்து அமர்ந்து விட்டிருந்தாள் வாணி.

ஏனோ அந்தக் குளிரிலும் வேர்த்தது.

நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொள்ள, செய்வ தறியாது திகைத்தாள்.

தனக்கு என்னவாயிற்று.

எவனோ ஒரு ஹரிவரதன் விளையாட்டாகச் சொன்ன அந்த வார்த்தைகள் தன்னை ஏன் இந்த அளவிற்கு பாதிக்கின்றன.

வாழ்க்கை தன்னளவில் திருப்தியாகப் போய்க் கொண்டிருப்பதாக எண்ணினோமே.

ஆனால் உண்மையில் அப்படியில்லையோ,

ஆம்.

அது சரிதான்.

இல்லையென்றால் அந்த ஹரிவரதனின் ஒரு சாதாரணப் புன்னகை ஏன் தன்னை இந்த அளவிற்கு இம்சிக்க வேண்டும்.



அது மட்டுமா.

அவனுடைய முகமும் அல்லவா மீண்டும், மீண்டும் நினைவிற்கு வந்து கொண்டே இருக்கிறது.

எதையோ கண்டு கொண்டாற்போல,

வாழ்க்கைக்கே புது அர்த்தம் கிடைத்து விட்டாற் போல,

தன்னிடமுள்ள எதையோ இழந்து விட்டாற்போல,

மிகவும் சந்தோஷமாக உணர்வதைப் போல,

அடுத்த வினாடியே இந்த உலகத்திலேயே தான் தான் மிகவும் துரதிர்ஷ்டசாலி போல,

ஏன் இந்த முன்னுக்குப் பின் முரணான எண்ண ஓட்டங்கள்.

யோசிக்க யோசிக்க ஏதோ புரிவதைப் போலத் தான் இருந்தது.

ஆனால் இது எப்படி சாத்தியம்.

தான் இவ்வளவு பலவீனமானவளா,

இதை மட்டும் தோழி அறிந்தால் ஏன் அந்த ஹரிவர தனுக்கே தெரிந்தால் சீ என்று முகத்தில் காரி உமிழ்ந்து விட மாட்டார்களா,

ஏனோ அந்த வினாடியில் உடல் நடுங்கி விட் டிருந்தது வாணிக்கு.

தன்னை நினைத்தே வெட்கிப் போனவளாய் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுது விட் டிருந்தாள்.

சில வினாடிகள் தான்.

அதற்குப் பிறகு ஓரளவு தெளிந்து எழுந்து அமர்ந்தும் இருந்தாள்.

இல்லை, நான் முட்டாள் இல்லை. என்னால் என் மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும், நடக்க சாத்தியமே இல்லாத ஒன்றை இந்த வினாடியே என்னுடைய மனதிற்குள்ளிருந்து தூக்கி எறிந்து விட்டேன் என்று தனக்குத் தானே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டாள்.

இறுதியில் முயன்று மனதை ஒருநிலைக்குக் கொண்டு வந்திருந்தவள் வழக்கம் போலக் கடவுளின் நாமங்களைச் சொல்லியபடி தூங்கியும் போயிருந்தாள்.



# 7

இன்னும் சிறிது நேரம் இருந்து விட்டுத் தன்னுடைய காரில் வந்து விடுவதாகத் தந்தை கூற, தாயை மட்டும் அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்திருந்தான் ஹரிவரதன்.

''கசகசன்னு இருக்குமா இதோ வந்துட்றேன்'' என்று சென்றவன், சிறிது நேரத்தில் குளித்து பிரஸ் செய்து முடித்துக் கீழே இறங்கி வந்தான்.

''என்னமா, நீங்க இன்னும் தூங்கலையா?''



''தூக்கம் வரல ஹரி.''

''சொல்லுங்கம்மா என்ன பிரச்சன?''

''நாளைக்குப் பேசிக்கலாம்பா, பாவம் நீயும் இன்னைக்கு தான் வந்திருக்க.''

''பரவாயில்லமா, சொல்லுங்க.''

''அது...''

''என்னமா, எதுவானாலும் பரவாயில்ல உங்க மனசுக்குள்ள வெச்சு உருகிட்டிருக்காம வெளிய சொல்லுங்க.''

அதே நேரம் கமலநாதன் உள்ளே வர, தாய் மகன் இருவரும் அவரைப் பார்த்தனர்.

''என்ன ஹரி சொல்றது, இந்த சுமிதாவால பாவம் உங்கம்மா ஒரு வாரமா நிம்மதியில்லாம தவிச்சுட்டிருக்கா...''

''புரியற மாதிரி சொல்லுங்கப்பா.''

''உன் தங்கைக்குச் சொத்துல அவளோட பங்கு வேணுமாம், தினமும் போன் பண்ணிட்றா. விட்டா ஆள வெச்சுக்கூட மிரட்டுவா போலிருக்கு'' என்று விரக்தியுடன் மெல்லிய குரலில் சொன்னார் கமலநாதன்.

தந்தை சொன்னது ஹரிவரதனுக்கு அவ்வளவு ஒன்றும் அதிர்ச்சியானதாக இருக்கவில்லை.

ஏனென்றால், அவனுடைய தங்கை சுமிதா சில நாடகளுக்கு முன்பு அவனுக்கும் அழைத்துப் பேசியிருந்தாள்.

அதற்கு ஒரு நல்ல அண்ணனாக ஹரிவரதனும் 'தாராளமாக் குடுத்துட்லாம்மா. நான் இப்ப ஜெர்மனில இருக்கேன். இந்தியா வந்ததும் பேசிக்கலாம். அது வரைக்கும் கொஞ்சம் பொறுத்துக்கோ' என்றிருந்தான்.

முக்கியமாகத் தாய் தந்தையிடம் அவசரப்பட்டு இதைப் பற்றிப் பேசக் கூடாதென்றிருந்தான்.

மற்றது எப்படியானாலும் தான் ஒன்று சொன்னால் அதை அப்படியே கேட்டுச் செய்யும் தங்கை, இப்பொழுது இப்படி மாறிப் போயிருக்கிறாளென்றால்,

ஏனோ அதை அவனால் ஜீரணித்துக் கொள்ள முடிந் திருக்கவில்லை.

முயன்று அதை வெளியே காட்டாமல் மறைத்தவ னுக்கு தங்கையின் புகுந்த வீட்டினரின் மேல் தான் கோபம் வந்தது.

''என்ன ஹரி...''

''என்னப்பா நீங்க இப்படியெல்லாம் பேசறீங்க. என்னதான் சுமிதாவுக்கு நம்ம மேல கோபம்னாலும் நீங்க சொல்ற மாதிரி ஆள வெச்சு மிரட்டற கேவலத்தை யெல்லாம் செய்வாளாப்பா. அவள நீங்க இப்பிடியெல் லாம் நினைக்கலாமா?''

''என்ன பண்றது ஹரி சொல்லிக் குடுக்கற ஆளுங்க அந்த மாதிரியாச்சே...''

''இருந்தாலும் சுமிதா நம்ம வீட்டுப் பொண்ணுப்பா, அவ பங்கக் கேக்கறதுல ஞாயமிருக்கு. அதக் கொஞ்சம் அழுத்திக் கேக்கறா அவ்வளவுதான்.''

சொத்தில் பங்கென்ன, ஆசைத் தங்கைக்கு அனைத் தையுமே கொடுக்கலாமே.

ஆனால் அதைச் செய்து முடிக்க ஹரிவரதனுக்கு சிறிது அவகாசம் தேவைப்பட்டது அவ்வளவே,



முதலில் தங்கை கேட்பதில் தவறொன்றுமில்லை என்பதைப் பெற்றவர்களும் புரியும் விதமாகப் பக்குவ மாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

அவர்கள் புரிந்து கொண்டதும் தங்கை கேட்பதை சந் தோஷமாகக் கொடுத்து விடலாமென்பது அவனுடைய எண்ணம்.

ஏன் இப்பொழுது தாய் தந்தை இதைப் பற்றிச் சொல்லியிருக்கா விட்டால் கூட, மறுநாள் இதைப் பேசி விட வேண்டுமென்றுதான் எண்ணியிருந்தான்.

ஆனால் அதற்குள் விஷயம் திசை மாறி விட்டிருக் கிறது.

சரிதான்.

இனி தானும் மறைக்க ஒன்றுமில்லை.

உள்ளதை உள்ளபடி அப்படியே பேசிவிட வேண் டியது தானென்று பெற்றவர்களின் முகங்களைப் பார்த் தான்.

''சுமிதா கேக்காமலே குடுத்திருக்க வேண்டியது நம்ம கடமை. இப்ப வாயத் திறந்து கேக்கவே, செஞ்சுட்டா குடுத்துட வேண்டியது தான்'' என்றான்.

''தாராளமா, ஆனா அவ கேக்கறது பணமோ நகையோ, இடமோ இல்ல. என்னப்பா பாக்கற? அவ கம்பெனியக் கேக்கறா, கூடவே இந்த வீட்டையும்.''

தந்தை சொல்ல, இது ஹரிவரதனுக்கு செய்தியாக இருந்தது.

''என்னப்பா சொல்றீங்க?''

''இனி சொல்ல என்ன இருக்கு. மாசமானா கோடி கோடியா வருமானம் வர்ற தொழில நம்ம வெச்சுக்கிட்டு கேவலம் ஏதோ சொத்துல பாதி மதிப்பக் குடுத்துட்டா வேல முடிஞ்சதுன்னு நாம எதக் குடுத்தாலும் வாங்கிக்க மாட்டாளாம். அதே மாதிரி அவளோட தாத்தா பாட்டி கட்டின, அவ வளந்த இந்த வீடு வேணுமாம், மலரும் நினைவுகளாம்.''

''சரிதான்பா குடுத்துடலாம்.''

''என்ன ஹரி சொல்ற?''

''ஆமாப்பா, நம்ம வீட்டுப் பொண்ணுக்கு நாமே கணக்குப் பாக்கலாமா?''

''சரிதான் அவளுக்கிருக்கற அதே நினைவுகள் தான் நமக்கும். சரிதான் போனாப் போகுதுன்னு வீட்டக் கூடக் குடு. ஆனா தொழில்...'

''அது நீ உயிரா வளத்ததுப்பா, உன் வியர்வையாலும், உழைப்பாலும் அது இன்னைக்கு ஆலமரமா வளந்து நிக்குது. அத எப்படிக் குடுக்க முடியும்?''

''அதுக்காக என்னமா பண்ண முடியும், சுமிதா கேட்டுட்டாளே.''

''அவ கேட்டுட்டா உடனே எடுத்துக் குடுத்துட முடியுமா? இந்த வீட்டக் கூடக் குடுத்துடலாம். அதோட இருக்கற எல்லாத்தையுமே கூட. ஆனா தொழில் உங்கப்பா, அதுக்கப்புறம் நீ வளத்ததுப்பா வேண்டாம்ப்பா...''

''அதுதாம்மா சொல்றேன். இதே மாதிரி இன்னொரு கம்பெனிய உருவாக்கறது ஒண்ணும் பெரிய விஷயம் இல்லமா'' என்று சொல்லும்போதே, தான் எவ்வளவு



அநியாயமாகப் பேசுகிறோம் என்றிருந்தது ஹரிவரதனுக்கு.

ஆனால் அப்பொழுதிருக்கும் மனநிலையில் அவனும் தான் வேறு என்ன சொல்வான்.

அவனைப் பொறுத்தவரை பெற்றவர்கள் ஒரு கண் என்றால், தங்கை இன்னொரு கண் ஆயிற்றே.

''என்ன ஹரி சொல்ற, நீ நினைச்சா முடியாதது ஒன்றும் இருக்க முடியாது தான். ஆனா...''

சரிதான்.

வெறுமனே ஒரு தொழில் என்று மட்டும் பார்த்தால் வேறு ஒன்றை நிர்மானித்துக் கொள்ள முடியும் தான்.

ஆனால் இப்போதைய தங்களுடைய கம்பெனியில் இரண்டாயிரம் பேருக்கும் மேலாகவே வேலை செய்து கொண்டு இருக்கிறார்களே.

நாளுக்கு நாள் தொழிலும் வளர்ச்சியும், விரிவும் அடைந்து கொண்டே செல்வதால் அதில் ஒரு பங்கை அப்படியே தொழிலாளர்களின் வளர்ச்சிக்கென ஒதுக்கியிருந்தான் ஹரிவரதன்.

அது ஒன்று தான் அவனை யோசிக்க வைத்தது.

தங்களுடைய பாகப் பிரிவினையால் தொழிலாளர்களுக்கு ஏதும் பங்கம் வந்து விடுமோ என்கிற கவலை தான் அவனுக்கு.

''என்னப்பா பேச மாட்டேங்கற?''

தாய் கேட்க, ''பாக்கலாம்மா, தொழில்னு வரும்போது இன்னும் எத்தனை எத்தனையோ விஷயங்களையும் மனசுல வெச்சு யோசிச்சுப் பாத்துதான் ஒரு முடிவுக்கு

வர வேண்டியிருக்கு. எதுக்கும் நாளைக்கு நேர்ல ஒரு முறை சுமிதாவப் பாத்துப் பேசறேன். அதுக்கப்புறம் எதுவானாலும் முடிவு பண்ணிக்கலாம்'' என்றான்.

''சரிதான் ஹரி, நீ பேசினா நிச்சயம் அவ கேப்பா பேசிப்பாரு'' என்றார் வசந்தி.

''ஆமாம்மா. நம்பிக்கையோட இருங்க நிச்சயம் நல்லதுதான் நடக்கும்'' என்று தானும் உணர்ந்து சொன்னான் ஹரிவரதன்.

''அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு ஹரி, நீ ஒண்ணு நினைச்சுட்டா அது ஜெயம் தான்.''

''நிச்சயமாம்மா, இனியாவது நீங்க போய் நிம்மதியாத் தூங்கலாமே'' என்று மகன் சொல்ல ''சரிதான் ஃப்ளாஸ்க்குல சூடா பால் இருக்கு. நீ உன் ரூமுக்குப் போகும்போது, எடுத்துட்டுப் போயிடு. நான் தூங்கப் போறேன்'' என்று கணவன் மகன் இருவருக்கும் பொதுவாகச் சொல்லி விட்டு நகர்ந்தார் வசந்தி.

தாய் சென்றதும் இன்னும் பேச ஏதோ இருக்கிறது என்பதைப் போலப் பார்த்த தந்தையைப் பார்த்தான்.

அது சரியே என்பதைப் போல, ''உன் தங்கையப் பத்தித் தெரியாம பேசற ஹரி'' என்றார்.

''உங்க பொண்ணுன்னு கூடச் சொல்லலாம்பா.''

''சொல்றது மட்டுமா, எவ்வளவு அன்பா ஆசையா வளத்தோம் இப்படி செஞ்சுட்டாளே.''

''அவளா செய்யலையேப்பா, செய்ய வைக்கறாங்க.''

''அதுதான் எனக்கும், குடுக்க முடியாது செய்யறத செஞ்சுக்கோன்னு சொல்லிடலாம்னு கூட சில சமயம் தோணிடுது.''



''என்னப்பா சொல்றீங்க? நாம நிம்மதியா இருக்கக் கூடாதுங்கறது தான் அவங்க லட்சியமே. நாம அப்படிச் சொல்லிட மாட்டோமான்னு தான் அவங்களும் எதிர் பார்க்கறாங்க...''

''என்னப்பா பாக்கறீங்க? அப்பதான நம்ம மேல கேஸ் போட்டு குடும்ப மானத்த வாங்க முடியும். தேவையில்லாம கோர்ட்டுக்கும் வீட்டுக்கும் அலையணும். அலைய வைப்பாங்க...''

''நம்ம பொண்ணு எப்பிடி...''

''என்னப்பா நீங்க? குறைஞ்ச பட்சம் நான் சொன்னதச் செய்வாங்க, அதிக பட்சம் இன்னும் என்ன வேணும் னாலும்...''

''கடைசியா என்னதான் சொல்ல வர்ற ஹரி?''

''எப்படியும் பாதிக்குப் பாதி பங்கு சுமிதாவோடது. ஏற்கனவே முடிவு பண்ணின மாதிரி நாளைக்கு அவகிட்டப் பேசிக்கலாம்.''

''கம்பெனி தவிர வேறு என்ன கேட்டாலும் ஏன் எல்லாத்தையுமே கூட குடுத்துடலாம்...''

''ஒத்துக்குவாங்கற?''

''சும்மா ஒத்துக்க மாட்டா, ஏதாவது நிபந்தனைகளோட ஒத்துக்க வழியிருக்கு. ஒத்துக்க வைக்கலாம்.''

''சரிதான், ஆனா...''

''என்னப்பா?''

''ம்கூம், ஒண்ணுமில்ல...''

''அட என்னப்பா சொல்லுங்க?''

''வேண்டா...''

''இல்ல, ஏதோ சொல்ல வந்தீங்க.''

''இப்பக்கூட நீ ஸாரி கேட்டுட்டா ஒருவேள சுமிதா முடிவ மாத்திக்கலாமாம் ஹரி, அதுக்கு வாய்ப்பு இருக் காம்'' என்று சொல்வதற்குள் கமலநாதனுக்கே ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

எப்படியோ சொல்லி விட்டவருக்கு அதற்குப் பிறகு மகனுடைய குணம் தெரிந்தும் தான் ஏன் அதைச் சொன்னோம் என்றாகி விட்டிருந்தது.

தந்தையின் வார்த்தைகளில் அதாவது அவர் அப்படிச் சொன்னதால் வெளிப்பட்ட ஏளனத்தை என்ன முயன் றும் ஹரிவரதனால் மறைக்க முடிந்திருக்கவில்லை.

அவனுடைய சிரிப்பில் அது நன்றாகவே தெரிந்தது.

''அப்பிடின்னு சுமிதா சொன்னாளாப்பா?'' என்று கேட்டவனுக்கு தனது தங்கையா இப்படி மாறிப் போய் விட்டாள் என்றிருந்தது.

''என்னப்பா?''

''அதுக்கு சூரியன் மேக்க உதிக்கணும்பா.''

''ச்சு நான் அதக் கேக்கலப்பா, உன் தங்கை எப்பிடி மாறிட்டான்னு பாத்தியா? அவகிட்ட இளக்கத்த எதிர் பாக்கறது முட்டாள்த்தனம்ன்னு நீயும்... புரிஞ்சுக் கணும்னு தான் இதக்கூட சொன்...''

''பிஸினஸ் பேசறவங்ககிட்ட பாசத்த ஏம்பா எதிர் பாக்கப் போறோம்? நம்ம டீலுக்கு ஒத்து வர்றாங் களான்னு பாக்கலாம். இல்லன்னா முன்ன பின்ன ஆனாலும் பரவாயில்லைன்னு ரெண்டு பேருக்கும்



பாதிப்பில்லாத வழியப் பாத்துட்டுப் போய்ட்டே இருக்க வேண்டியது தான.''

மகனின் விரக்தி கலந்த வார்த்தைகள், கமலநாத னையே உலுக்கிப் போட்டிருந்தன.

எதற்கும் அஞ்சாமல் எப்படிப்பட்ட பிரச்சனைகளை யும் தூசு போல சமாளிப்பவனா இவன் என்றிருந்தது.

சரிதான்.

தன்னைப் போல ஏன் தன்னை விடவும் அதிகமாகவே பாசம் வைத்து விட்டவனாயிற்றே.

சற்றுச் சிரமப்பட்டுத் தானே ஜீரணித்தாக வேண்டும்.

''ஒரு வகைல இப்பதான் எனக்கு நிம்மதியா இருக்கு'' என்ற மகனைக் கமலநாதன் பார்க்க, ''இல்ல உறவுன்னு சொந்தம் கொண்டாடிட்டு வந்து நின்னா கறாராப் பேச முடியுமான்னு லேசா ஒரு தயக்கம் இருந்தது. ஆனா இப்ப அதுக்கெல்லாம் அவசியமே இல்லையே'' என்று சிரித்தான்.

தந்தைக்காகத் தான் அப்படி சொன்னான் என்றாலும் தொடர்ந்து யோசித்த போது அது சரியே என்றிருந்தது.

''அப்புறம் இன்னொரு விஷயம் ஹரி...'' என்ற தந்தையைப் பார்த்தான் ஹரிவரதன்.

''உன் கல்யாண விஷயம் தான். ஃபாரின் போய்ட்டு வந்ததும் உன் விருப்பத்த சொல்றதா சொன்ன, ஜாதகம் பொருத்தமா இருக்காம், நீ சொல்றது வெச்சு தான் எல்லாமே இருக்கு...''

''இப்ப தலைக்கு மேல இருக்கற பிரச்சனைகள முதல்ல சரி செய்யலாம்பா, அதுக்கப்புறம் தான் மத்த எதுவானாலும்...''

''பொண்ணு வீட்ல கேக்கறாங்க என்ன சொல்றது...''

''இப்பத்துக்கு... ஏன் இன்னும் ஒரு வருஷத்துக்கு இந்தக் கல்யாணப் பேச்சே எடுக்க முடியாத நிலமைல இருக்கோம்னு சொல்லிடுங்க. ஏன் வெளிப்படையாவே எங்களுக்காகப் பாத்துட்டிருக்காம வேற இடம் பாத்துக் கோங்கன்னு முடிச்சுடுங்க ''

மகனின் குணம் அறிந்தவரென்பதால், அதற்கு மேல் எதுவும் சொல்லத் தோன்றவில்லை.

ஏன், கட்டாயப்படுத்தவும்.

''என்னப்பா சொல்லுங்க?''

''உன் நிலம எனக்கும் புரியுதுப்பா, ஆனா உங்கம்மா கிட்ட தான் என்னன்னு சொல்றதுன்னு தெரியல. இப்ப இருக்கற பிரச்சனைகளுக்கு மத்தியில உன் கல்யாணத்த ஒரு மாறுதலா நினைச்சு எதிர்பார்த்துட்டிருக்கா...''

''புரியுதுப்பா, அம்மாவுக்கு நான் எடுத்துச் சொல்றேன். நீங்க கவலப்படாதீங்க. எல்லாத்துக்கும் மேல இந்த சொத்துப் பிரச்சனைய சொல்லுங்க அவங்களே காணா மப் போயிடுவாங்க...''

''எனக்கென்னவோ அவங்க பணத்துக்காகப் பாக்க மாட்டாங்கன்னு தான் தோணுது...''

''நாம பாக்க வேண்டிய கட்டாயத்துல இருக்கோம்பா, சும்மாவே பிஸினஸ் எக்ஸ்டென்ஷன்ல போயிட்டிருக்க, புதுசா எடுத்த ரெண்டு பெரிய ப்ராஜெக்ட் வேற. பணம் எக்கச்சக்கமா தேவைப்படும். இதுக்கு நடுவுல சுமிதா வுக்குப் பங்குன்னு எத்தனையோ முக்கியமான கடமைகள் உடனடியா பார்த்தாக வேண்டியது எனக்கு நிறைய இருக்கு.''



''அவங்களாவே தான கேட்டுட்டிருக்காங்க. ஒரு சதவிகிதம் கூடத் தயங்காம நாளைக்குக் காலைல முதல் வேலையா கூப்புட்டு சொல்லி முற்றுப்புள்ளி வெச் சுடுங்க.''

மீண்டுமொரு முறையும் மகன் சொல்ல சரியென் பதைப் போலத் தலையை ஆட்டினார் கமலநாதன்.

மேலும் மகன் சொல்லக் கேட்டபோது பிரச்சனை பூதாகாரமாகவும் தெரிந்தது.

''சரிதான் நீங்களும் தூங்கப் போங்கப்பா, எல்லாம் நல்ல விதமா முடியும் பாத்துக்கலாம்.''

''அந்த நம்பிக்கைலதாம்பா நானும் ஆறுதல் பட் டுட்டிருக்கேன்.''

தந்தை சென்றதும் ஃப்ளாஸ்கிலிருந்த பாலை ஒரு பெரிய கண்ணாடி டம்ளரில் ஊற்றி எடுத்துக் கொண்டு மாடி பால்கனிக்கு வந்திருந்தான் ஹரிவரதன்.

தங்கையின் பிரச்சனை பற்றி அவன் ஒன்றும் பெரிதாகக் கவலைப்பட்டு விடவில்லை.

தனிப்பட்ட முறையில் எவ்வளவு இழப்பு வந்தாலும் மற்றவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற நிபந்தனையை மட்டும் முன்னிறுத்திப் பேசிவிட முடிவு செய்து விட் டிருந்தான்.

தனக்கென்று எதையும் கேட்காமல் இறங்கி வருபவர் களை அவர்களும் பகைத்துக் கொள்ள மாட்டார்களென்ற நம்பிக்கையிருந்தது.

அடுத்ததாகத் தந்தை கேட்டதை நினைத்துப் பார்த் தான்.

தனது திருமண விஷயத்தைப் பொறுத்தவரை ஹரி வரதனும் ஒன்றும் இல்லாத ஒன்றை சொல்லியிருக்க வில்லை.

ஏன் மிகவும் குறைத்தே சொல்லியிருந்தான் என்றும் கூடச் சொல்லலாம்.

சரிதான், அதெல்லாம் போகட்டுமென்று நினைத்தவ னுக்கு மண்டபத்தில் வைத்துப் பார்த்த அந்த வாணியின் முகம் தான் நினைவிற்கு வந்தது.

ஏனோ அவளைப் பார்த்த வினாடியிலிருந்தே அவ னுடைய மனம் அவனிடம் இருக்கவில்லை.

அது எங்கோ கட்டுக்கடங்காமல் வானத்தில் பறப் பதைப் போல உணர்ந்தான்.

மேலும் அதே வழியில் எண்ணங்களை ஓட விட்ட வனுக்கு சிரிப்பு தான் வந்தது.

தானா இப்படி என்றிருந்தது.

எது எப்படியானாலும் வாணியிடம் அவன் சொன்ன தனைத்தும் மெய்யே,

பார்க்க அழகாக இருக்கிறாள் தான் வேறென்ன? என்று முடித்து விட முடியாமல் அவளிடமிருந்த எதுவோ அவனை ஈர்த்தது.

அது என்னவென்று மட்டும் என்ன யோசித்தும் புரியவே இல்லை.

கண்களில் தெரிந்த அந்த மிரட்சி (அல்லது) எதிர் பார்ப்பா! அது என்னவென்றும் சரியாகச் சொல்ல முடிந்திருக்கவில்லை.



மனதை மறைக்கத் தெரியாத அந்தப் பளிங்கு முகம், ஏன் அவளிடமிருந்த எதிலுமே செயற்கை தெரிய வில்லையே.

ஏனோ அவளை இன்னொரு முறை பார்த்தாக வேண்டும் போலத் தீவிரமாகத் தோன்றிய எண்ணத்தில் திகைத்துப் போனான்.

தனக்குத் திருமணமென்றால் அது அப்படிப்பட்ட பெண்ணுடன் தான் இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட பெண்ணா அல்லது அந்தப் பெண்ணே தானா என்று மனம் கேட்ட கேள்வியில் மீண்டும் திகைத்தான்.

இது எப்படி சாத்தியம்.

ஒரே ஒரு முறை பார்த்ததிலேயே இப்படியொரு எண்ணம் தோன்ற முடியுமா.

மனம் கேள்வி கேட்டது.

அதுதான் முடியுமென்பது தெள்ளத் தெளிவாகி விட்டதே இனியும் என்ன என்று மீண்டும் அந்த மனமே கேலியும் செய்தது.



# 8

முடிவு செய்தது போலவே மறுநாள் தனது தங் கையைப் பார்த்துப் பேசினான் ஹரிவரதன்.

தங்கை மட்டுமே வந்தாலும் கூடக் கம்பெனியைத் தவிர அனைத்தையுமே கொடுத்து விடத் தயாராக இருக்கிறோமென்று சொல்லிவிடத் தான் சென்றான்.

ஆனால் அவளுடன் ஒரு கூட்டமே வந்திருந்தது.

ஹரிவரதனும் அதை எதிர்பார்த்தே இருந்தான்.

அதாவது தங்கையின் கணவன், அவனுடைய அண்ணன் தம்பிகள் என அனைவருமே வந்திருந்தனர்.

தனது தாயுடன் பிறந்த மாமனுடைய மகன்களா இவர்கள் என்றிருந்தது.

அந்த அளவிற்கு அவர்களுடைய பேச்சு, செயல் அனைத்தும் ஜென்ம விரோதிகளைப் போல இருந்தது.

ஏற்கனவே முடிவு செய்திருந்தபடி தன் நலன் கருதாமல் ஒட்டு மொத்தத் தொழிலாளர்களின் நலனை மட்டுமே முன்னிறுத்திக் கம்பெனியை மட்டும் தருவதற்கில்லை மற்ற அனைத்தையுமே எடுத்துக் கொள் என்று முடித்து விட்டிருந்தான்.

ஆனால் அதற்கு அவனுடைய தங்கையோ கம்பெனி, வீடு இரண்டுமே வேண்டாம் என்று விட்டு மற்றதை மட்டுமே கேட்டாள்.

இது எப்படி சாத்தியமென்று ஹரிவரதன் நினைக்கும் போதே, ஒரு பெரிய நிபந்தனையையும் இட்டிருந்தாள் அவனுடைய அருமைத் தங்கை சுமிதா.

கம்பெனி நிர்வாகம் பற்றி என்னை விட உங்களுக்கே நன்றாகத் தெரியும். அது மட்டுமல்லாமல் தொழிலாளர்கள் நலன் அது இதென்று கம்பெனியைத் தாரை வார்க்க உங்களுக்கு மனம் வராதென்பதும், அதனால்



கம்பெனியின் லாபத்தில் ஐம்பது சதவிகிதத்தை மாதா மாதம் சரியாகக் குறிப்பிட்ட நாளில் எனக்குக் காசோலையாக அனுப்பி விட வேண்டுமென்று முடித்திருந்தாள்.

அத்தோடு வீட்டையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.

ஊர் உலகத்திற்கு கம்பெனி, வீடு என் அனைத்தையுமே நான் பிடுங்கிக் கொண்டதாக இனி உங்களாலும் தம்பட்டமடிக்க முடியாது பாருங்கள் என்றிருந்தாள்.

தங்கையின் பேச்சில் சிரித்து விட்டிருந்தான் ஹரிவரதன்.

''ஒன்றைக் கொடுத்து விட்டுப் பிறகு அது பற்றி நம் வீட்டில் யாரும் பேச மாட்டோமென்பது கூட மறந்து போயிற்றா உனக்கு?'' என்று தாங்கிக் கொள்ள முடியாமல் கேட்டும் விட்டிருந்தான்.

'நீ என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள், எப்படி வேண்டுமென்றாலும் நடந்து கொள். அதற்கு உனக்கு முழு உரிமை இருக்கிறது. ஏன் உனக்கு மட்டுமே இருக்கிறது' என்றவன் அந்த 'மட்டுமே'வை நன்கு அழுத்திச் சொன்னான்.

தங்கையுடன் வருபவர்கள் முட்டாள்த்தனமாக எதையாவது பேசினாலும் கூடத் தான் எந்த வகையிலும் வாயை விடக் கூடாதென்பதிலும் உறுதியாக இருந்தான்.

எதுவும் பேசாமல் ஹரிவரதன் இந்த அளவிற்கு இறங்கி வந்தது அவனுடைய மாமன் மகன்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்ததென்று கூடச் சொல்லலாம்,

அதைக் கெடுத்துக் கொள்ள யாரும் விரும்பவில்லை.

ஏன் தைரியமிருக்கவில்லை என்பது சரியான வார்த்தை.

வாய் வார்த்தையால் பேசியதையெல்லாம் அதிக பட்சம் இன்னும் ஒரு மாதத்திற்குள் செயல்படுத்த முயற்சி செய்கிறேனென்று கிளம்பியும் விட்டிருந்தான்.

தாய் தந்தையைத் தவிர்த்து விட்டு ஹரிவரதன் அவன் மட்டுமே வந்திருந்தான்.

இந்த அளவு சுமுகமாக முடியுமென்று தெரிந்திருந்தால் தாயை மட்டுமாவது அழைத்து வந்திருக்கலாமென்று இப்பொழுது நினைக்கத் தோன்றியது.

தாயும் ஈருயிராய் இருக்கும் தங்கையை ஆசை தீரப் பார்த்து சில வார்த்தைகள் பேசியும் இருப்பார் என்றிருந்தது.

ஆனால் அவன் அப்படி எண்ணியதற்கு ஆயுள் அதிகம் இருக்கவில்லை.

"இன்னும் கொஞ்ச நேரம் தொடர்ந்து இங்கயே இருந்தா அப்புறம் பாசம் பொங்கி வழிய ஆரம்பிச்சாலும் ஆச்சரியப்பட்றதுக்கில்லை. சீக்கிரம் கிளம்பு சஞ்சு" என்று தங்கையின் கணவன் அவளை இழுத்துச் செல்லாத குறையாகத் துரிதப்படுத்துவது கேட்டது,

சரிதான், இவர்களாவது மாறப் போவதாவது,

மனம் கசந்துவிட, சற்று முன்புவரை தங்கையுடன் சில வார்த்தைகள் பேச விருப்பபட்டதைக் கூட மறந்தவனாய் அனைவருக்கும் முன்பாகக் காரை ஸ்டார்ட் செய்து பறந்திருந்தான்.





# 9

கடந்த சில நாட்களாக ஏற்பட்ட தூக்கமின்மையோடு உடல் சூடும் சேர்ந்து கொண்டதாலோ என்னவோ அன்று வாணியால் அலுவலக வேலையில் கவனம் செலுத்த முடிந்திருக்கவில்லை.

மதியம் வரை எப்படியோ முயன்றவளால், அதற்கு மேல் சுத்தமாக முடிந்திருக்கவில்லை.

அப்படியே இருக்கையில் சாய்ந்து விட்டிருந்தாள்.

ஓரளவு பெரிய இன்ஜினியரிங் கம்பெனியின் ப்ரொடக்ஷன் டிப்பார்ட்மென்டில் மேற்பார்வையாளராக இருந்தாள் வாணி.

வேலை விஷயத்திலும் அவள் எப்பொழுதும் மிகுந்த திறமைசாலியாகவே விளங்கினாள்.

வேலையில் மட்டுமா.

அவசியமின்றி விடுப்பு எடுக்காததோடு ஒருநாள் தவறாமல் வேலை நேரத்திற்குப் பத்து நிமிடம் முன்னரே வந்து, வேலை முடிந்த பின்னரும் பத்து நிமிடம் இருந்து அனைத்தையும் அடுத்ததாக வருபவர்களிடம் ஒப்படைத்து விட்டு அதற்குப் பிறகே கிளம்பும் வாணியின் மீது அந்தக் கம்பெனியில் இருப்பவர்கள் அனைவருக்குமே மிகவும் நல்ல அபிப்ராயமிருந்தது.

அப்படிப்பட்ட பெண்ணிற்கு இன்று என்ன ஆயிற்று, உடன் வேலை செய்யும் கலா வந்து வாணியைத் தொட்டு அழைத்தாள்.

அப்பொழுது தான் வாணியின் உடல் சூடு அவளுக்குத் தெரிந்தது.

''வாணி உடம்பு கொதிக்குதுப்பா.''

''உன்னத்தான் வாணி'' என்று மீண்டுமொரு முறையும்,

''லஞ்ச் அவர்தான ஒரு பத்து நிமிஷம் ரெஸ்ட் எடுத்துட்டு வந்துட்றேன்...''

''ம்கூம், நீ அரை நாள் லீவு வாங்கிட்டு வீட்டுக்குக் கிளம்பு...''

''இல்ல வேண்டாம்.''

ஆனால் வாணியின் மறுப்பை அங்கு யாரும் கண்டு கொள்வதாகவே இல்லை.

அவர்களுக்கு மேல் மறுத்துப் பேச வாணியாலும் முடிந்திருக்கவில்லை.

மேனேஜர் அவரே தன்னுடைய காரைக் கொடுத்து கம்பெனி டிரைவரை அனுப்பி வாணியை வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு வா என்று பணித்து விட்டிருந்தார்.

மதிய நேரம் தூங்கிக் கொண்டிருப்பவர்களின் தூக்கத்தைக் கலைக்க வேண்டாமென்றுச் சற்றுத் தூரத்திலேயே காரை நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டவள், ஒரு நன்றியை உதிர்த்துவிட்டு நடக்கத் தொடங்கினாள்.



கம்பெனியிலிருந்து கிளம்புவதற்கு அரை மணி நேரம் முன்னரே கலா கொடுத்த காய்ச்சல் மாத்திரையை எடுத்துக் கொண்டதாலோ என்னவோ சற்று முன் இருந்ததற்கு இப்பொழுது எவ்வளவோ பரவாயில்லாமல் உணர்ந்தாள்.

நன்றாக நடக்கக் கூட முடிந்தது.

கேட் திறந்தே இருக்க, சத்தம் செய்யாமல் அதை மூடி விட்டு உள்ளே வந்தாள்.

வாசல் படியை அடைந்து கதவிலும் கை வைத்து விடப் போனவள், அத்தையும் மாமாவும் தன்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தது காதில் விழ அப்படியே நின்று விட்டிருந்தாள்.

''இது சரி வருமா கமலம்?''

வினாயகம் அதாவது மாமா கேட்க ''பின்ன? பாவம் அனாதைன்னு கழுதைய நாம கூட்டிட்டு வந்து வளக்கல. அதெல்லாம் நாம சொன்னாக் கேட்பா'' என்றாள் அத்தை கமலம்.

''ஆனாலும்...''

''அட என்ன நீங்க, சும்மா வளவளன்னு ஒண்ணு மில்லாததப் பெரிசாப் பேசிட்டு, நாம ஒண்ணு நினைச்சா கடவுள் வேறொன்ன நினைக்கறாருங்கறது எவ்வளவு சரியா இருக்கு. வளத்த கடனுக்கு அந்த வாணியக் காலம் பூராவும் நம்ம காலடில வெச்சு வேல வாங்கலாம்னு நினைச்சோம். ஆனா கழுதைக்கு வந்ததே அதிர்ஷ்டம்...''

''என்ன இப்படிச் சொல்ற கமலம் வாணிக்கு மட்டுமா நமக்கும் தான அதிர்ஷ்டம் வந்து கதவத் தட்டுது.''

''சரிதான், அந்தப் பஞ்சலிங்கத்துக்கு இவளக் கட்டி வெச்சுட்டா அப்படியே சுளையா அவன் நமக்குப் பத்து லட்சம் குடுப்பான். கூடவே அவ சம்பளத்துல கட்டிட்டு வர்ற சீட்டுப் பணம் வேற...''

''கையிலிருக்கற பணத்தையும் போட்டுச் சேத்தா அடேயப்பா பதினஞ்சு லட்சம், அப்படியே அத பேங்க்ல டெபாஸிட் பண்ணி வட்டிய வாங்கி சாப்புட்டே காலத்த ஓட்டிடலாம். ஆனா அந்தப் பணம் எங்கேன்னு வாணி கேட்டா?''

கணவன் கேட்க, ''ம் கேப்பா கேப்பா. அப்பிடிக் கேக்கற வாய இழுத்து வெச்சுத் தச்சுட மாட்டேன்'' என்று கடூரமாகக் கொக்கரித்தாள் கமலம்.

''அதெல்லாம் செய்யலாம், ஆனா என்ன சொல்லுவ?''

''ம், அந்தப் பணத்தையெல்லாம் உன் கல்யாணத் துக்கு செலவு பண்ணிட்டோம்னு சொல்லிடலாம்.''

''அட, உனக்குப் பிரமாதமான மூள தான் கமலம்.''

''பின்ன? அஞ்சு பவுன் தாலிக் கொடில இருந்து பெரிய மண்டபம் புடிச்சு ஆகற கல்யாண செலவு வரைக்கும் அந்தப் பஞ்சலிங்கமே செஞ்சுக்கறேன்னு சொல்லிட் டானே, அதையெல்லாம் நாம செஞ்சதாக் காட்டிக் கலாம்.''

''நம்பற மாதிரி பேசு கமலம்.''

''ஏன், ஏன் நம்ப முடியாம? நாப்பத்தி ரெண்டு வயசுக் காரனுக்கு நம்ம இருபத்தி ரெண்டு வயசுப் பொண்ணத் தர்றோமே, அதுவும் எப்பேர்ப்பட்ட பொண்ணு அழகு ஆரோக்கியம். படிப்பு, வேலைன்னு என்ன கசக்குது



அவனுக்கு. அதுக்காகவெல்லாம் தான இவ்வளவு இறங்கி வந்திருக்கான். இந்தத் தாலிக் கொடியும், கல்யாண செலவும் நாங்க காசு போட்டுப் பண்ற மாதிரி வாணிகிட்டக் காட்டிட்டோம், நீயும் வாயத் திறக்கப் படாதுன்னு சொல்லிட்டாப் போயிடுச்சு.''

''சரிதான் ஆனா முதல்ல அந்தப் பஞ்சலிங்கத்தக் கட்டிக்க வாணி சம்மதிக்கணுமே.''

''ஏன் சம்மதிக்க மாட்டா, நமக்கெல்லாம் கூட இந்த மாதிரி அதிர்ஷ்டம் இருக்கான்னு ஆன்னு வாயப் பொளந் துட்டு சம்மதம் சொல்லுவா.''

''ம்கூம், எனக்கென்னவோ சந்தேகமா இருக்கு.''

''அதுக்கும் மேல ஏதாவது முரண்டு பிடிச்சாக் கழு தைய பட்டினி போடலாம். அதுக்கும் ஒத்துக்கலைன்னா இரும்புக் கரண்டியக் காய வெச்சு நாலு இழுப்பு இழுத்தா தன்னப்போல நம்ம வழிக்கு வந்துடப் போறா...''

''ஆனா இதெல்லாம் இன்னும் ஒரு வாரத்துக்குள்ள நடந்தாகணும்...''

''நடக்கும்... நடக்கும்.''

''ஏன்னா அந்தப் பஞ்சலிங்கம் நம்மளுக்குக் குடுத் திருக்கற கெடு அவ்வளவுதான்.''

''வரட்டும் அவ இன்னைக்கு... இனி ஒரு வாரத்துக்கு வேலைக்குப் போகக் கூடாதுன்னு சொல்லிடலாம்'' என்று மனைவி சொல்ல ''அதுக்கப்புறம்?'' என்று கேட் டான் விநாயகம்.

''அதுக்கப்புறம் அவளப்பத்தி நமக்கென்ன, எப்பிடியோ போய்த் தொலையட்டும்.''

''அதுவும் சரிதான்.''

''அப்பாடா சுளையா பதினஞ்சு லட்சம்...'' என்று வாயைப் பிளந்தாள் கமலம்.

''என்னதான் சமையல் வேலைய அந்தச் சிறுக்கி பாத்துக்கிட்டாலும் அத அந்த தடியன்களுக்கு வேளா வேளைக்குப் பரிமாறி மாசமானா பணத்த வாங்கறதுக்குள்ள உயிர் போய் உயிர் வருது. இதுல இது நல்லா இல்ல அது பத்தலைன்னு ஆயிரம் சொத்தை வேற...''

''ம், அதுக்கும் நீ தான் காரணம். ஏன் அந்த வாணியே பரிமாறிட்டுப் போறதுன்னு விட வேண்டியது தான...''

''ம் நல்லா சொன்ன மனுஷா, என் சாமர்த்தியத் தாலதான் அந்த வாணி இந்த அளவுக்கு இருக்கா. அப்பிடி மட்டும் நான் விட்டிருந்தா அப்புறம் எப்பவோ அவ எவனையாவது கூட்டிட்டு ஓடிப் போயிருப்பா...''

அதற்கு மேல் நின்று கேட்கும் தைரியம் வாணிக்கு இருக்கவில்லை.

சத்தம் செய்யாமல் கேட்டைத் திறந்து கொண்டு வெளியே வந்திருந்தாள்.

அடியம்மா அடி...

எத்தனை பெரிய அடி.

இப்படிக்கூட மனிதர்கள் இருப்பார்களா,

இருப்பார்களா என்று ஒரு கேள்வி எதற்கு அதுதான் நேரிலேயே பார்த்தாயிற்றே. இனியும் என்ன,

ஆனாலும் இது எப்படி சாத்தியம்.

என்னவெல்லாம் சொல்லி விட்டார்கள்.



அதுவும் கடைசியில்...

அந்த வார்த்தைகளே மீண்டும் மீண்டும் வந்து காதுகளுக்குள் ஒலித்துக் கொண்டே இருந்ததில் யாரோ தலையை சம்மட்டியால் அடிப்பதைப் போலிருந்தது.

ஒரு முறை, இரு முறையல்ல.

பல நூறு முறை, ஆயிரம் இல்லையில்லை லட்சம் முறை.

வாய்விட்டு அழக்கூட முடியவில்லை.

அந்த அளவிற்குப் பெரிய அளவில் ஏற்பட்ட எதிர்பாராத அதிர்ச்சி. அவளைக் கல்லாய் மரத்துப் போகச் செய்திருந்தது.

ஆனாலும் எண்ண ஓட்டங்கள் மட்டும் நிற்காமல் ஓடிக் கொண்டே இருந்தன.

அது மட்டும் நின்றால், அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

சை, தனக்கு எப்பொழுதுமே பேராசைதான்.

சில வினாடிகள் தான்.

மீண்டும் பழையபடி அவர்கள் பேசிய வார்த்தைகள் காதில் ஒலிக்கத் தொடங்கி விட்டிருக்க, கால்போன போக்கில் நடந்தாள்.

எவ்வளவு உயர்ந்த இடத்தில் வைத்திருந்தோம்...

எந்த அளவிற்கு நம்பினோம்.

எப்படியெல்லாம் ஓடாய்த் தேய்ந்தோம்.

அதற்கு நன்றியுணர்ச்சி இல்லாவிட்டால் கூடப் பரவாயில்லை. பாவமென்பதும் இல்லையே.

எப்படி முடிந்தது.

ஏனோ மேலே யோசிக்கக் கூட முடிந்திருக்கவில்லை.

கடந்த சில நாட்களாக சரியாகத் தூங்காததும், காய்ச்சல் சோர்வும் சேர்ந்து கொள்ள, கண்களை இருட்டிக் கொண்டு வந்திருந்தது.

அப்படியே சுவரைப் பிடித்துக் கொண்டு நடந்தாள்.

ஏதோ திண்ணை போலத் தட்டுப்பட அமர்ந்தாள்.

திண்ணை தானா அல்ல...

அதற்கு மேல் ஒன்றும் முடிந்திருக்கவில்லை, அப்படியே சாய்ந்திருந்தாள்.

மீண்டும் விழிப்பு வந்து எழுந்த வாணி, சுற்றும் முற்றும் பார்வையை ஓட்டினாள்.

கோயில்.

கால்கள் தன் போக்கில் பழக்கமான இடத்திற்கு வந்திருந்தது புரிந்தது.

கண்களைக் கசக்கிக் கொண்டு கைக்கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

மணி ஐந்து என்று காட்டியதில், அதிர்ந்து போனாள்.

இவ்வளவு நேரமா தூங்கிப் போயிருக்கிறோம்.

''என்ன வாணிம்மா முழிச்சுட்டியா?''

குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்தாள்.

கோயிலைப் பெருக்கி சுத்தம் செய்யும் பொன்னம்மா நின்றிருந்தாள்.

''உடம்பு வேற சூடா இருந்ததே, இப்ப எப்பிடிமா இருக்கு?''



''பரவாயில்ல பொன்னம்மா...''

''ஆமா என்ன நீ வயசுப் பொண்ணு இப்பிடியா தனியா வந்து படுத்துக் கிடப்ப? நல்லவேள நான் வந்தால பக்கத்துல உக்காந்திருந்தேன். அதென்ன மூணு நாலு மணி நேரமா இப்படியொரு பேய்த் தூக்கம். உடம்புக்கு ஒண்ணும் இல்லையேம்மா...''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல பொன்னம்மா, பாவம் என்னால உனக்கும் சிரமம்.''

''எனக்கென்னமா, என்ன மதிய நேரம் சித்த தூங்கியிருப்பேன். ஆனா உன்னத் தனியா விட்டுட்டுத் தூங்க மனசில்லாததால அப்படியே உக்காந்துட்டேன் அவ்வளவுதான். தங்க விக்கிரகம் மாதிரி பொண்ணு என்னதான் கோயில்னாலும் இப்படித் தனியா வந்து கிடக்கலாமா? நான் வேணும்னா வீடு வரைக்கும் துணைக்கு வரட்டுமாம்மா?''

''அதெல்லாம் வேண்டாம் பொன்னம்மா'' என்றவள் கைப்பையிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தாள்.

''அதெல்லாம் எதுக்குமா?'' என்று சொல்லிக் கொண்டே வாங்கிக் கொண்டாள் பொன்னம்மா.

பொன்னம்மாவிற்கு நன்றி சொல்லி விட்டு வீட்டை நோக்கி நடந்தாள் வாணி.

மதியம் நடந்ததெல்லாம் மீண்டும் நினைவில் வர, பழையபடி ஒரு பெரிய இரும்பு குண்டு நெஞ்சின் மீது ஏறி அமர்ந்திருந்தது.

ஒரு வழியாக வீட்டை அடைந்தவள், சற்றும் வர மாட்டேனென்று மறுத்த கால்களால் வீட்டின் படியேறினாள்.

அந்த வீட்டைத் தன்னுடையதாக என்றுமே எண்ணியதில்லை தான் என்றாலும், அன்று ஏனோ மிகவும் அந்நியமாக உணர்ந்தாள்.

என்றுமில்லாத அதிசயமாக அன்று தனக்காகக் காத்திருந்து வரவேற்ற அத்தையை நன்றாகத் தலை நிமிர்ந்து பார்க்கும் தைரியம் கூட இருக்கவில்லை.

நேராகத் தன்னுடைய அறைக்குள் சென்றவள், முகம் கை கால் சுத்தம் செய்து கொண்டு வந்தாள்.

வழக்கம் போலத் தன்னளவில் அனைத்தையும் செய்தவளுக்கு, வெளியே எட்டிப் பார்க்கவும் தைரியம் வந்திருக்கவில்லை.

ஆனாலும் கமலம் விடுவாளா.

''ஏய் வாணி என்ன பண்ணிட்டிருக்க?'' என்றவளின் குரலில் வெளியே வந்தாள்.

''ஏன் பேயறஞ்ச மாதிரியிருக்க?''

..............

''அட உன்னத்தான்டி வாயில என்னத்த வெச்சிருக்க?''

''என்ன அத்தெ...''

''அது சரி, ஏன் இப்படியிருக்கேன்னு கேட்டேன்.''

''காலைலிருந்தே நல்ல காய்ச்சல், நிக்கக் கூட முடியல.''

''சரிதான் இன்னைக்கு நீ ஒரு வேலையும் செய்ய வேண்டாம்.''

கமலம் சொல்ல எதுவும் பேசாமல் அவளைப் பார்த்தாள் வாணி.



''அப்புறம் உங்கிட்ட ஒரு விஷயம் பேசணுமே...''

''சந்தோஷமான விஷயம் தான். என்ன நான் பேசறது காதுல விழுகுதா?''

வாணியின் முகத்தில் தெரிந்த களைப்பும், சோர்வும் கமலத்திற்கும் புரியவே செய்தாலும் அதையெல்லாம் சட்டை பண்ணிக் கொண்டிருக்க அவளுக்கெங்கே நேரம்.

இடையில் இருப்பதோ ஒரு வாரம்.

''என்னடி பேசு?''

''சொல்லுங்க அத்...''

''ம், ம். உனக்குக் கல்யாணம் பண்ணலாம்னு இருக்கோம். நீ என்ன சொல்ற?''

சந்தோஷத்தில் துள்ளிக் குதிப்பாளென்று எதிர்பார்த்திருந்த கமலத்திற்கு வாணியின் உணர்ச்சி துடைக்கப்பட்ட முகம் இருக்கிற கோபத்தை இன்னும் பல மடங்காக அதிகப்படுத்தியிருந்தது.

''பேசித் தொலையேன்...''

''சொல்லுங்க அத்...''

''அதுதான். சொன்னேனே, சரிதான் விவரமாவே சொல்றேன் கேளு'' என்றவள் விஷயத்தை விளக்கினாள்.

இரண்டாவது முறையாகக் கேட்டவளுக்குக் கமலம் சொன்னது அப்படியொன்றும் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்து விடவில்லை.

இந்த அத்தைக்குக் கூட இந்த அளவிற்குப் பொறுமையாப் பேசிப் பழக்கமிருக்கிறதா என்ற ஆச்சரியம் மட்டுமே.

"என்னடி..."

........

"சொல்லு நீ என்ன சொல்ற?"

"யோசிச்சு காலைல சொல்..."

"என்னது யோசிக்கறையா? அதுசரி ஏதோ கடவுள் புண்ணியத்துல உனக்கு பம்பர் பரிசே அடிச்சிருக்குது. என்ன பாடுபட்டு இந்த சம்பந்தத்த நானும் உன் மாமாவும் கொண்டு வந்திருக்கோம்னு தெரியுமா."

"சரிதான் அதெல்லாம் எதுக்கு, அப்புறம் நாளைக்கே நல்ல நாளா இருக்கறதால நிச்சயதார்த்தத்த அப்பவே வெச்சுக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கோம்."

இப்பொழுது வாணிக்கும் அதிர்ச்சி தான்.

நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன பாக்கற நாளைக்கு லீவு போட்டுக்கோ ஏன் பத்து நாளைக்கு லீவு சொல்லிடு..."

............

"என்னடி, ஏதாவது பேசு..."

"இப்ப எனக்கு எதுக்குக் கல்..."

"ம் கேக்க மாட்ட, அனாதையா ரோட்ல சுத்திட்டிருக்க வேண்டியவ. பாவமேன்னு நாங்க அழைச்சுட்டு வந்து வளத்த பாவத்துக்கு நாலு பேருக்கு முன்னாடி எங்களத் தல குனிய வெச்சுடாதடியம்மா வாக்குக் குடுத்துட்டோம்."

"சரிசரி நல்ல பொண்ணா நாங்க சொல்றதக் கேட்டு நடந்துக்கோ, அதுதான் உனக்கும் நல்லது. போ போய்



எதையாவது தின்னுட்டு அப்புறமாப் போய்ப் படுத்துக்கோ. காலைல முகம் பாக்க நல்லா இருக்கணும் சொல்லிட்டேன். எதுக்கும் உன் மாமாவக் காய்ச்சலுக்கு மாத்திரை வாங்கிட்டு வந்து தரச் சொல்றேன் அதயும் சாப்டுட்டே படுக்கப் போ."

கமலம் பாட்டுக்கு சொல்லிக் கொண்டே போக அதில் ஒன்றைக்கூட மறுக்கும் தைரியம் வாணிக்கு இருக்கவில்லை.

ஏன் அப்படியே வாணியே நினைத்தாலும் கமலத்திடம் அவ்வளவு சுலபமாக மறுத்துவிட முடியுமா என்ன.



# 10

மறுநாள் காலையில் வாணியால் எழக்கூட முடிந்திருக்கவில்லை.

இரவெல்லாம் தூங்காததும் உடல் சூடும் சேர்ந்து உடலில் இருந்த சக்தியெல்லாம் வடிந்து விட்டாற் போலாகி விட்டிருந்தது.

வெளியே இருந்து கேட்ட கமலத்தின் அதட்டலில் ஒரு வழியாக எழுந்து அமர்ந்தவள், சிரமப்பட்டு சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்தாள்.

அதற்குள் அறைக்குள்ளேயே வந்திருந்த கமலம் "சீக்கிரம் போய்க் குளிச்சுட்டு வா" என்று அதட்டினாள்.

''என்னடி பாக்கற? பதினோரு மணிக்கு நல்ல நேரமாம். நிச்சயம் பண்ண வந்துடுவாங்க. சீக்கரமா குளிச்சுத் தயாராக வேண்டாமா?''

''அப்புறம் இன்னொன்னும் சொல்ல மறந்துட்டேன் பாரு, நாளைக்கு மறுநாள் நல்ல முகூர்த்த நாளாம். அன்னைக்கே கல்யாணத்த வெச்சுக்கலாம்னு சொல்லிட் டாங்க...''

அவ்வளவு நேரமும் எப்படியோ ஆனால் அப்பொழுது சொன்ன கமலத்தின் வார்த்தைகளில் முழுமையாக நடப்பிற்கு வந்திருந்தாள் வாணி.

தொடர்ந்து கமலத்தின் பொறுமையை சோதிப்பதோ அல்லது கோபப்படுத்துவதோ தனக்குப் பாதகமாகவே முடியுமென்பதை உணர்ந்தவளாய், ''சரிதான் அத்தை காய்ச்சல் நைட்டெல்லாம் தூங்காததால என்னவோ போலிருக்கு அவ்வளவுதான். பத்து நிமிஷத்துல குளிச்சு முடிச்சுட்றேன்'' என்றாள்.

''சரிதான் சீக்கரம் போ...''

''அப்புறம் அத்தை...''

''என்ன?''

''இல்ல இன்னைக்கு ஒரு நாள்னாக் கூடப் பரவா யில்ல, பத்து நாள் லீவு கேக்கணும். அதோட.''

''என்னடி?''

''நேத்தே என் சம்பளத்த கலா வாங்கி வெச்சிருப்பா, போனா அதையும் வாங்கிட்டு வந்துடலாம்.''

அத்தை சந்தேகமாகப் பார்க்க சுதாரித்துக் கொண் டாள்.



''நீங்க வேண்டாம்னு சொன்னா நான் போகல அத்தை...''

''ஏன் நேத்து தான சம்பள நாள், ஏன் வாங்காம வந்த?''

நேத்து தான் நான் நேரத்துலயே கிளம்பிட்டேனே என்று சொல்ல வந்தவள். பிறகு சுதாரித்து ''அரை மணி நேரம் வெயிட் பண்ணி வாங்கிக்க சொன்னாங்க. காய்ச்சல்ல ஒன்றும் முடியல. அதான் இன்னைக்கு வாங்கிட்டாப் போயிடுச்சுன்னு கிளம்பி வந்துட்டேன்'' என்றாள்.

அத்தை யோசிப்பது தெரிய, மேலும் கறைத்தாள்.

''கல்யாண செலவுகள்னா சும்மாவா, வேணும்னா மாமாவையும் கூட அனுப்புங்க அத்தை, போய்ட்டு சம்பளத்த வாங்கிட்டு லீவையும் சொல்லிட்டு பத்து மணிக்கு வீட்ல இருப்போம்.''

பணம் என்றதும் கமலம் மீண்டும் யோசித்தாள்.

''சாயங்காலம் போய் வாங்கிக்கோயேன்...''

கடவுளே இப்பொழுது என்ன சொல்வது.

''சரி சரி நிச்சயம் முடிஞ்சா வெளிய எங்கயும் போகக் கூடாதுன்னு சொல்லுவாங்க. நீ இப்பவே போய்ட்டு வந்துடு.''

''மாமாவையும் கூட வரச் சொல்லுங்க...''

''என்ன விளையாட்றியா? வீட்ல விசேஷத்த வெச் சுக்கிட்டு அப்படி உடனே கிளம்பி வந்துட முடியுமா?''

கமலத்தின் வார்த்தைகளில் உள்ளம் துள்ளியது வாணிக்கு.

ஆனாலும் அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பழையபடி பார்த்தாள்.

''சரி சரி போ சீக்கிரம் குளிச்சுட்டுக் கிளம்பு. ஒண்ணு வேணும்னா பண்ணலாம். இன்னைக்கு பஸ்ல போகாத. மொக்குக் கடைக்காரனோட ஆட்டோவ வரச் சொல்லிட லாம்'' என்றவளின் வார்த்தைகளில் மீண்டும் அதிர்ந்து போனாள் வாணி.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

உடனே ''சரி சரி பஸ்லயே போய்ட்டு வந்துடு. அந்த ஆட்டோக்காரன நம்பினா வேலையாகாது குடிச்சுட்டு இராத்திரி எந்நேரம் வந்து தூங்கினானோ அந்த மப்பு தெளிஞ்சு அவன் எழவே மணி பத்தானாலும் ஆயிடும்'' என்று மீண்டும் பாலை வார்த்தாள் கமலம்.



## 11

வீட்டிலிருந்து கிளம்பிய வாணி நேராகச் சென்றது தோழி ஸ்மிர்த்தியின் வீடு.

''வாவ் வாணி!''

திடீரென்று முன் அறிவிப்பு எதுவும் இல்லாமல் வந்த தோழியை ஆச்சரியத்துடன் வரவேற்றாள் ஸ்மிர்த்தி.

''வா வா வா என்னடி இந்த நேரத்துக்கு'' என்றவள் அதற்குப் பிறகு தான் தோழியின் முகத்தைக் கவனித் தாள்.



ஏதோ பிரச்சனை என்னுமளவில் புரிந்தது.

''ஸ்மிர்த்தி.''

''என்னடி?''

''உங்கிட்டக் கொஞ்சம் பேசணும்.''

''வா என் ரூமுக்குப் போகலாம். அதுக்கு முன்னாடி ஒரு நிமிஷம்'' என்று சென்றவள் அப்பொழுது அங்கு வந்த வேலைக்காரியிடம் ''எங்க ரெண்டு பேருக்குமா டிஃபன ரூமுக்கே அனுப்பிடு'' என்று விட்டுத் தோழி யுடன் தனது அறைக்கு வந்தாள்.

''வாடி வந்து உக்காரு, சொல்லு என்ன விஷயம்?''

.................

''எதுவானாலும் சொல்லு வாணி. உள்ளுக்குள்ளேயே வெச்சுட்டிருந்தாதான் எதுவானாலும் பூதாகாரமாத் தெரியும்.''

''நான் முதல்ல எங்காவது லேடிஸ் ஹாஸ்டலுக்குப் போயாகணும்.''

''ஏன்? திடீர்னு என்னாச்சு?''

''இன்னைக்கே... ம்கூம் இப்பவே.''

''அதெல்லாம் ஒரு பெரிய விஷயமே கிடையாது. என்ன நடந்ததுன்னு சொல்லு.''

வாணி நடந்ததையெல்லாம் சொல்ல நெஞ்சு கொதித்தது ஸ்மிர்த்திக்கு.

வாணி மிகுந்த தன்மானமும் ரோஷமும் பார்ப்பவ ளென்பதால் குறைந்தபட்சம் அவள் பாதியையாவது மறைத்துத் தான் சொல்லியிருப்பாளென்பது அவளுக்கு.

அப்படிச் சொன்னதே இவ்வளவென்றால் இன்னும் என்னவெல்லாம் பேசியிருப்பார்கள்.

எரிச்சலை மறைக்கக் கூட முயலாது. ''ஒரு விதத்துல இப்பதான்டி எனக்கு நிம்மதியா இருக்கு. செஞ்சோற்றுக் கடனுக்காகன்னு விட்டா உயிரக் கொடுக்கக் கூட நீ தயாரா தான் இருந்த. ஆனா உன் அரும அவங்களுக்குத் தெரியலையே'' என்றவளுக்கு அதற்குப் பிறகு தான் ஏற்கனவே நொந்து போய் வந்திருப்பவளை தான் மீண்டும் நோகடிக்கிறோம் என்பது புரிந்தது.

''ஸாரிடி, என்ன மாதிரி நீயும் ஒரு வயசுப் பொண்ணு தான். ஆனா உனக்கும் எனக்கும் எவ்வளவு வித்யாசம். நீ பதினெட்டு மணி நேரம் குறைஞ்சது பதினஞ்சு மணி நேரமாவது ஹார்ட் வொர்க் பண்ற. ஆனா நான் பதினஞ்சு நிமிஷம் கூட வேலைன்னு எதுவும் செய்யறது கிடையாது...''

''அவசியம் இருந்தா நீயும் செய்வ ஸ்மிர்த்தி.''

''ம்கூம், உன்னளவுக்கு முடியாது வாணி. ஏன் என்னால அப்படியொரு நிலைய நினைச்சுக் கூடப் பாக்க முடியல. அப்படிப்பட்ட உனக்கு இதுதான் அவங்க காட்ற நன்றியா?''

...........

''என்னடி பேசு...''

''ப்ளீஸ் ஸ்மிர்த்தி, அவங்க எந்த மாதிரி நடந்துக்கிட்டிருந்தாலும் எம்மனசுல நன்றியுணர்ச்சி இருந்தது. ஏன் இன்னும் கூட இருக்கு. மத்தவங்க தப்பு பண்றாங்கன்றதுக்காக நாமளும் அதே மாதிரி நடந்துக்கிட்டா



அப்புறம் அவங்களுக்கும் நமக்கும் வித்யாசமில்லாமப் போயிடும்.''

''ஆமாம் பேசு... சரிதான் வா முதல்ல சாப்புட்லாம். அதுக்கப்புறம் என்ன பண்ணலாங்கறத யோசிக்கலாம்.''

வேண்டாமென்று சொல்ல நினைத்தவளுக்கு ஸ்மிர்த்தி விடமாட்டாளென்பது புரிய சென்று கைகளைக் கழுவிக் கொண்டு வந்து சாப்பிட அமர்ந்தாள்.

அதற்குப் பிறகு தான் அவளுக்கும் பசி தெரிந்தது.

சூடாக இருந்த டிஃபன்களைத் தட்டில் பரிமாறி நீட்டினாள் ஸ்மிர்த்தி.

''இந்த மாதிரி யாராவது போட்டுக் கொடுத்து ஒரு நாளாவது நீ நிம்மதியா சாப்புட்டிருப்பியா வாணி?'' என்று கேட்டவளுக்கு அவளையறியாமலேயே கண்கள் கலங்கி விட்டிருந்தன.

தனக்காகத் தோழி வருந்துவது தெரிய ''பைத்தியம். என்னப் பொறுத்த வரைக்கும் எனக்கு மூளைக்கும் சரி, உடம்புக்கும் சரி, கொஞ்சம் அதிகமாவே வேலை குடுத்தாகணும் ஸ்மிர்த்தி. அதுக்கும் மேல தேவையில்லாதத யோசிச்சு இருக்கற நிம்மதியையும் கெடுத்துக்க வழியில்ல பாரு'' என்றாள்.

''நீயும் சாப்புடு'' என்றவள், தோழியும் ஒரு தட்டை எடுத்துக் கொண்ட பிறகு அவளுடன் சேர்ந்து உண்ணத் தொடங்கினாள்.

வாணி சொல்வது தான் சரியோ, அவள் சொல்வதைப் போல அதிகப்படியான வேலையிலும் கூட ஒரு வித மான நிம்மதி இருக்கிறதோ. என்னவோ போ அவளும்

அவளுடைய நியாயமும் என்று அலுப்புத் தான் வந்தது ஸ்மிர்த்திக்கு.

''என்ன ஸ்மிர்த்தி டிபன் ப்ளேட்டக் கைல வெச்சுட்டு சாப்புடாம உக்காந்திருக்க, டிபன் எல்லாமே பிரமாதமா இருக்கு சாப்புடு.''

''ஓ அப்படின்னா மேடம் இன்னும் கொஞ்சம் வெச்சுக்கோங்களேன்'' என்று வாணி என்ன மறுத்தும் விடாமல் மீண்டுமொரு முறை அவளுடைய தட்டில் குறைந்தது பார்த்துப் பரிமாறிவிட்டு, அதற்குப் பிறகே தான் சாப்பிடத் தொடங்கினாள் ஸ்மிர்த்தி.

சிறிது நேரத்தில் உணவு முடிய தனது அறையிலிருக்கும் டி.வி.யை ஆன் செய்து விட்டு, ''சும்மா பார்த்துட்டிரு வாணி. பத்து நிமிஷத்துல குளிச்சுட்டு வந்துட்றேன்'' என்று நகர்ந்தாள்.

சொன்னது போலக் குளித்துவிட்டு வந்தவள், அடுத்த பத்து நிமிடங்களில் கிளம்பியும் இருந்தாள்.

''இந்தா வாணி காபி எடுத்துக்கோ.''

''வேண்டாம் ஸ்மிர்த்தி.''

''ம்கூம், டிபன் முடிஞ்சதும் காபி குடிக்கறது என் வழக்கம். நீயும் எனக்கு கம்பெனி குடுத்து தான் ஆகணும்'' என்றவள் தோழியின் கையில் ஒரு கப்பைத் திணித்து விட்டுத் தானும் எடுத்துக் கொண்டாள்.

சில நிமிடங்களில் எழுந்தவள், ''சரி வாணி நீ இருக்கியா, எங்கூட வர்றியா?'' என்று கேட்டாள்.

''எங்க?''

''அது சஸ்பென்ஸ்.''



''என்ன ஸ்மிர்த்தி...''

''நான் உனக்கு நல்லது தான் செய்வேங்கற நம்பிக்கை உனக்கு இருக்கு தான?''

''நிச்சயமா.''

''அப்ப வா ஒரு இடத்துக்குப் போய்ட்டு வரலாம். ஐ மீன் ஒருத்தரப் பாத்துப் பேசிட்டு வரலாம்''

''யாரப் பாத்து?''

''அது...'' என்றவள் ''ஆமா வாணி இன்னும் ஒரு மணி நேரத்துல நீ வீட்டுக்குப் போகலேன்னா உன்ன எங்கெல்லாம் தேடுவாங்க?'' என்று அதுதான் மிகவும் முக்கியம் போலக் கேட்டாள் ஸ்மிர்த்தி.

''அதுல என்னப்பா சந்தேகம். உங்க வீட்ல தான், உன்னத் தவிர நான் யார்கிட்டயும் போக மாட்டேன்னு அவங்களுக்கு நல்லாவே தெரியும்.''

''அப்ப நீ வீட்டுக்குள்ளயே இரு, நான் மட்டும் போய்ட்டு வந்துட்றேன்.''

''புரியற மாதிரி பேசேன் ஸ்மிர்த்தி.''

''ம், ம்கூம் வந்து எல்லாம் சொல்றேனே ப்ளீஸ்...''

''என்ன நீ புதிர் மன்னி மாதிரி ஏதேதோ சொல்ற...''

''மேக்ஸிமம் த்ரீ அவர்ஸ்ல வந்துடுவேன். நீ பேசாம டி.வி. பார்த்துட்டிரு'' என்று விட்டு அதற்கு மேல் ஒரு வினாடி கூட நில்லாமல் கிளம்பி விட்டிருந்தாள் ஸ்மிர்த்தி.

''ஹரி அண்ணா.''

''அட வா வா, என்ன ஸ்மிர்த்தி காலைலயே அதிசயமா இருக்கு!''

''ஏண்ணா பிஸியா இருக்கீங்களா?''

''என்ன? இது ஆஃபீஸ் டைமாச்சே வேல இருக்க தான் செய்யும்...''

''அப்ப நான் வேணும்னா போய்ட்டுத் திரும்பவும் வரட்டுமா?''

''ஏன் இப்ப நல்ல நேரம் இல்லையா?''

''அதுக்கில்ல நீங்க வேலையா இருக்கீங்களேன்னு பாத்தேன்...''

''நீ எப்ப வந்தாலும் நான் வேலையா தான இருப்பேன்.''

''இல்ல... எனக்காக நீங்க ஒரு அரை மணி நேரம் ஒதுக்க வேண்டியிருக்கும் முடியுமா?''

''தாராளமா முதல்ல உக்காரு.''

அண்ணன் ஹரிவரதன் சொல்ல அமர்ந்தவள், ''பெரியம்மா, பெரியப்பா எல்லாரும் நல்லார்க்காங்களாண்ணா?'' என்று கேட்டாள்.

''நல்லார்க்காங்க, அங்க வீட்ல?''

''அம்மாவும் அப்பாவும் ஊருக்குப் போயிருக்காங்க, அக்காவுக்குப் புது இடத்துல ஓரளவுக்குப் பழகினதும் கிளம்பிடுவாங்க. எப்படியும் அவங்க வர ஒரு வாரமாகும்.''

''ஓ சித்தி ஸ்ரீ கூட இருந்தா சித்தப்பா வெளிய கம்ப்ளீட்டா பிஸினஸ் வேலைகள முடிச்சுடுவார் இல்லையா...''

''ஆமான்ணா முதல்ல அப்பா மட்டும் தான் போறதா இருந்தது. அக்கா தான் இப்படியொரு ஐடியா குடுத்து அம்மாவையும் வாங்கன்னு அழைச்சுட்டுப் போய்ட்டா.''

''அப்ப நீ மட்டும் தனியா வீட்ல போரடிச்சுட்டிருக்கன்னு சொல்லு.''



''ம்கூம் தப்பா சொல்றீங்க. நாந்தான் மத்தவங்கள போரடிச்சுட்டிருக்கேன். வீட்ல வேல செய்யறவங்கள்ல இருந்து கம்பெனி ஸ்டாஃப்ஸ் வரைக்கும் எல்லாத்தையும்...''

''பரவாயில்லையே அபூர்வமா சில சமயங்கள்ள உண்மையக் கூடப் பேசற.''

''பின்ன?''

''சொல்லுமா, என்ன விஷயம்?''

அண்ணன் கேட்க எப்படித் தொடங்குவதென்று தெரியாமல் விழித்தாள் ஸ்மிர்த்தி.''

சில வினாடிகள் தான்.

''அண்ணா...''

''ம், சொல்லுங்க மேடம்.''

''எனக்கொரு உதவி வேணும்ணா.''

''சொல்லு செய்யறேன்.''

''அது...''

''ம், என்ன ஸ்மிர்த்தி?''

''எனக்குத் தெரிஞ்சவங்களுக்கு ஒரு வேல வேணும்.''

''யாருக்கு? என்ன வேலை?''

''பி.இ. முடிச்சிருக்காங்க, ஃபர்ஸ்ட் கிளாஸ். ரொம்ப திறமைசாலி...''

''சந்தோஷம்...''

''ஸாரிண்ணா, வேல என் ஃப்ரண்ட்டுக்கு தான். மேரேஜ் ரிசப்ஷன் அன்னைக்குக் கூட நான் உங்ககிட்ட இன்ட்ரட்யூஸ் பண்ணி வெச்சேனே வாணின்னு...''

''என்ன திடீர்னு, பழைய வேலை என்னாச்சு? இல்ல இப்ப தான் புதுசா வேல தேடிட்டிருக்காங்களா?''

''அது... அது கொஞ்சம் விளக்கமா சொல்லணும். உங்களுக்கு ஆட்சேபனையில்லேன்னா...''

''பரவாயில்ல சொல்லு. எப்படியும் வேல குடுக்காம நீ விடப் போறதில்ல அவங்களப் பத்தித் தெரிஞ்சுக்காம திடீர்னு என்னாலயும் வேல குடுக்க முடியாது.''

''அப்ப வேகன்ட் இல்லையாண்ணா...''

''அதுக்குள்ள இன்னொரு சந்தேகமா, விஷயத்த சொல்லு ஸ்மிர்த்தி.''

அதற்குப் பிறகு வினாடியைக் கூட வீணாக்காமல் தனது தோழி வாணியைப் பற்றிய அனைத்தையும் சொல்லி விட்டிருந்தாள்.

அதாவது அவளுக்குத் தெரிந்த அனைத்தையுமே, அவளுக்கும் வாணியைப் பற்றி முழுமையாகத் தெரியு மென்பதால் ஒன்று கூட விடாமல் எல்லாவற்றையும் சொல்லிவிட்டு ஆவலும் பயமும் ஒன்றுக்கொன்று போட்டியிட அண்ணனையே பார்த்தாள்.

ஹரிவரதனும் உடனே எதையும் சொல்லி விட வில்லை.

ஏன் தங்கை சொல்ல அவையனைத்தையும் கேட்ட அவனுக்கும் உள்ளூர மலைப்புத் தான்.

தான் அன்று பார்த்த அந்த அழகான பெண்ணுக்குள் இத்தனை சோகங்களா என்று ஆச்சரியமும், அதிர்ச்சியும் கூட...



ஆனாலும் உடனே நடப்பிற்கு வந்திருந்தவன், எதிரே அமர்ந்திருந்த தங்கையைப் பார்த்தான்.

''வேல ஏதாவது...''

''ஏன் சித்தப்பா கம்பெனிலயே ஏதாவது வேல போட்டுக் குடுக்கக் கூடாது?''

''எப்படின்னா முடியும்? வாணிக்கு என்ன விட்டா வேற யாரையும் பழக்கமில்ல. அதனால அவங்க வீட்ல இருக்கறவங்க முதல்ல தேடற இடமே எங்க வீடும், கம்பெனியுமா தானண்ணா இருக்கும்...''

''அவங்க வீட்ல அந்த அளவுக்குப் போவாங்களா?''

''குறைந்தபட்சம் அந்தளவுக்குப் போவாங்கண்ணா, அதிகபட்சம் இன்னும் என்ன வேணும்னாலும், ஏன்னா வாணியோட அத்தை அந்த அளவுக்கு பயங்கரமானவங்க.''

''அதே சமயம் ரொம்ப சீப்பாவும் நடந்துக்குவாங்க. அதனால தான்...''

''சரிமா ரெண்டு நாள் டைம் குடு...''

''அண்ணா.''

''சொல்லு ஸ்மிர்த்தி.''

''ஏன் உங்க கம்பெனிலயே ஏதாவது வேலையிருந்தா குடுக்கக் கூடாது, ஏன் சொல்றேன்னா இந்த இடத்த அவங்களால கெஸ் பண்ணவும் முடியாது, அதோட...''

''சொல்லு.''

''உங்களுக்குக் கீழ வேலை செய்யும்போது அவ ளுக்கு பாதுகாப்பும் இருக்கும்.''

...............

''கொஞ்ச நாளைக்கு தாண்ணா, அதுக்குள்ள வெளியூர்ல எங்காவது ஒரு நல்ல வேலை தேடிட்டுப் போய்டுவா...''

''பாரு இதுக்காக தான் பாத்தேன்.''

''என்னண்ணா?''

''பொண்ணு நல்ல திறமைசாலிங்கற கூடவே உன்னோட சிபாரிசும் வேற இருக்கறதால ஏதாவது பொறுப்பான வேலையே கொடுக்கலாம். அப்பிடியிருக்கும் போது பாதில திடீர்னு வெளியூர்ல வேலை கிடைச்சுடுச்சு கிளம்பறேன்னு சொன்னா...''

''அந்தக் கவலையே வேண்டாம் எங்க இருந்தாலும் நல்ல சம்பளமும் பாதுகாப்பான இடமும் தான் அவளோட தேவைகள். அது நீங்க குடுக்கற வேலைலயே அமைஞ்சுட்டா அப்புறம் ஏன் அவ வெளிய போகப் போறா...''

''திடீர்னு கல்யாணம் காதல் அது இதுன்...''

அண்ணனின் வார்த்தைகளில் இப்பொழுது சிரித்து விட்டிருந்தாள் ஸ்மிர்த்தி.

''என்ன?''

''சான்ஸே இல்லண்ணா'' என்றவள் அண்ணனின் பார்வையில் நம்பாமை தெரிய சில நாட்களுக்கு முன்பு அதாவது கல்யாண வரவேற்பன்று வாணி சொன்னதைச் சொன்னாள்.

''அப்படிச் சொல்றவ, நூத்துக்கு நூறு சதவிகிதம் அந்த மாதிரி கல்தா குடுக்க மாட்டா...''

''ம், என்ன சொல்லு?''



''வாணியப் பத்தி எனக்குத் தெரியும்னா...'' என்று ஏதோ சொல்ல வந்தவளால் தொடர்ந்து பேச முடிந்திருக்கவில்லை.

குரல் கரகரத்து விட்டிருந்தது.

சில வினாடிகள் எடுத்துத் தன்னை சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தவள் ''ஸாரிண்ணா'' என்றாள்.

''ஏதோ சொல்ல வந்த?''

''இல்லண்...''

''பரவாயில்ல, எதுவானாலும் சொல்லு. அப்பதான் எனக்கும் என்ன வேல குடுக்கலாங்கறத டிஸைட் பண்ண சவுகர்யமா இருக்கும்.''

''அவளப் பத்தி சொல்லணும்னா அதுவும் எங்கிட்டக் கேட்டீங்கன்னா நாள் பூராவும் சொல்லிட்டே இருப்பேண்ணா.''

''கஷ்டத்தத் தவிர அவ வாழ்க்கைல வேற எதயுமே அனுபவிச்சதில்லணா. ஆனாலும் எதையுமே வெளிய காட்டிக்க மாட்டா. எனக்கென்ன குறைன்னு தான் கேப்பா. எந்நேரமும் சிரிச்சுட்டே இருப்பா. மத்தவங்களையும் சிரிக்க வைப்பா. யாரையுமே ஒதுக்க மாட்டான்னாலும் அவ்வளவு சீக்கிரம் யார் கிட்டயும் பழகிடவும் மாட்டா. மொத்தத்துல ரொம்பப் பிரமாதமான பொண்ணு. ஏன் நான் பெருமையாவே சொல்லுவேன் என் ஃப்ரண்ட் மாதிரி ஒரு பொண்ணு இந்த உலகத்துல எங்க போனாலும் உங்களால தேடிக் கண்டுபிடிக்க முடியாது...''

''ஓ, சவாலா!''

''அப்பிடித்தான்னே வெச்சுக்கோங்களேன். அது மட்டுமில்லண்ணா உங்கள மாதிரி திறமையானவங்க கிட்ட வேலை செய்ய நேரும் போது அவளோட திறமைக்கும் ஒரு அங்கீகாரமும், முன்னேற்றமும் கிடைக்குமில்லையா...''

''கடைசில என்னையும் திறமைசாலின்னு சொல்லிட்ட, எனக்கொரு சந்தேகம்?''

''என்னண்ணா?''

''இப்பல்லாம் நீ நிறையப் பொய் பேசப் பழகிட்டயோ?''

அண்ணனின் கேலி புரிய, அவனுடைய பாணியிலேயே பதில் சொன்னாள் ஸ்மிர்த்தி.

''நிறையன்னு இல்லண்ணா, அப்பப்ப...''

''அப்ப உன் ஃப்ரண்டப் பத்தி நீ சொன்னதும் அதுல சேர்த்தி தான் இல்லையா?''

''அச்சச்சோ அது உண்மைதாண்ணா, கடைசியா உங்களப் பத்தி சொன்னேனில்லையா அது மட்டும்தான்...''

சொல்ல வந்ததை முழுமையாகச் சொல்வதற்குள் சிரிப்பு வந்து விட்டிருந்தது ஸ்மிர்த்திக்கு.

''ம்கூம், இனி உன்ன நம்பறதுக்கில்ல. தண்டன குடுத்து தான் ஆகணும்...''

''என்ன தண்டன அண்ணா?''

''உன் ஃப்ரண்டுக்கொரு வேல தான்.''

''வாவ் தேங்க்யூண்ணா, தேங்க்யூ...''

''போதும், போதும். மேடம் ரெண்டு கப்ப எடுத்து அந்த ஃப்ளாஸ்க்ல டீ இருக்கு. ஊத்திட்டு வாங்களேன்...''



''ஸ்யூர்ணா, ஆனா எனக்கு வேண்டாமே'' என்றவள் தனது அண்ணனுக்கு மட்டும் ஒரு கப்பில் டீயை ஊற்றிக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''ஆமா உங்க செகரட்டரி எங்கண்ணா, இன்னைக்கு லீவா?''

''இல்லமா நிறுத்திட்டேன்.''

''ஏன்?... ஸாரின்னா சொல்லக் கூடாதுன்னா வேண்டாம்.''

''இதுல என்ன இருக்கு. எங்கிட்ட சம்பளத்த வாங்கிட்டு விசுவாசத்த வேற இடத்துல காட்டினாங்க வீட்டுக்கு அனுப்பிட்டேன்.''

தங்கை புரியாமல் பார்ப்பது தெரிய, ''சுமிதா விஷயம் தெரியுமில்லையா?'' என்று கேட்டான்.

''ஆமாண்ணா. பெரியம்மா அம்மாகிட்டப் பேசிட்டிருக்கும்போது கேக்க நேர்ந்தது, ஸாரி...''

''அதேதான், அப்பப்ப இங்கிருக்கற முக்கியமான தகவலெல்லாம் சுமிதாவோட புகுந்த வீட்டு மனுஷங்களுக்குப் போய்ட்டே இருந்திருக்கு...''

''அப்பிடின்னா நீங்க செஞ்சது நூத்துக்கு நூறு சரிண்ணா. அப்பிடின்னா வாணிக்கு நீங்க...''

''ஆமாம்மா, என்னோட செகரட்டரி, வேலதான்.''

ஹரிவரதன் சொல்ல, ''வாவ் தேங்க்யூண்ணா'' என்று துள்ளிக் குதித்தாள்.

''என்ன இவ்வளவு சந்தோஷம்?''

''பின்ன, உங்க கம்பெனில வேல கிடைச்சிருந்தாலே அது பெரிய விஷயம். ஆனா அதுக்கும் மேல

உங்ககிட்டயே அதுவும் உங்க பி.ஏ.வாவே வேலயா! வாணி ரொம்ப லக்கிண்ணா. எனக்கும் ரொம்ப சந் தோஷமா இருக்கு.''

''அட, மத்த டீடெய்ல்ஸ் எல்லாம் தெரிய வேண் டாமா?''

''பின்ன?'' என்றவள் மேலும் சிறிது நேரமும் இருந்த அனைத்தையும் விவரமாகக் கேட்டுத் தெரிந்து கொண்ட பின்னரே கிளம்பினாள்.

''அண்ணா கடைசியா இன்னும் ஒண்ணு...''

''என்னமா சொல்லு?''

''இல்ல வாணி ரொம்ப தன்மானம் பாப்பா, நான் சொன்ன எதையும் அவகிட்ட நீங்க தெரிஞ்ச மாதிரி காட்டிக்க வேண்டாம். அதே மாதிரி...''

''ம்.''

''வேலையும் எனக்காக, நான் ரொம்பக் கேட்டுக்கிட்ட துக்காகக் கொடுத்த மாதிரி காட்டிக்க வேண்டாம்...

''சரிதான் மேடம், இன்னும் என்னவெல்லாம் இருக்கோ சொல்லிடுங்க மே...''

''ஸாரிண்ணா அரை மணி நேரம்னு சொல்லிட்டு அதுக்கும் மேலயே ஆயிடுச்சு. வேறொன்னுமில் லண்ணா வேகன்ட் இருக்குன்னு கேள்விப்பட்டுக் கேட்டுப் பாத்தேன்னு சொல்லிட்றேன். ஆனா ஒண்ணு மட்டும் ஸ்யூரா சொல்ல முடியும்னா, உங்களுக்கொரு எக்ஸலண்ட் ஸ்டாஃப் கிடைச்சாச்சு. நீங்களா வெளிய போன்னு சொல்லாத வரைக்கும் அவ எப்பவும் இந்த வேலைய விட்டுட்டு போகப் போறதும் கிடையாது''



என்று முழு உண்மையை உறைத்தவள் மீண்டுமொரு முறையும் நன்றி சொல்லி விட்டுக் கிளம்பியிருந்தாள்.

ஏனோ மனதிற்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது ஸ்மிர்த்திக்கு.

தோழிக்குக் கிடைத்தது. எப்படிப்பட்ட வேலை, அதுவும் யாரிடம், நினைத்துப் பார்க்கப் பார்க்கப் பெருமை யாகவும்,

கூடவே தன்னை நம்பி வந்து விட்டவளுக்கு ஒரு நல்ல வழியைக் காட்ட முடிந்ததே என்று ஆனந்த மாகவும்.



# 12

மறுநாளே ஹரிவ்ரதனிடம் பி.ஏ.வாக அதாவது அவ னுடைய பர்ஸனல் அஸிஸ்டெண்ட்டாக வேலைக்குச் சேர்ந்திருந்தாள் வாணி.

தனது அண்ணனிடம் கேட்டுக் கொண்டதைப் போலவே ஸ்மிர்த்தி தானும் தோழியிடம் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

உனக்குத் தேவை பாதுகாப்பான, நல்ல சம்பளத் துடன் கூடிய ஒரு வேலை,

அது ஹரிவரதனிடம் இருக்கிறது என்று அழைத்து வந்து விட்டுவிட்டுப் போய் விட்டிருந்தாள்.

என்னதான் ஸ்மிர்த்தி சொன்னதும் சரியென்று விட்டிருந்தாலும் உள்ளுக்குள் மனம் கலங்குவதை வாணியால் நன்றாகவே உணர முடிந்தது.

ஆம், உணர மட்டும் தான் முடிந்தது.

எதையும் செய்வதறியாது, திகைத்து நின்று விட்டிருந்தாள்.

தன்னை மீறி ஏதோ நடக்கப் போவதைப் போல,

அது இருக்கிற நிம்மதியையெல்லாம் கெடுத்து விடும்போல,

அப்படி நினைத்தவளுக்கு உடனே என்னவோ இத்தனை நாட்களும் நிம்மதியாகப் பெற்றவர்களின் சிறகுகளுக்குள் அன்பும் ஆதரவுமாக இருந்து விட்டு இப்பொழுது தான் வழியில்லாமல் போய் விட்டது போலல்லவா தான் கவலைப்படுவது இருக்கிறது என்று சிரிப்புக் கூட வந்திருந்தது.

சொல்லப் போனால் இன்றிலிருந்து தானே இக்கட்டான, மோசமான சூழலில் இருந்து விடுபட்டு வெளியே வந்திருக்கிறோமென்று ஒரு விதத்தில் நிம்மதியாகவும் கூட. அழைத்து வந்து விட்டதோடு என் வேலை முடிந்தது மாலை வருகிறேனென்று ஸ்மிர்த்தி கிளம்பி விட்டிருக்க, சுற்றும் முற்றும் பார்த்தாள் வாணி.

அனைத்துமே புதுமையாக இருந்தன.

அதே நேரம் பின்னால் ஏதோ அரவம் கேட்கத் திரும்பினாள்.

ஹரிவரதன் நின்றிருந்தான்.



இல்லையில்லை, எம்.டி. ஹரிவரதன் நின்றிருந்தார்.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

''நல்வரவு'' என்றான் ஹரிவரதன்.

''குட்மார்னிங் ஸார்'' - வாணி.

''வெரிகுட்மார்னிங், எப்ப வந்த?''

''இப்பதான் ஸார், ரெண்டு நிமிஷமாச்சு.''

''ஸ்மிர்த்தி கூட வந்தியா...''

''ஆமா ஸார்.''

''ஏன் நின்னுட்டே இருக்க, உக்காரு இதுதான் உன் ரூம், இது உன் டேபிள் சேர்...''

ஹரிவரதன் அதாவது எம்.டி. அவர் பாட்டுக்கு சொல்லிக் கொண்டே போக அப்படியே மலைத்து நின்று விட்டிருந்தாள் வாணி.

இவ்வளவு பெரிய அறை தன்னுடையதா, ஏதோ ஒரு இடத்தைக் காட்டி இதுதான் உன்னிடமென்று யாராவது வந்து சொல்வார்களென்று எதிர்பார்த்திருந்தவளுக்கு அந்த வினாடியிலிருந்து அதிர்ச்சி இல்லையில்லை ஆச்சரியம், ம்கூம் பிரமிப்புகள் (என்று சொல்வது சரியாக இருக்கும்) தொடங்கியிருந்தன.

என்னதான் பழைய கம்பெனியிலும் பொறுப்பான வேலையையே செய்திருந்த போதிலும், இங்கே இவ்வளவு பெரிய கம்பெனியில் அதுவும் அந்தக் கம்பெனியின் எம்.டி.யுடைய பி.ஏ.வாகத் தான் செய்ய வேண்டிய வேலைகளை எம்.டி.யான ஹரிவரதனே அவன் வாயால் சொல்லக் கேட்டவளுக்கு ஏனோ சில வினாடிகள் தான்

நிற்கும் இடமே கரகரவென்று தட்டாமாலை சுற்றி விட்டிருந்தது.

அப்படியே டேபிளை இறுகப் பிடித்த வண்ணம் நின்று கீழே விழாமல் சமாளித்தாள் எனலாம்.

தன்னுடைய பிரமிப்பையும், பயத்தையும் எம்.டி.யும் புரிந்து கொண்டிருக்க வேண்டுமென்பது தொடர்ந்து அவர் பேசியதில் உறுதியானது.

''ப்ரீயா, ரிலாக்ஸா இரு வாணி'' என்றவன் ''உன் முழு பேர் கலைவாணி இல்லையா?'' என்று கேட்டான்.

''ஆமா ஸார்.''

''ஒரு நாளைக்குப் பாத்தா எத்தனையோ தடவ நான் உன்னக் கூப்புட வேண்டியதிருக்கும், அதனால சிம்பிளா உன் ஃப்ரண்ட், ஏன் எல்லாருமே கூப்புட்ற மாதிரி நானும் வாணின்னே கூப்புட்டுக்கலாம் இல்லையா?''

''நிச்சயமா ஸார்.''

''சரிதான். ஒரு பதினஞ்சு நிமிஷம் கழிச்சு கொஞ்சம் உள்ள வந்துட்டுப் போ'' என்று விட்டு எம்.டி. தன்னுடைய அறைக்குள் சென்றிருக்க, அதற்குப் பிறகு தான் வாணியால் இயல்பாக சுவாசிக்கக் கூட முடிந்தது.

எம்.டி. கொடுத்திருக்கும் கால் மணி நேரம் கூடத் தான் சற்று ஆசுவாசப் படுத்திக் கொள்ளத் தானோ என்று நினைக்கத் தோன்றியது.

அப்பொழுது மட்டும் தான் என்றில்லை. அன்று முழுவதுமே ஏன் தொடர்ந்து வந்த நாட்களிலும் கூட பெரிதாக ஒன்றுமில்லை. இவ்வளவுதான் அதுவும் நீ நினைத்தால் மிகவும் எளிதாகச் செய்து விடுவாய்



என்பதைப் போல எத்தனை எத்தனையோ முறை வேலைகளில் உதவினான்.

உனக்குத் தெரியாததால் சொல்லிக் கொடுக்கிறேன் என்பதைப் போல ஒருமுறை கூட காட்டிக் கொண்டான் இல்லை.

நன்றாகச் செய்தால் மனம் விட்டுப் பாராட்டினான்.

தெரியாமல் நின்றால் உடன் சேர்ந்து செய்து கொடுத் தான்.

தான் எம்.டி. என்ற பந்தாவோ, கண்டிப்போ இல்லாமல், ஒன்று தெரியா விட்டால் சரிதான் வந்து கேட்கட்டும் பார்க்கலாம் என்றிருக்காமல், ஏதாவது தவறாகி விட்டால் மட்டம் தட்டாமல் நானும் உன்னுடன் வேலை செய்யும் சக ஊழியனே என்பதைப் போல நடந்து கொண்ட ஹரிவரதனின் அணுகு முறையில் பிரமித்துப் போனாள் வாணி, மேலும் அவன் மீது பெரு மதிப்பும் வந்திருந்தது.

எவ்வளவு பெரிய எம்.டி.யால் எப்படி இவ்வளவு இயல்பாக சாதாரணமாக நடந்து கொள்ள முடிகிறதென்று நினைத்து நினைத்துப் பிரமித்துப் போனாள்.

இயற்கையிலேயே புத்திசாலியான வாணியும் சுவாரஸ்யமும், சவால்களும் நிறைந்த தனது வேலையை இப்பொழுது விரும்பிக் கற்றுக் கொள்ளத் தொடங்கியிருந்தாள்.

அதாவது முன்பு போல இல்லாமல் இப்பொழுதெல்லாம் வேலை என்னுமளவில் ஹரிவரதனிடம் பேசுவதை இயல்பாக எடுத்துக் கொள்ளப் பழகியிருந்தாள்.

இது தெரியவில்லை. அதை எப்படிச் செய்ய வேண்டும் என்றெல்லாம் அவசியத்திற்குக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் அளவு முன்னேறியிருந்தாள்.

அந்த மாற்றம் ஹரிவரதனுக்கும் பிடித்திருந்தது.

குதிரைக்குக் கடிவாளம் போல வேலை செய்வது ஒன்று தான் என் வேலை என்று அப்படி இப்படி மனதை ஏன் பார்வையைக் கூட அலைபாய விடாமல் வெகு கவனமாக இருந்த வாணியிடம் அவனாலும் அவசியத் திற்குக் கூடப் பேச முடிந்திருக்கவில்லை.

அதுவும் மிகவும் இறுக்கமாக இருக்கும் சில சமயங் களில் அவசியத்திற்குப் பேசக் கூடத் தயக்கமாகி விடுவதுண்டு.

ஏன் அபூர்வமாக சில சமயங்களில் எரிச்சலும் கூடப் பட்டிருக்கிறான்.

ஆனால் அதெல்லாம் வாணியின் முகத்தைப் பார்க்க நேரும் போது இருந்த இடம் தெரியாமல் காணாமல் போய் விடுவதையும் ஆச்சரியத்துடன் கண்டிருக்கிறான்.

இந்த வேலையைப் பொறுத்தவரை எம்.டி.யின் பி.ஏ.வாக இருப்பவர்கள் இயல்பாகப் பேச வேண்டும் என்பதோடு அவசியம் ஏற்பட்டால் அவர்களுடைய கருத் துக்களையும் பரிமாற்றம் செய்ய வேண்டியது அவசிய மானதாக இருந்தது.

அதாவது, சரி, தவறு பார்க்க வேண்டியிருந்தது. நல்லது, கெட்டது ஆராய்ந்து செய்ய வேண்டியதும் கூட,

இன்னும் அந்த அளவிற்கு வந்துவிடவில்லை என் றாலும், வாணியிடம் தெரிந்த சிறு மாற்றம் அதற்கான நம்பிக்கையைக் கொடுத்திருந்தது.



எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு விஷயம் ஹரிவர தனை மிகுந்த ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருந்தது.

அது வாணி வேலைகளைக் கற்றுக் கொண்ட வேகம்,

ஹரிவரதனே அறிந்த வகையில் ஒரு திறமையான பி.ஏ.வாகத் தனது கம்பெனியின் வேலைகள் அனைத் தையும் முழுமையாகக் கற்றுக் கொள்ள குறைந்தது ஒரு மாத காலமாவது தேவைப்படும்.

அதுவும் கூட நல்ல திறமைசாலிகளாக இருப்பவர் களுக்குத் தான்.

மற்றபடி அவரவர்களுடைய திறமைக்கேற்றவாறு மேலும் பதினைந்து நாட்கள், ஒரு மாதம் என அவகாசம் வேறுபடும்.

ஆனால் வாணி அந்த எண்ணங்களையெல்லாம் உடைத்தெறிந்திருந்தாள்.

அதிகபட்சமாக வேலைக்கு சேர்ந்த அந்தப் பத்து நாட் களுக்குள் அனைத்து வேலைகளையும் மிகச் சிறப்பான முறையில் ஹரிவரதனே பிரமித்துப் போகுமளவிற்குக் கற்றுத் தேர்ந்திருந்தாள்.

அது மட்டுமில்லாமல் வாணியிடம் இன்னும் எத் தனையோ சிறப்புகள் இருந்தன.

அதில் முக்கியமான ஒன்று மொழிப் புலமை.

தமிழ் ஆங்கிலம் என்றில்லாமல் ஹிந்தியிலும் இலக்கணத் திருத்தத்தோடு வெகு சரளமாக எழுதவும் பேசவும் செய்தாள்.

ஆங்கிலத்திலும்,

தனக்கு நிகராக பெரிய பெரிய விஷயங்களை எல் லாம் கூட வெகு இயல்பாக மிகச் சிறப்பான முறையில் பேசுவதையும் எழுதுவதையும் கண்டான்.

இப்படி இன்னும் எத்தனையோ.

விட்டால் சொல்லிக் கொண்டே போகுமளவிற்கு அனைத்துமே வாணியிடம் சிறப்புகள் தான் இருந்தன.

ஆனாலும் ஒரே ஒரு குறை இருக்கவே செய்தது.

அது அவளிடம் சற்று அளவுக்கு அதிகமாகவே தெரிந்த ஒதுக்கம்.

எதிலிருந்தோ தன்னைக் காத்துக் கொள்வதைப் போல,

எதையோ எண்ணி அஞ்சியது போல,

போகப்போக அது என்னவென்பதையும் ஹரிவரதன் புரிந்து கொள்ள நேர்ந்தது.

ஆனாலும் அதைக் கண்டும் காணாமல் விட்டுவிட முடிவு செய்து விட்டிருந்தான்.

அதை செயல்படுத்தத் தன்னால் இயன்ற மட்டும் முயன்றான்.

ஆனால் நாளுக்கு நாள் சற்று அதிக அளவில் வெளிப் படையாகவே தெரியத் தொடங்கிய வாணியின் ஒதுக்கம், அவனுடைய அந்த முயற்சியைத் தகர்த்தெறி யவும் செய்திருந்தது.



# 13

அன்று மாலை வேலை முடிந்து விடைபெற வந்த வாணியைச் சில வினாடிகள் பார்த்த ஹரிவரதன், தனக்கு



எதிரே இருந்த இருக்கையைக் கைகாட்டி ''கொஞ்சம் உக்காரு உங்கிட்டப் பேசணும்'' என்றான்.

அப்படிச் சொன்ன தனது எம்.டி.யை சற்றுப் பயத்துடன் பார்த்த வாணி, அடுத்த வினாடி அமர்ந்தும் இருந்தாள்.

''ஹாஸ்டல் சவுகர்யமா இருக்கா?''

எம்.டி. கேட்க ''இருக்கு ஸார் பழகிடுச்சு'' என்றாள்.

''சொல்லு என்ன பிரச்சன?''

அப்படிக் கேட்ட ஹரிவரதனை இப்பொழுது ஒன்றும் புரியாமல் பார்த்தாள் வாணி.

''ஸார்...''

''ஏன் எப்பவுமே இறுக்கமா இருக்க?''

''அப்படியெல்லாம் இல்லையே ஸார்.''

''சரிதான், அப்ப என் கண்ல தான் ஏதோ பிரச்சன விடு.

அப்படிச் சொன்னவனை வாணி பார்க்க, ''ஆனாலும் நீ ஏன் அப்பப்பக் கொஞ்சம் சிரிக்கக் கூடாது?'' என்று கேட்டான்.''

''நீ சோகமா இருக்கும்போது தெரிஞ்சும் தெரியாம நான் சிரிச்சுட்டாக் கூட ஏதோ தப்புப் பண்ணிட்ட மாதிரி ஆயிடுது...''

................

''அது கூடப் பரவாயில்ல. என்ன ட்ரை பண்ணி னாலும் என்னால முகத்தத் தொடர்ந்து ஏன் சும்மாகூட சோகமா வெச்சுக்க முடியல, நீ வேணும்னா கொஞ்சம் சொல்லிக் கொடேன்...''

அப்படிச் சொன்ன ஹரிவரதனை இயன்ற மட்டும் உணர்ச்சியை வெளிக்காட்டாத பாவனையுடன் பார்த்தாள் வாணி.

சில வினாடிகள் தான்.

அதற்கு மேல் முடிந்திருக்கவில்லை, பக்கென்று சிரித்து விட்டிருந்தாள்.

அப்படிச் சிரித்து விட்டவளால் ஏனோ உடனே சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

மெல்லிய புன்னகையுடன் எதிரே இருந்தவனைப் பார்த்தாள்.

''ம், இது நல்லாா்க்கு.''

.................

''ஆனாலும் இப்படி ஏமாத்திட்டயே வாணி.''

''என்ன ஸார்?''

''சோகமா இருக்கிறது எப்படின்னு சொல்லித் தர மாட்டியா?''

''என்னக் கேட்டா? யாராவது சோகமா இருக்கறவங்ககிட்டப் போய்க் கேளுங்க'' என்று புன்னகையினூடே சொன்னாள்.

''ம், எல்லாம் நேரன்டா சாமி. வரம் கொடுத்த சாமிக்கே மரியாதையில்ல...''

''என்ன பண்றது ஸார், சோகமா முகத்த வெச்சுக்கக் கூடாதுன்னு எங்க எம்.டி.யே சொல்லிட்டார். உங்களுக்குச் சொல்லிக் குடுக்கறதுக்காக நான் சோகமா முகத்த வெச்சுக்கிட்டாக்கூட அது அவரு பேச்ச மீறின மாதிரி ஆயிடாது?''



''அடடா என்ன மரியாத, எப்படியோ இனிமேல் சோகமா இருக்க மாட்டேன்னு ஒத்துக்கற.''

''ஷ்யூர், அதுக்காக சிரிச்சுட்டேவும் இருக்கமாட்டேன்.''

''ஏன்?''

''நம்ம எம்.டி.யே சொல்லிட்டாரேன்னு நான் பாட்டுக்கு எப்பப் பாத்தாலும் சிரிச்சுட்டே இருந்து அப்புறம் நீங்க பாட்டுக்கு இன்னொரு அட்வைஸ் மழைய ஆரம்பிச்சுட்டிங்கன்னா...'' என்று வாணி சொன்ன பாவனையில் இப்பொழுது ஹரிவரதனும் சிரித்து விட்டிருந்தான்.

''ம், இந்தக் காலத்துல நல்லவங்களுக்குக் காலமில்லப்பா'' என்று விளையாட்டுக்கு அலுத்துக் கொள்ளவும் செய்தான்.

அன்றைய பேச்சிற்குப் பிறகு நிறைய மாற்றங்கள் நிகழ்ந்திருந்தன.

அவசியத்திற்கு இயல்பாகப் பேசவும், சிரிக்கவும் தொடங்கி விட்டிருந்த வாணி, இறுக்கமாக இருப்பதை அறவே தவிர்த்திருந்தாள்.

அப்படி இருப்பது அவளுடைய இயல்பு அல்ல என்பதால், இப்பொழுதெல்லாம் எவ்வளவோ பரவாயில்லாமல் உணர்ந்தாள்.

அனைத்திற்கும் மேலாக ஹரிவரதனுடன் இவ்வளவு இயல்பாகச் சிரித்துப் பேச முடியுமென்பது அந்தப் பேச்சிற்குப் பிறகுதான் அவளுக்குப் புரிந்தது.

வாணிக்கே இப்படியென்றால் ஹரிவரதனைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இருக்கவில்லை.

இயல்பாக சிரித்துப் பேச மாட்டாளா என்று மிகவும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவன் ஆயிற்றே,

அது மட்டுமா,

ஏனோ வாணி வந்ததற்குப் பிறகு வாழ்க்கையே மிகவும் அழகாகி விட்டதைப் போல உணர்ந்தான்.

ஒரு சிறு பெண் தன்னை எப்படியெல்லாம் எண்ண வைக்கிறாள் என்று நினைக்கவே சிரிப்புத் தான் வந்தது.

ஆனாலும் ஒரேயடியாக அப்படி ஒதுக்கி விட முடிந் திருக்கவில்லை.

அழகு, அறிவு, படிப்பு, வேலை.... என வாணியின் சிறப்புகள் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக நினை விற்கு வந்தன.

மேலும் ஒரு வாரம் சென்றிருந்தது.

இரண்டு நாள் வேலையாக எம்.டி. வெளியூர் சென் றிருக்க, அவர் சொல்லி விட்டுச் சென்ற வேலைகளை செய்து முடிப்பதில் மும்முரமாக இருந்தாள் வாணி.

''என்னடி பண்ணிட்டிருக்க?'' என்ற குரலில் அவசர மாகத் திரும்பியவள் ''வாவ் ஸ்மிர்த்தி'' என்றாள்.

''என்ன பண்ணிட்டிருக்க?''

''வேலைய தான், அப்புறம் எப்பிடியிருக்க? வீட்ல எல்லோரும் எப்படியிருக்காங்க?''

''நான் உம்மேல கோபமா இருக்கேன்.''

''ஏனோ?''

''உனக்குத் தெரியாது?''



''தெரியலையே.''

''நாம பாத்து ஒரு வாரத்துக்கு மேலாச்சு.''

''சரி.''

''என்னடி சரி, உடனே கிளம்பு.''

''எங்க?''

''அதெல்லாம் சொல்ல முடியாது, கிளம்பு.''

''இன்னும் டியூட்டி டைம் முடியல.''

''எப்ப முடியும்?''

''ஆறு மணிக்கு.''

''சரி சரி பாரு, சீக்கிரம் கிளம்பணும்.''

''அண்ணா வந்தாச்சே, இன்னும் ஆபீஸ் வரலையா?''

''அப்படியா ஸார் வந்துட்டாரா?''

''அதெல்லாம், அண்ணா இருப்பாரு பர்மிஷன் வாங்கிட்டு உன்ன அழைச்சுட்டுப் போலாம்னு வந்தேன். சரி மேடம் சீக்கிரம் போய் வேலைய முடிங்க, அண்ணா வுக்கு போன் பண்ணி சொல்லிட்டுக் கிளம்பலாம்.''

''ம், அப்புறம்?'' என்ற குரலில் பெண்கள் இருவரும் ஒரு சேரத் திரும்ப ஹரிவரதன் நின்றிருந்தான்.

''அண்ணா.''

''குட் ஈவினிங் ஸார்.''

''வெரி குட் ஈவினிங் அப்புறம் ஃப்ரண்ட்ஸ் ரெண்டு பேரும் கிளம்பத் தயாராயிட்டிங்க போலிருக்கு.''

''இல்லண்ணா, வாணி வேலையா தான் இருந்தா நாந்தான் கூப்புட்டேன்...''

''வேலையெல்லாம் நாளைக்கு வந்து பாத்துக்கட்டும் கிளம்பிக்கோங்க.''

''நிஜமாவாண்ணா?''

''அஞ்சு மணி வரைக்கும் தான் டியூட்டி...''

''அப்பிடியா! தேங்க்யூண்ணா வா வாணி.''

''ஒரு டூ மினிட்ஸ்'' என்று தோழியிடம் மெல்லிய குரலில் சொன்ன வாணி, எம்.டி.யிடம் வேலை விவரம் உறைத்தாள்.

''சரி கிளம்பிக்கோங்க'' என்றவன் ''எங்க சினிமா வுக்கா?'' என்று கேட்டான்.

''ம்கூம் ஹோட்டலுக்குப் போய் டின்னர் முடிச்சுட்டு அப்பிடியே பீச்சுக்கு...''

''ஓ, என்ன விசேஷம்.''

''வாணியோட ட்ரீட்னா.''

''ஓ.''

''அவளுக்கு வேலை கிடைச்சதுக்கு...''

''அட...''

''ஆமாண்ணா வேல கிடைச்சவ வாங்கிக் குடுத்த எனக்கு ட்ரீட் தரப்போறா...''

''எல்லாம் நேரன்டா சாமி.''

''என்ன நேரம்?''

''அந்த வேலையக் குடுத்தவனே நாந்தான், ஆனா என்னக் கண்டுக்கறாங்களா...''



''அதான, எங்கண்ணாவுக்கும் சேத்து நீ ட்ரீட் குடுக் கணும் வாணி.''

ஸ்மிர்த்தி சொல்ல வாணி திகைத்தாள்.

''என்ன யோசிக்கற?''

''நான்...''

''வேண்டாம்பா. ரொம்ப யோசிக்கறாங்க...''

''அச்சச்சோ, நான் யோசிக்கல ஸார். நீங்களும் வாங்க'' என்று வாணி அழைக்க ''ஆமாண்ணா வாங்களேன்'' என்று தானும் அழைத்தாள் ஸ்மிர்த்தி.

''வேற வழியில்லாம போனாப் போகுதுன்னு கூப்புட் றீங்க.''

''நாங்க ஸீரியஸா தான் கூப்புட்றோம்ணா.''

''அப்பிடியா, ஆனா நான் விளையாட்டுக்கு தான கேட்டேன்.''

''அதான நீங்களாவது வர்றதாவது? வீட்டுக்கு ஒரு நாள் டின்னருக்கு வர மாட்டிங்களான்னு அம்மா எத்தன நாளாப் புலம்பிட்டிருக்காங்க தெரியுமா...''

''அப்புறம் கல்யாணப் பொண்ணாகப் போற, கூடிய சீக்கிரம் டும் டும் தான்.''

''அதெல்லாம்...''

''ம்கூம், சமாளிக்கக் கூடாது. இன்னைக்குக் காலை லயே சித்தப்பா கூப்புட்டு சொலிட்டார். அப்புறம் ரெண்டு பேருக்கும் பாத்ததும் புடிச்சுப் போயிடுச்சாம். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம்

மேரேஜ் டேட்ட ஃபிக்ஸ் பண்ணியாகணும்னு மாப்ள சொல்லிட்டாராம். கல்யாணம் முடிஞ்ச கையோட ஆஸ்திரேலியாவுக்குப் பறக்கப் போறீங்களாம்...''

''போதும், போதும்'' என்று ரோஷத்துடன் தொடங்கிய ஸ்மிர்த்தி ''உங்களுக்கு தான் எல்லாமே தெரிஞ்சிருக்கே அப்புறமென்ன...'' என்று வெட்கத்துடன் முடித்தாள்.

''அட வெட்கத்தப் பாருப்பா'' என்று ஹரிவரதன் சிரிக்க, ஆச்சரியத்தில் கண்கள் விரிய அப்படியா என்பதைப் போலப் பார்த்த வாணியின் பார்வையில் மேலும் முகம் சிவந்தாள் ஸ்மிர்த்தி.

''அதப் பத்தி சொல்லத்தான் இப்ப வெளியப் போகப் போறதே'' என்று சொல்ல வந்தவள் அண்ணனின் கேலிக்கு அஞ்சி பேசாமல் வாயை மூடிக் கொண்டாள்.

''அப்புறம் நீ எப்ப ட்ரீட் குடுக்கப் போற?''

தங்கையைப் பார்த்து ஹரிவரதன் கேட்க ''அதான் கல்யாண சாப்பாடு போடப் போறேனே அப்புறமென்ன?'' என்று கேட்டாள் ஸ்மிர்த்தி.

''அட, கல்யாணக் கள கட்ட ஆரம்பிச்சுடுச்சுப்பா...''

அண்ணனின் பாவனையில் ''போங்கண்ணா'' என்று மீண்டுமொரு முறை முகம் சிவந்தாள்.

''சரி சரி கிளம்புங்க. தோழிகள் ரெண்டு பேருக்கும் பேச விஷயங்கள் நிறைய இருக்கும் போலிருக்கு'' என்று ஹரிவரதன் சொல்ல, ''அப்பாடா இப்பவாவது புரிஞ்சதே'' என்று புன்னகையுடன் சொல்லிவிட்டுத் தோழியுடன் கிளம்பியிருந்தாள் ஸ்மிர்த்தி.





# 14

நாட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன.

ஸ்மிர்த்தியின் திருமண நாளும் வந்தது.

ஸ்மிர்த்தியுடைய தேர்வான அந்தத் தங்க வண்ண விலையுயர்ந்த பட்டுச் சேலையில் அதற்கு மேட்சாகத் தேடித் தேடி வாங்கிய ஆபரணங்களுடன் தேவதையென ஜொலித்தாள் வாணி.

அதாவது அனைத்தும் ஸ்மிர்த்தியின் முன்னேற்பாடாக இருந்தது. தன்னைப் போலவே தோழிக்கும் அனைத்தும் பிரமாதமாக நடந்தாக வேண்டுமென்று அழகுக் கலை நிபுணர்களிடம் கட்டளையிட்டிருந்தாள்.

அதனால் வாணியின் மறுப்பை அங்கே காது கொடுத்துக் கேட்கக் கூட யாரும் இருக்கவில்லை.

என்ன சொல்லியும் கேட்காமல் வாணி ஸ்டேஜில் தன்னருகில் தான் இருக்க வேண்டுமென்று ஸ்மிர்த்தி ஆடர் போட்டுவிட, தயக்கத்தையும் படபடப்பையும் தன்னுள் மறைத்தவாறு மணமகளான ஸ்மிர்த்தியின் பின்னால் துணைப் பெண்ணுடன் சேர்ந்து அவளுடைய சிறுசிறு தேவைகளைக் கவனித்தவாறு நின்று விட்டிருந்தாள் வாணி.

அனைவரும் தன்னையே பார்க்கிறார்களோ என்ற பிரம்மையில் மிகவும் தவித்துப் போனாள்.

மணவறையை விட்டுக் கீழே இறங்கிப் போய் எங்காவது மூலையில் அமர்ந்து கொண்டு விட கை கால்கள் பரபரத்தன.

ஆனாலும் அதெல்லாம் வெளியே தெரிந்து விடாதவாறு இன்முகத்துடன் நின்றாள்.

ஸ்மிர்த்தியின் அக்காவுடைய திருமணத்திற்கு வந்து போனது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது.

அதிக பட்சமாய் ஒன்றரை மாத இடைவெளியில் எத்தனை எத்தனை மாற்றங்கள் என்று வியப்பு தான் மேலிட்டது. நலுங்கு முடிந்து மணமக்களுடன் வந்திருந்தவர்கள் அனைவரும் புகைப்படங்கள் எடுப்பது முடிந்து, கடைசியாக அவர்கள் உணவருந்த செல்லும் வரையும் கூட உடனிருந்தவள், அதற்கு மேல் இருந்தால் பிறகு ஹாஸ்டலுக்குள் விட மாட்டார்களென்று தோழியிடம் சொல்லி விட்டுக் கிளம்பியிருந்தாள்.

தோழி சாப்பிட்டாயிற்றா என்பது கேட்டு உறுதி செய்து கொண்ட பின் தான் அவளைக் கிளம்ப அனுமதித்தாள் ஸ்மிர்த்தி.

அதுவும் காலையில் ஆறு மணிக்கு மண்டபத்தில் இருந்தாக வேண்டுமென்ற கட்டளையுடன்.

நன்றாகத் தூங்கியெழுந்து வரவேண்டும் அதற்காகத் தான் ஹாஸ்டலுக்கு செல்லவே சம்மதிக்கிறேன் என்றும்,

மண்டபத்தை விட்டு வெளியே வந்த வாணி தனது மொபைல் அழைக்க உடனே அட்டெண்ட் செய்து பேசினாள்.

ஹரிவரதன் அழைத்திருந்தான்.



எப்படிச் செல்கிறாய் என்று விசாரித்தவன் ஆட்டோவில் என்றதும் வேண்டாம் சில நிமிடங்கள் பொறு வருகிறேனென்று போனை வைத்திருந்தான்.

சொன்னது போல வந்து சேர்ந்திருந்தவன்,

''வா உன்ன விட்டுட்டு அப்படியே வீட்டுக்குப் போய்க்கறேன்'' என்று அழைத்தான்.

''உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்?'' என்று தயங்கினாள் வாணி.

''உன் ஃப்ரண்டோட ஆடர்'' என்றவனின் குரலில் ஏதாவது வித்யாசமாகத் தெரிந்ததோ...

இந்த ஸ்மிர்த்தி ஏன் இப்படிச் செய்கிறாளென்று வேதனையுடன் நினைத்தாள்.

மணப்பெண்ணாக இருந்து கொண்டும் கூடத் தனக்காக இவ்வளவு பார்க்க வேண்டுமா என்றும்.

''டிரைவர் யாராவது இருந்தாக் கூடப் போய்க்குவேன்'' என்று மெல்லிய குரலில் சொல்லிப் பார்த்தாள்.

''யாருமில்ல, எல்லாரும் வெளிய போயிருக்காங்க'' என்று பட்டென்று பதில் வர பேசாமல் நடந்தாள்.

''கவலைப்படாம வா எனக்கும் ஆன் தி வே தான்'' என்ற ஹரிவரதனின் குரலில் இப்பொழுது லேசாக எரிச்சல் இருந்ததோ.

கையைத் திருப்பி மணி பார்த்தாள்.

மணி இரவு பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது தெரிந்தது.

அந்த நேரத்தில், அதுவும் தனியாக எங்கும் சென்று பழக்கப்பட்டிராத வாணியை நல்லவேளையாக

இவனுடன் செல்கிறோமென்று நினைக்க வைத்திருந்தது.

ஸ்மிர்த்தியின் அக்காவுடைய திருமணத்திற்கு வந்து போனது தான் அப்பொழுது அவளுடைய மனதில் ஓடிக் கொண்டிருந்தது.

அன்று போலவே கம்பீரமாக இருந்த ஹரிவரதனை ஏனோ அவளால் நிமிர்ந்து பார்க்கக் கூட முடிந்திருக்கவில்லை.

அவனுக்கு இரண்டடி தள்ளிப் பின்னால் தான் என்றாலும், அவனுடன் செல்ல நேர்ந்தது ஒரு வித மயக்கத்தைக் கொடுத்திருந்தது.

அதிலும் அன்று முதல் முறை பார்த்தபோது என்னவெல்லாம் சொன்னான்.

அவன் சொன்னதெல்லாம் உண்மையாக இருக்குமா.

தன்னளவில் பெரிய ஆராய்ச்சியுடன் நடந்தவள், ஹரிவரதன் தன்னைக் கவனித்ததை அறியவில்லை.

''இங்கயே நில்லு கார எடுத்துட்டு வர்றேன்.'' ஒன்று அவன் செல்ல, இத்தனை ஆயிரம் கார்களுக்கு மத்தியில் தன்னுடைய காரை எப்படி இனம் கண்டு கொள்வானென்ற பிரமிப்புத் தான் மேலோங்கியது.

உடனே நிறுத்திய இடமும், கார் நெம்பரும் கூடவா மறந்து போகுமென்று தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

சில வினாடிகளில் காருடன் வந்த ஹரிவரதன் முன்பக்கக் கார்க் கதவைத் திறந்து விட்டான்.

''பின்னால் ஏறிக்..'' என்று சொல்ல வந்தவளால் மேலே பேச முடிந்திருக்கவில்லை.



உள்ளேயும், வெளியேயும் செல்ல வெகுதூரம் வரை வரிசையாகக் கார்கள் காத்திருப்பது தெரிய, அடுத்த வினாடி ஏறி அமர்ந்திருந்தாள்.

வாகன நெரிசலைக் கடந்து சீரான பாதையை அடைந்ததும் திரும்பி வாணியைப் பார்த்தான் ஹரிவரதன்.

''நாம ஃபர்ஸ்ட் டைம் சந்திச்சத நினைச்சுப் பாத்தியா வாணி?'' என்று கேட்டான்.

அவனுடைய கேள்வியில் தூக்கி வாரிப் போட்டவளாய்த் திரும்பியவள், அவனை அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

''அன்னைக்கு நைட்டெல்லாம் தூங்கினயா வாணி?''

அந்தக் கேள்வி இன்னும் அதிர்ச்சியளிப்பதாய் இருக்க விழித்தாள்.

''நீ வாயத் திறந்து பதில் சொல்ல வேண்டியதே இல்ல தெரியுமா?'' என்றவன் ''ஏன்னா உன் முகமே அகத்தக் காட்டிக் கொடுத்துடுதே'' என்று சிரித்தான்.

''உனக்கெப்பிடியோ, ஆனா நிம்மதியான தூக்கத்த அன்னையிலிருந்து நான் தொலைச்சுட்டேன் வாணி'' என்றான்.

''அன்னைக்கு மாதிரியே இன்னைக்கும் நீ எவ்வளவு அழகா இருக்க தெரியுமா?''

ஹரிவரதனின் வார்த்தைகளில் நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொண்டது வாணிக்கு.

தனக்குள் புகுந்து பார்த்ததைப் போல அனைத்தையும் அப்படியே சொல்கிறானே என்றிருந்தது.

அந்த வினாடியில் அவளுடைய கைகளை மடியில் வைத்தவாறு அமர்ந்திருந்த வாணியின் வலது கையைத் தனது இடது கையால் பற்றியிருந்தான் ஹரிவரதன்.

ஹரிவரதன் அப்படிச் செய்வானென்று எதிர்பார்த் திராத வாணி அவனுடைய ஸ்பரிசத்தில் சப்த நாடிகளும் ஸ்தம்பித்துப் போனாள்.

அவன் தொடும் இடத்திலிருந்து உடலெங்கும் அலையலையாக மின்சாரம் பாய, அவன் வசமிருக்கும் தனது கையை விடுவித்துக் கொள்ளக் கூடத் தோன்றாது அப்படியே சிலை போல அமர்ந்து விட்டிருந்தாள்.

ஏன் எதுவுமே தோன்றியிருக்கவில்லை.

உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒருவித இன்ப வேதனை இன்றி அனுஅனுவாய் வதைக்க, மறுக்கக் கூடத் தோன்றாமல் இப்படி அமர்ந்திருக்கிறோமே என்ற எண்ணம் மனதின் ஒரு மூலையில் தோன்றவே செய்தது.

ஆனால் அது மூளை வரை சென்று சேர்ந்தால் அல்லவா.

ஹரிவரதனின் பிடி இறுகுவது தெரிந்தது.

''ஏன் வாணி என்ன இப்பிடி வதைக்கற?'' என்ற வனின் வார்த்தைகள் எங்கோ கிணற்றுக்குள்ளிருந்து கேட்பதைப் போலிருந்தது.

தான் இத்தனை பலவீனமானவளா எத்தனை எத் தனையோ முறை தனக்குத் தானே கேட்டுக் கொண்ட விடை தெரியாத அந்தக் கேள்வி தான் அப்பொழுதும் மனதில் எழுந்தது வாணிக்கு.

கண்கள் குளமாகியிருந்தன.



தொடர்ந்து அந்தக் கண்ணீர் கன்னங்களின் வழியாக மடியில் தனது கையுடன் கோர்த்தவாறு இருந்த ஹரிவரதனின் கையிலும் விழுந்திருக்க வேண்டும்.

அந்த வினாடியில், ''ஸாரிமா'' என்று கையை எடுத்திருந்தான்.

ஆனால் கண்களால் பார்த்தால் ஒழிய அவன் கையை எடுத்துக் கொண்டது போலவே தெரியவில்லை. அந்த அளவிற்கு அவன் தொட்ட இடத்தில் குறுகுறுப்பு இருந்து கொண்டே இருப்பதை ஒருவித இன்ப வேதனை யாய் உணர்ந்தாள்.

எனக்கு பொய் சொல்லிப் பழக்கமில்ல வாணி ''என்ன எங்க நீ பைத்தியமாக்கிடுவியோன்னு கூட சில சமயங்கள்ல தோணிடுது.''

ஹரிவரதனின் வார்த்தைகள் காதில் விழவே செய் தாலும், அவளுடைய உடலும் மனமும் இன்னும் பழைய அதிர்ச்சியிலிருந்து மீண்டிருக்கவில்லை.

''வாணி...''

உதட்டைக் கடித்துத் தன்னை சமாளித்துக் கொண் டிருந்தவளைப் பார்த்ததில் மீண்டும் உயரத் தொடங்கி யிருந்த கையை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டான்.

தொடர்ந்து சிறிது நேரம் அமைதியில் கழிந்தது.

வாணி இன்னும் முழுமையாக நடப்பிற்கு வந்திருக்க வில்லையென்பதை ஹரிவரதனால் புரிந்து கொள்ள முடிந்தது.

தொடர்ந்து சில நிமிடங்களில் வாணி தங்கியிருக்கும் மகளிர் விடுதியை அடைந்து காரை நிறுத்தியிருந்தான்.

நிறுத்திவிட்டுத் தன்னைப் பார்த்தவனை சொல் லொணாத வேதனையுடன் பார்த்தாள் வாணி.

அதில் வேதனை, அழுகை, தவிப்பு என அனைத்துமே ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டுக் கொண்டிருந்தது தெரிந்தது.

''புரிஞ்சுக்க முயற்சி பண்ணு வாணி, நான் சொன்னது எல்லாமே நூத்துக்கு நூறு சதவிகிதம் நிஜம்'' என்றான்.

''வாணி...''

குரல் கரகரக்க எதையோ சொல்ல வந்தவன் பிறகு வேண்டாமென்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வது தெரிந்தது.

''சரி உள்ள போ, காலைல ஆறு மணிக்கு வந்துடு வேன் தயாரா இரு'' என்று விடை கொடுத்து விட்டுக் கிளம்பியிருந்தான்.

வருகிறேனென்று சொல்ல வாணியும் எவ்வளவோ முயன்றாள், ஆனால் வாயைக் கூடத் திறக்க முடிந்திருக்க வில்லை.

லேசாக, மிகவும் லேசாகத் தலையை மட்டும் ஆட்டி விட்டு உள்ளே சென்று மறைந்தாள்.

அதற்குப் பின்னரும் கூட சில நிமிடங்கள் நின்று பார்த்திருந்து விட்டே கிளம்பினான் ஹரிவரதன்.

எப்படியோ வந்து தன்னறையை அடைந்திருந்த வாணி சாவி போட்டுக் கதவைத் திறந்தாள்.

அறைக்குள் வந்ததும் மீண்டும் கதவைத் தாளிட்ட வளுக்கு அதற்கு மேல் கையைக் காலை அசைப்பது கூட முடியாது போலத் தோன்றியது.



முயன்று ஆடை ஆபரணங்களைக் களைத்தெறிந்து விட்டு இரவு உடைக்கு மாறியவள், அப்படியே படுக் கையில் விழுந்திருந்தாள்.

அவ்வளவுதான்.

அதற்கு மேல் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் கதறித் தீர்த்தாள்.

எது எதற்கோ சேர்த்து வைத்துக் கதறினாள்.

தன்னைப் படைத்த ஆண்டவனை நினைத்துக் கதறினாள்.

அழகாகப் படைத்து விட்டதற்காக

ஆதரவற்று நிற்க வைத்ததற்காக,

ஹரிவரதனை சந்திக்க நேர்ந்ததற்காக,

வெட்கமே இல்லாமல் அவனுடைய தொடுகையில் மயங்கி நின்றதற்காக.

அதை எதிர்த்து ஒருவிரலைக் கூட அசைக்கத் தோன்றியிருக்காத தனது மடத்தனத்திற்காக...

என இன்னும் எதற்கெல்லாமோ சேர்த்து வைத்துக் கதறித் தீர்த்தவள், கடைசியில் ஒரு வழியாகத் தூங்கியும் போனாள்.

வழக்கம்போல அதிகாலை நான்கு மணிக்கே விழிப்பு வந்து விட்டிருக்க, எழுந்து அமர்ந்தாள்.

இன்னும் தூக்கத்திற்காக ஏங்கிய மனதையும் கண் களையும் முயன்று நடப்பிற்குக் கொண்டு வர முயன்றாள்.

இரவு நடந்ததனைத்தும் நினைவிற்கு வந்ததில் தூக்கம் முழுமையாகக் கலைந்து விட்டிருக்க, படுக் கையை விட்டு இறங்கினாள்.

ஆறு மணிக்கு ஹரிவரதன் வந்து விடுவான்.

கட்டாயம் திருமணத்திற்குப் போய்த்தான் ஆக வேண்டுமா.

தன்னுடைய எண்ணமே முட்டாள்த்தனமாய் இருப்பதை உணர்ந்து மேலே எதையும் யோசிக்காமல் சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு குளித்துக் கிளம்புவதில் கவனத்தைச் செலுத்தினாள்.

சரியாக ஆறு மணிக்குத் தனது கைபேசி அழைக்க எடுத்துப் பார்த்தாள்.

ஹரிவரதன் தான்.

அழைப்பை அட்டெண்ட் செய்யாமலே அறையைப் பூட்டிவிட்டு கைப்பையுடன் வெளியே வந்தாள்.

இரவு நின்றிருந்த அதே இடத்தில் ஹரிவரதன் காருடன் நின்றிருக்கக் கண்டாள்.

அவனைப் பார்த்த அந்த வினாடியில் மீண்டும் இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத ஒருவித வேதனையுடன் மனம் தவிக்கத் தொடங்கி விட்டிருந்ததை ஒருவித வலியுடன் உணர்ந்தாள்.

மீண்டும் ஒன்றுடன் ஒன்று போட்டியிடத் தொடங்கியிருந்த எண்ணங்களுடன் போராடிக் களைத்தாள்.

தன்னைக் கண்டதும் அவன் முன்பக்கக் கார்க் கதவைத் திறந்து விட்டிருக்க, ஏறி அமர்ந்தாள்.

இரவு போலவே துளிகூடக் குறையாமல் ஆட்கொண்ட வேதனையில் மீண்டும் தவித்துப் போனாள். ''குட்மார்னிங் வாணி.''



ஹரிவரதனின் வார்த்தைகளில் முழுமையாக நடப்பிற்கு வந்தவளாய்த் திரும்பி அவனைப் பார்த்தவள். மெல்லிய குரலில் பதில் வணக்கம் சொன்னாள்.

இரவு அழுததன் அறிகுறிகள் தெரிந்தனவோ.

அப்படித்தான் இருக்க வேண்டும்.

தனது முகத்தைப் பார்த்து விட்டுப் ''பைத்தியம்...'' என்றிருந்தான்.

''எப்ப உன்ன ஃபர்ஸ்ட் டைம் பாத்தேனோ அப்பவோ ஃபிக்ஸ் பண்ணிட்டேன் வாணி, எவ்வளவு நாளானாலும் பரவாயில்ல உன் சம்மதத்துக்காகக் காத்திருக்கத் தயார்'' என்று எல்லையற்ற தவிப்புடன் சொன்னவன் பிறகு இயல்பான குரலில் ''சரிதான் தேவையில்லாததப் போட்டு மனசக் குழப்பிக்காம இப்ப ஃப்ரீயா இரு'' என்றான்.

ஸ்மிர்த்தியின் திருமணம் இனிதே நடந்தேறியது.

மண்டபத்திலிருந்து மணமக்கள் கிளம்பும் வரையிலும் தோழியுடன் கூடவே இருந்த வாணி தனது அன்பளிப்பைக் கொடுத்துவிட்டு அவர்களுடன் சேர்ந்து சில புகைப்படங்களை எடுத்துக் கொண்டு அதற்குப் பிறகே கிளம்பினாள்.



# 15

ஏற்கனவே முடிவு செய்யப்பட்டதுபோல திருமணம் முடிந்த கையோடு ஸ்மிர்த்தி கணவனுடன் ஆஸ்திரேலியா கிளம்பி விட்டிருக்க, தனக்கென இருந்த ஒரு

ஜீவனும் பிரிக்கப்பட்டு விட்டது போல மிகவும் தவித்துப் போனாள் வாணி.

ஆனாலும் இடைவிடாத வேலைகள் அவளை எதையும் எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டிருக்க வழியில்லாமல் செய்திருந்தன.

தொடர்ந்து பதினைந்து நாட்கள் ஹரிவரதனும் புது பிராஜெக்ட் சம்பந்தமாக வெளிநாடு கிளம்பிச் சென்று விட்டிருக்க, அப்பொழுது தான் வாணிக்கு அவனுடைய அருமை முழுமையாகப் புரிந்ததெனலாம்.

அவசியத்திற்கு மேல் பேசா விட்டாலும் அவனருகில் இருக்க நேர்ந்ததே எந்த அளவிற்கு நிம்மதியையும் பாதுகாப்பையும் கொடுத்திருந்தன என்பதையும்,

தேவையற்ற மனப் போராட்டத்திலிருந்து தப்பிக்க வேண்டி தன்னை முழு அளவில் வேலையில் ஈடுபடுத்திக் கொண்ட வாணி ஓரளவு அதில் வெற்றியும் கண்டாள்.

காலை எட்டரைக்கெல்லாம் அலுவலகம் வந்து விடுபவள் மாலை தாண்டி இரவு எட்டு மணி வரை கூட வேலை செய்தாள்.

ஹரிவரதனின் வேலைகளோடு புது ஆடர்களும் சேர்ந்து அவ்வளவு நேரம் வேலை செய்ய நேர்ந்தது.

இடையில் சிலமுறை பெரிய எம்.டி. கமலநாதன் வந்து விட்டுப் போனதற்குப் பிறகு அன்றன்றைய வேலை விவரங்களை ஹரிவரதனோடு அவருக்கும் சொல்லப் பழகிக் கொண்டாள்.

அதை அவர் எதிர்பார்த்ததும் ஒரு காரணம்.



எம்.டி. ஹரிவரதன் இருந்தால் எதையெதை செய்வானோ கிட்டத்தட்ட அவையனைத்தையுமே அதே அளவு ஏன் அதை விடக் கூடச் சிறப்பாகச் செய்யப் பழகிக் கொண்டு விட்டிருந்தாள்.

காலையில் அலுவலகம் வந்தால் உடனே வீட்டிற்குக் கிளம்பும் நேரம் வந்து விடுகிறதே என்று எண்ணுமளவிற்கு இடைவிடாத வேலைகளுக்கிடையில் நாட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன.

இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை இந்த ஹரிவரதன் யாரென்று கூடத் தெரியாது.

ஆனால் இப்பொழுது.

அவனில்லாத, அவனைத் தவிர்த்த தனது எதிர்காலத்தை வாணியால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை.

ஆம்.

ஹரிவரதனைத் தானும் விரும்பத் தொடங்கியிருந்தாள் வாணி.

இவ்வளவுதானென்று சொல்லிவிட முடியாத அளவிற்கு உயிருடன் கலந்து விட்டிருந்தான்.

நினைக்காமல் இருந்து விட்டால் கூட இனி எப்படியோ,

ஆனால் நினைக்கக் கூடாதென்று முயன்றபோது இன்னும் பலப்பல மடங்கு உள்ளமெங்கும் வியாபித்துப் போனான்.

அன்று ஹரிவரதன் இந்தியா திரும்பும் நாள்.

நினைக்கவே மனம் துள்ளியது.

நிலை கொள்ளாமல் தவித்தாள்.

இருக்கின்ற நிலையை வைத்துப் பார்த்தால் எங்கே அவனைப் பார்த்ததுமே தன்னைக் காட்டிக் கொடுத்து விடுவோமோ என்று பயந்து போனாள்.

என்னதான் ஹரிவரதனுடன் தினமும் போனில் பேசியிருந்தாலும் வேலை நேரத்தில் வேலையைப் பற்றி மட்டுமே பேசுவதில் எந்தவித சிரமமும் இருக்கவில்லை.

ஆனால் நேரில்...

அதுநாள் வரை அனுபவித்தறியாத வண்ணம் மனதால் தவித்துப் போனாள் என்று தான் சொல்ல வேண்டும்.

ஒரேயடியாகத் தவிக்க விட்டு விடாமல் ஒரு வழியாக வந்து சேர்ந்தான் ஹரிவரதன்.

அவன் மட்டும் தனியாக வந்திருக்கவில்லை.

வெளிநாட்டுக்காரர்கள் போலிருந்த மூவரை உடனழைத்து வந்திருந்தான்.

கூடவே பெரிய எம்.டி. கமலநாதனும் வந்திருந்தார் தன்னை ஹரிவரதன் பார்த்தானோ,

அந்தப் பார்வையில் ஏதும் வித்யாசம் இருந்ததோ

மனம் கிடந்து அடித்துக் கொண்டது.

ஆனாலும் ஹரிவரதனைப் பார்த்ததே போதும் என்னுமளவிற்கு வாணியின் மனம் அமைதியடைந்திருந்தது.

மணி இரவு ஒன்பதாகியிருக்க வெளிநாட்டுக்காரர்களைத் தந்தையுடன் அனுப்பி வைத்திருந்தான் ஹரிவரதன்.



அனுப்பிவிட்டுத் திரும்பியவன், ''நாமளும் கிளம்பலாமா வாணி?'' என்றான்.

ஏனோ அவனிடம் முன்பு போல இயல்பாகப் பேச முடியுமென்று தோன்றவில்லை.

இப்போதைய தன் நிலை மட்டும் அவனுக்குத் தெரிந்தால்,

அதற்குள் அருகில் வந்திருந்த ஹரிவரதன், முன் பக்கக் கார்க் கதவைத் திறந்து விட்டிருந்தான்.

உடனே காரில் ஏறி அமர்ந்து கதவை மூடிய வாணி, அவனுடைய பார்வையை எதிர்கொண்டாள்.

அந்தப் பார்வையில் என்ன இருந்தது, தவிப்பு...

தவிப்பு என்று சொல்வதை விட எதிர்பார்ப்பு என்று சொல்வது சரியாக இருக்கும்.

அவன் என்ன எதிர்பார்க்கிறான் என்பது புரிந்தது.

தொடர்ந்து சில நிமிடங்களில் ஒரு பெரிய ஹோட்டலை அடைந்திருந்தவன், அதன் பார்க்கிங்கில் காரைப் பார்க் செய்தான்.

''இறங்கி வா, சாப்டுட்டுப் போலாம்.''

மறுக்கத் தோன்றாமல் உடனே இறங்கியிருந்தவள், அவனுடன் நடந்தாள்.

உணவு ஆடர் கொடுத்து விட்டுத் தன்னை நோக்கித் திரும்பியவனைத் தானும் பார்த்தாள் வாணி.

''இந்தப் பதினஞ்சு நாள்ல வேல விஷயமா இல்லாம என்ன ஒரு தடவையாவது நினைச்சுப் பாத்தியா வாணி?''

...............

''உன்னத்தான்...''

''போன வேல நல்லபடியா முடிஞ்சதா?''

''ஆனா நான் உன்ன மறக்கவே இல்ல தெரியுமா, ஏன் உன்ன மட்டுமே தான் நினைச்சுட்டிருந்தேன்'' என்றவன் ''என்ன கேட்ட, உன்ன மாதிரி ரொம்ப ஸின்ஷியரா வேலைய மட்டுமே பாக்கறவங்க இருக்கும்போது அது ஏன் நடக்காமப் போகப் போகுது'' என்றான்.

''என் கேள்விக்கு இன்னும் நீ பதில் சொல்லல வாணி...''

''ப்ளீஸ் ஸார்.''

''ஸார்னு சொல்லாத அறைஞ்சுடுவேன்.''

கோபத்தில் பட்டென்று சொன்னவனைப் பார்த்து சிரித்து விட்டிருந்தாள் வாணி.

''பின்ன, என்னன்னு கூப்புட்றது?''

''பேர் சொல்லிக் கூப்புடு...''

''ம்கூம், அது கஷ்டம்.''

''எப்பிடியோ கூப்புட்டுத் தொல, ஆனா இன்னொரு தடவ ஸார்னு சொன்னாத் தாங்க மாட்ட சொல்லிட்டேன்.''

''என்ன செய்வீங்க?''

''கூப்புட்டுப் பாரு.''

முதலில் ஆடர் செய்த உணவு வர, உண்ணத் தொடங்கினர். ''உனக்கு மனசாட்சியே இல்லையா அழகான ராட்சஸி, ஒரு வார்த்த சிரிச்சுப் பேசக் கூடாதா?''



ஹரிவரதனின் வார்த்தைகளில் இப்பொழுது அடக்க மாட்டாமல் சிரிக்கத் தொடங்கி விட்டிருந்தாள் வாணி.

வாணியின் சிரிப்பைத் தன்னை மறந்து சில வினாடிகள் பார்த்திருந்த ஹரிவரதன், பிறகு எரிச்சலுடன் உண்பதைத் தொடர்ந்தான்.

''இப்படியே பேசிட்டுப் போனீங்கன்னா ஸார்னு கூப்புட்ற அவசியம் ஏன் பேர் சொல்லிக் கூப்புட்ற அவசியம் கூட வராது...''

''பின்ன?''

''வாடா போடான்னு கூப்புட்டாலும் ஆச்சரி...''

''வாணி...''

கரகரத்து விட்டிருந்த ஹரிவரதனின் குரலில் சில வினாடிகள் தன்னிலை மறந்தவள் உடனே ''ஸ்மிர்த்தி போன் பண்ணியிருந்தா உங்களக் கேட்டதா சொல்லச் சொன்னா'' என்றாள்.

''அவள சொல்லணும் முதல்ல...''

''என்ன பாக்கற? இருபத்தொன்பது வருஷம் எவ்வளவு நிம்மதியா இருந்தேன், அவ மட்டும் உன்னக் கண்ல காட்டாம இருந்திருந்தா எந்நேரமும் கொல்ற இந்தத் தவிப்பு, வேதனையெல்லாம் இல்லாமலே போயிருக்குமே.''

இரண்டாவதாக ஆடர் செய்த உணவும் வர தான் பாதியை வைத்துக் கொண்டு மீதியை வாணியிடம் தள்ளினான்.

''என்ன அளந்துட்டிருக்க, சாப்புடு.''

''எனக்குப் போதும்'' என்றவள் தனக்காக அவன் வைத்ததை எடுத்து அவனுக்கே பரிமாறப் போனாள்.

ஆனால் அதற்குள் தடுத்திருந்த ஹரிவரதன் ''எனக்கு சாப்பிடத் தெரியும். நீ உன் வேலையப் பாரு'' என்று எரிச்சலுடன் மொழிந்து விட்டு மீண்டும் உண்பதில் முனைந்தான்.

தொடர்ந்து சில நிமிடங்களில் உணவு முடிந்து காருக்கு வந்திருந்தனர்.

''நான் கேக்கற கேள்விகளுக்கு பதில் சொல்ல லேன்னா, கார எடுக்கப் போறதில்ல...''

''சந்தோஷம். ஏ.ஸி.ய கொஞ்சம் குறைச்சு வெச்சுடுங்க. சுகமாத் தூக்கம் வருது...''

''உன்ன...'' என்றவன் அடுத்த வினாடி காரை ஸ்டார்ட் செய்திருந்தான்.

முதன் முறையாக ஹரிவரதனின் கோபத்தை எதிர் கொள்ள நேர்ந்த வாணிக்கு உள்ளுக்குள் என்னவோ செய்தது.

காரை ஓட்டி வந்தவன் சுத்தமாக ஆள் நடமாட்டமே இல்லாத இடத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்க, புரியாமல் பார்த்தாள் வாணி.

''என்ன பாக்கற, கொஞ்சம் முன்னாடி நான் சும்மா சொன்னேன்னு நினைச்சுட்டியா?''

''என்ன விளையாட்றீங்களா?''

''உன்ன விளையாடாதன்னு சொல்றேன்.''

''எனக்கு ஒண்ணும் உங்ககிட்ட விளையாடணும்னு அவசியமில்ல.''



''உண்மைய சொல்லு வாணி, என்னப் பாத்த நாள்ல இருந்து உம் மனசுல கொஞ்சங் கூட சலனமில்லையா....''

''இருக்குன்னு தெரியும்மா, அத உன் வாயால சொல்லக் கேக்க ஆசப்பட்றேன்.''

''முதல்ல கார எடுங்க.''

''முடியாது, முதல்ல பதில் சொல்லு.''

''என்னாலயும் முடியாது.''

''வேண்டாம் வாணி என்னக் கோபப்படுத்தறது உனக்கு நல்லதில்ல...''

''என்ன செய்வீங்க?''

''காட்றேன்'' என்று அடுத்த வினாடி வாணியை அருகில் இழுத்து அணைத்திருந்தவன் அவளுடைய இதழ்களைத் தனது இதழ்களால் மூடியிருந்தான்.

அப்படிச் செய்தவனை வெறி கொண்டவள் போலப் பிடித்துத் தள்ளப் போனாள் வாணி.

ஆனால் ஒரு முழு ஆண் மகனான ஹரிவரதனின் பிடியில் வாணியின் முயற்சிகளெல்லாம் பத்தில் ஒரு பங்காகக் கூட எடுபட்டிருக்கவில்லை.

அவனுடைய பிடியில் ஒரு சிறு எதிர்ப்பு கூட இல் லாமல் பச்சை மண்ணாகிப் போனாள்.

அப்படியே எவ்வளவு நேரம் சென்றதோ...

''வாணி...'' என்று ஹரிவரதனின் அணைப்பு இறு கியபோது முதலில் நடப்பிற்கு வந்திருந்தாள் வாணி.

அப்படி வந்திருந்தவள் தன்னுடைய முழு பலத்தை பிரயோகித்து ஹரிவரதனைப் பிடித்துத் தள்ளியும் இருந்தாள்.

அந்த நேரத்தில் அதைச் சற்றும் எதிர்பார்த்திருக் காதவனிடமிருந்து வெகு சுலபமாகத் தன்னை விடு வித்துக் கொண்டிருந்தாள்.

பெரிய பெரிய மூச்சுகளை எடுத்துத் தன்னை சமனப் படுத்திக் கொள்ள முயன்று கொண்டே ''என்ன முட் டாள்னு நினைச்சுட்டிங்களா?'' என்று கேட்டாள்.

''யாரு நீயா? நீ மத்தவங்கள முட்டாளாக்காம இருந்தாப் போதாது?''

''கோபத்துல பேசறதெல்லாம் உண்மையாக முடி யாது.''

''எப்படிப் பேசினாலும் நான் இல்லாததப் பேச மாட் டேன்.''

''சமாளிக்காதீங்க...''

''உண்மைய மனசாட்சியத் தொட்டு சொல்லு உனக்கு என்னப் பிடிக்கல? உம் மனசுக்குள்ள நான் இல்ல?''

.............

''ஏன் இப்படி வதைக்கற? என்னப் புரிஞ்சுக்க முடிய லையாடா, உனக்குப் பொய் சொல்ல வரலமா உண் மைய ஒத்துக்கோ...''

தவிப்பும் வேதனையும் கலந்து வந்த ஹரிவரதனின் வார்த்தைகள் நெஞ்சைக் கசக்கிப் பிழிவதைப் போலி ருக்க, அதுவரை எப்படியோ சமாளித்தவளால் அதற்கு மேல் முடிந்திருக்கவில்லை.

கைகளால் முகத்தை மூடிக் கொண்டு அழுது விட் டிருந்தாள்.



அப்படி உடைந்து போவாளென்று எதிர்பார்த்திருக் காத ஹரிவரதனும் அந்த வினாடியில் செய்வதறியாது திகைத்து விட்டிருந்தான்.

''வாணி...''

''வேண்டாம்மா இங்க பாரு...''

என்று அவளை நடப்பிற்கு கொண்டு வர தன்னால் இயன்றதைச் செய்தான்.

''வேண்டாம்மா, இனி நான் உன்னத் தொந்தரவு பண்ணவே மாட்டேன்'' என்றவனின் வார்த்தைகளில் இப்பொழுது விரக்தியைத் தவிர வேறு எதுவுமே இருக்கவில்லை.

ஆனால் அதையெல்லாம் உணரும் மனநிலையில் அப்பொழுது வாணி இருக்கவில்லை.

தொடர்ந்து சில வினாடிகளில் அழுகை குறைந்து நடப்பிற்கு வந்திருந்தவள் ''ஹரி...'' என்றாள்.

''சொல்லு...''

''எனக்கு உங்கள ரொம்பப் பிடிக்கும் ஹரி. ஃபர்ஸ்ட் டைம் உங்களப் பாக்க நேர்ந்ததிலிருந்து இன்னைக்கு வரைக்கும் நானும் தவிச்சுட்டு தான் இருக்கேன். ஏன் என் உயிரோட என் உடம்புல இருக்கற ஒவ்வொரு அணுவுலயும் கலந்துட்...''

''வாணி...''

எல்லையற்ற காதலில் எங்கே வலித்து விடுமோ என்னுமளவிற்கு மென்மையாகத் தனது முகவாயைத் தொட்டு நிமிர்த்தியிருந்த ஹரிவரதனின் பார்வையை நேருக்கு நேர் எதிர்கொண்டாள்.

''ஆமான்டா...'' என்றவளை அதற்கு மேல் ஹரிவரதன் பேச விட்டிருக்கவில்லை.

எல்லையற்ற காதலில் தன்னிலை மறந்தவனாய் வாணியைத் தன் மார்போடு மென்மையாக அணைத்துக் கொண்டான்.

இதே நிலை இப்படியே தொடராதா என்று வாணியின் மனமும் மெல்ல மெல்ல அமைதியடைந்தது.

ஆனால் சில வினாடிகளில் ஹரிவரதனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட வாணி ''கிளம்பலாமா?'' என்று கேட்டாள்.

''என்னடா அவசரம்?''

''ம் நேரம் பாருங்க பத்துக்கு மேலாச்சு...''

''ஏன் உள்ள விட மாட்டாங்களா?''

''பின்ன?''

''நல்லதாப் போயிடுச்சு. இனிமேல் நீ தனியா இருக்காத எங்கூடவே வந்துடு.''

''ஓ, அப்புறம்?''

''நிஜமாதான் சொல்றேம்மா. இனி உன்னப் பிரிஞ்சு ரொம்ப நாள் இருக்க முடியும்னு தோணல. உடனே ஆக வேண்டிய வேலையப் பாக்க வேண்டியது தான்.''

''புரியல.''

''சும்மா பொய் சொல்லாத அது என்னன்னு என் வாயால சொல்லிக் கேக்க அசையா?''

''நிஜமாவே அப்படி ஒண்ணு இருந்தா, சொல்லுங்களேன் பாக்கலாம்.''



''நம்ம கல்யாணம் தான், அது முடிஞ்சதும்.''

ஆசையுடன் தொடர்ந்தவனை வாணியின் ''கல்யாணமா?'' என்னும் கேள்வி நடப்பிற்கு அழைத்து வந்திருந்தது.

''ஆமாம், கல்யாணம் தான் என்ன நீ சின்னப் பொண்ணு மாதிரி அப்பிடின்னா என்னன்னு கேட்ப போலிருக்கு. சரிதான் ஐயா எல்லாம் சொல்லித் தர்றேன், எத்தன தடவ வேணும்னாலும் கோபமே படாம இனிக்க இனிக்க சொல்லித் தருவேனாக்கும்...''

''என்னடா பாக்கற, இவனுக்கு அதெல்லாம் என்ன தெரியும்னா வேணும்னா இப்பவே...''

''போதும் ஹரி.''

''என்ன போதும்...''

''இனிமேல் இப்படியெல்லாம் பேசாதீங்க...''

''ஓ செயல்ல தான் காட்டணுங்கறியா? சரிதான் கல்யாணத்துக்கப்புறம்...''

''என்ன திரும்பவும் விளையாட்றீங்களா?''

வாணியின் கேள்வியில் இப்பொழுது ஆச்சரியம் ஹரிவரதனுடையதாயிற்று.

''என்ன வாணி?''

''எனக்கு...''

''ம்.''

''எனக்குக் கல்யாணமெல்லாம் வேண்டாம்.''

''ஏன்?''

''ஏன்னு கேட்டா என்ன சொல்றது, வேண்டாம் அவ்வளவுதான்.''

''ஜோக்கடிக்கிறியா வாணி?''

''நான் ஸீரியஸா தான் பேசிட்டிருக்கேன்.''

''ஏன் வேண்டாம்?''

''அது...''

''ம், சொல்லு.''

''ப்ளீஸ் ஹரி, என்னப் புரிஞ்சுக்கோங்க. எனக்கு...''

வாணியின் தயக்கம் புரிய, இப்பொழுது நன்றாகவே சிரித்து விட்டிருந்தான் ஹரிவரதன்.

அவ்வளவாக சொந்தங்களென்று யாருமில்லாமல் வளர்ந்தவள், எதையெதையோ உப்புப் பெறாத விஷயங்களை எண்ணி அஞ்சுகிறாள் என்பது புரிந்தது.

சரிதான், ஏற்கனவே பாவம் எவ்வளவோ வதைத்தாயிற்று. இன்றைக்கு அது போதுமென்று காரை ஸ்டார்ட் செய்திருந்தான்.

சரிதான் உன்னை நானும் விரும்புகிறேனென்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் கூட இனி எப்படி எடுத்துக் கொண்டிருப்பானோ,

ஆனால் வாணி அவளுடைய மனதை முழுமையாகத் திறந்து காட்டி விட்டதில், வானத்திலேயே மிதந்தான் எனலாம்.

தான் மனதார நேசிக்கும் பெண் தன்னை அதை விடப் பல மடங்கு நேசித்தால்,

அதை இப்பொழுது அணு அணுவாக உணர்ந்து அனுபவித்துக் கொண்டிருந்தான் ஹரிவரதன்.





# 16

சில வாரங்களுக்குப் பிறகு அன்று காலையில் வேலைக்கு வந்த போதே அவருடைய இருக்கையில் இருந்த எம்.டி.யை புன்னகையுடன் பார்த்தவள் காலை வணக்கம் சொன்னாள்.

''குட்மார்னிங் ஸார்.''

''உத கேட்குதா?''

''குட்மார்னிங்டா.''

''ம், இது கரெக்ட்.''

''இப்படியே சொல்லிட்டிருங்க ஒரு நாளைக்கு நாலு பேர் இருக்கும் போது மறந்து வாடா போடாங்கப் போறேன்...''

''எனக்கென்னவோ நீ வேணும்னே செய்வியோன்னு தான் சந்தேகம்.''

''வேணும்னேவோ எப்படியோ பத்து பேருக்கு முன்னாடி அப்படிக் கூப்டுட்டா என்ன பண்ணுவீங்க?''

''சமாளிக்க வேண்டியது தான்.''

''புரியல?''

''நாங்க ரெண்டு பேரும் உயிருக்குயிரா விரும்பறோம். எங்களுக்குள்ள இது என்ன இன்னும் லவ் மூட்ல...!''

"சீ..."

"என்ன சீ...?"

"இப்படியெல்லாமா பேசுவாங்க?"

"லவர்ஸ்க்குள்ள பேசறதுக்கு வரைமுறை இருக்கா வாணி?"

"நான் ஒன்னும் நம்மளுக்குள்ள பேசிக்கறத சொல்லலியே, பத்து பேருக்கு முன்னாடி அப்படி சொல்வேன்னு சொல்றீங்களே அதத்தான் தப்புன்னு சொல்றேன்."

"சரிதான், ஆனா நிலைமைய சமாளிச்சாகணுமே. பாத்ததுமே பயந்து மரியாத குடுக்கற எம்.டி.ய சீப்பா நினைச்சுடக் கூடாதில்ல..."

"என்ன, கண்மண் தெரியாத அளவுக்குக் காதலிக்கிறாங்க. அதுல தலகால் புரியமா ஆடறாங்கன்னு நினைச்சுக்குவாங்க."

"சரிதான், உங்களுக்கு என்னவோ ஆயிடுச்சு."

"புரிஞ்சுக்கிட்டா சரி..."

"அதுக்காக உளறலாமா எம்.டி.ஸார்?"

"வாணி"

"ம்"

"நானொரு மூனு மாசம் அது கூடக் குறைஞ்சபட்சம் தான் வெளிநாடு போய் தங்க வேண்டியதிருக்கும்."

"அட அப்படியா, எப்பக் கிளம்பணும்?"

மிகவும் வேதனைப்படுவாள், ஏன் அழக்கூட செய்வாள் எப்படியாவது இருக்கிற நிலையை எடுத்துச் சொல்லி சமாளித்தாக வேண்டுமென்று எண்ணியிருந்த



வனுக்கு, வாணியின் குரலில் தெரிந்த துள்ளல் மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்திருந்தது.

மனம் கசந்து விட்டிருக்க, அதற்கு மேல் எதுவும் பேசாமல் வேலையில் கவனம் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தான்.

மதியம் வரை கூட அதே நிலை தொடர, சந்தேகமாய் பார்த்தாள் வாணி.

"ஹலோ ஸார் என்னாச்சு?"

.........

"உங்களதான்..."

"என்ன திடீர்னு கோபம்?"

"பேசமாட்டீங்களா ஹரி..."

அதற்குள் ஹரிவரதனுக்கு மிக அருகில் வந்திருந்த வாணி அவனுடைய முகத்தைத் தனது கைகளில் ஏந்தியிருந்தாள்.

"என்னப்பா கோபமா?"

"தாங்க முடியலமா...."

"ஏன்... என்னாச்சு?"

"உன்னப் பிரிஞ்சு மூனு மாசம் இருக்க வேண்டியது வருமேன்னு நினைச்சதுல நைட்டெல்லாம் சுத்தமாத் தூக்கமில்ல. ஆனா உனக்கு கொஞ்சங் கூடக் கஷ்டமாத் தெரியல இல்ல?"

"வேணும்னா நானும் உங்க கூட சேந்து உம்முன்னு இருக்கவா?"

.......

''இல்லன்னா கொஞ்சம் அழட்டுமா?''

''சொல்லுங்க நான் என்ன செஞ்சா எனக்கும் ஃபீலிங்ஸ் இருக்கறதப் புரிஞ்சுக்குவீங்க?''

''செல்லிடுவேன்.''

''சொல்லுங்க.''

''அப்பக் கிளம்பு.''

''எங்க?''

''கேள்வி கேக்காம வா போற வழில சொல்றேன்.''

''ம்கூம், இங்கயே சொல்லுங்க.''

''உன் அத்தெ மாமாவப் பார்த்துட்டு வரலாம்.''

''எதுக்கு?''

''எதுக்குன்னா இவ்வளவு அழகான பொண்ண வளத்துக் குடுத்திருக்காங்களே...''

''விஷயத்துக்கு வாங்க.''

''நம்ம கல்யாண விஷயம் பேசறதுக்கு.''

அப்படிச் சொன்ன தன்னை இரவு போல பயத்துடன் பார்த்தவளை உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் பார்த்தான் ஹரிவரதன்.

''என்ன?''

''இப்ப எதுக்கு நமக்குக் கல்யாணம்?''

''இப்ப வேண்டாம், அப்புறமா பண்ணிக்கலாம்...''

''விளையாடாதீங்க.''

''யாரு விளையாடறாங்க?''

''கல்யாணமெல்லாம் வேண்டாம்.''



''ஏன்?''

''வேண்டானா வேண்டாம் அவ்வளவுதான்.''

''வாணி''

ஹரிவரதனின் கோபம் தன் நெஞ்சைக் கசக்கிப் பிழிவதைப் போலிருக்க, செய்வதறியாது விழித்தாள்.

''நீ உம்மனசுல என்னதான் நினைச்சுட்டிருக்க.''

''உங்களத்தான் ஹரி.''

''அப்படியே நம்ப முடிஞ்சா எவ்வளவோ நல்லாக்கும்.''

''என்ன சந்தேகப்படறீங்களா ஹரி?''

''அசிங்கமாப் பேசாத, சொல்லு கல்யாணத்துல உனக்கென்ன பயம்?''

''எனக்கு அதெல்...''

''சொல்லு வாணி... பேசு.''

''கல்யாணம் பிடிக்கல.''

''அது தெரியுது, என்ன காரணம்னு சொல்லு?''

..........

''உன்னத்தான் வாணி.''

''தெரியல.''

''சொல்லாம விட மாட்டேன் சொல்லு.''

''இன்னொரு அனாதை உருவாகறத என்னால அனுமதிக்க முடியாது.''

''வாட்?''

........

''என்ன உளறல் இது?''

''நான் ஒன்னும் உளறல.''

''என்னமா, ஏன் இப்படியெல்லாம பேசற?''

''பின்ன, என்னைப்பத்தி என்ன தெரியும் உங்களுக்கு?''

''எப்படி என்னக் கல்யாணம் பண்ணிக்க முடிவு பண்ணினீங்க?''

வாணியின் கேள்வியில், ''நீ என்ன பைத்தியமா?'' என்றான்.

''பேசு... பேசித் தொல.''

''வேண்டாம் ஹரி. நாளைக்குப் பேசிக்கலாம்.''

''வாணி''

சற்று முன் போல இப்பொழுதும் ஹரிவரதனின் கோபம் தன்னை என்னவோ செய்ய, வேதனையுடன் பார்த்தாள்.

''இல்ல ஹரி பைத்தியமெல்லாம் இல்ல, அப்படிக் கூட எனக்கு விடுதல கிடைக்காமப் போயிடுச்சு...''

''அளவுக்கதிமான வேதனைய அனுபவிச்சவ, பிறந்ததுமே அம்மா செத்துட்டாங்க.''

''பத்து வயசு வரைக்கும் அப்பா வளர்ப்பு, ஏதோ போனாப் போகுதுன்னு அவரு வீட்டு நாயப் பாத்துக்கற மாதிரி பசிச்சா சாப்பாட்டத் தூக்கிப் போடுவாரு. ஏதாவது உடம்பு சரியில்லாம காய்ச்சல் சளின்னு வந்துட்டாக் கூட இன்னும் செத்துத் தொலையலயா நீங்கற மாதிரி பார்ப்பார். அவருக்கு பயந்து பயந்து மறைச்சு வேலைக் காரி மருந்தும் சாப்பாடும் கொண்டு வந்து தருவா...''



''அவ்வளவு கேவலத்த அனுபவிச்சேன்னு அப்ப எனக்குத் தெரியல, அந்தளவு விவரம் இருந்திருந்தா அப்பவே சாப்பிடாம பட்டினியிருந்து செத்துப் போயிருப் பேன்.''

அந்த வேதனையை இப்பொழுது அனுபவிப்பது போலத் துடித்தவளை ''வாணி வேண்டாம்மா இங்க பாரு...'' என்றான்.

ஆனால் அதைக் கண்டும் காணாதது போல ''அதுக் கப்புறம்... அந்த வேதனைகள் பத்தாதுன்னு அடுத்ததா அத்தெ மாமாகிட்ட வந்தேன். அப்பா இறந்து ஒன்னும் புரியாம போக்கிடம் இல்லாம நின்னப்ப வந்து அவங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போனாங்க.''

''அப்பா கூடப் பரவாயில்ல அவர் பார்வைல எப்ப வுமே வெறுப்பும் கோபமும் மட்டும் தான் இருக்கும். ஆனா அத்தெ வீட்ல இரும்புக் கம்பிலயே அடி வாங்குவேன். அத்தைக்குக் கோபம் வர்றப்பவெல்லாம் அவங்க கை வலிக்கற மட்டும் கைல இருக்கறதுல விளாசிடுவாங்க. ஒரு நாள் ரெண்டு நாள் இல்ல, வருஷக் கணக்குல.''

''அடி கூடப் பரவாயில்ல, சரி நமக்கே தெரியாம ஏதா வது தப்புப் பண்ணியிருப்போம்னு எல்லா அடிகளையும் வாங்கிக்குவேன். வலி தாங்க முடியாம அழக் கூடக் கூடாது, அப்படி அழறது தெரிஞ்சா திரும்பவும் விளாசத் தொடங்கிடுவாங்க.''

''நான் சும்மா இருந்த நேரத்த விட அழுது மனசு வெம்பின நேரம் தான் அதிகம்.''

''வாணி...''

''அது கூடப் பரவாயில்ல. அத்தெ பேசற வார்த்தைகள் எங்க போன, எவனப் பாத்தெ, யார் கூடப் படுத்....''

''வாணி''

''ஆமாம், அந்த மாதிரி நூத்துக் கணக்கான தடவ கேட்டிருக்காங்க. இன்னும் பச்சையா...''

''உடம்பும் மனசும் கூனிக் குறுகிப் போயிடும்.''

''நான் அப்படிப்பட்ட பொண்ணு இல்ல ஹரி, ஏன் உங்களுக்குக் கூடத் தெரியுமே நீங்க எவ்வளவோ எதிர்பாத்தப்பக் கூட நான் அப்படி நடந்துக்கிட்டேனா, முடியாது ஹரி என்னால முடியாது.''

''சின்ன வயசுலிருந்தே வந்த வெறுப்பு.''

''எல்லாத்து மேலயுமே.''

''என்னால சராசரி பொண்ணா இருக்க முடியுமான்னு தெரியல...''

''ஆனாலும் இவ்வளவு நடந்ததுக்கப்புறமும் கூட இன்னும் உணர்ச்சிகள் செத்துப் போகாம அப்படியே இருக்கு ஹரி.''

''உங்களப் பார்த்ததுமே எம் மனசத் தொலைச்சுட்டேன் ஹரி.''

''நீங்க தொட்டதும் சிலிர்த்தேன்.''

''இன்னும் கிடைக்காதான்னு எவ்வளவு ஏங்கினேன் தெரியுமா.''

''ஆனா நல்லா யோசிச்சுப் பாத்தப்ப தான் இந்த அன்புக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஆயுள் இல்லைங்கறது புரிஞ்சது.''



''என் காதல எனக்குள்ளயே புதையலா மறைச்சு வெச்சுப் பாதுகாக்கணும்னு நினைச்சேன்.''

''உங்களுக்கு தெரிஞ்சுடவே கூடாது.''

''உங்ககிட்ட சொல்லவே கூடாதுன்னு எவ்வளவோ முயற்சி செஞ்சேன்.''

''போராடினேன்.''

''ஆனா கடைசில நீங்க ஜெயிச்சுட்டீங்க ஹரி.''

''நானும் ஒரு சராசரி பொண்ணு தான் இல்லையா, உங்க ஆண்மை, கம்பீரம் இதெல்லாம் என்ன ஆட்டம் காண வெச்சுடுச்சு.''

''அந்த நேரத்துல உண்மையை உளறிட்டேன்.''

''வேண்டாம் ஹரி, உங்கள மாதிரி ஒரு பிரமாதமான ஆண் மகனுக்கு நான் எந்த விதத்துலயுமே பொருத்த மில்ல.''

''எனக்கு நிறைய தாழ்வு மனப்பான்மை இருக்கு.''

''வாழ்க்கைல நான் பட்ட அடிகள என்னால இந்த ஜென்மத்துல மறக்க முடியுமான்னு தெரியல.''

''நான் சொன்னதெல்லாம் கொஞ்சம் தான் ஹரி.''

''இன்னும் சொல்ல முடியாதது எத்தனையோ எம் மனசுக்குள்ள இருக்கு.''

''வைரத்துக்கு வைரம் தான் பொருத்தம், கண்ணாடி யில்ல.''

''இன்னும் எப்படிச் சொல்லி உங்களுக்குப் புரிய வைக் கறதுன்னு தெரியல, உங்களுக்கு எங்கூடக் கல்யாணம் வேண்டாம் ஹரி.''

''வேற யாரையாவது...''

வாணி முடித்துக் கூட இருக்கவில்லை, ''போதும் இதுக்கு மேல ஒரு வார்த்த பேசினாத் தாங்க மாட்ட...'' என்று கோபத்தில் அலறிவிட்டிருந்தான் ஹரிவரதன்.

.........

''எல்லாம் பேசிட்டியா?''

''ஹரி...''

''உன்னத்தான் எல்லாம் பேசிட்டயா?''

''நான் கத சொல்லல ஹரி, வாழ்க்கைல நான் பட்ட வேதனைகள சொன்னேன்...''

''எப்பெப்பவோ நடந்ததையெல்லாம் மறக்கவே கூடாதுன்னு உறுதிமொழி எடுத்திருக்கியா நீ?''

''ஹரி...''

''நீ சொல்லாமலே எனக்கும் ஓரளவுக்கு தெரியுன்டா.''

''ஸ்மிர்த்தி!''

''ஆமா, அப்பவே உம்மேல நான் வெச்சிருந்த மதிப்பும், ஆசையும் அதிகமாயிடுச்சு. முதல் தடவ பாத்தப்ப எம் மனசுக்குள்ள வந்தேன்னா, ஸ்மிர்த்தி சொன்னதக் கேட்டப்ப நீதான்னு முடிவே பண்ணிட்டேன்.''

''நீ சொன்னதெல்லாம் கேட்டு உம்மேல இருக்கற அன்பும் ஆசையும் அதிகம் தான் ஆகியிருக்கே தவிரக் கொஞ்சமும் குறையல.''

''உளறாதீங்க.''

''உண்மையைத்தான் சொல்றேன்மா.''

''ம்கூம், இல்ல...''



''கல்யாணம்னு ஒன்னு நடக்க முடியும்னா அது உங்கூடத் தான்.''

''நீங்க மட்டும் முடிவு செஞ்சாப் போதுமா, எனக்குக் கல்யாணத்துல இஷ்டமில்ல.''

''என்னப்பத்தி உனக்கு அக்கறையே இல்லையா வாணி?''

''இருக்கறதால தான் நீங்க நல்லா இருக்கணும்னு நினைக்கறேன்.''

''நீ இல்லாம ஒன்னுமே இல்ல, நல்லா இருக்கறதெங்க?''

''எல்லாம் கொஞ்ச நாளைக்குத் தான், போகப் போகப் பழசெல்லாம் மறந்துடும்.''

''எந்த முட்டாள் சொன்னான்?''

''வீம்புக்கு பேசாதீங்க ஹரி.''

''உனக்கு மட்டும்தான் உன் காதல புதையலா பாது காக்கத் தெரியுமா வாணி?''

''உளறாதீங்க, நீங்க எங்க? ஒன்னுமே இல்லாத பெரிசா சொல்லிக்க யாருமே இல்லாத அனாத நான் எங்க...''

''பைத்தியமா நீ, உனக்காக நான் இருக்கும் போது நீ எப்படி அனாத ஆக முடியும்.''

''சரிதான், தெரிஞ்சே குழிக்குள்ள விழுவேன்னு சொல்றவங்கள இனி நானும் தான் என்ன செய்ய முடியும்?''

''இல்ல வாணி, விழப் போற உன்னையும் தடுக்கறேன்.''

''ஏன் இப்படி இருக்கறீங்க? ஒரு பொண்ணு நானே உங்கள வேண்டாங்கறேன் உங்களுக்கு ரோஷமே இல்லையா?''

''நீ என் உயிர் வாணி, உன்ன விடணும்னு நினைச்சா என் உயிரும் சேந்து போயிடும்.''

''இனியும் தொடர்ந்து இதே மாதிரி பேசிட்டிருந் தீங்கன்னா அப்புறம் வேலயத் தூக்கி எறிஞ்சுட்டு இங்கிருந்து கிளம்பிப் போய்ட்டே இருப்பேன்.''

அப்படிச் சொல்லிவிட்டுக் கல்லாக நின்றுவிட்டிருந் தாள் வாணி.

அல்லது கல்லாக இருந்ததால் தான் அப்படிச் சொல்ல முடிந்ததோ,

ஆனால் அதைக் கேட்ட ஹரிவரதன் ஆடிப் போய் விட்டிருந்தான்.

சப்த நாடிகளும் ஒடுங்கிப் போனான்.

அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவே சில வினாடிகள் ஆகியிருந்தன.

அப்படி நடப்பிற்கு வந்து இவ்வளவு தானென்று வரை யறுத்துச் சொல்ல முடியாத ஒருவித வேதனையுடன் வாணியைப் பார்த்தவன், அடுத்த வினாடி அங்கிருந்து வெளியேறியிருந்தான்.



## 17

நேரம் மதியம் இரண்டு மணி.

ஹரிவரதன் கிளம்பிச் சென்று ஒரு மணி நேரத்திற்கும் மேலேயே ஆகி விட்டிருந்தது.



அதேநேரம் ஆஃபீஸ் போன், அதாவது அவனுடைய டேபிளில் இருக்கும் போன் ஒலிக்கச் சென்று எடுத்து காதில் வைத்தாள்.

பேசியது பெரிய எம்.டி. கமலநாதன்.

அவர் ஹரிவரதனைக் கேட்க, விஷயத்தை சொல்லி விட்டு ரிஸீவரை வைத்தாள்.

பிறகு தானும் ஒரு முறை ஹரிவரதனின் மொபை லுக்கு அழைத்துப் பார்த்தாள்.

நாட் ரீச்சபிள் என அதே பதில் தான் வந்தது.

அதைத் தொடர்ந்து எம்.டி.யைக் கேட்டு நிறைய அழைப்புகள்.

பதில் சொல்ல முடியாமல் திணறினாள்.

கிளம்பும் வரையும் கூட இதே நிலை தொடர தலையை பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டிருந்தாள்.

மறுநாளான அன்றும் வழக்கம் போல வேலைக்கு வந்தவள், ஹரிவரதன் அவனுடைய இருக்கையில் இருப்பதைக் கண்டாள்.

தன் மேல் இருக்கும் கோபத்தினால் தான் முதல் நாள் அப்படிச் செய்தானோ என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

மனம் நிலை கொள்ளாமல் தவித்தது.

கைப்பையைத் தன்னிடத்தில் வைத்து விட்டுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எம்.டி.யைப் பார்க்கப் போனாள்.

உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் பார்த்தவனிடம் ''குட்மார்னிங்'' என்றாள்.

முதல் நாள் செய்த வேலைகளின் சுருக்கத்தை அதாவது டெய்லி ரிப்போர்ட்டை அவன் பார்வைக்கு வைத்தாள்.

அவனைக் கேட்டு வந்த தொலைபேசி அழைப்புகள் பற்றிச் சொன்னாள்.

புது ஆடர்கள் பற்றிப் பேச, நன்கொடை கேட்க, வந்து பார்ப்பதற்கு அப்பாயிண்ட்மெண்ட் கேட்க, காரணமே சொல்லாமல் அதிகாரக் குரலில் கேட்டவர்கள் என அனைத்தையும் ஒன்று விடாமல் சொன்னாள்.

கடைசியாக அன்றைக்குச் செய்தாக வேண்டிய, செய்யத் திட்டமிட்டிருந்தவை பற்றியக் குறிப்பைக் காட்டினாள்.

அதில் முதலில் செய்ய வேண்டியதையும் அதன் அவசியம் பற்றியும்,

வாணி சொல்லிக் கொணடே போனாளே தவிர, ஹரிவரதனிடமிருந்து எந்த எதிரொலியும் இல்லை.

அவன் எதையும் சொல்லாமல் கேட்டுக் கொண்டதே போதுமென்றிருந்தது.

தொடர்ந்து சில வினாடிகள் அமைதியில் கழிந்தன.

முதன்முறையாக வாயைத் திறந்த ஹரிவரதன் ''கொஞ்சம் வெளிய போய்ட்டு வரலாம் கிளம்பு'' என்றான்.

கேள்வியாய் நோக்கியவளிடம், ''யார் வீட்டுக்கும் கிடையாது'' என்றான்.

''நாம போகப் போறது பழைய ஆஃபீஸ்க்கு, இப்ப அது குடோனா பயன்பட்டுட்டிருக்கு. அங்க ஒரு வேல



அத முடிச்சுட்டு, அப்படியே கொஞ்சம் பேசவும் வேண்டியிருக்கு'' என்று சொல்லிக் கொண்டே ஹரிவரதன் கிளம்பியிருக்க, தனது மறுப்பில் பயனிருக்க போவதில்லை என்பதை உணர்ந்து தானும் உடன் கிளம்பினாள் வாணி.

சொன்னது போல அடுத்த பதினைந்து நிமிடங்களில் இருவரும் பழைய ஆஃபீஸை வந்தடைந்திருந்தனர்.

கொஞ்சம் வெளுத்துப் போன பழைய பெயர் பலகை கண்களில் பட்டது.

காரைக் கண்டதும் ஓடி வந்து கேட்டைத் திறந்து விட்ட செக்யூரிட்டி பயபக்தியுடன் நிற்க சிரித்த முகத் துடன் அவனிடம் சில வார்த்தைகள் பேசி விட்டுக் காரை உள்ளே விட்டிருந்தான்.

புதிய அதாவது தற்பொழுது இயங்கிக் கொண் டிருக்கும் கம்பெனியின் அளவு இல்லாவிட்டாலும் அதில் பாதியளவுக்கு மேலாகவே இருந்த பழைய கால ஆனால் உறுதியான கட்டிடத்தையும், பரந்த விரிந்த வெற்று நிலப்பரப்பில் சரியான இடைவெளிகளுடன் செழித்து அடர்ந்து வளர்ந்திருந்த மரங்களையும் பார்க் கவே மனதிற்கு இதமாக இருந்தது.

லேசாகத் திரும்பி, அதாவது பார்வையை மட்டும் திருப்பி ஹரிவரதனைப் பார்த்தாள்.

உணர்ச்சி துடைக்கப்பட்ட அவனுடைய முகம் இருக்கிற கொஞ்ச நஞ்ச நிம்மதியும் கெடுவதற்குப் போதுமானதாய் இருந்தது.

ஹரிவரதனைத் தொடர்ந்து தானும் உள்ளே வந்தாள்.

பார்ப்பதற்கு அது ஒரு பெரிய ஆஃபீஸ் அறை என்பது புரிந்தது.

ஹரிவரதன் ஏதோ ஒரு பழைய ஃபைலை எடுத்து, அதன் கிளிப்பை திறந்து ஒரு பேப்பரை எடுத்துக் கொண்டு மீண்டும் அதைப் பழைய இடத்தில் வைப்பது தெரிந்தது.

வைத்து விட்டு அவன் திரும்புவதற்கும், வாணி அவனைப் பார்ப்பதற்கும் சரியாக இருந்தது.

''இனி கொஞ்சம் பேசணும்'' என்றவன் நீ என்ன சொல்கிறாய் என்பதனைப் போலப் பார்த்தான்.

''பேசலாமே'' - வாணி.

''மனசத் திறந்து கேக்க நீ தயாரா இருக்கணும்.''

''சொல்லுங்க.''

''நான் பேசி முடிக்கற வரைக்கும் நீ எதுவும் பேசக் கூடாது, அப்புறமா பேசு...''

ஹரிவரதனின் நிபந்தனையில் சரிதான் சொல்லுங்கள் எனப்தைப் போலப் பார்த்தாள்.

''உனக்குப் பிடிக்கலேன்னா வேண்டாம்...''

''இல்ல சொல்லுங்க'' - வாணி.

''நீ பிறந்ததும் உன் அம்மா இறந்தது ஏன் வாணி?''

இதென்ன கேள்வி என்றிருந்தது வாணிக்கு.

''சொல்லுமா.''

''இப்படிக் கேட்டா என்னன்னு சொல்றது?''

''உனக்கென்ன மனசுக்குப் படுதோ, உண்மை என்னவோ அத சொல்லு.''



''அத விதின்னு தான் சொல்லணும்.''

''பிரசவத்துல ஏதோ பிரச்சனை, எவ்வளவோ முயற்சி பண்ணியும் காப்பாத்த முடியலன்னு சொன்னாங்க.''

''அதுதான் காரணமில்லையா?''

அவன் என்ன சொல்ல வருகிறானென்பது புரியாமல் பார்த்தாள்.

''சொல்லு வாணி.''

''ஆமாம், அது தான் காரணம்.''

''உன்னப் புடிக்காம உம்மேல இருக்கற வெறுப்புல இல்...''

''என்ன ஹரி இது?''

''சரிதான், பிரசவத்துல ஏதோ பிரச்சன நீயே சொல்ற மாதிரி விதின்னு கூட சொல்லலாம். ஆனா இதுக்காக உங்கப்பா உன்ன ஏன் வெறுத்தார்?''

''என்னக் கேட்டா?''

''நல்லா யோசிச்சுப் பாரு.''

''இதுல யோசிக்க என்ன இருக்கு?''

''சரி எம் மனசுக்குப் பட்டறத தான் சொல்றேன் கேளு. உங்கம்மாவோட மறைவு உங்கப்பாவுக்கு மிகப்பெரிய இழப்பு அத அவரால தாங்கிக்க முடியல.''

''இந்தப் பிரசவம் நம்ம மனைவிக்கு எமனாயிடுச் சுன்னு நினைச்சுட்டார். அதாவது நீ பிறந்தப்ப உங்கம்மா இறந்துட்டதால உம்மேலே வெறுப்பு வந்துடுச்சு.''

''இல்ல நீ பார்க்க உன் அம்மா மாதிரியே இருந்ததால உன்னப் பாத்தப்பவெல்லாம் அவருக்கு அவரோட

மனைவி ஞாபகம் வந்திருக்கு. அதனால உன்ன அவாய்ட் பண்ணிப் பழகிட்டார்.''

''உங்கம்மா மேல உங்க அப்பா வெச்சிருந்த அளவுக் கதிகமான அன்புதான் எல்லாத்துக்குமே முக்கியக் காரணம்னாலும், இதல நீ செஞ்ச தப்பு என்ன வாணி?''

''உன்ன உங்கப்பா தண்டிச்சது சரியா?''

''அதுல ஏதாவது நியாயமிருக்கா?''

..........

''சொல்லு வாணி.''

ஏன் இப்படியெல்லாம் கேட்கிறான். இதில் ஏதாவது உட்பொருள் இருக்குமோ.

''சொல்லுமா....''

...........

''சொல்லு வாணி, எந்தப் பாவமுமே அறியாத உன்ன அதாவது ஒரு குழந்தையை உங்கப்பா தண்டிச்சது சரியா?''

இல்லையே.

அது தவறாயிற்றே.

''இல்ல... அது சரியில்ல.''

''அப்படியிருக்கும் போது அதக் காரணமா வெச்சு நீ இப்ப என்ன வெறுக்கறது மட்டும் நியாயமா வாணி?''

''அன்னைக்கு இருந்த உனக்கும் இன்னைக்கு இருக்கற எனக்கும் என்ன வாணி பெரிய வித்யாசம்?''

''தப்பே பண்ணாம கொடுக்கப்படற தண்டனை யோட விளைவுகள் பயங்கரமானதா இருக்கும்மா.''



ஹரிவரதனின் வாதத்தில் உறைந்து நின்று விட்டிருந்தாள் வாணி.

என்ன பதில் சொல்வதென்று தெரிந்திருக்கவில்லை.

அவன் கேட்பதிலிருக்கும் நியாயம் நெஞ்சைக் குத்த, பதில் சொல்ல முடியாமல் திகைத்து நின்று விட்டிருந் தாள்.

''என்னமா பதில் சொல்ல முடியலையா?''

''வெட்கத்த விட்டுக் கேக்கறேன்டா என் வாழ்க் கைக்கு நீ வேணும்.''

ஹரிவரதன் தன் மனதை மாற்ற முயல்வது புரிந்தது.

நியாயமாகப் பார்த்தால் தான் ஒன்றும் அவனை தண் டிக்கவில்லையே.

மனதிற்குப் பிடித்து விட்ட ஒரு காரணத்திற்காக, தன்னைக் காதலித்து விட்ட பாவத்திற்காக அவன் தண்டிக்கப்பட்டு விடக் கூடாதென்றல்லவா தான் பார்க்கிறோம்.

இவனுடைய வாதமே தவறல்லவா.

திருமணம், குடும்பம் இதிலெல்லாம் சிறு வய திலிருந்து தான் வளர்த்துக் கொண்ட வெறுப்பை வெளியே சொல்ல முடியாமல், எப்படிச் சொல்வதென்று தெரியாமல் தவித்தாள் வாணி.

அப்படியே தான் சொன்னாலும் இந்த அளவிற்கு வாதம் புரிபவன் அதை ஏற்றுக் கொள்வானா,

ஏற்றுக் கொள்வதென்ன, தான் சொல்ல வருவதைக் காது கொடுத்துக் கேட்கக் கூட அவன் தயாரில்லையே.

தானும் உதாசீனப்பட்டு, தன்னால் மற்றவர்களும், முக்கியமாக ஹரிவரதன் எந்த விதத்திலும் பாதிக்கப் பட்டு விடக்கூடாது.

அதற்காகத் தான் எவ்வளவு சிரமத்தை எதிர் கொள்ள நேர்ந்தாலும் சரிதான்.

தன்னை மறக்க, தன் நினைவுகளை மனதிலிருந்து அகற்ற முதலில் சில நாட்கள், மாதங்கள் போராட நேர்ந்தாலும் பரவாயில்லை.

அதற்குப் பிறகாவது ஹரிவரதனின் வாழ்வு செழிக் குமே.

தனக்கு அது போதும்.

அதற்கு மேல் எதுவுமே வேண்டாம், வேண்டவே வேண்டாம்...

''என்ன வாணி''

''தயவுசெஞ்சு எம்மனச மாத்தணும்னு நினைக்காதீங்க ஹரி.''

''இல்லடா, உனக்கு நல்லதப் புரிய வைக்க முயற்சி பண்றேன்.''

''இருக்கலாம். ஆனா இது எனக்கு நானே போட்டுக் கிட்ட விலங்கு. அத உடைக்க நினைச்சா என் உயிரும் போயிடும்.''

''என்னால அத சந்தோஷமா ஏத்துக்க முடியாது, எம் மனசாட்சியே என்ன நிம்மதியா இருக்க விடாது. உங்க நிம்மதிக்கும் உத்தரவாதமில்ல...''

வாணியின் வார்த்தைகள் தந்த விரக்தியில் சிரித்து விட்டிருந்தான் ஹரிவரதன்.



இன்றைக்குக் கையில் இருக்கும் நிஜத்தைத் தான் பேசினால், எப்பொழுதோ வரப் போகும் அதுவும் வருமென்ற நிச்சயம் கூட இல்லாத பூதத்தை நினைத்து பயப்படுகிறாளே என்றிருந்தது.

''சரி உனக்குப் பசிக்கிது, உயிர் போற பசி. சாப்பிட ஏதாவது கிடைக்காதான்னு பாக்கற, அந்த நேரத்துல அறுசுவை உணவையே உனக்குப் படைக்கிறாங்க.''

''நீயும் ஆசையோட சாப்பிட உக்காந்துட்ட, அந்த வினாடில எல்லாம் போதும்னு உன்ன அதுலயே கை கழுவிட்டு எழுந்துக்க சொன்னாங்கன்னா உனக்கு எப்படியிருக்கும்.''

''அந்த மாதிரி தாம்மா இப்ப என் நிலமையும்.''

ஹரிவரதனின் வார்த்தைகளில் எதிலோ தோற்று விட்டதைப் போல ஒரு உணர்வு தோன்றி மனதை அரிக்கத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனாலும் அதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவனுடைய பார்வையில் தெரிந்த எதிர்பார்ப்பும், ஏக்கமும் என்னவோ செய்ய, ''புரியுது ஹரி நான்... நான் தயார்'' என்றாள்.

அப்படிச் சொன்னவளைப் புரியாமல் பார்த்தான் ஹரிவரதன்.

''ஆமா ஹரி, எதிர்காலமே இல்லாதது தான்னாலும் எனக்கு உங்க மேல இருக்கறது உண்மையான காதல், இந்த உடம்பு முழுக்க உங்களுக்கு தான் சொந்தம் உங் களுக்கு மட்டும் தான். உங்களுக்கு விருப்பம்னா நான் தடை சொல்ல மாட்டேன்.''

வாணி சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. அவளுடைய கன்னத்தில் பளாரென ஒரு அறை விட்டிருந்தான் ஹரிவரதன்.

அடுத்த வினாடி கோபத்தில் அவனுடைய கண்கள் சிவந்து விட்டிருந்தன.

''உன் உடம்புக்காக அலையறேன்னு நினைச்சுட்டியா?'' என்று அதே கோபத்துடன் கேட்டிருந்தான்.

''இல்ல...''

''அந்த அளவுக்கு என்னக் கேவலமா நினைச்சுட்டியா, பாவி. உன்ன எப்படியெல்லாம்... எந்த அளவுக்கு நினைச்சுட்டிருந்தேன்...''

கன்னத்தில் விழுந்த அறையிலும், தொடர்ந்து ஹரிவரதன் பேசிய வார்த்தைகளிலும் எல்லையற்ற நிம்மதி ஏற்பட்டிருந்தது வாணிக்கு.

உடலும் மனமும் லேசாகி எங்கோ வானத்தில் பறப்பதைப் போலிருக்க, ஆனந்தத்தில் கண்ணீர் கூட வந்திருந்தது.

இப்படியே போனால் ஹரிவரதனைத் தன்னாலும் பிரிய முடியாது போய் விடுமோ என்ற பயமும்,

ஆனாலும் அவசரப்பட்டுத் தவறாக எண்ணி விட்டோமே என்ற எண்ணம் வாணியை மிகுந்த மன வேதனையடையச் செய்திருந்தது.

ஹரிவரதன் அப்படிக் கேட்டதில் மிகுந்த ஏமாற்றம் தான்.

நிச்சயம் அப்படியிருக்காதென்பதும் தான்.



ஆனாலும் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்பதைப் போல அவன் சொன்ன விதம் ஒருவேளை இப்படித்தான் இருக்குமோ என்ற முடிவுக்கு மிகுந்த வேதனையுடன் அவளை வரச் செய்திருந்தது.

அதற்கு மேல் ஆழமாக அவள் அதைப்பற்றி எண்ணியிருக்கவில்லை.

சரி, தவறு, நல்லது, கெட்டது இப்படி எதையுமே அவள் ஆராய்ந்திருக்கவுமில்லை.

தன் உயிருடன் ஒன்றிவிட்டவனுக்காகக் கொடுக்க இதுவாவது இருக்கிறதே என்பது மட்டும் தான்.

ஆனால் கடைசியில் தனது ஹரிவரதன் அதைக் கேட்டிருக்கவில்லை என்பதையறிந்து உள்ளம் பூரித்துப் போனாள்.

கண்மண் தெரியாத கோபத்தில் அடித்து விட்டிருந்த ஹரிவரதனுக்கும், வாணியின் கண்ணீரைப் பார்த்ததும் என்னவோ போலாகி விட்டிருந்தது.

கேவலம் இப்படி உடல் பலத்தைக் காட்டிய தான் மட்டும் எந்த வகையில் உயர்வென்று மனம் வெறுத்துப் போனான்.

''எப்பவோ யார் யாரோ செஞ்ச தப்புகளுக்கு என்ன தண்டிச்சு தான் ஆகணும்னு முடிவு பண்ணிட்ட இல்லையா?''

விரக்தியுடன் கேட்ட ஹரிவரதனின் வார்த்தைகளில்

''இல்ல நீங்க நல்லா இருக்....''

வாணி முடித்துக் கூட இருக்கவில்லை.

''போதும், எனக்கு நல்லது நினைக்க நீ யாரு?'' என்று தாங்கிக் கொள்ள முடியாமல் கேட்டு விட்டிருந்தான்.

''கழுத்த நெறிச்சுக் கொன்னுட்டு செத்த பிணத் துக்குப் பாவம் பாக்கறியா?''

''ஹரி...''

அதற்கு மேல் வினாடி கூட நிற்காமல் அங்கிருந்து கிளம்பி விட்டிருந்தான் ஹரிவரதன்.

அவனைத் தொடர்ந்து தானும் வந்து காரில் ஏறி அமர்ந்திருந்த வாணிக்கு அவனை நிமிர்ந்து பார்க்க தைரியம் வந்திருக்கவில்லை.

ஏன் அவன் பக்கமாகத் திரும்பக் கூட,

வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வரு வதைப் போலக் காட்டிக் கொண்டாள்.

ஆனாலும் எதிலும் கவனம் பதிந்திருக்கவில்லை.

திடீரென கார் நின்றிருக்க, நடப்பிற்கு வந்து பார்த் தாள்.

இந்த இடம்...

''உன் ஹாஸ்டல் இறங்கிக்கோ'' என்றிருந்தான் ஹரிவரதன்.

கோபம், வேதனை, எரிச்சல் என அவன் குரலில் தெரிந்த ஒட்டுமொத்த உணர்ச்சிகளின் எதிரொலியில் இப்பொழுது வாணிக்கும் கண்களைக் கரித்துக் கொண்டு வந்திருந்தது.

ஏன் இறங்கிக் கொள்ளச் சொல்கிறானென்று புரியாமல் பார்த்தவளைப் பார்க்கப் பிடிக்காதது போல எங்கோ



பார்த்தவன், ''இனியும் உன்னப் பாத்து எதுவுமே நடக் காத மாதிரி இயல்பாப் பேசற சக்தி எனக்கில்ல. நாளைக்கு மறுநாள் மதியம் நான் வெளிநாடு கிளம்ப றேன் அதுக்கப்பும் நீ ஆஃபீஸ் வந்தாப் போதும்'' என் றிருந்தான்.

''நான் இந்தியா திரும்ப மூனு மாசத்துக்கு மேல ஆகும். உன்ன நம்பி தான் கம்பெனிய விட்டுட்டு போறேன். இதயாவது பாதில விட்டுட்டு ஓட மாட் டேன்னு நினைக்கறேன். ஆனா...''

எங்கோ பார்த்துப் பேசிக் கொண்டிருந்தவனை நெஞ்சு கணக்கப் பார்த்தாள் வாணி.

''நான் திரும்பி வரும் போது நீ இங்க இருக்கக் கூடாது, உன்ன நான் பாக்கறது இதுதான் கடைசியா இருக்கணும்னு நினைக்கறேன். எவ்வளவோ எதிர்பாத் தேன்...'' என்றவனால் தொடர்ந்து பேச முடிந்திருக்க வில்லை.

சில வினாடிகள் எடுத்துத் தன்னை சமாளித்துக் கொண்டவன் ''கடைசிக்கு இதயாவது எனக்காக செய் வேன்னு நினைக்கறேன்'' என்று விட்டுக் கிளம்பியே விட்டிருந்தான்.

ஹரிவரதனின் வார்த்தைகள் அவன் சென்ற பிறகும் கூட வெகுநேரம் வரை காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தன.

வந்து படுக்கையில் விழுந்தவள் தான்.

வாழ்க்கையே புரிந்து கொள்ள முடியாத பயங்கார மாய்த் தெரிய, நடுங்கிப் போனாள்.

ஆற்றுவாரோ, தேற்றுவாரோ இல்லாமல் தன் நிலையை எண்ணி அழுது தீர்த்தாள்.



# 18

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை.

ஏன் எதற்காகவுமே.

அது பாட்டுக்கு ஓடிக் கொண்டே இருக்கிறது.

ஹரிவரதன் வெளிநாடு கிளம்பியும் கூட பதினைந்து நாட்கள் ஓடிப் போயிருந்தன.

ஏனோ இப்பொழுதெல்லாம் சிரிக்கவே மறந்து போய் விட்டிருந்தாள் வாணி.

படுக்கையிலிருந்து எழுவது முதல் மீண்டும் படுக்கப் போகும் வரை சாவி கொடுக்கப்பட்ட பொம்மையைப் போல ஓடினாள்.

அவளுக்கென்று தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் எதுவுமே இருக்கவில்லை.

வாணியைப் பொறுத்தவரை அவள் எப்பொழுதுமே அவளுக்காக வாழ்ந்ததில்லை என்பதால் அதில் அவளுக்கு தனிப்பட்ட சிரமமென்று ஒன்றும் வந்து விடவுமில்லை.

புது ஆடர்கள், அதிக வேலை என்று சற்று அமர்ந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ளக் கூட முடிந்திருக்க வில்லை.



ஏன் அப்பொழுதிருந்த மனநிலையில் அதையே விரும்பினாள் என்றும் சொல்லாம்.

அனைத்திற்கும் மேலாக ஹரிவரதனே சொன்னதைப் போல வேலையில் எந்தக் குறையும் வந்து விடக் கூடாதென்று முழு கவனத்தையும் அதில் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தாள்.

இடையில் இரண்டு முறை ஸ்மிர்த்தியிடமும் பேசினாள்.

ஹரிவரதனிடம் மட்டும் கடைசியாகப் பார்த்த அன்று பேசியதுதான்.

இப்பொழுதெல்லாம் அவன் அனைத்தையும் மின் னஞ்சலில் அனுப்புவதை வழக்கமாக்கிக் கொண்டிருந் தான்.

அதற்கு மேல் பெரிய எம்.டி. கமலநாதன் மூலம்,

ஒரு விதத்தில் அது மிகுந்த நிம்மதியைக் கொடுத் திருந்தது வாணிக்கு.

ஏனென்றால் தேவையற்றக் குழப்பங்கள் மன உளைச்சல் ஏற்படாமல் அது தடுத்ததெனலாம்.

இத்தனைக்கும் இடையில் வெளியே வேலை தேடு வதையும் அவள் மறந்திருக்கவில்லை.

வேலையில் சேர்ந்து கொள்வதற்குத் தயாராக நேரில் வருமாறு கடிதமும் வந்து சேர்ந்திருக்க, இன்பம் துன்ப மென்று எதுவுமற்ற மனநிலையில் ஜடப்பொருளைப் போல நாட்களைத் தள்ளினாள்.

மேலும் இரண்டரை மாதங்களும் ஓடிப் போய் விட்டிருந்தன.

ஹரிவரதன் இந்தியா திரும்புவதற்கு இன்னும் சில நாட்களே இருந்தன.

நாட்கள் நெருங்க நெருங்க நெஞ்சுக் கூட்டிற்குள் யாரோ கையை விட்டு துலாவுவதைப் போல சொல்ல முடியாத வேதனையில் துடித்துப் போனாள்.

ஹரிவரதன் என்ற ஒற்றை வார்த்தையே அவளுடைய ஒட்டுமொத்த நிம்மதியைக் கெடுப்பதற்கும், போன நிம்மதியை மீட்டெடுப்பதற்கும் போதுமானதாய் இருந்தது.

நல்லதென்று சுகப்படவும் முடியாமல், கெட்டதென்று விலகிச் செல்லவும் முடியாமல் என்னை ஏன் கடவுளே இப்படி வதைக்கிறாயென்று தனிமையில் கதறித் தீர்த்தாள்.

ஆனால் அதெல்லாம் மனதை அலைபாய விட்ட அந்த சில நாட்கள் மட்டும்தான்.

பிறகு மீண்டும் மனதைக் கல்லாக்கிக் கொண்டாள்.

அன்று ஸ்மிர்த்தி இந்தியா திரும்பும் நாள்.

இருக்கும் வேதனைக்கிடையில் தோழியை மிகவும் எதிர்பார்த்தாள் வாணி.

இடையில் இன்னொன்றும் நடந்திருந்தது.

கடைசியாக சில நாட்களுக்கு முன்பு ஸ்மிர்த்தி வாணியிடம் பேச நேர்ந்ததே அது.

அப்பொழுது வெளியூரில் வேலை கிடைத்திருக்கிறது, இன்னும் ஒரு வாரத்தில் கிளம்பி விடுவேனென்று சொல்லியிருந்தாள் வாணி.



வாணி அப்படி சொல்லக் கேட்டதிலிருந்து ஏனோ ஸ்மிர்த்திக்கு எதுவுமே சரியாகப் பட்டிருக்கவில்லை.

வேலையில் சேர்ந்த சில மாதங்களிலேயே கிளம்புகிறேன் என்கிறாளே, இப்படியாகி விடக் கூடாதென்று தானே அண்ணன் ஏற்கனவே சொன்னார் என்றிருந்தது.

சரி அது ஒரு பக்கமென்று விட்டு விட்டாலும் கூட. வாணி ஏன் இப்பொழுது வேறு வேலை தேடிக்கொண்டு போக வேண்டும் என்றிருந்தது.

வெளியுலகத்தைப் பற்றி வாணிக்கு என்ன தெரியும்.

சரியாகத் தெரியாமல் தவறான இடத்தில் எங்காவது போய் மாட்டிக் கொண்டால் என்ன செய்வது என்றிருந்தது.

கடவுள் புண்ணியத்தில் அப்படியெல்லாம் ஒன்றும் நடந்து விடாது என்றாலும் கூட, அப்படியும் வெளியே போய் தான் ஆக வேண்டுமென்ற கட்டாயமென்ன,

வாணியிடம் கேட்டாலும் எதற்குமே பதில் கிடைத்திருக்கவில்லை.

பிரச்சனையென்று பெரிதாக ஒன்றுமில்லை. விரைவில் நேரில் வரத்தானே போகிறாய் அப்பொழுது பேசிக் கொள்ளலாமென்று முடித்து விட்டிருந்தாள்.

அதற்கு மேல் துளைத்துக் கேட்டு அவளைச் சிரமப் படுத்தவும் மனம் வந்திருக்கவில்லை.

ஆனால் அண்ணனிடம் இதை எப்படிச் சொல்வது,

ப்ராஜக்டின் தொடர்ச்சியாக அவர் இப்பொழுது வெளிநாடுகளில் அல்லவா சுற்றிக் கொண்டிருக்கிறார்.

இந்த நேரத்தில் வாணி வேறு வேலை தேடிக் கொண்டிருக்கிறாளாமே என்று எப்படிக் கேட்பது.

அதுவும் இந்த மாதிரி சிறிய விஷயங்களை அண் ணன் உள்ளூரில் இருந்தாலே சமயம் பார்த்துத் தான் பேச முடியும்.

இப்பொழுது அதற்கும் வழியில்லை.

ஆனாலும் இது சின்ன விஷயம் தானென்று என்ன நிச்சயம்.

மற்றது எப்படியானாலும் வாணியல்லவா இப்பொழுது அனைத்துக் கம்பெனி வேலைகளையும் பார்த்துக் கொண் டிருக்கிறாள்.

இந்தச் சமயத்தில் அவள் வெளியே செல்ல நேர்ந்தால் ஏனோ நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது ஸ்மிர்த்திக்கு.

சரியாக அந்த நேரம் பார்த்து வேறு ஒரு விஷயமாக அண்ணனிடம் பேச நேர்ந்து விட, தயக்கத்துடன் தான் என்றாலும் வாணி விஷயம் பற்றிச் சொன்னாள்.

அனைத்தும் தன்னால் வந்ததென்று அஞ்சிக் கொண்டே பேசியவளுக்கு, அண்ணன் பிடி கொடுத்துப் பேசாதது முதலில் ஆச்சரியத்தைக் கொடுத்திருந்தது.

மீண்டும் அழைத்துப் பேசிய போது அவள் அறிந்து கொள்ள நேர்ந்த விஷயம், அவள் சற்றும் எதிர்பார்த் திராததாக இருந்தது.

ஆனாலும் அது எல்லையற்ற ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் கொடுத்திருந்தது.

ஆனால் அது சில நிமிடங்கள் தான்.



உடனே அண்ணன் கடைசியாக சொன்னது தான் நினைவிற்கு வந்தது.

வாணியை நினைத்தால் இப்பொழுது கோபம் தான் வந்தது.

அவளை உடனே நேரில் பார்த்தாக வேண்டும் போலக் கை கால்கள் பரபரத்தன.

அண்ணன் சொன்னது மட்டும் உண்மையென்றால், ஆனால் ஏன் பொய் சொல்ல வேண்டும். அதோடு அவர் அப்படிப்பட்டவரும் கிடையாதே,

இந்த வாணி ஏன்...

சரிதான், இன்னும் ஒரே ஒரு நாள் பொறுத்துக் கொண் டால் நாளையே நேரில் சென்று அவளைப் பார்த்து விடலாம்.

அது மட்டுமல்ல.

அப்பொழுது அவளுடன் பேசி அவளுடைய முட் டாள்த்தனமான எண்ணங்களுக்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட வேண்டியது தான்.

மறுநாளே அண்ணனும் வந்து விடுவார்.

அதற்குப் பிறகு அண்ணனுக்கும் வாணிக்கும் டும் டும் தான்.

சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தாள் ஸ்மிர்த்தி.

எவ்வளவு பிரமாதமான ஜோடியென்று நினைக்க நினைக்கப் பெருமையாக இருந்தது.

வாணியின் அழகுக்கும் அறிவுக்கும் அவளுக்குப் பிரமாதமான வாழ்க்கைத் துணை அமையுமென்று ஸ்மிர்த்தி எப்பொழுதும் மனதிற்குள் நினைப்பதுண்டு.

அது இப்பொழுது எத்தனை உண்மையாகி விட்டது.

அது மட்டுமா.

அழகே உருவான தனது வெகுளித்தனமான தோழி மட்டும் எந்த விதத்தில் குறைந்து போய் விட்டாள்.

ஆனந்தக் கற்பனைகளில் மூழ்கிப் போனாள் ஸ்மிர்த்தி.

இந்தியா திரும்பியதும் தான் எடுத்து செய்யத் தான் எத்தனை எத்தனை பொறுப்பான, இனிமையான வேலைகள் காத்திருக்கின்றன.

அதுவும் உயிர்த்தோழிக்குத் தானே முன்னின்று அனைத்தையும் செய்யப் போகிறாளே.

யோசித்துப் பார்த்ததில் தன்னுடைய திருமணத்திற்குக் கூடத் தான் இவ்வளவு சந்தோஷப்பட்டிருக்க மாட் டோமோ என்று சிரிப்பு வந்து விட்டிருந்தது ஸ்மிர்த்திக்கு.



## 19

ஆபீஸ் தொலைபேசி ஒலிக்க எடுத்துப் பேசினாள் வாணி.

''இதோ இப்பவே எடுத்துட்டு வர்றேன் ஸார்'' என்று சொல்லிவிட்டுப் பெரிய எம்.டி. கமலநாதன் சொன்ன பைலை எடுத்துக் கொண்டு ரிஷப்சனுக்கு விரைந்தாள்.

அங்கு ''கிளம்பலாமா மேடம்?'' என்று டிரைவர் காருடன் தயாராக நின்றிருக்க, உடனே காரில் ஏறி அமர்ந் திருந்தாள்.



அடுத்த வினாடி கார் கிளம்பியிருக்க, இந்நேரம் ஸ்மிர்த்தி இந்தியா வந்து சேர்ந்திருப்பாள் என்பது தான் நினைவிற்கு வந்தது.

மணமாகி சென்ற பிறகு மீண்டும் இப்பொழுது தான் வருகிறாள். இனி என்னென்ன மாற்றங்களுடன் வந்திருக்கிறாளோ என்று புன்னகையுடன் நினைக்கத் தோன்றியது.

சரிதான்.

எப்படியும் நேரில் வந்து பாராமல் இருக்க மாட்டாள் பார்த்துக் கொள்ளலாம் என்றும்.

உடனே ஸ்மிர்த்திக்குப் பேசியாக வேண்டும் போல மனம் பரபரத்தது.

முயன்று இப்போதைக்கு வேண்டாமென்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

முதலில் பெரிய எம்.டி. சொன்ன வேலை, இந்தப் பைலை அவரிடம் கொடுத்து விட்டு அவர் கொடுக்கும் பைல்களை வாங்கிக் கொண்டு உடனே கிளம்பி விட வேண்டும்.

அப்படிக் கிளம்பினால் தான் அலுவலகம் சென்று அங்கு மீதியிருக்கும் வேலைகள் அனைத்தையும் முடித்து விட்டுக் கிளம்ப நேரம் சரியாக இருக்கும்.

இன்றைக்கே ஸ்மிர்த்தி தன்னைப் பார்க்க வருவதாக இருந்தாலும் கூட அவளுடன் பேசவும் சிறிது நேரம் கிடைக்கும்.

''வீடு வந்துடுச்சு மேடம் இறங்கிக்கோங்க'' என்ற டிரை வரின் குரலில் தான் நடப்பிற்கு வந்திருந்தாள் வாணி.

ஒரு பெரிய மாளிகை போலிருந்த வீட்டிற்கு முன்னால் வந்து கார் நின்றிருக்க, சில வினாடிகள் அப்படியே திகைத்துப் போய் விட்டிருந்தாள்.

சினிமாக்களில் கூட அவள் அவ்வளவு பெரிய வீட்டை இல்லையில்லை மாளிகையைக் கண்டதில்லை.

'மேடம்' என்ற டிரைவரின் அழைப்பில் மீண்டும் நடப்பிற்கு வந்தவளாய் மடியிலிருந்த ஃபைலைக் கையில் எடுத்துக் கொண்டு இறங்கினாள்.

பச்சைப் பசேலென்று இருபுறமும் பரந்து விரிந்து கிடந்த புல்வெளிக்கிடையில் வெகுதூரம் நீண்டிருந்த காரோடும் பாதையின் முடிவில் தான் டிரைவரும் காரைக் கொண்டு வந்து நிறுத்தியிருந்தான்.

அங்கிருந்தும் அந்தப் பாதை இரு அரை வட்டங்களாகப் பிரிந்து வீட்டின் வாசற்படியில் வந்து முழுவட்டமாக நிறைவு பெற்றது.

அந்த வட்டத்திற்கு நடுவில் செழித்து அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு பெரிய மரத்தினடியில் அழகாகப் பின்னப்பட்டிருந்த பிரம்பு டேபிளும் அதே பிரம்பினாலான நாற்காலிகளும் போடப்பட்டிருந்தது பார்வைக்கு ரம்மியமாய் இருந்தன.

இந்நேரம் ஹரிவரதன் மட்டும் வீட்டிலிருந்தால் என்று நினைத்தவளுக்கு உடல் சிலிர்த்துப் போனது.

தயக்கத்துடன் வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தவள் ''வாம்மா'' என்ற குரலில் திரும்பி அந்த அறையின் பக்கவாட்டு சோபாவில் அமர்ந்தபடி கையிலிருந்த லேப்டாப்பில் ஏதோ வேலையாய் இருந்த கமலநாதனைக் கண்டாள்.



மாலை வணக்கம் சொன்னவள், அருகில் சென்று ''ஸார் நீங்க கேட்ட பைல்'' என்று நீட்டினாள்.

''சரிதான்'' என்று வாங்கிக் கொண்டவர் எதிரே சற்று தொலைவில் இருந்த இருக்கையைக் காட்டி அமரச் சொன்னார்.

''இல்ல ஸார் பரவாயில்ல.''

''என் பைல்ஸ் ரெடியாகறதுக்கு இன்னுமொரு பதினஞ்சு நிமிஷமாகும், அதுவரைக்கும் நின்னுட்டேவா இருக்கப் போற?''

''நான் வேணும்னா வெளிய நடந்துட்டு வர்றேன் ஸார்.''

''சரி செய்'' என்று விட்டு அவர் மீண்டும் தனது வேலையில் மும்முரமாகி விட்டிருக்க, அதே நேரம் அங்கு ஹாலுக்கு வந்தார் வஸந்தி.

ஹரிவரதனின் தாயான வஸந்தியையும் வாணிக்கு முன்பே ஓரளவு தெரியுமென்பதால், அவருக்கும் புன்னகையுடன் மாலை வணக்கம் சொன்னாள்.

''வாம்மா, நீ...''

''வாணி மேடம், ஹரிவரதன் ஸாரோட பி.ஏ.'' என்றாள்.

''அட ஆமாமில்ல. எனக்கு நீ ஸ்மிர்த்தியோட ஃப்ரண்டுங்கற வரைக்கும் தான் தெரியும். நீ இப்ப நம்ம கம்பெனில தான் வேல செய்யற இல்லையா?''

''ஆமாம் மேடம்.''

''ஸ்மிர்த்தி வந்திருக்கா தெரியுமா?''

''இன்னைக்கு வர்றான்னு தெரியும் மேடம்.''

''எத்தன மேடம்'' என்று சிரித்தவர் ''ஆன்ட்டினு கூப்பிடு'' என்றிருந்தார்.

'எத்தன ஸார், பேர் சொல்லிக் கூப்புடு' என்று ஹரிவரதன் சொன்னது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது.

நெஞ்சுக்குள் என்னவோ அடைப்பதைப் போலிருக்க, முயன்று வரவழைத்த புன்னகையுடன் சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

''இப்பவே கிளம்பணுமா?''

''இல்ல மே... ஆன்ட்டி இன்னும் கொஞ்ச நேரம் வெயிட் பண்ணச் சொல்லி ஸார் சொன்னார்...''

''சரிதான். வா உள்ள வந்து வெயிட் பண்ணு'' என்று விட்டு வஸந்தி திரும்பி உள்ளே செல்ல தானும் அவரைத் தயக்கத்துடன் தொடர்ந்தாள்.

வீட்டிற்குள்ளும் பார்ப்பதற்கு எத்தனை எத்தனையோ பிரமாண்டங்கள், புதுமைகள் என இருந்தாலும், அதெல்லாம் வாணியின் கவனத்தில் கூடப் பட்டிருக்கவில்லை.

''வாம்மா உக்காரு'' என்றவரின் வார்த்தைகளில் அங்கிருந்த சோபாவில் அமர்ந்திருந்தாள்.

சில வினாடிகளில் தானும் வந்து அருகில் அமர்ந்திருந்த வஸந்தி, பொதுவான விஷயங்களைப் புன்னகையுடன் பேசினார்.

பதிலுக்குத் தன்னையும் பேச வைத்து இதமாக நடந்து கொண்டவரை மிகவும் பிடித்துப் போனது வாணிக்கு.



குடும்பம், சொந்தபந்தம் என்று எதுவும் பேசாததிலேயே தன்னைப் பற்றி முன்பே தெரியும் போலிருக்கிறதென்று நினைத்துக் கொண்டாள்.

ஒரு விதத்தில் அது பிடித்தும் இருந்தது.

தொடர்ந்து சில வினாடிகளில் ஒரு பெண் ஸ்நாக்ஸ், டீயுடன் வர, தானே வாங்கி சாப்பிடச் சொல்லிக் கொடுத்த ஆன்ட்டியிடம் நன்றி சொல்லி விட்டு வாங்கிக் கொண்டாள்.

''நீங்களும் எடுத்துக்கோங்க ஆன்ட்டி.''

''இப்பதாம்மா எடுத்துக்கிட்டேன். நீ சாப்பிடு.''

மற்றதைப் பெயருக்கு ஒன்றை எடுத்துக் கொறித்து விட்டு, டீயைக் குடிக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

''வேற வேல தேடிட்டிருக்கியாம்மா?''

திடீரென்று வஸந்தி ஆன்ட்டி அப்படிக் கேட்க விழித்தாள் வாணி.

''என்னமா?''

''இல்ல ஆன்... ஆமா இ...''

''அட நான் சும்மா தான் கேட்டேன். நீ சாப்பிடுமா.''

..........

''என்னமா?''

''இல்ல உங்களுக்கு எப்படி தெரியும்...''

''அதுவா அங்கிள் யார்கிட்டயோ சொல்லிட்டிருந்தார்மா.''

''சரிதான். அவர் தன்னுடைய மகனிடம் தான் சொல்லியிருக்க வேண்டும்.''

''அது நீ தான்னு எனக்கு அப்பத் தெரியாது, ஏன் இந்த வேல புடிக்கலையா?''

வெகு இயல்பான கேள்வி தான்.

ஆனால் அது வாணியை உலுக்கிப் போட்டு விட்டிருந்தது.

என்னவென்று சொல்லுவாள்...

''சரிதான் விடுமா.''

பாவம் உனக்கு என்ன பிரச்சனையோ அதை நீ சொல்லித் தான் ஆக வேண்டுமென்பது இல்லை. இயல்பாக இரு என்பதைப் போல அவர் சொன்னது இருந்தது.

அப்பொழுது போன் ஒலிக்க சென்று எடுத்துப் பேசினாள் வஸந்தி.

''அட வா வா, உன் ஃப்ரண்ட் கூட இங்கத்தான் இருக்கா.''

..........

''ஆமாம்மா வாணி. சரிதான் கிளம்பி வா.''

அவர் பேசும் போதே அது ஸ்மிர்த்தி தான் என்பது வாணிக்கும் புரிந்து போயிற்று.

ரிஸீவரை அதனிடத்தில் வைத்து விட்டு வந்தவர் ''ஸ்மிர்த்திமா, நைட் வர்றேன்னு சொன்னவ நீ இங்க இருக்கேன்னு தெரிஞ்சதும் இப்பவே கிளம்பி வர்றேங்கறா'' என்றார்.

''ஸ்மிர்த்தி மட்டும் தான் வர்றாளா ஆன்ட்டி?''

''ஆமாம்மா, என்ன ஒன்னுமே சாப்பிடல?''



''லஞ்ச் கொஞ்சம் லேட்டா சாப்பிட்டேன் பசியில்ல.''

அடுத்த பத்து நிமிடங்களில் அங்கு வந்து சேர்ந்திருந்தாள் ஸ்மிர்த்தி.

வந்தவளுக்கு பெரியம்மா, பெரியப்பா என ஒருவரும் கண்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. வாணி என்று ஓடிச் சென்று ஆசையாகத் தோழியின் கைகளைப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தாள்.

அவளிடம் பேசத் தொடங்கிய பிறகே, இன்னும் பெரியம்மா, பெரியப்பாவிடம் பேசவில்லையென்பது புரிந்தது.

''ஒரு நிமிஷம்'' என்று எழுந்து சென்றவள் பெரியப்பாவிடம் பேசிவிட்டு, அடுத்ததாக பெரியம்மாவிடம் வந்தாள்.

''எப்படியிருக்கீங்க பெரியம்மா?''

''வாடாம்மா நீ எப்படியிருக்க, மாப்ள எப்படியிருக்கார்?''

''எல்லாரும் நலம் பெரியம்மா.''

''என்னமா இப்படி மெலிஞ்சுட்ட?''

''ம், ம், நல்லா வெக்கப்படற. என்னமா விஷயம்?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லையே...''

''அத வாய் மட்டும் தான் சொல்லுது.''

''போங்க பெரியம்மா நீங்க எப்பவுமே இப்படிதான்.''

''சரிதான் அப்ப கன்ஃபார்ம்.''

''என்ன கன்... அப்புறம் அண்ணா நாளைக்கு மதியம் தான பெரியம்மா வர்றார்...''

''பேச்ச மாத்தாத.''

''இல்லையே...''

''சரி விடு நான் இனி ஒண்ணும் கேக்கல அப்புறம் ஃப்ரண்ட்ஸ் ரெண்டு பேருக்கும் பேச விஷயம் நிறைய இருக்கும்...''

''சரிதான் பெரியம்மா'' என்றவள் வெட்கத்துடன் அவர் சற்று முன்னர் கேட்க வந்த விஷயம் பற்றிச் சொன்னாள்.

''ரெண்டு நாள் முன்னாடியே அம்மா சொன்னாங்கமா, ஹெல்த்தப் பாத்துக்கோ, முதல்ல உக்காரு ஏன் நின்னுட்டே இருக்க?''

''நான் வாணி கூடக் கொஞ்சம் பேசணும் பெரியம்மா, வா வாணி கிளம்பலாம்.''

''ஃபைல்ஸ் வாங்கிட்டுப் போகணும்.''

''அதெல்லாம் பெரியப்பா ரெடி பண்ணிட்டார். வந்து எடுத்துக்கச் சொல்லி உங்கிட்ட சொல்லச் சொன்னார்.''

''அப்பிடியா'' என்று எழுந்த வாணி வஸந்திக்கு நன்றி சொல்லிவிட்டு வெளியே வர, ''நானும் இவ கூடப் போறேன் பெரியம்மா நைட் டின்னருக்கு வர்றேன்'' என்று உடன் கிளம்பியிருந்தாள் ஸ்மிர்த்தி.



# 20

சென்று எம்.டி.யிடம் விடைபெற்றுக் கொண்டு பைல்களுடன் வாணி வெளியே வர, தானும் பெரியம்மா



விடம் சொல்லிக் கொண்டு அவளுக்கு முன்பாக வெளியே வந்திருந்தாள் ஸ்மிர்த்தி.

வந்தவள் டிரைவரைக் கிளம்பிக் கொள்ளச் சொல்லி விட்டுத் தோழியைத் தனது காரில் ஏற்றிக் கொண்டாள்.

''என்ன ஸ்மிர்த்தி...''

''பேசாம வாடி, உங்கிட்டக் கொஞ்சம் பேசணும்...''

''அதத்தான் பேசு கம்பெனிக்குப் போய் சேர்ற வரைக்கும் வேறென்ன செய்யப் போறோம்.''

''ம்கூம் இப்பக் கம்பெனிக்குப் போய் பைல்ஸ் வெச்சுட்டு உன் ஹேண்ட் பேக்க எடுத்துட்டுக் கிளம்பப் போறோம்.''

''ஏன்... எங்க?''

''அட, ஒவ்வொன்னாக் கேளேன்டி.''

''எப்படிக் கேட்டு என்ன, நீ ஒண்ணுக்குக் கூட பதில் சொல்ல மாட்டேங்கறியே மர்மக் கதை மன்னி மாதிரியில்ல பேசிட்டிருக்க...''

''அப்புறம் வாணி நானில்லாத இந்த மூணு மாசம் எப்பிடிப் போச்சு, என்ன ஸ்பெஷல்?''

''நீதான் பெரிய ஸ்பெஷலோட வந்திருக்க ஸ்மிர்த்தி'' என்று ஆசை கலந்த சந்தோஷத்துடன் வாணி தோழியின் வயிற்றைத் தொட்டுச் சொல்ல, ''அட அத விடுடி உன் சைட்ல என்ன ஸ்பெஷல்?'' என்று கேட்டாள்.

''என் சைட்லயா, ஒண்ணுமில்லையே...''

''என்னடி நீ இப்பிடி இருக்க...''

''என்ன... எப்பிடி...''

"பின்ன? ஒண்ணுமே இல்லேங்கறியே."

"இருக்கறதத் தான சொல்ல முடியும்?" என்று வாணி சொல்ல, ஏமாற்றத்துடன் பார்த்தாள் ஸ்மிர்த்தி.

"என்ன ஸ்மிர்த்தி?"

"ஒண்ணுமில்ல, சீக்கிரம் கம்பெனிக்குப் போய்ட்டுக் கிளம்பற வேலையப் பாக்கலாம்" என்றவள் சொன்னது போலவே கம்பெனிக்கு சென்று விட்டு அங்கிருந்தும் சில நிமிடங்களில் கிளம்பி விட்டிருந்தனர்.

கிளம்பி அவர்கள் சென்ற இடம் கடற்கரை,

"என்ன ஸ்மிர்த்தி இது, இங்க எதுக்கு?"

"அது சரிதான். நீ எங்க அழைச்சுட்டுப் போனா எனக்கென்ன நான் நானாதான் இருப்பேன்னு சொல்ற அப்பிடித்தான?"

"என்ன சொல்ற நீ, கொஞ்சம் புரியற மாதிரி பேசு."

"உனக்குப் புரியற மாதிரியா? அது கஷ்டமில்லையா வாணி? முதல்ல அந்த அளவுக்குத் திறம எனக்கு இருக்குன்னு சொல்றியா..."

"போதும் ஸ்மிர்த்தி இனி விஷயத்துக்கு வா."

.............

"ஸ்மிர்த்தி உன்னத்தான்."

.............

"என்னப்பா பேசு" - வாணி.

"நான் இத்தன நாளா எவ்வளவு முட்டாளா இருந் திருக்கேன் வாணி..."

"ஏய், ஏன் இப்பிடியெல்லாம் பேசற?"



"மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு வாணி."

"என்ன ஸ்மிர்த்தி, என்ன விஷயம்..."

"போதுன்டி உருகினது..." என்றவள் சில வினாடிகள் எடுத்துத் தன்னை சமனப்படுத்திக் கொண்டு "எங்கிட்ட சொல்ல உனக்கு எந்த விஷயமுமே இல்லையா வாணி?" என்று கேட்டாள்.

ஸ்மிர்த்தி கேட்ட விதத்தில் முழுமையாகப் புரியா விட்டாலும் ஏதோ கொஞ்சம் புரிவதைப் போலத்தான் இருந்தது வாணிக்கு.

"நீ எதப்பத்திக் கேக்கற?" - வாணி.

"ஓ அப்ப அத்தன விஷயங்கள நீ எங்கிட்டிருந்து மறைச்சிருக்கியா வாணி?"

"போதும், விஷயத்துக்கு வா."

"வர்றேன்டி, சொல்லு உனக்கும் அண்ணாவுக்கும் இடையில என்ன பிரச்சன?"

ஸ்மிர்த்தி இதைப் பற்றித் தான் பேச வருகிறா ளென்பது புரிந்து விட்டிருந்தாலும், இப்படி நேரடியாக விஷயத்திற்கே வருவாளென்று துளியும் எதிர்பார்த்திருக் காத வாணி எதுவும் பேசாமல் சரியாகச் சொல்ல வேண்டு மென்றால் என்ன பேசுவதென்று தெரியாமல் பார்த்தாள்.

"சொல்லுடி..."

.............

"ஒண்ணுமே இல்லேன்னு சொல்லப் போறியா?"

.............

"பேசித் தொ..."

"என்னைப் பொறுத்த வரைக்கும் அப்பிடித்தான்."

தோழியின் பதிலில் அதிர்ச்சியின் எல்லைக்கே சென்று விட்டிருந்தாள் ஸ்மிர்த்தி.

அவள் எதிர்பார்த்திருந்ததே வேறு.

நடந்ததை அதாவது உள்ளதை உள்ளபடி தன்னிடம் சொல்லுவாள்.

அதுவும் தான் கேட்காமலே சொல்லுவாள்.

சொல்லித் தன்னிடம் கருத்துக் கேட்கா விட்டாலும் கூட, அவளுடைய மன பாரத்தையாவது கொட்டித் தீர்ப்பாளென்று மிகவும் எதிர்பார்த்திருந்தாள் ஸ்மிர்த்தி.

அந்த நேரத்தில் நல்லதைத் தானும் எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கலாமென்று நினைத்திருந்தாள்.

ஆனால் நடந்ததோ முற்றிலும் வேறாக இருந்தது.

அதிர்ச்சியளிக்கக் கூடியதாகவும்,

சரிதான் இனியும் யோசித்துக் கொண்டிருக்காமல் நேரடியாக விஷயத்திற்கே வந்து விட வேண்டியதுதான்.

"அண்ணா எல்லாம் சொன்னார்."

...............

"அவரா சொல்லல, நீ வேலைய ரிஸைன் பண்ணப் போறேன்னு சொன்னதக் கேக்கப் போனப்ப அவரு பிடி கொடுத்துப் பேசல, திரும்பவும் விடாம போன் பண்ணிட்டே இருந்ததுல வேற வழியில்லாம சொல்லிட்டார்ன்னு நினைக்கறேன்."

அதைச் சொல்ல நேர்ந்தபோது அண்ணனின் குரலில் தெரிந்த வேதனை.



அதை இப்பொழுது நினைத்தாலும் ஸ்மிர்த்தியின் மனம் வேதனையில் துடித்துப் போனது.

சரிதான், ஒரு பெண் தன்னை மறுத்து விட்டாள் என்பதை ஒரு சராசரி ஆண் மகனாலேயே தாங்கிக் கொள்ள முடியாதென்னும் பொழுது, தனது அண்ணனைப் போன்ற ஒரு முழுமையான ஆண் மகனின் தன்மானத்திற்கு அது மிகப் பெரிய அடியாகத் தானே இருக்க முடியும்.

அதுவும் கட்டளையிட்டு, அதட்டி கம்பீரமாகப் பேசும் அண்ணனால் கூட இப்படி ஒரேயடியாக மனமொடிந்து போய்விட முடியுமா என்று முதலில் அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலுமாக வாயடைத்துப் போனாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் அதெல்லாம் சிறிது நேரம் தான்.

பிறகு வாணியின் முட்டாள்த்தனத்தை முன்னரே அறிந்தவள் என்பதால் உடனே தெளிந்தும் இருந்தாள்.

அதுதான் சில நாட்களில் இந்தியா செல்லப் போகிறோமே, அப்பொழுதே பேசிக் கொள்ளலாமென்ற முடிவுக்கு வந்து விட்டிருந்தாள்.

இதுவே வாணியின் இடத்தில் வேறொரு பெண் இருந்திருந்தாக்கூட தனது அண்ணனை விடக் கூட ஒரு சிறந்த ஆண் மகன் கிடைக்க முடியுமா, இதென்ன இந்தப் பெண் பைத்தியக்காரத்தனமாய் வேண்டாமென்று மறுக்கிறாளே என்று எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கவே முயன்றிருப்பாள்.

அப்படியிருக்கும்போது வாணியை விட்டுவிட முடியுமா என்ன,

அதிலும் இதில் சம்பந்தப்பட்டிருக்கும் இருவருடைய சந்தோஷமுமே அவளுக்கு மிகவும் முக்கியம் என்னும் பொழுது,

நிமிர்ந்து சற்று தள்ளி அமர்ந்திருந்த தோழியைப் பார்த்த ஸ்மிர்த்தி அவளருகில் சென்று அவளுடைய முகவாயைத் தொட்டு நிமிர்த்தினாள்.

''என்னடி?''

............

''பேசித் தொலையேன்டி.''

''வேற ஏதாவது இருந்தாப் பேசலாம் ஸ்மிர்த்தி.''

''இல்லன்னா?''

''கிளம்பலாம்.''

''என்னடி, ஏன் இப்படியெல்லாம் பேசற?''

''பின்ன எப்பிடிப் பேசறது?''

''அண்ணா உன்ன நேசிக்கறார் வாணி.''

..............

''கொஞ்சநஞ்சமில்ல உயிருக்குயிரா விரும்ப...''

''ப்ளீஸ் ஸ்மிர்த்தி, பேசறதுக்கு வேறொன்னும் இல்லேன்னாக் கிளம்பலாம்.''

''மனசாட்சியோட தான் பேசறியா வாணி?''

''ஆமாம்.''

''ஏன்டி, எங்க அண்ணாவுக்கு என்ன குறைச்சல்?''

............

''சொல்லுடி?''



''எனக்குதான் குறைவு, என்ன மாதிரி துரதிர்ஷ்டசாலி அவருக்கு வேண்டாம்.''

''ஓஹோ, நீயென்ன பைத்தியமாடி?''

''கிளம்பலாம்...''

அப்படிச் சொன்ன வாணியின் தோள்களைப் பிடித்துக் கோபத்துடன் குலுக்கிய ஸ்மிர்த்தி ''இந்த உலகத்துக்கு, நிஜத்துக்கு வாடி, உன் முட்டாள்த்தனமான கற்பனைகள வீம்புக்குன்னே உளறாத கேக்கவே சகிக்கல...''

''புரிஞ்சுக்கோ ஸ்மிர்த்தி, நான்... நான் மேரேஜ் லைஃப் பத்தி ஏன் எதையுமே நினைச்சு கூடப் பாத்ததில்ல, ஏன் அப்பிடியொன்னு வேண்டவே வேண்டாம்னு சின்ன வயசுலிருந்தே எம் மனசுக்குள்ள வெறுப்ப வளத்து வெச்சிருக்கேன்.''

''அதான் ஏன்?''

''ஏன்னு கேட்டா என்னன்னு சொல்றது எனக்குப் புடிக்கல எல்லாமே வெறுப்பா இருக்கு. ஏன் எனக்குக் கல்யாணம் குடும்பம்னு எதுவுமே புடிக்கல...''

''என்னடி பிடிக்கல பிடிக்கலன்னு அதே பாட்டை பாடிட்டிருக்கு, நெஞ்சத் தொட்டு சொல்லு ஹரி அண்ணா மேல உனக்கு காதல் இல்ல?''

............

''உண்மைய சொல்லுடி, நீ பொய் சொல்ல மாட்ட. உனக்குப் பொய் சொல்ல வராதுங்கறத மறந்துடாத.''

............

''சொல்லு வாணி அன்புக்காக சின்ன வயசுல இருந்து ஏங்கின உனக்கு இதவிட ஒரு அருமையான வாழ்க்கை

இந்த ஜென்மத்துல இன்னொரு தடவ அமையாதுடி. உம்மேல எனக்கும் அக்கறையிருக்கு வாணி. எனக்காகக் கொஞ்சம் மனசத் திறந்து வெச்சு யோசிச்சுப் பாரு...''

............

''பேசு வாணி.''

..............

''ஐயோ என்னாலயே தாங்க முடியலையே, அண்ணா வால எப்பிடி... சொல்லுடி அண்ணா மேல உனக்குக் காதலில்ல, ஆசையில்ல...''

ஸ்மிர்த்தியின் அடுக்கடுக்கான கேள்விகளில் அவளைக் கண்கள் கலங்கப் பார்த்த வாணி ''எப்படி இல்லேன்னு சொல்லுவேன்? ஹரி என் உயிரோட ஒன்றிட்டாரே, என் உடம்போட ஒவ்வொரு அணுவுலயும் அவர் கலந்துட் டாரே...'' என்று உண்மையை மறைக்காது சொல்லி யிருந்தாள் வாணி.

''அப்புறம் ஏன் வாணி, இத்தன ஆசைய வெச்சிருக் கியே இதுக்கு மேல் மத்ததையெல்லாம் தூக்கி எறிடி, நீயும் சந்தோஷமா இரு... மத்தவங்களையும் சந்தோஷமா இருக்க விடு.''

''முடியாது ஸ்மிர்த்தி, அத செய்ய முடிஞ்சிருந்தா நீங்கெல்லாரும் இவ்வளவு சொல்லணுமா?''

''காலியா இருக்கற மனசுக்குள்ள உன் உயிருக்குயி ரான ஹரிய ஏத்துக்கறதுக்கு உனக்கு அவ்வளவு கஷ்டமா இருக்கா வாணி?'' என்று கேட்டுப் பார்த்தாள் ஸ்மிர்த்தி.

இன்னும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள்.

மனதார உணர்ந்ததைத் தான்.



ஆனால் வாணியிடம் எதற்கும் பலனிருக்கவில்லை.

கொதிக்கும் காய்ச்சலில் இருந்து மீள மருந்து குடித்தால் போதுமென்பது தெரிந்தும் கண்மூடித்தனமாக வேண்டாமென்று மறுக்கும் குழந்தையைப் போல அடம் பிடிக்கும் வாணியிடம் அதற்கு மேல் தொடர்ந்து பேச ஸ்மிர்த்தியாலும் முடிந்திருக்கவில்லை.

மனம் மிகவும் பாரமாகி விட்டிருக்க, தலையை வலிக்கத் தொடங்கி விட்டிருந்தது.

ஒன்றுமே இல்லாததைப் பெரிதாக எடுத்துக் கொண்டு வருந்துகிறீர்களே என்று அண்ணனுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்ததை நினைத்துப் பார்த்தாள்.

நாளை வரப்போகும் அண்ணனிடம் என்னவென்று சொல்வது.

முதலில் அவரை எப்படி நிமிர்ந்து பார்ப்பது.

விடை தெரியாத எத்தனை எத்தனையோ கேள்வி களைத் தனக்குத்தானே கேட்டுக் கொண்டவளால், ஒன்றிற்குக்கூட இதுதான் தீர்வென்று ஆறுதல் அடைய முடிந்திருக்கவில்லை.

தனக்கே இப்படியிருக்கிறதென்றால் ஏனோ ஹரி அண் ணனை நினைத்துப் பார்க்கக்கூட முடிந்திருக்கவில்லை.

வாணியை நினைத்தால் வேதனையில் தொண்டை வரை கசந்தது.

இப்படிக் கூட ஒரு பெண் இருக்க முடியுமா என்று மனம் வெறுத்துப் போனது.

வாணியைத் தான் அறிந்த நாளிலிருந்து நடந்தவற்றில் முக்கியமானவற்றை நினைவுபடுத்திப் பார்த்தாள்.

அப்பொழுது தான் ஒரு உண்மையை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

வாணி மாறவே இல்லை, அவள் எப்பொழுதும் ஒரே மாதிரி தான் இருக்கிறாள் என்பதே அது.

அன்று காலையில் படுக்கையை விட்டு எழும்போதே உடலோடு மனமும் சேர்ந்து சோர்ந்து போயிருந்தது ஸ்மிர்த்திக்கு.

ஆனால் அதையெல்லாம் கவனித்துக் கொண் டிருக்கும் நிலையில் அவள் இல்லையே.

உடனே படுக்கையை விட்டு எழுந்தவள் வேகமாகக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு குளித்துக் கிளம்பித் தன் அறையிலிருந்து வெளியே வந்தாள்.

''என்னமா காலைலயே எங்க கிளம்பிட்ட?''

தாய் கேட்க, ''ஃப்ரண்ட் வாணியப் பாக்கறதுக்குமா'' என்றாள்.

''சரிதான், இவ்வளவு நேரத்துலயே போக வேண்டிய கட்டாயமென்ன?''

கட்டாயம் இருக்கிறதே, ஆனால் அதை எப்படிச் சொல்ல முடியும்.

''என்னமா?''

பாவி இந்த வாணியின் பிடிவாதத்தால் அவள் உட்பட எத்தனை பேருக்கு சிரமம்,

அது மட்டுமா...

''என்ன ஸ்மிர்த்தி...''

''மம்மி...''



''என்னடி, என்னாச்சு?''

''இல்லமா! அவளுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்ல. அதான் போய்ப் பாத்...''

''உனக்கு மட்டும் உடம்புக்கு நல்லார்க்கோ, இன் னைக்கு உன் புகுந்த வீட்ல இருந்து மதிய சாப்பாட்டுக்கு எல்லாரும் வர்றாங்க தெரியும் தான?''

''ஆமாம் மம்மி...''

''சரிசரி அதுக்குள்ள முகம் வாடிப் போகலேன்னா என்ன, இரு குடிக்க ஏதாவது கொண்டு வர்றேன்.''

''காபி தான் வேணும், ஸ்ட்ராங்கா.''

''சரி சரி.''

சில நிமிடங்களில் காபி கப்புடன் வந்த தாயிடமிருந்து அதை வாங்கிக் கொண்டாள் ஸ்மிர்த்தி.

மகளின் முகம் மிகவும் சோர்ந்திருக்கக் கண்டு ''என்னமா வாணிக்கு உடம்புக்கு என்ன?'' என்று அக்கறையுடன் கேட்டார் ஸ்மிர்த்தியின் தாய்.

''ஒண்ணுமில்லமா காய்ச்சல் தான், இப்பப் பரவா யில்லன்னு சொன்னா...''

''ஒண்ணு பண்ணேன் ஸ்மிர்த்தி, வாணிய வேணும்னா இப்ப உன்கூட அழைச்சுட்டு வந்துடேன் ரெண்டு நாள் இருந்துட்டுப் போகட்டும் அவளுக்கும் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்த மாதிரியிருக்கும், உனக்கும் மாப்பிள்ளையில் லாம போரடிக்காது பாரு, ஏம்மா சிரிக்கற?''

''உங்க மாப்ள இல்லாம நான் இத்தன காலம் இருந் ததே இல்ல பாருங்க...''

''இப்படித்தான் உளறி வைக்கக் கூடாது ஸ்மிர்த்தி, அதுவும் இன்னைக்கு மாப்ள வீட்ல இருந்து வேற எல்லாரும் வர்றாங்க...''

''சரிதான் மம்மி, சும்மா விளையாட்டுக்கு தான் சொன்னேன் விட்டுடுங்க. எப்பப் பாத்தாலும் மாப்ள மாப்ளன்னு...''

''அடடா கோபத்தப் பாரு, சரிசரி போய்ட்டு சீக்கிரம் டிபன் டைமுக்குள்ள வந்துடுமா'' என்று விட்டுத் தாய் உள்ளே செல்ல தானும் குடித்து முடித்த காபி கப்பைக் கீழே வைத்து விட்டுக் கிளம்பியிருந்தாள் ஸ்மிர்த்தி.



# 21

வாணிக்கு ஏற்கனவே போனில் அழைத்துச் சொல்லியிருந்ததால் ஸ்மிர்த்தி காரில் மகளிர் விடுதி சென்று சேர்ந்த போது அங்கு தயாராக இருந்தாள் வாணி.

தன்னை அழைத்துக் கொண்டு கிளம்பியவளிடம் ''ஏன் ஸ்மிர்த்தி சிரமப்பட்ற, இந்த மாதிரி சமயத்துல நல்லா ரெஸ்ட் எடுக்கலாமே'' என்று கேட்டாள் வாணி.

''சரிதான் வாணி, சிலது இப்பிடி இப்பிடிதான் செய்யணும். அதுதான் நல்லதுன்னு கண்கூடாத் தெரிஞ்சே இருந்தாக் கூட அத செய்ய நம்ம வரட்டுப் பிடிவாதம் இடம் கொடுக்க மாட்டேங்குதே என்ன பண்றது?''



தோழியின் வார்த்தைகளில் அவள் தன்னை மறைமுகமாகக் குத்துகிறாள் என்பது தெளிவாகப் புரிந்தது.

ஆனாலும் அதைக் கண்டும் காணாதது போல விட்டு விட்டிருந்தாள்.

''எங்கே போறோம்?''

வாணி கேட்க, ''வீட்டுக்கு'' என்றாள் ஸ்மிர்த்தி.

''எதுக்கு?''

''சும்மா தான், மணி எட்டரை கூட ஆகல. பத்தரைக்கு தான உனக்கு ஆபீஸ். வீட்டுக்குப் போய் டிபன் முடிச்சுட்டு கொஞ்ச நேரம் பேசிட்டிருந்துட்டு பத்து மணிக்குக் கிளம்பினா சரியா இருக்கும்.''

தோழியிடம் பேச நேர்வது இவ்வளவு சிரமமானதாக ஒரு நாள் மாறுமென்று வாணி கனவில்கூட நினைத்துப் பார்த்தாள் இல்லை.

அவள் எதைப் பற்றிப் பேசப் போகிறாள் என்பதும் தெரிந்தே இருக்க, அங்கேயே காரை நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டால் என்னவென்று வெகு தீவிரமாகத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

தன்னால் ஸ்மிர்த்தியும் வேதனைப்படுவதை அவளால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அதுவும் அவள் இப்பொழுதிருக்கும் நிலையில்,

''என்னடி இப்பிடியே இறங்கி ஓடிடலாம்னு இருக்கா?''

.............

''அப்பிடித்தான் இல்லையா.''

''ஏன் ஸ்மிர்த்தி இப்பிடியெல்லாம் பேசற?''

''ஏன்னு தெரியல்ல?''

''இது மனசு சம்பந்தப்பட்ட விஷயம் ஸ்மிர்த்தி, நம்ம பழகின இத்தன வருஷங்கள்ல ஒரு நாளாவது நீ ஏதாவது சொல்லி நான் கேக்காம இருந்திருக்கேனா ஸ்மிர்த்தி?''

''அதே மாதிரி இப்பவும் கேட்டுக்கோயேன் வாணி, ப்ளீஸ்மா...''

..............

''அதான, நீ உனக்குன்னு ஒரு கோட்ட கிழிச்சுட்டு அத விட்டு என்னைக்குமே தாண்டினது இல்லையேடி.

நாந்தான் முட்டாள்த்தனமா என் எல்லை தெரியாம ஏதேதோ கற்பனை செஞ்சு மறுகிட்டிருக்கேன்.''

ஏனோ ஸ்மிர்த்தியின் அந்த வார்த்தைகளில் அதே போல ஹரிவரதன், ஒருமுறை கேட்டது நினைவிற்கு வந்து விட்டிருந்தது வாணிக்கு...

அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதவளாய் கைகளால் முகத்தை மூடிக் கொண்டு கதறி விட்டிருந்தாள்.

தோழியின் நிலையில் அவளை சமாதானப்படுத்த எண்ணி ஒரு ஓரமாய்க் காரை நிறுத்தியிருந்தாள் ஸ்மிர்த்தி.

தான் அறிந்த நாளிலிருந்து எதற்குமே அழுதிராத வாணியின் அப்போதைய நிலையை ஸ்மிர்த்தியாலும் புரிந்துகொள்ள முடிந்தது.

தோழி கதறி அழுவதைக் கண்ட அவளுக்கும் கண்கள் கலங்கி விட்டிருந்தன.



வேண்டுமென்றோ அல்லது வீம்புக்கோ வாணி எதையும் செய்யவில்லையென்பதும் அப்பொழுது தெள்ளத் தெளிவாகப் புரிந்து விட்டிருந்தது.

சின்னஞ்சிறு வயதிலிருந்து அவள் பட நேர்ந்த துன்பங்கள் அவளை இந்த அளவிற்கு மாற்றி விட்டிருக்கிறதென்பதும்,

அது மட்டுமல்லாமல் அது அவளை சராசரி பெண்ணாக வளர விட்டிருக்கவில்லை என்பதும்,

அதெல்லாம் அப்படித்தான் என்றாலும் இப்பொழுது அதிலிருந்து மீள ஒரு வாய்ப்புக் கிடைக்கும்போது, ஒரு பிரமாதமான வாழ்க்கை அவளுக்காகக் காத்திருக்கும் போது அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்குவது ஏன் என்பது தான் ஸ்மிர்த்திக்குப் புரிந்திருக்கவில்லை.

அதோடு ஒரு நல்ல தோழியாக அதை எடுத்துச் சொல்லிப் புரிய வைக்க வேண்டிய கடமை தனக்கு இருக்கிறது என்பதையும் உறுதியாக நம்பினாள்.

தொடர்ந்து சில வினாடிகளிலேயே வாணியின் அழுகை நின்று விட்டிருக்க ஆறுதலாக அவளுடைய கையைப் பிடித்து அழுத்திவிட்டு மீண்டும் காரை ஸ்டார்ட் செய்திருந்தாள்.

அதற்கு மேல் வீடு வந்து சேரும் வரை ஸ்மிர்த்தி எதையும் பேசவில்லை, வாணியும்.

தொடர்ந்து சில நிமிடங்களில் இருவரும் வீடு வந்து சேர்ந்திருக்க, தோழியுடன் தானும் உள்ளே வந்தாள் வாணி.

''வாம்மா வாணி...''

ஸ்மிர்த்தியின் தாய் வரவேற்க ''எப்பிடியிருக்கீங்க ஆன்ட்டி?'' என்று கேட்டாள் வாணி.

''நான் நல்லார்க்கேம்மா உனக்குதான் ஏதோ காய்ச் சல்னு ஸ்மிர்த்தி சொல்லிட்டிருந்தா இப்ப எப்படி யிருக்கு?''

அப்படிச் சொல்லிவிட்டுத் தான் ஸ்மிர்த்தி தன்னைப் பார்க்கக் கிளம்பியிருக்க வேண்டுமென்பது புரிய, ''இப்பப் பரவாயில்ல ஆன்ட்டி'' என்றாள்.

''ஆனா பாத்தா அப்படித் தெரியல, போய் ஸ்மிர்த்தி கூட நீயும் ரெஸ்ட் எடுமா. டிபன் ரெண்டு பேருக்கும் மாடிக்கே குடுத்தனுப்பறேன்'' என்றவரின் வார்த்தை களில் சரியென்று தலையை ஆட்டினாள் வாணி.

அதே நேரம் ''மெதுவா அனுப்புங்கமா ஒண்ணும் அவசரமில்ல'' என்று விட்டுத் தோழியின் கைப் பிடித்து ''வாடி'' என்று தனது அறைக்கு அழைத்து வந்தாள்.

''வா வாணி உக்காரு'' என்றவள் தோழியின் அருகில் தானும் அமர்ந்தாள்.

''இப்பப் பரவாயில்லையா வாணி?''

''ம்.''

''காபி குடிச்சியா?''

''இல்ல.''

''கொண்டு வரட்டுமா?''

''வேண்டாம் டிபன் சாப்பிட்டதுக்கப்புறமே குடிச்சுக் கலாம்.''

''ஏன் ரொம்ப டல்லா இருக்க, நிஜமாவே உடம்புக்கு ஏதாவது...''



''அதெல்லாம் ஒண்ணுமில்ல நல்லாதான் இருக்கேன்.''

''நான் கொஞ்சம் பேசலாமா வாணி, இல்ல உனக்குக் கஷ்டமா இருக்கும்னா வேண்டாம்...''

''சொல்லு.''

''எனக்காக சகிச்சுக்கிட்டுப் பேச வேண்டாம் வாணி, நீயும் கொஞ்சம் மனசு திறந்து கவனிக்கறேன்னாப் பேசலாம்...''

''சரிதான்.''

தோழியின் அந்த ஒரு வார்த்தையே போதுமென் பதைப் போலத் தொடர்ந்தாள் ஸ்மிர்த்தி.

''வாணி, ஹரி அண்ணாவப் பத்தி உனக்கு என்னடி தெரியும்? இன்னைக்கு நீங்க ரெண்டு பேரும் இருக்கற துக்கு என்னுடைய இந்தக் கேள்வியே அபத்தமானது தான். ஆனாலும் உனக்கு சில விஷயங்கள எடுத்துச் சொல்லிப் புரிய வைக்க வேண்டிய கடமை எனக்கிருக் குங்கறதால கேக்கறேன். சொல்லு ஹரி அண்ணாவப் பத்தி உனக்கு என்ன தெரியும்?''

ஸ்மிர்த்தியின் வார்த்தைகளில் அவளைப் பார்த்தாள் வாணி.

ஒரு முழு ஆண் மகனாக அவனிடம் தான் எத்தனை சிறப்புகள்.

அதில் எதைச் சொல்வது, என்னவென்று சொல்வது.

முக்கியமாக அவனைப் பற்றி நினைக்க நேர்ந்தாலே ஒருவித இனம் புரியாத சந்தோஷமும் பரபரப்பும்.

அதே சமயம் இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத வேதனையும் நெஞ்சுக்குள் மாறி மாறித்

தோன்றி அவளை மீளாத் துயரில் ஆழ்த்தும் பொழுது அவளும் தான் என்னவென்று சொல்லுவாள்.

"என்ன வாணி?"

.................

"நமக்கு எதுவுமே சுலபமா கிடைச்சுட்டா அதனோட அருமை தெரியாமமப் போயிடும்னு சொல்லுவாங்க, ஹரி அண்ணாவோட விஷயத்துலயும் உன் நிலம அது தான்னு நினைக்கறேன்..."

ஸ்மிர்த்தியின் வார்த்தைகளில் ஏற்பட்ட விரக்தியால் அவளையறியாமலேயே சிரித்து விட்டிருந்தாள் வாணி.

"என்னடி, ஏன் சிரிக்கற?"

..................

"ஹரி அண்ணாவ எங்க எல்லாருக்குமே எவ்வளவு பிடிக்கும் தெரியுமா வாணி, நம்மகிட்ட சில வார்த்தைகள் பேச மாட்டாரான்னு சொந்தங்கள் முதல் பிஸினஸ் பீப்பிள்ஸ் வரைக்கும் எல்லாரும் எந்த அளவுக்கு எதிர்பார்ப்பாங்க தெரியுமா? அதெல்லாம் சும்மா இல்ல வாணி, ஏன் விட்டா இன்னும் மேல மேல அண்ணாவோட சிறப்புகள சொல்லிட்டே போகலாம்."

"அவரு உன்ன எவ்வளவு விரும்பறார் தெரியுமா? அண்ணா முதல்ல விஷயத்தச் சொன்னதும் எனக்கு சந்தோஷத்துல தலகால் புரியல, தோற்றத்துலிருந்து எல்லா விதத்துலயுமே உங்க ரெண்டு பேருக்கும் எவ்வளவு பொருத்தம் தெரியுமா. புரிஞ்சுக்கோ வாணி நீங்க ரெண்டு பேரும் வாழ்க்கைல இணைஞ்சா உங்க வாழ்க்கை எவ்வளவு பிரமாதமானதா இருக்கும் தெரியுமா."



"அதோட சின்ன வயசுலிருந்து நீ பட்ட துன்பங்களுக்குக் கடவுளா பார்த்து உனக்கு இப்படியொரு அருமையான வாய்ப்பக் குடுத்திருக்கார், அதப் பயன்படுத்திக்கத் தவறிட்டா திரும்பவும் நீ பழைய சேத்துக்குள்ள தான் வாழ்ந்தாகணும். அது மட்டுமா, கிட்ட வந்த சொர்க்கத்த அருமை புரியாம தள்ளி விட்டுட்டோமேன்னு காலம் முழுக்க நீ வேதனைப்பட வேண்டியதாயிடும்."

"அக்கா கல்யாணத்தப்ப ஒரு மாச வேலையா வெளியூர் போன அண்ணா, பதினஞ்சு நாள்லயே எல்லா வேலைகளையும் சிறப்பா முடிச்சுட்டுக் கிளம்பி வந்தவர் இப்ப ஒரு மாச வேலையாப் போய்ட்டு மூணு மாசத்துக்கு மேல ஆகியும் இன்னும் போன வேலை முடியலையாம். ஆனாலும் வேற சில வேலைகளுக்காக முடிவு பண்ணின மாதிரியே இன்னைக்கு இந்தியா திரும்பறார். திரும்பவும் போயாகணும்னு சொல்லிக்கிட்டார்."

"மத்தவங்களுக்கு வேணும்னா வேல இன்னும் முடியாததுக்கான காரணம் தெரியாம இருக்கலாம். ஆனா நமக்கு என்ன காரணம்னு தெரியுமே வாணி, என்னடி நான் பாட்டுக்கு பேசிட்டே இருக்கேன். நான் சொன்னதுல கொஞ்சமாவது உம்மனசுக்குள்ள வாங்கிக்கிட்டயா வாணி?"

தோழியின் மௌனத்தில் இப்பொழுது எரிச்சல் கூட வந்து விட்டிருந்தது ஸ்மிர்த்திக்கு.

"பேசு வாணி."

"இதையெல்லாம் நான் யோசிக்காம இருப்பேனா ஸ்மிர்த்தி."

''சரி யோசிச்சு என்ன முடிவுக்கு வந்த?''

...............

''சொல்லுடி.''

''என் முடிவுல மாற்றமில்ல...''

வாணி சொன்னது தான் தாமதம் ''ஏய் நீ என்ன பைத்தியமா?'' என்று தாங்க முடியாதவலாய்க் கத்தி விட்டிருந்தாள்.

சில வினாடிகள் தான்.

உடனே பழைய நிலைக்கு வந்து விட்டிருந்தவள் தோழியின் முகத்தை நிமிர்த்தி அவளைப் பார்த்துக் கேட்டாள்.

''சொல்லுடி, உனக்கு வேற எந்தப் பிரச்சனையும், அதாவது பயமும் இல்லையே... என்ன புரியலையா மேரேஜ் லைஃப்க்கு அப்புறம் கணவன் மனைவியா வாழ்றதுல... அந்த உறவ நினைச்சு பயப்பட்றியா?''

தோழி என்ன கேட்க வருகிறாளென்பது புரிய, எங்கோ பார்த்தபடி இல்லையென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் வாணி.

''நிஜமா தான சொல்ற?'' என்றவளுக்கு வாணி பழையபடி இல்லையென்றதில் கொஞ்சம் நிம்மதி கூட ஏற்பட்டிருந்தது.

ஆனாலும் என்ன பயன்,

இவள் தான் இல்லாத, வேண்டாத, எதையெதையோ எண்ணிக் கொண்டு, இருக்கிற அருமையான எதிர் காலத்தை வேண்டாமென்று மறுக்கிறாளே மீண்டும் சலிப்பு வந்து விட்டிருந்தது.



''உனக்கு இன்னொன்னு தெரியுமா வாணி?''

''ஹரி அண்ணாவுக்கு சுமிதான்னு ஒரு தங்கை இருக்காங்க, அவங்களோடது லவ் மேரேஜ். அவங்க லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிக்கிட்டதும் வேற யாருமில்ல, அவங்களோட தாய் மாமா மகனையே தான் அதாவது பெரியம்மாவோட அண்ணா பையனத்தான்.''

''ஆனா சுமிதா அக்காவோட புகுந்த வீட்டுக்கும் பெரியப்பா குடும்பத்துக்கும் சுத்தமா ஆகாது.''

''ஹரி அண்ணா பெரியப்பா, பெரியம்மா மேல எல்லாம் எந்தத் தப்புமில்ல, அவங்களப் பொறுத்த வரைக்கும் மத்தவங்க தப்பு பண்ணினாக் கூட அதப் பெரிசு படுத்தாம விட்டுக் குடுத்துப் போற டைப்.''

''பிரச்சனையே சுமிதா அக்காவோட புகுந்த வீட்ல இருக்கறவங்கதான். அதாவது சுமிதாக்காவோட மாம னாரும் அவரோட நாலு மகன்களும்.''

''சுமிதாக்காவோட கணவர் தான் அவங்க வீட்ல மூத்த பிள்ளை, அக்காவும் அவரும் யாருக்கும் தெரியாமப் போய் ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டு வந்துட் டாங்க.''

''சரி இதுக்கப்புறம் இனி என்ன செய்ய முடியும்னு பெரியப்பா வீட்லயும் எல்லாருமே அவங்கள ஏத்துக்க தயாரா தான் இருந்தாங்க, ஆனா அந்த நேரத்துல தான் இன்னொன்னும் நடந்துடுச்சு. அது ரெண்டு வீடு களுக்கும் ஏற்கனவே இருந்த கசப்புகள நிரந்தரப் பகையாவே மாத்திடுச்சு.''

''சுமிதாக்காவுடைய கணவர் தவிர அதாவது மாமனார் அவரோட மூணு பிள்ளைகள்னு யாருமே அவ்வளவு

நல்லவங்க கிடையாது. அளவுக்கதிகமான பணபலமும், ஆள் பலமும் இருக்கறதால யாரையும் மதிக்கறது கூடக் கிடையாது. அவங்க கிராமத்துல அவங்க வைக்கறது தான் சட்டம், ஏன் யாரா இருந்தாலும் அவங்களுக்குக் கட்டுப்பட்டு தான் நடந்தாகணுங்கறது அவங்களப் பொறுத்த வரைக்கும் எழுதப்படாத சட்டம்.''

''அப்படி அவங்க நினைக்கறதெல்லாம் நடக்குறதால நம்மளக் கேக்க யாரு இருக்காங்கன்ற தைரியத்துல தப்புகளையும் அவங்க செய்யத் தயங்கறதில்ல.''

''அதுல ஒண்ணுதான் அந்த வீட்டு ரெண்டாவது பையன் அதே ஊர்ல இருக்கற ஒரு பொண்ணு கிட்டத் தப்பா நடந்துக்கிட்டதும்.''

''அந்தப் பொண்ணும் வேற யாருமில்ல பெரியப்பா வோட டியர் மோஸ்ட் ஃப்ரண்டோட பொண்ணு, அவங்க வந்து பெரியப்பாகிட்ட நடந்ததச் சால்லி அழுதிருக் காங்க.''

இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் பெரியப்பா கொஞ்ச நாளாவே பாக்கறதில்லேங்கறதால ஹரி அண்ணாவப் போய்ப் பேசச் சொன்னார்.

''அப்ப சுமிதாக்கா கல்யாணம் பண்ணிக்கிட்டு அவங்க வீட்டுக்குப் போய் சில நாள் தான் ஆகியிருந்தது.''

''ஆனா அண்ணா போய்ப் பேசியும் அவங்க கேக்காத தோட தேவையில்லாம வேற ஏதேதோ பேசியிருக்காங்க.''

''எங்க வீட்டுப் பையன் மேல தப்பில்லேன்னு சொன் னது மட்டுமில்லாம உங்க தங்கச்சியோட வாழ்க்க எங்க கைலன்னு அண்ணாவையும் பொய் சொல்லச்



சொல்லியிருக்காங்க. பழைய கசப்புகள் பகைன்னு எல்லாத்தையுமே மறந்துட்டு எங்களுக்கு சாதகமா தான் நீங்க பேசணும்னு ஹரி அண்ணாகிட்ட ரொம்பவும் கேட்டுக்கிட்டிருக்காங்க.''

''ஆனா அண்ணா அதுக்கு சம்மதிக்கல, அது மட்டுமல்ல அந்தப் பொண்ணும் எனக்குத் தங்கை மாதிரி தான். ஒரு தங்கையோட வாழ்க்கைக்காக இன்னொரு தங்கையோட வாழ்க்கைய அழிக்க முடியாதுன்னு சொல்லிட்டு வந்துட்டார்.''

''அப்படி வந்தது மட்டுமில்லாம ஊரறிஞ்சு நடந்த அந்தத் தப்புக்குப் பிராயச்சித்தமா அவங்க இரண்டாவது மாமா பையனோட அந்தப் பொண்ணுக்குக் கல்யாணம் நடக்கற வரைக்கும் அண்ணா ஓயல.''

''ஏன் அவங்க பயமுறுத்தி, சட்டப் பூர்வமாப் போய் ஏன் இன்னும் என்னென்னவோ செஞ்சும்கூட அவர் மசியல.''

''செல்வம், செல்வாக்குன்னு ஒண்ணுமே இல்லாத பொண்ண எங்க வீட்டு மருமகளாக்கின உன்ன சும்மா விட மாட்டோம்னு அப்பிருந்து ரொம்பவும் எகிற ஆரம் பிச்சுட்டாங்க. அக்காவோட புகுந்த வீட்ல இருக்கறவங்க.''

''உனக்காகக் கூட உங்கண்ணா பாக்கலையேன்னு சுமிதாக்காவக் குத்திக் குத்திப் பேசி அவங்களையும் மாத்தி சொத்துல பங்கு கேக்கற வரைக்கும் கொண்டு போய்ட்டாங்க.''

''ஆனா அண்ணா அதுக்கும் தயங்கல, ஏன் சந் தோஷமாவே கிட்டத்தட்ட எல்லாத்தையும் குடுத்துட் டார்.''

"வெளியுலகத்துக்குப் பெரிசா ஒண்ணும் தெரியாத அளவுக்கு வீடு கம்பெனியத் தவிர எல்லாத்தையுமே சட்டப்பூர்வமா எழுதி வாங்கிட்டாங்க."

"சரியா சொல்லணும்னா கம்பெனியிலிருந்து வர்ற வருமானத்துல கூடப் பாதிய ஒவ்வொரு மாசமும் செக்காக் குடுத்துட்றார். பிஸினஸ் எக்ஸ்டென்ஷன்ல போயிட்டிருக்கும்போது ஏற்கனவே இன்வெஸ்ட்மென்ட் அதிகமாகும்னு சொல்லிட்டிருந்த போது தான் இந்த சொத்துப் பிரச்சனையும் வந்து சேந்தது."

"எல்லாரும் அவ்வளவுதான் இனிமேல் கஷ்டம்னு நினைச்சுட்டிருக்கறப்ப அண்ணா பிஸினஸ மேலமேல கொண்டு போறதுக்கான எல்லா முயற்சிகளையும் எடுத்தார் எடுத்துட்டும் இருக்கார். ஆனா அதுக்கு அவரு பட்டுட்டிருக்கற சிரமம் அவர நல்லாத் தெரிஞ்சவங் களுக்குப் புரியும்."

"ஏன் அது உனக்கும் தெரியும் வாணி."

"வாழ்க்கைல ஹரி அண்ணா நினைக்கறது எது வானாலும் அத அவரால அடைய முடியும் வாணி. ஏன்னா அவரோட விடா முயற்சியும் திறமையும் அந்த மாதிரி."

"ஆனா உன் விஷயத்துல அப்பிடி முடியல வாணி, ஏன் எ....."

"நான் நாளைக்குக் காலைல ஊருக்குப் போறேன் ஸ்மிர்த்தி" - வாணி.

அவ்வளவு நேரமும் தான் சொன்னவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வாணி திடீரென்று அப்படிச் சொல்வாளென்று கனவிலும் எதிர்பார்க்கவில்லை.



"என்ன சொன்ன கேக்கல?" ஸ்மிர்த்தி.

"நான் நாளைக்குப் பத்து மணி ட்ரெய்னுக்கு பெங்களூர் கிளம்பறேன்..."

"அப்ப இவ்வளவு நேரமும் நான் பேசினதெல்லாம் உன் காதுக்குள்ள கூடப் போகலையா வாணி?"

"அதுதான் ஏற்கனவே சொல்லிட்டேனே என் முடிவுல மாற்றமில்லன்னு" என்று எழுந்திருந்தவளைப் புரியாமல் பார்த்தாள் ஸ்மிர்த்தி.

"நான் கிளம்பறேன் ஸ்மிர்த்தி."

"ஏன்... எங்க."

"ஆபீஸ்க்கு தான்."

"டிபன் சாப்புட்ல?"

"பசிக்கல வேண்டாம்."

"கொஞ்சமாவது..."

"இல்ல நாளைக்குக் காலைல கிளம்பறதுக்கு முன்னாடி கூப்புட்டு சொல்லிட்டுப் போறேன்."

"முடிவே பண்ணிட்டயா?"

"டிக்கட் கூட புக் பண்ணியாச்சு, பெரிய எம்.டி. கிட்டயும் சொல்லியாச்சு."

"அப்ப உன் வேலையெல்லாம் இனிமேல் யார் செய்வாங்..."

"அத நான் பாத்துக்கறேன்னு ஸார் சொல்லிட்டார்." அதோட சின்ன எம்.டி.யும் நாளைலிருந்து ஆபீஸ்க்கு வந்துடுவாரே என்று நினைத்தவளால் அதை மட்டும் சொல்ல முடியவில்லை.

''ஏன் வா...''

''ப்ளீஸ் ஸ்மிர்த்தி புரிஞ்சுக்கோ. சில விஷயங்கள் பேசப்பேச தீர்வும் தெளிவும் கிடைக்கும். ஆனா சில விஷயங்கள் குழப்பங்களையும் பிரச்சனைகளையும் அதிகப்படுத்தத் தான் செய்யும். என் விஷயமும் அந்த மாதிரியானது தான் விட்டுடு.''

''வாழ்க்கைல நீ செஞ்ச உதவிகள என் உயிர் இருக்கற வரைக்கும் மறக்க மாட்டேன் ஸ்மிர்த்தி. ஆனா இனிமேல் என்ன மறக்க முயற்சி பண்ணு. அதுதான் எல்லாருக்குமே நல்லது. போய் சேர்ந்து செட்டிலானதும் ஒரு தடவ கூப்புட்றேன்'' என்றவள்,

''வர்றேன்'' என்று கிளம்பியே விட்டிருந்தாள்.

நடப்பை ஸ்மிர்த்தியால் நம்பக்கூட முடிந்திருக்க வில்லை. அப்படியே உறைந்து போய் விட்டிருந்தாள்.

எவ்வளவு மென்மையான பெண் வாணி.

அவளால் எப்படி இந்த மாதிரியெல்லாம் நடந்து கொள்ள முடிகிறது.

மற்றவர்களின் மனதை சிறு அளவில் கூடப் புண் படுத்த அவளால் முடியாதே.

இப்பொழுது மட்டும் எப்படி...

ஒருவேளை தனது கணிப்பெல்லாம் தவறோ,

அப்படியும் இருக்க முடியுமா.

அனைத்துமே முடிந்து விட்டதைப் போன்ற ஒருவித எண்ணம் தோன்றி வதைக்கத் தொடங்கி விட்டிருக்க, மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.



தனக்கே இப்படியிருக்கிறதென்றால் ஹரி அண்ணாவுக்கு எப்படியிருக்கும்,

அதற்கு மேல் ஸ்மிர்த்தியால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை.

அவளையறியாமலேயே கண்களும் கூடக் கலங்கி விட்டிருந்தன.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

உடனே தெளிந்து நிமிர்ந்து அமர்ந்தாள்.

அது எப்படி அனைத்துமே முடிந்து விட்டதாகும்,

அதுவும் தனக்கு.

வாணி நல்ல தோழிதான்.

ஏன் உயிர்த் தோழியும் தான்.

அதற்காக அவள் தான் வாழ்க்கையே என்றாகி விட முடியுமா.

ஏன் அவளில்லாமல் கடந்த மூன்று மாதங்களை தான் கடக்கவில்லையா என்ன?

அவ்வப்பொழுது அவளுடைய நினைவு வந்தது தான், இல்லையென்று மறுப்பதற்கில்லை.

அதற்காக ஒன்றுமே இல்லையென்று ஆகி விட்டதா என்ன?

இல்லை,

ஒரு போதும் இல்லை.

அந்த வாணியே சொல்லி விட்டுச் சென்றதைப் போல இனிமேல் அவளைத் தான் மறக்க முயன்றுதான் ஆக வேண்டும்.

அது எவ்வளவு சிரமமென்றாலும்,

அண்ணாவிடமும் தகுதியற்ற இடத்தில் அன்பு வைத்து விட்டதற்காக அனைத்தும் முடிந்து போய் விடுவதில்லை. மனதைக் கல்லாக்கிக் கொள்ளுங்கள் என்று எடுத்துச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

என்னதான் ஒரு முடிவிற்கு வந்து விட்டிருந்தாலும், வாணியின் நினைவு ஸ்மிர்த்தியை நிம்மதியாக இருக்க விடவில்லை.

சற்றும் நிலையில்லாமல் தவித்தாள்.

வாணி அப்படிச் சென்றது பாதி துன்பமென்றால், அண்ணனிடம் என்னவென்று சொல்வதென்பது மீதியாக இருந்தது.

அண்ணனாக எதையும் கேட்க மாட்டார்தான் என் றாலும், அவரைக் கண் கொண்டு பார்ப்பது எப்படி?

அனைத்தும் தன்னால் வந்தது.

இந்த வாணிக்காக அண்ணனிடம் வேலைக்குக் கேட்டிருக்கவே கூடாது. தான் மட்டும் அப்படிக் கேட்காமல் இருந்திருந்தால் இப்பொழுது எவ்வளவு துன்பங்கள் மீதியாகியிருக்கும்.

அது மட்டுமா,

யாரோ உள்ளே வரும் அரவம் கேட்க, திரும்பிப் பார்த்தாள்.

தாய் நின்றிருக்க ''என்ன மம்மி?'' என்றாள்.

''என்னன்னா ஏன் இன்னும் டிபன் கூட சாப்புடாம உக்காந்திருக்க? கொண்டு வந்து வெச்சதெல்லாம் அப்பிடியே ஆறிட்டிருக்கு. முதல்ல வாணி எங்க?''



''அவ கிளம்பிட்டா.''

''ஏன், அவ்வளவு சீக்கிரமா...''

''ஏதோ அவசர வேலைன்னு உடனே கிளம்பிட்டா, இதையெல்லாம் எடுத்துட்டுப் போங்க இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சு நானே கீழ வந்து சாப்புட்டுக்கறேன்.''

''சரிதான் இந்த ஹார்லிக்ஸையாவது குடி'' என்று மறுப்பதற்கு இடமளிக்காமல் தாய் கொடுத்த டம்ளரை வேறு வழியின்றி பெற்றுக் கொண்டாள்.

''குடிச்சுட்டு கொஞ்சம் படுத்துக்கோ. அதுக்கப்புறம் உங்க வீட்ல இருந்து வந்துட்டாங்கன்னா அவங்க கூட உக்காந்து பேசிட்டிருக்கணுமில்லையா'' என்று தாய் செல்ல 'ஓ இனி அது வேறா' என்றிருந்தது ஸ்மிர்த்திக்கு.

அதற்குப் பிறகு நேரம் போனதே தெரியவில்லை.

அதாவது தேவையற்றவைகளை யோசித்துக் கொண் டிருக்க வழியில்லாமல், மற்றவர்களின் விருப்பங்களுக்கு அனைத்தையும் செய்ய வேண்டியிருந்தது.

ஆனால் அதெல்லாம் மாலையில் உறவினர்கள் அனைவரும் கிளம்பிச் செல்லும் வரை தான்.

மீண்டும் ஒரு விதமான வேதனை புழுவாக அரிக்கத் தொடங்கி விட்டிருக்க செய்வதறியாது தவித்தாள்.

இந்நேரம் அண்ணன் வந்திருப்பார்.

தனது அழைப்பை அல்லது நேரிலேயே கூடத் தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்.

அவரை எப்படிச் சென்று பார்ப்பது,

என்ன பேசுவது,

எதைச் சொல்வது.

ஏனோ அதற்கு மேல் ஒன்றும் முடியாமல் போய் விட்டிருக்க, அப்படியே படுக்கையில் சாய்ந்திருந்தாள்.



## 22

"வா ஹரி."

"வர்லம்மா எப்படியிருக்கீங்க?"

"நல்லார்க்கோம் ஹரி, நீ ஏன் இப்படி மெலிஞ்சு ஆள் பாக்கவே ஒரு மாதிரியாயிட்ட?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா, இந்தியா வந்துட்டேனல்ல இனி உங்க சாப்பாட்ல ஒரு சுத்துப் பெருத்துட மாட்டேன்..."

"சரிதான் குளிச்சிட்டு வாப்பா, டிபன் எடுத்து வைக்கறேன்."

"அப்பா எங்க?"

"அவரு கம்பெனிக்குப் போயிருக்கார். ஹரி, இப்பக் கொஞ்சம் முன்னாடி தான் கிளம்பினார்."

"சரிதான், ஒரு கப் காபி கிடைக்குமாம்மா உங்க கை பக்குவத்துல."

"இதோ எடுத்துட்டு வர்றேப்பா ஆனா இந்த நேரத்துல காபி சாப்புட்டா அப்புறம் டிபன் எப்பிடி சாப்புடுவ?"



"டிபன் வேண்டாம்மா அப்பா வந்ததும் நைட் டின்னரே சாப்புட்டுக்கறேன்" என்றவன் சில நிமிடங்கள் இருந்து தாய் கொடுத்த காபியை வாங்கிக் கொண்டு நகர்ந்தான்.

நேராக ஆபீஸ் அறைக்கு வந்தவன் இந்தியா வந்ததும் செய்ய வேண்டுமென்று நினைத்திருந்த சில முக்கியமான கம்பெனி வேலைகளை செய்து முடித்தான்.

தான் இல்லாத இந்த மூன்று மாதங்களில் நடந்திருந்த கம்பெனியின் டெய்லி ரிப்போர்ட் பைல்களை எடுத்துப் பார்த்தான்.

பர்ச்சேஸ் ஆடர்கள் பைல்ஸ்,

அதற்கு பதிலளிக்கப்பட்ட விதம்,

அதற்கு எடுத்துக் கொண்ட அவகாசம்.

இப்படித் தான் இல்லாத போது நடந்த அனைத்து வகையான வேலைகளையும் ஒன்று விடாமல் பார்த்தவனால் வாணியை மனதிற்குள் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

தான் இருந்தால் எந்த அளவிற்கு நடக்குமோ அதே போல ஏன் அதை விடவும் சிறப்பாகவே வேலைகளனைத்தும் நடந்திருந்ததைப் பார்த்தவனால் சந்தோஷப்பட முடிந்திருக்கவில்லை.

இடைவிடாது மனதை அரிக்கும் அந்த வேதனை மீண்டும் தொடங்கி விட்டிருக்க, மிகவும் முயன்றே மனதை நடப்பிற்குத் திருப்பினான்.

இனி தன்னால் இந்தப் பிறவியில் மனம் விட்டுச் சிரிக்கவோ, பழையபடி இயல்பாக இருக்கவோ முடியாதென்பது அந்த வினாடியில் தெள்ளத் தெளிவாகப் புரிந்து விட்டிருந்தது.

ஆனால் இது எத்தனை நாட்களுக்கு...

கழிவிரக்கம் கொள்ளத் தொடங்கிய மனதை முயன்று நடப்பிற்குக் கொண்டு வந்தவன் மீண்டும் வேலைகளில் கவனத்தை செலுத்தத் தொடங்கி விட்டிருந்தான்.

மேலும் ஒரு மணி நேரமும் இருந்து முக்கியமான வேலைகளை முடித்தவன் பிறகு குளித்து முடித்துக் கீழே இறங்கி வந்தான்.

கம்பெனியிலிருந்து தந்தை வந்திருக்கக் கண்டு அவரை நோக்கிச் சென்றான்.

''வா ஹரி, எப்ப வந்த?''

''அஞ்சு மணிக்குப்பா, ஆபீஸ்ல இருந்து எப்ப வந்தீங்க?''

''இப்பதான் பத்து நிமிஷமாச்சு, போன வேலை நல்லபடியா நடந்ததா...''

''பரவாயில்ல ஆனாலும் திரும்பவும் போக வேண்டியது வரும்.''

மகனை அவனறியாமல் கவனித்தார் கமலநாதன்.

வித்யாசங்கள் வெளிப்படையாகவே தெரிந்தன.

முக்கியமாக எந்த நேரத்திலும் அவனிடமிருக்கும் அந்த உற்சாகம் எங்கே போயிற்று.

என்னதான் மகன் தன்னை வெளியே இயல்பாகக் காட்டிக் கொள்ள முயன்று ஓரளவு அதில் வெற்றியும் பெற்றிருந்தாலும் கூட, சில மாதங்களாகவே மகனறியாமல் அவனைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த கமலநாதனுக்கு கிட்டத்தட்ட அனைத்தும் தெரிந்திருந்தன.



''சாப்புட்லாமா ஹரி?''

''ஆமாம் வாங்க'' என்று நடந்த மகனைப் பின் தொடர்ந்த கமலநாதன், ''இங்க கம்பெனில வேலைகள் எல்லாமே பிரமாதமா நடந்துட்டிருக்கு'' என்றார்.

''சரிதான், பைல்ஸ் பாத்துட்டு தான் வர்றேன்.''

கணவனும் மகனும் வந்து சாப்பிட அமர, பரிமாறினார் வசந்தி.

''இதுக்கெல்லாம் காரணம் அந்தப் பொண்ணு வாணி தான் ஹரி. எனக்குக் கூட நீ கிளம்பும்போது புதுசா வந்த பொண்ண விட்டுட்டுப் போறியேன்னு கொஞ்சம் தயக்கம் தான். சரிதான் மத்த வேலைகள் எல்லாத்தையும் விட்டுட்டு நீ வர்ற வரைக்கும் நான் இருந்து எல்லாத்தையும் பாத்துக்க வேண்டியது தான்னு கூட நினைச்சுட்டிருந்தேன். ஆனா அது எதுக்குமே அவசியமில்லாமப் போயிடுச்சுப்பா. அந்த அளவுக்கு அந்தப் பொண்ணு வாணி காலைல எட்டரைக்கு வந்தா நைட்டு எட்டரை வரைக்கும் இருந்து ஒரு வேல விடாம எல்லாத்தையும் பிரமாதமா கவனிச்சுக்கிட்டா. அந்தப் பொண்ணு வயசுக்கு அவ செஞ்ச வேலைகளையும், திறமையையும் நிச்சயம் பாராட்டித் தான் ஆகணும்...''

தந்தை பாட்டுக்கு சொல்லிக் கொண்டே போக ஒரு சிறு புன்னகையுடன் கூடிய தலையசைப்புடன் அதை ஆமோதித்தான் ஹரிவரதன்.

''ஆனா...''

''என்னப்பா சொல்லுங்க?''

''வாணி நாளைலிருந்து வேலைக்கு வரமாட்டா ஹரி, நம்ம கம்பெனி ரூல்ஸ் படி டூ மந்த்ஸ் ரெஸிக்னேஷன்

லெட்டர ரெண்டு மாசத்துக்கு முன்னாடியே குடுத்துட்டா.''

''அந்தக் கணக்குப்படி பார்த்தா இன்னைக்கு தான் அவளோட லாஸ்ட் வொர்க்கிங் டே, அதே மாதிரி இன்னைக்குக் கிளம்பும்போது சொல்லிட்டும் போய்ட்டா.''

''சரிதான்.''

''என்னப்பா இப்படிச் சொல்ற? நானும் இந்த சின்ன விஷயத்த நீ அங்கிருக்கும்போது சொல்லிட்டிருக்க லேன்னா என்னன்னு விட்டுட்டேன். இந்தப் பொண்ணு கிளம்பிட்டா இனி இவளோட இடத்துக்கு இன்னொருத்தர அப்பாயின்ட் பண்ணனுமே...''

''சரிதான்பா, காலைல பாக்கலாம்.''

''ஆனாலும் ட்ரெயினிங் குடுத்து வர்றவங்க எல்லாத்தையும் கத்துக்கற வரைக்கும்...''

''அப்புறம் என்னப்பா செய்ய முடியும், அதோட ரெண்டாயிரம் பேர் வேலை செய்யற கம்பெனில ஒருத்தர் வேலைய ரிஸைன் பண்ணிட்டுப் போறாங்களேன்னு நீங்க இவ்வளவு கவலைப்பட வேண்டியதில்ல.''

''நிஜமாவே கவலைப்பட வேண்டியதில்லேங்கறியா?''

தந்தையின் கேள்வியில் அவரைப் பார்த்தான் ஹரிவரதன்.

கேள்வி தவிர, அவரது முகத்தில் வேறு எந்த வித்யாசமும் தெரியாததில் மீண்டும் உண்பதில் முனைந்தான்.

மகனின் நிலை புரிய, அதற்கு மேல் அவனுடைய மனதை சிரமப்படுத்த வேண்டாமென்று அவரும் எதையும் பேசவில்லை.



அந்தப் பெண் வாணியும் மகனும் விரும்புகிறார்கள். அவர்களுக்கிடையில் ஏதோ பிரச்சனை நடந்து கொண்டிருக்கிறது என்னுமளவில் அவருக்கும் அனைத்தும் தெரிந்தே இருந்தன.

சில நிமிடங்களில் உணவு முடிந்து மகன் தன்னுடைய அறையை நோக்கிச் செல்ல, ''உங்கிட்டக் கொஞ்சம் பேசலாம்னு பாத்தேன் ஹரி'' என்றார் கமலநாதன்.

''ரொம்பவும் முக்கியமான விஷயமாப்பா?''

''அப்படியொன்னுமில்ல.''

''அப்பக் காலைல பேசிக்கலாம். கொஞ்சம் டயர்டா இருக்கு'' என்றவனை அதற்கு மேல் அவர் கட்டாயப்படுத்தவில்லை.

மகனுக்கு ஃப்ளாஸ்க்கில் பாலுடன் வந்த மனைவி ''தூங்கப் போறான்'' என்றார் கமலநாதன்.

''பால் எடுத்துக்காமப் போய்ட்டானே.''

''இன்டர்காம்ல அழைச்சுச் சொல்லிடு'' என்ற கணவனின் வார்த்தைகளில் அப்படியே செய்தார்.

''வந்து எடுத்துக்கறேன்னு சொன்னான்'' என்று ரிஸீவரை அதனிடத்தில் வைத்துவிட்டு வந்த மனைவியைப் பார்த்தார் கமலநாதன்.

''என்னங்க?''

''ஹரி கிட்ட ஏதாவது வித்யாசம் தெரியுதா?''

''எத்தனையோ டென்ஷன் பாவம் அவனுக்கும்...''

''சரிதான், உனக்கு வரப் போற மருமகள் மேல உனக்கு ஏதாவது எதிர்பார்ப்புகள் இருக்கா?''

''ஏங்க இப்படிக் கேக்கறீங்க?''

''சொல்லு?''

''ஹரியோட மனசுக்குப் புடிச்ச பொண்ணா இருக்கணும், அவ்வளவுதான்.''

''வாணியப் பத்தி என்ன நினைக்கற?''

''யாரு அவனோட பி.ஏ. ஸ்மிர்த்தியோட...''

''ஆமாம் அந்தப் பொண்ணே தான்.''

''ஏன், எதுக்கு கேக்கறீங்க?''

''அட சொல்லுமா...''

''எல்லா விதத்துலயும் ஹரிக்குப் பொருத்தமான பொண்ணு தான், ஏன் கேக்கறீங்க?''

''அந்தப் பொண்ண உனக்குப் பிடிச்சிருக்கா?''

''நான் அந்த மாதிரி நினைச்சுப் பாத்ததில்ல. ஆனா நினைச்சுப் பாத்தாலும் இயல்பா இருக்கு...''

''அப்பப் பிடிச்சிருக்குன்னு சொல்லு.''

''சரிதான், ஆனா ஏன்...''

''ஏன்னா வாணி தான் உன் வருங்கால மருமகள்.''

''எப்... அப்படியா!''

''என்னமா சொல்லு?''

''அந்தப் பொண்ணு...''

''ம்.''

''என்னால நம்பவே முடியலைங்க... அது சரி உங்களுக்கெப்படித் தெரியும்?''



''அந்தப் பொண்ணு வேலைக்கு சேந்த இந்த அஞ்சாறு மாசமா நானும் எல்லாத்தையும் பாத்துட்டு தான இருக்கேன்.''

''ஓ அப்ப ஹரி உங்ககிட்ட சொல்லலையா?''

''அவன் எப்பிடி சொல்லுவான்?''

''ஏன்?''

''அப்படியே சொன்னாலும் நீதான எந்நேரமும் அவனோட கல்யாணத்தப் பத்தியே பேசிட்டிருக்க உங்கிட்ட தான் முதல்ல சொல்லுவான்...''

''சரிதான், அழுத்தக்காரன் இப்பப் பால் எடுக்க வர்றானில்ல கேக்கலாம்'' என்று சந்தோஷத்தில் சொன்ன மனைவியிடம் ''வேண்டாம்மா'' என்றிருந்தார் கமலநாதன்.

''ஏங்க?''

''அவங்க ரெண்டு பேருக்குள்ளயும் இப்ப ஏதோ பிரச்சன. இந்த நேரத்துல கேட்டா அவன் பிடி கொடுத்துப் பேச மாட்டான். நாளைக்குப் பேசிக்கலாம்.''

''என்ன நீங்க ஏதேதோ சொல்றீங்க'' என்றவர் உடனே ''சரிதான்'' என்றார்.

''என்னமா?''

''எவ்வளவு அடக்கமான, அழகான பொண்ணு...''

''அது மட்டுமில்லமா அறிவுலயும் அவள மிஞ்ச யாருமில்ல'' என்று கமலநாதன் அவர் அறிந்த வரையிலும் அனைத்தையும் பெருமையுடன் சொல்ல, ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டார் வஸந்தி.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாக அன்றும் தோழியைப் பார்க்கக் கிளம்பி விட்டிருந்தாள் ஸ்மிர்த்தி.

முதல் நாளைப் போல அல்லாமல் அதிகாலையி லேயே கிளம்பிச் சென்றாள்.

அவள் எண்ணி வந்தது சரியே என்பதைப் போல, மூட்டை முடிச்சுகளுடன் விடுதியைக் காலி செய்யத் தயாராய் இருந்தவளை உணர்ச்சியற்ற முகத்துடன் எதிர் கொண்டாள்.

அந்த நேரத்தில் தன்னை அங்கு கண்ட வாணிக்கு அதிர்ச்சிதான் என்பது அவளுடைய முகத்திலேயே தெரிந்தது.

ஆனால் அதற்கெல்லாம் முக்கியத்துவம் கொடுக்கும் மனநிலையில் ஸ்மிர்த்தி இருக்கவில்லை.

''உங்கிட்ட கொஞ்சம் பேசணும்'' என்றாள்.

''எனக்கு லேட்டாச்சு, நான் கிளம்பணும்'' வாணி.

''உன்னக் கிளம்ப வேண்டாம்னு நான் சொல்லவே இல்லையே வாணி, எனக்காக ஒரு வேலைய மட்டும் நீ செய்ய வேண்டியதிருக்கு அத மட்டும் செஞ்சுட்டுப் போயிடு.''

அப்படிச் சொன்னவளை என்னவென்பதைப் போலப் பார்த்தாள் வாணி.

சொல் என்பதைப் போலவும்,

''நான் செஞ்ச தப்புக்கு இப்ப நானே அனுபவிச்சுட் டிருக்கேன் எனக்காக ஒண்ணே ஒண்ண மட்டும் நீ செஞ்சு தரணும்.''

''சொல்லு.''

''உனக்கு அண்ணாகிட்ட வேல வாங்கிக் குடுக்கற துக்கு நான் எவ்வளவு முயற்சி எடுத்துக்கிட்டேன்னு



ங்கிட்ட அப்ப நான் சொல்லல வாணி, சொன்னா ங்க நீ வேலயே வேண்டாம்னு சொல்லிடுவியோங்கற யம் தான்.''

தான் மட்டும் அதை அப்பொழுதே சொல்லியிருந் ால் வாணி இப்பொழுது கிளம்புவதைப் போல வேறு வலை தேடிக் கொண்டு கிளம்பியிருப்பாள். இப்பொழுது னைவருமே நிம்மதியாகவும் இருந்திருக்கலாம் என்று காலங் கடந்து தோன்றிய ஞானோதயத்தை முயன்று தனக்குள் கட்டுப்படுத்திக் கொண்டு ''என்ன செய்வியா?'' என்று கேட்டாள்.

''சொல்லு ஸ்மிர்த்தி.''

''அண்ணாகிட்ட வந்து ஒரு வார்த்த சொல்லிட்டுக் கிளம்பிக்கோ.''

''ம்கூம் முடியாது.''

''ஏன்?''

''ப்ளீஸ் ஸ்மிர்த்தி என்னக் கம்பல் பண்ணாத, என் னால முடியாது.''

''அதான் ஏன்னு கேக்கறேன்.''

''தெரியல, ஆனா நீ சொல்றத என்னால செய்ய முடியாது விட்டுடு ப்ளீஸ்.''

''சரிதான் வாணி, நீயும் கூட எவ்வளவு சுயநலமா மாறிட்ட. மனசுக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா...''

''ஏன் ஸ்மிர்த்தி இப்பிடியெல்லாம் பேசற?''

''பின்ன எப்பிடிப் பேசச் சொல்ற, இல்ல எப்பிடிப் பேச முடியும்?''

''புரிஞ்சுக்கோ ஸ்மிர்த்தி, அதத் தவிர நீ வேற என்ன சொன்னாலும் கேக்கறேன்.''

''நல்லாப் பேசக் கத்துக்கிட்ட வாணி நீ கிளம்பறத அண்ணாவுக்கு சொல்லிட்டுப் போயிடு எனக்கு அது போதும்.''

''நான் பெரிய எம்.டி.கிட்ட சொல்லிட்டேன்.''

''அவருகிட்ட சொல்லிட்டாப் போதுமா, உனக்கு வேல குடுத்தது ஹரி அண்ணா. நீ அவருகிட்டயும் ஒரு வார்த்த சொல்லிட்டுப் போறது தான் நியாயம்.''

''இல்ல நான் பெரிய எம்.டி.கிட்டயே...''

''எனக்காகக் கடைசியா இத ஒன்ன செய்யக் கூடாதா வாணி.''

..........

''என்னென்னவோ எதிர்பார்த்தேன் கடைசிக்கு இதயாவது...''

''சரி சொல்றேன்.''

வாணியின் சம்மதத்தில் தோன்றிய சந்தாஷத்தை வெளிக்காட்டாது ''சரி கிளம்பு'' என்றாள்.

..........

''என்ன பாக்கற, நானே அழைச்சுட்டுப் போய்ட்டுக் கொண்டு வந்து விட்டுட்டுப் போயிட்றே இல்லன்னா இப்பவே எல்லாத்தையும் எடுத்துக்கோ. அப்பிடியே ரயில்வே ஸ்டேஷன்ல வேணும்னாலும்...''

''இல்ல வேண்டாம் இங்க வந்துட்டே கிளம்பிக் கறேன்'' என்ற வாணியை ''சரிதான் உன் இஷ்டம்'' என்று



தன்னுடன் காரில் அழைத்துக் கொண்டு நேராக ஸ்மிர்த்தி சென்ற இடம் பெரியப்பா வீடு அதாவது ஹரிவரதனிடம்,

முதல் முறை வந்திருந்தபோது டிரைவர் நிறுத்தியது போலவே இரு அரை வட்டப் பாதைகளின் தொடக் கத்தில் காரை நிறுத்தியிருந்த ஸ்மிர்த்தி ''இறங்கு'' என்றாள்.

ஸ்மிர்த்தியின் உந்துதலில் இறங்கியிருந்தாளே தவிர அதற்குப் பிறகு கால்கள் இரண்டும் அதே இடத்தில் வேரோடிப் போயின வாணிக்கு.

கூடவே கை கால்களும் சில்லிட்டுப் போயின.

ஹரிவரதனைப் பார்க்கப் போகிறோமென்ற எண்ணம் அவள் அத்தனை நாட்களும் பட்ட ஒட்டுமொத்த வேதனையையும் அந்த நிமிடத்தில் பட வைத்து விட்டிருந்தது.

மற்ற நாட்களில் என்றால் தோழிக்காக உருகியிருப் பாளோ என்னவோ, ஆனால் அப்பொழுதிருந்த மன நிலையில் வாணியின் நிலை ஸ்மிர்த்திக்கு எந்தவித அனுதாபத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லை.

மாறாக ஒருவிதத் திருப்தியையே ஏற்படுத்தியிருந்த தெனலாம்.

''என்ன வாணி வா.''

தோழியின் அழைப்பில் அவளைப் பார்த்த வாணி ''அட என்னாச்சு?'' என்று மீண்டும் அவள் கேட்ட கேள்வி யில் வேறு வழியில்லாமல் தொடர்ந்தாள்.

வாணியுடன் வரவேற்பறையை அடைந்த ஸ்மிர்த்தி அங்கு சோபாவில் அமர்ந்திருந்த பெரியப்பா

பெரியம்மாவின் ஆச்சரியம் கலந்த பார்வையை எதிர்கொண்டாள்.

''என்னடாம்மா இந்நேரத்துக்கு'' என்றவர்கள் அதற்குப் பிறகு தான் அவளுக்குப் பின்னே வந்த வாணியை கவனித்திருந்தனர்.

''அட ஃப்ரண்ட்ஸ் ரெண்டு பேரும் காலைலயே வந்துட்டிங்க, வாங்க வாங்க'' என்று முதலில் வசந்தி வரவேற்க, காலை வணக்கம் சொன்னாள். வாணி இருவருக்கும் பொதுவாகத்தான்.

''அண்ணா எங்க பெரியம்மா?''

ஸ்மிர்த்தி கேட்க, ''மேல அவன் ரூம்ல இருப்பாம்மா'' என்றார் வஸந்தி.

''வா வாணி உக்காரு...''

''இருங்க பெரியம்மா அதுக்கு முன்னாடி அண்ணா கிட்ட வாணி ஏதோ சொல்லணுமாம் விட்டுட்டு வந்துட்றேன்'' என்று தோழியின் கையைப் பிடித்திருந்த ஸ்மிர்த்தி ''அட என்னாச்சு வாணி வா'' என்று புன்னகையுடன் அழைத்துக் கொண்டு போனாள்.

இறுகியிருந்த தோழியின் பிடி உன் மறுப்பிற்கு நான் மதிப்பளிக்கப் போவதில்லை என்று சொல்லாமல் சொன்னது.

தொடர்ந்து சில வினாடிகளில் வாணியுடன் ஹரிவரதனின் அறையை அடைந்திருந்த ஸ்மிர்த்தி வாயிலில் நின்று ''அண்ணா'' என்று அழைத்தாள்.

மேலும் சில முறையும் அழைத்தவள் அண்ணன் வருவது கண்டு ''வா வாணி'' என்று தோழியின் கையைப் பிடித்து உள்ளே இழுத்தாள்.



''அட ஸ்மிர்த்தி, என்ன இந்த நேரத்துக்கு, மாப்ளகிட்டிருந்து நல்ல பழக்கங்களையெல்லாம் கூட கத்துக்கிட்ட போலிருக்கு?'' என்றவன் அதற்குப் பிறகுதான் அவளுக்குப் பின்புறமாக நின்றிருந்த வாணியை கவனித்தான்.

''ஏன் அண்ணா அப்படிச் சொல்றீங்க?'' என்றவள் ''அப்புறம் நல்லாக்கீங்களா, எப்ப வந்தீங்க?'' என்று கேட்டாள்.

''பின்ன இந்த நேரத்துலையே எழுந்துட்டியே'' என்றவன் ''எனக்கென்ன இருக்கேன்'' என்றான்.

அண்ணனின் வார்த்தைகளில் விரக்தி தென்படுகிறதோ என்று நினைத்தவள் ''என்னண்ணா நேரத்துலயே கிளம்பிட்டிங்க?'' என்று கேட்டாள்.

''ஆபீஸ்க்கு தான்.''

''என்னது எட்டு மணி ஆபீஸ்க்கு ஆறு மணிக்கேவா?''

''என்ன பண்றது, ரொம்ப ஸின்ஸியரா இருந்தே பழகிப் போயிடுச்சு'' என்ற அண்ணனின் வார்த்தைகள் இப்பொழுது என்னுடன் சேர்ந்து சிரிக்க வா என்றழைப்பதைப் போலிருந்தது.

''சரிதான், இப்பிடிப் பேசிப் பேசியே சிலர் வாழ்க்கைய ஓட்டிடறாங்க...''

''யாரோ சிலர் தான, சரிதான்.''

''அண்ணா.''

''ம்.''

''வாணி உங்ககிட்ட ஏதோ பேசணுமாம்.''

ஸ்மிர்த்தியின் வார்த்தைகளுக்குப் பிறகு சில வினாடிகள் அங்கு அமைதி நிலவியது.

அதற்குப் பிறகு "பெரியம்மா கூப்புடறாங்க நான் கீழ போறேன்" என்று ஸ்மிர்த்தியும் அங்கிருந்து சென்று விட்டிருக்க நேரடியாக ஹரிவரதனின் கவனத்திற்கு வந்திருந்தாள் வாணி.

நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொள்ள எங்கே அந்த சத்தம் எதிரிலிருக்கும் ஹரிவரதனுக்கே கேட்டு விடுமோ என்று கூடப் பயந்து போனாள் வாணி.

தலையைக் கூட நிமிர்த்த முடிந்திருக்கவில்லை என்னும் பொழுது இனி அவனைப் பார்ப்பது எங்கே,

குனிந்தபடி தரையையே பார்த்துக் கொண்டிருந்த வளைப் பார்த்த ஹரிவரதனுக்கும் ஏனோ அவளிட மிருந்து பார்வையை அகற்றிக் கொள்ள முடிந்திருக்க வில்லை.

முகம் ஏன் இவ்வளவு களையிழந்து கிடக்கிறது.

முன்பிருந்த உற்சாகமெல்லாம் எங்கே போயிற்று.

பார்க்கவே மெலிந்து அவ்வளவுதான் இனி ஒன்றுமே இல்லையென்பதைப் போல் அல்லவா தெரிகிறாள்.

தன்னைத்தான் வதைக்கிறாள் என்று பார்த்தால் அவளும் ஒன்றும் நிம்மதியாக இருப்பது போலத் தெரியவில்லையே.

மேலும் சில வினாடிகளும் அதே நிலை தொடர, அதற்கு மேல் முடியாதவனாய்த் தொண்டையைச் சறுமி நடப்பை உணர்த்தினான் ஹரிவரதன்.

அந்த வினாடியில் வாணியும் அவனை நிமிர்ந்து பார்த்திருந்தாள்.

ஏனோ இருவராலுமே பார்வையை அகற்றிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.



ஹரிவரதனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்தைப் பார்த்த வாணிக்குக் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

ஆனாலும் உதட்டைக் கடித்துத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முயன்றவள், ஓரளவு வெற்றியும் பெற்றாள்.

"என்ன பேசணும், இல்ல ஒண்ணுமே இல்லையா?"

இன்னொரு முறை உன்னைப் பார்க்க நான் விரும்பவில்லையென்று அவன் கடைசியாக சொன்னது தான் அப்பொழுது நினைவிற்கு வந்திருந்தது வாணிக்கு.

"நான்... நான் வெளியூர் கிளம்பறேன். வேற வேல.........."

"இதை ஏன் எங்கிட்ட சொல்ற?"

அப்படிக் கேட்டவனை இப்படி சொன்னால் என்ன செய்வது என்பதைப் போலப் பார்த்தாள் வாணி.

"இல்ல... உங்ககிட்ட ஒரு வார்த்த சொல்..."

"நான் கேட்டதத் தான் குடுக்க முடியாதுன்னு சொல்லிட்ட, கடைசிக்கு நான் சொன்னதக் கூடவா செய்ய முடியல?"

கடவுளே இவன் எதைப் பற்றிக் கேட்கிறான்.

"உன்ன இன்னொரு தடவ பாக்க விரும்பலேன்னு கடைசியா பாத்தப்பவே சொல்லியிருந்தேனே."

தான் எண்ணியது சரியே என்பதைப் போல அவனும் அதையே சொல்ல, மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வந்திருந்தது.

"சரி அவ்வளவுதான்னா கிளம்பிக்கோ."

"நீங்க சந்தோஷமா இருக்கணும் என்ன மறந்துட்டு இன்னொரு கல்யாணம்..."

"கிளம்பறியா."

கோபத்துடன் கத்தியவனை "ஏன் இப்படியெல்லாம் பேசறீங்க?" என்று கேட்டாள்.

"கிளம்புன்னு சொன்னேன்."

"ஹரி..."

"போ, நானும் விடுதலைக்காக தான் முயற்சி பண்ணிட்டிருக்கேன் கிளம்பு."

ஹரிவரதனின் வார்த்தைகளில் அப்படியே அதிர்ச்சி யில் உறைந்து போய் விட்டிருந்தாள், வாணி.

"அப்பிடின்னா..." என்று ஈனஸ்வரத்தில் கேட்டாள்.

"நீ என் கூட இல்லாத இந்த உலகத்துல இனி எனக்கு மட்டும் என்ன இருக்கு. கடமைகளுக்காக வாழ வேண்டியதுதான். ஆனா அது கூட ரொம்ப நாளைக்கு முடியும்னு தோணல..."

"ஏன் ஹரி இப்பிடியெல்..."

இத்தன நாளா நான் பட்டுட்டிருக்கற வேதனை எதையும் ஈடுபாடோட செய்ய முடியாம ஏன் சாப்பிட தூங்கன்னு எதுவும் முடியாம நடைப்பிணமா தான் வாழ்ந்துட்டிருக்கேன்.

"இதெல்லாம் கூட எனக்குள்ள இருக்கறது தான், யாருக்கும் தெரியப் போறதில்ல. ஆனா கவனக் குறை வால தொழில்... ஏன் எல்லாமே மீட்டெடுக்க முடியாத பாதாளத்துக்குப் போயிடும் போ..."



அவனையே அறியாமல் சொல்லிக் கொண்டிருந் தவன் திடீரென என்ன நினைத்தானோ, "இதையெல் லாம் நான் ஏன் உங்கிட்ட சொல்லணும்?" என்று அவ் வளவு நேரம் பேசியதற்கும் சேர்த்து கோபம் கொண்ட வனாய் உறும, தாங்கொணாத வேதனையுடன் பார்த் தாள் வாணி.

"போ எனக்கு முன்னாடி நிக்காத."

'விடுதலைக்காக முயன்று கொண்டிருக்கிறானாமே.'

'தான் உடன் இல்லாத உலகத்தில் அவனுக்கும் ஒன்றுமே இல்லையாமே.'

ஹரிவரதனின் அந்த வார்த்தைகளே மீண்டும் மீண் டும் பேரொலியாய்க் காதுகளுக்கு ஒலித்துக் கொண்டே இருக்க அந்த வார்த்தைகள் தந்த அதிர்ச்சியிலிருந்து அவளால் துளியும் மீள முடிந்திருக்கவில்லை.

ஏன் அந்த அதிர்ச்சி அலைகள் இப்பொழுது மூளையை அடைந்து அது கண்ணீரையும் வரவழைத்திருந்தது.

சுற்றி நடக்கும் எதையுமே உணர்ந்து கொள்ள மாட் டாதவளாய்க் கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வழிய தனக்கு முன்னே நின்றிருந்த வாணியைப் பார்த்த ஹரிவரதனாலும் அதற்கு மேல் கோபத்தைப் பிடித்து வைக்க முடிந்திருக்கவில்லை.

எதிரே நிற்பவளை அப்படியே அள்ளித் தனது மார் போடு அணைத்துக் கொள்ள வேண்டும் போலத் துடித்த மனதையும் அதை வெகு தீவிரத்துடன் செயல்படுத்த உயர்ந்து விட்டிருந்த கரங்களையும் அரும்பாடு பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

வேண்டாமென்று தூக்கி எறிந்து விட்டுப் போகத் துணிந்தவளைத் தன்னால் மறக்கத்தான் முடியவில்லையென்றாலும் அதற்கு மேலும் வெட்கம் கெட்டுப் போய் எந்த அளவிற்குத் துணிந்து விட்டோமென்று தனக்குள் குறுகிப் போனான்.

அது மட்டுமல்லாமல் என்னதான் சற்று முன் எதையும் மிகைப்படுத்தாமல் ஏன் அவனளவில் உள்ளதை மிகவும் குறைத்தே என்றாலும் அதை அப்பொழுது தான் சொல்லியிருக்கக் கூடாதென்றே தோன்றியது.

அதுவும் இந்த அளவிற்கு மனதைத் திறந்து காட்டியும் கூட அதற்கு மதிப்பில்லையென்றால்,

ஏனோ அதற்கு மேல் ஹரிவரதனால் எதைப் பற்றியும் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை.

ஏன் அவ்வளவிற்குப் பிறகும் கூடத் தன்னைப் புரிந்து கொள்ள மாட்டாளா என்று ஏங்கிய மனதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு, முயன்று வரவழைத்த சாதாரண குரலில் ''இனியும் என்ன கிளம்ப வேண்டியதுதான?'' என்று கேட்டான்.

''ஹரி...''

அழுகையில் உதடு துடிக்க அழைத்தவளைப் பார்க்க முடியாமல் எங்கோ பார்த்தான் ஹரிவரதன்.

''இல்ல ஹரி, நான் போகல. ஏன் எப்பவுமே போக மாட்...''

வாணியின் வார்த்தைகளில் இப்பொழுது விரக்தியுடன் சிரித்தான் ஹரிவரதன், அதாவது சிரிக்க முயன்றான்.



ஏதோ போனால் போகிறதென்று ஏற்றுக் கொள்ள இதென்ன விளையாட்டா.

வாழ்க்கையல்லவா.

அதிலும் வாணியிடம் ஹரிவரதன் எதிர்பார்ப்பே வேறு.

அவன் வாணியை உயிருக்குயிராய் நேசித்தான்.

அவளுக்காக உருகினான்.

அவளில்லாத உலகில் தனக்கும் ஒன்றுமே இல்லையென்பதை ஆத்மார்த்தமாக உணர்ந்தான்.

அவனுடைய நிலையே அப்படியிருக்க, அதை விடப் பல மடங்கு நேசத்தையும், காதலையும் அவன் வாணியிடமிருந்து எதிர்பார்த்தான்.

அதைத் தவிர மற்ற எதையும் ஏற்றுக் கொள்ளும் ஏன் கவனிக்கும் மனநிலையில் கூட அவன் இருக்கவில்லை.

''ஹரி நா...''

''கிளம்புன்னு சொன்னேன்'' ஹரிவரதன்.

''ப்ளீஸ் நான் சொல்...''

''வேண்டாம் வாணி நீ என்ன மறுக்கறதைக்கூட ஒரு விதத்துல தாங்கிக்க முடியுது, ஆனா போனாப் போகுதுன்னு ஏத்துக்கறத... ம்கூம் தயவு செஞ்சு கிளம்பு. ஏற்கனவே மனசளவுல ரொம்பவும் வேதனைப்பட்டிருக்கேன். இதுக்கு மேலயும் மனசாட்சியே இல்லாம கொடுமைப்படுத்தாத.''

ஹரிவரதனின் வார்த்தைகளை மறுக்கத் தான் தானும் எவ்வளவோ முயன்றாள் வாணி.

ஆனால் கண்களை மறைத்துக் கொண்டு நின்ற கண்ணீரும், நெஞ்சை அடைத்துக் கொண்டு நின்ற துக்கமும் மனதில் உள்ளவற்றை வார்த்தைகளாக வெளியே கொண்டு வர விட்டிருக்கவில்லை.

## 23

வாணி நினைத்திருந்ததே வேறு.

தான் இல்லையென்று ஆகி விட்டால் சில நாட்கள் சிரமப்படுவான்.

பிறகும் கொஞ்சம் கஷ்டம் தான் என்றாலும் முயன்று மனதைத் தேற்றிக் கொண்டு பழைய நினைவுகளிலிருந்து மீண்டு விடுவானென்று நினைத்திருந்த வாணிக்கு ஹரிவரதனின் வார்த்தைகள் முதலில் எல்லையற்ற அதிர்ச்சியையே கொடுத்திருந்தன.

பிறகு அதுவே மெல்ல மெல்ல அளவிட முடியாத ஆனந்தத்தையும்,

வாணியைப் பொறுத்தவரை அவளும் ஹரிவரதனை உயிருக்குயிராக நேசித்தாள்.

பார்த்த முதல் நாளே அவளையே அறியாமல் வந்து உயிருடன் ஒன்றி விட்டவனை அவளாலும் தான் எப்படி மனதார மறுக்க முடியும்.



உடலின் ஒவ்வொரு அணுவிலும் வந்து இரண்டரக் கலந்து விட்டவனை இனி அவளுடைய உயிர் பிரியும் நாளில் அல்லவா அவளிடமிருந்து பிரிக்க முடியும்.

பசுமையென்பதையே அறியாத கடும் பாலைவனமாக இருந்த அவளுடைய வாழ்க்கையை இனிய கானம் பாடும் பட்சிகளும் தென்றலும் வீசக் கூடிய பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலைவனமாக மாற்றியவனல்லவா அவளுடைய ஹரிவரதன்.

இனி அவனை மறுப்பதோ வெறுப்பதோ அது இந்தப் பிறவியில் வாணியால் முடியாதே,

ஆனாலும் தான் முன்பே நடந்து கொண்டதையே மனதில் வைத்து மறுகிக் கொண்டிருக்கும் ஹரிவரதனுக்குத் தன் மனதை எப்படிப் புரிய வைப்பது.

நடப்பிற்கு வந்து பார்த்தவளுக்கு அதற்குப் பிறகு தான் ஹரிவரதன் அங்கு இல்லாதது தெரிந்தது.

அதே நேரம் யாரோ உள்ளே வரும் அரவம் கேட்க திரும்பிப் பார்த்தாள்.

ஸ்மிர்த்தி.

அருகில் வந்த தோழியை நிமிர்ந்து பார்த்தாள் வாணி.

''என்ன...'' - ஸ்மிர்த்தி.

''வா போலாம்'' வாணி.

''ஹரி அண்ணா ஏன் கோபமா கிளம்பிப் போறார். என்னடி பேசு...'' - ஸ்மிர்த்தி.

''கிளம்பலாம்'' - வாணி.

தோழியின் கலங்கி விட்டிருந்த கணகளும் விட்டால் இன்னும் அழத் தயாராக இருக்கிறேன் என்பதைப் போன்ற முக பாவனையும் அதற்கு மேல் ஸ்மிர்த்தியைப் பேச விட்டிருக்கவில்லை.

''சரி வா'' என்று தோழியுடன் கீழே இறங்கி வந்தவள் அங்கு சோபாவில் அமர்ந்திருந்த பெரியம்மாவிடம் மட்டும் ''சரி வர்றேன் பெரியம்மா'' என்று விட்டுத் தோழியைப் பார்த்தாள்.

தோழி என்ன சொல்ல வருகிறாள் என்பது வாணிக்கும் புரிந்தது.

ஆனாலும் அழுது வடிந்த கண்களால் வாணியால் யாரையும் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

தோழியின் நிலை புரிய, ''திரும்பவும் வர்றேன் பெரியம்மா'' என்று வாணியின் கையைப் பிடித்து இழுத்துச் செல்லாத குறையாக வெளியேறியிருந்தாள் ஸ்மிர்த்தி.

கார் கிளம்பியிருக்க, ''ஆபீஸ்க்கு போ'' என்றிருந்தாள் வாணி.

தோழியின் வார்த்தையில் அவளைப் புரியாமல் பார்த்தாள் ஸ்மிர்த்தி.

''என்ன சொன்ன?'' - ஸ்மிர்த்தி.

''ஆபீஸ்க்குப் போ'' - வாணி.

''எதுக்கு?'' - ஸ்மிர்த்தி.

...............

''ரயில்வே ஸ்டேஷனுக்கு லேட்...''

''நான் போகல.''



அப்படிச் சொன்ன வாணியை நம்ப முடியாத ஆச்சரியத்துடன் பார்த்த ஸ்மிர்த்தி, ''நிஜமாவா?'' என்று சந்தோஷத்தில் துள்ளிக் குதிக்காத குறையாகக் கேட்டாள்.

ஆமாம் என்பதைப் போலத் தலையை அசைத்தவளிடம் ''என்ன காரணம்?'' என்று கேட்டாள்.

.............

''வாணி உன்னத்தான்.''

''ஹரியப் பிரிஞ்சு என்னால இருக்க முடியாது.''

தோழியின் வார்த்தைகளில் ஆனந்தத்தின் எல்லைக்கே சென்று விட்டிருந்தாள் ஸ்மிர்த்தி.

காரை ஒரு ஓரமாக நிறுத்தியிருந்தவள் ''வாணி...'' என்று தோழியின் கைகளைப் பிடித்துக் கொண்டவளுக்குக் கண்களும் கூடக் கலங்கி விட்டிருந்தன.

''என்னடி சொல்ற, நிஜமா தான்...''

''ஆமாம், அவரப் பிரிஞ்சு என்னால எங்கயும் போக முடியாது.''

''வாணி... எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குடி. முக்கியமா என்னால் நம்பக்கூட முடியலையே...''

''ஆனா... அண்ணன் ஏன் கோபமாப் போறார்.''

''ப்ளீஸ் இப்ப ஆபீஸ் போ ஸ்மிர்த்தி.''

தோழியின் வார்த்தைகளில் சரிதான் என்று மீண்டும் காரைக் கிளப்பி விட்டிருந்த ஸ்மிர்த்தி, தனது அண்ணனின் அலுவலகத்தில் ''நான் மதியம் வர்றேன்'' என்று

தோழியை மட்டும் இறக்கி விட்டுவிட்டுக் கிளம்பி விட்டிருந்தாள்.

இன்னதென்று வார்த்தைகளால் விலக்கிச் சொல்ல முடியாத ஒருவிதப் படபடப்புடன் அலுவலக அறையை அடைந்த வாணி ஹரிவரதன் அங்கு இல்லாததைக் கண்டாள்.

பிறகு சரிதான் வரட்டும் என்று தன்னிடத்தில் சென்று அமர்ந்து விட்டிருந்தாள்.

எதைப் பற்றியும் யோசிக்க மாட்டேனென்று மூளை வேலை நிறுத்தம் செய்ய ஹரிவரதன் கம்பீரமான உருவம் ஒன்றே வாணியின் உள்ளம் முழுக்க நிறைந்திருந்தது.

அப்படியே எவ்வளவு நேரம் சென்றதோ,

சிலை போல அசையாமல் அமர்ந்து விட்டிருந்தவளால், எந்த வேலையையும் எடுத்துச் செய்ய முடியவில்லை.

வேலை செய்யும் எண்ணம் ஏன் எதைப் பற்றியுமே யோசிக்கும் மனநிலையில்கூட அவள் இருக்கவில்லை என்பது மட்டுமே உண்மை.

மீண்டும் எவ்வளவு நேரம் சென்றதோ,

தனது டேபிளில் இருக்கும் தொலைபேசி ஒலிக்க எடுத்துக் காதில் வைத்தாள்.

எதிர் முனையில் யாரோ எம்.டி.யைக் கேட்க, ''இன்னும் ஆபீஸ்க்கு வரல மதியத்துக்கு மேல கூப்புடுங்க'' என்றிருந்தாள்.

அப்படிச் சொல்லிவிட்டு ரிஸீவரை வைத்தவளுக்கு அதற்குப் பிறகுதான் ஏன் ஹரிவரதனை இன்னும் காணவில்லை என்னும் கோணத்தில் எண்ணம் ஓடியது.



காலையில் நேரத்திலேயே இங்கு வருவதற்காகத் தானே கிளம்பித் தயாராக இருந்தான்.

அப்படியிருக்க ஏன் இன்னும் வந்து சேரவில்லை.

ஏதோ தோன்ற, தொலைபேசியை எடுத்துப் பழைய கம்பெனிக்கு அழைத்தாள்.

உடனே எதிர்முனையில் செக்யூரிட்டி தொடர்பு கொள்ள, ''எம்.டி. இன்னும் அங்க தான இருக்கார்?'' என்று கேட்டாள்.

தான் எண்ணியது சரியே என்பதைப் போல ஹரிவரதன் அங்கு தான் இருக்க, ''ஸார் ஒரு ஃபைல் கேட்டிருந்தார் அங்கயே எடுத்துட்டு வர்றேன்... ம் இப்பப் பத்து நிமிஷத்துல அங்க இருப்பேன்'' என்று ரிஸீவரை வைத்திருந்தாள்.

சொன்னது போலவே பெயருக்கு சில பேப்பர்களை எடுத்துக் கொண்டு கீழே வந்த வாணி, அங்கு தயாராக இருந்த டிரைவரை பழைய கம்பெனிக்கு இப்பொழுது குடோனாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கும் கட்டிடத்திற்கு காரை விடச் சொன்னாள்.

அடுத்த பத்து நிமிடங்களில் வந்து சேர்ந்திருந்தவள், தான் இறங்கிக் கொண்டு டிரைவரைக் கிளம்பிக் கொள்ளச் சொன்னாள்.

''மேடம் நீங்க எப்படித் திரும்பி வருவீங்க, எனக்குப் போய் செய்ய எந்த வேலையுமில்ல. நான் வேணும்னா வெயிட் பண்றேன்'' என்று டிரைவர் சொல்ல,

''இல்ல நீங்க கிளம்பிக்கோங்க. எனக்கு இங்க வேலையிருக்கு'' என்று டிரைவரை அனுப்பியவள் தடதடத்த நெஞ்சுடன் உள்ளே காலடி எடுத்து வைத்தாள்.

ஹரிவரதனை அங்கு காணாது போக சரிதான் உள் அறையில் இருப்பான் என்று நடந்தாள்.

நெஞ்சுக்குள் பந்தயக் குதிரைகள் ஓட, ஹரிவரதன் இருக்கும் அறையின் கதவுக் குமிழியில் கை வைத்துத் திறந்தாள்.

நினைத்தது போலவே ஹரிவரதன் உள்ளே இருக்க, தானும் உள்ளே வந்து கதவைத் தாளிட்டிருந்தாள்.

இருக்கையின் பின்னால் செய்கையற்று சாய்ந்தவாறு கண்களை மூடி அமர்ந்திருந்த ஹரிவரதனும் யாரோ உள்ளே வரும் அரவம் கேட்டு நடப்பிற்கு வந்து பார்க்க, வாணி உள்ளே வந்து கதவை மூடுவது தெரிந்தது.

அதற்குள் ஹரிவரதனிடம் வந்திருந்த வாணி கையிலிருந்த பேப்பர்களை அங்கிருந்த டேபிளின் மீது வைத்துவிட்டு உள்ளம் நடுங்க, உணர்ச்சி பொங்க அவனைப் பார்த்தாள்.

ஆனால் அதற்கு ஹரிவரதனிடமிருந்து எந்த எதிரொலியும் இல்லாததோடு உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடனும் அவன் பார்க்க வாணியால் அதைத் தாங்க முடியவில்லை.

''ஹரி...''

.................

''உங்க வாணி வந்திருக்கேன் ஹரி.''



................

''எங்கூடப் பேச மாட்டீங்களா ஹரி?''

அப்பொழுதும் அவன் எதுவும் பேசாமல் போக, அவனுடைய காலடியில் அமர்ந்து மடியிலிருந்த அவனது கரங்களை தன்னிரு நடுங்கும் கரங்களால் மென்மையாகப் பற்றியிருந்தாள்.

தொடர்ந்த ஹரிவரதனின் மௌனத்தினால் வந்திருந்த கண்ணீர் கண்களை மறைத்திருக்க உள்ளம் நடுங்க நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''என் முட்டாள்த்தனத்தை உணர்ந்துட்டேன் ஹரி, என்ன மன்னிச்சு ஏத்துக்க முடியாதா?''

''நாய்க்கு முழுத் தேங்காய் ஒட்டாதுன்னு சொல்லுவாங்க. அந்த மாதிரி ஆரம்பத்துல என்னாலயும் உங்க அன்பப் புரிஞ்சுக்க முடியாமப் போயிடுச்சு. ஆனா இப்பப் புரிஞ்சுக்கிட்டேன் ஹரி, இத்தன நாளும் செஞ்ச தப்புக்கு நான் என் மனசுக்குள்ள எவ்வளவு வருந்தறேன்னு எனக்கு மட்டும் தான் தெரியும்...''

''நீ இல்லாத வாழ்க்கைல எனக்கும் ஒண்ணுமே இல்லேன்னு சொன்னியேடா, அந்த ஹரி எனக்கு வேணும். என் வாழ்க்கைக்கு நீ வேணும் ஹரி, நீ மட்டும் தான் வேணும். வேற எதுவுமே வேண்டாம்...'' என்றவள் அதற்கு மேல் முடியாமல் அவனுடைய மடியிலேயே முகம் புதைத்துக் கதறி விட்டிருந்தாள்.

எஃகைப் போன்று இறுகி விட்டிருந்த மனதுடன் வீட்டிலிருந்து புறப்பட்ட ஹரி நேராக வந்தது இங்கே தான்.

அத்தனை நாட்களும் வேண்டவே வேண்டாமென்றவள் திடீரென மாற்றிப் பேசவும் அவனால் அதைச் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியாது போயிற்று.

அவன் எதிர்பார்த்தது வேறு.

கிளம்புகிறேன் என்றவள் தனது பயணத்தைத் தள்ளிப் போடுவாள்.

யோசிப்பாள்.

அப்படி யோசித்துக் கூடிய விரைவில் அவனுடைய காதலை முழுமையாகப் புரிந்து கொள்வாள்.

அப்படிப்பட்ட நாளுக்காக அதற்கு எத்தனை நாட்களானாலும் காத்திருக்க அவன் தயாராகவே இருந்தான்.

தன்னுடைய வாணி தூய்மையானவள்,

அவளுக்கு நித்தமொரு நிறம் மாறத் தெரியாது.

யாரையும் கடிந்து பேசத் தெரியாது.

ஏன் பொய் சொல்ல, நடிக்க என எதுவுமே தெரியாது.

பாலைப் போலத் தூய்மையானவள்,

வெகுளித்தனமான குணம் கொண்டவள் என்றெல்லாம் அவளைவிட அவளுடைய சிறப்புகளையே அதிகம் நேசித்துக் கொண்டிருந்தவனுக்கு வாணியின் திடீர் மாற்றம் நம்ப முடியாததாய் இருந்தது.

கூடவே எல்லையற்ற ஏமாற்றத்தையும் கொடுத்திருந்தது.

வாணியும் சராசரிப் பெண் தானா.

இல்லை.

ஒரு போதும் இல்லை.



என் வாணி அப்படிப்பட்டவள் கிடையாது.

அந்த மாதிரி ஒருத்தியை நான் நேசிக்கவில்லை.

என்னுடைய வாணி ஈடு இணையற்றவள்,

தூய்மையே உருவானவள்.

அவளுக்கென்று கொடுக்க ஈடாக இந்த உலகத்தில் எதுவுமே இல்லையென்பதை அவன் உறுதியாக நம்பினான் என்பதால் வாணியின் திடீர் மாற்றத்தை அவனால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

ஏன் தாங்கிக் கொள்ளவும்,

பெயருக்கு, வேறு வழியில்லாமல் போனால் போகிறதென்று தன்னை ஏற்றுக் கொள்பவள் வேண்டாம்.

ஏனோ அதை மட்டும் அவனால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை.

தனக்கு வேண்டியவள் தன்னை உயிருக்கு உயிராக ஏன் அதற்கும் மேலாக நேசிக்கும் வாணி அதை அவள் வார்த்தைகளால், சொன்னால் மட்டும் போதாது.

அதை அவளுடைய ஒவ்வொரு செய்கையிலும் அவள் காட்ட வேண்டுமென்று நினைத்தான்.

அப்படிப்பட்டவன் வாணியின் கதறலில் இளகத் தொடங்கியிருக்க, அவளுடைய தலையை வருடிக் கொடுக்க உயர்ந்திருந்த கரங்களை அப்போதைக்கு வேண்டாமென்று முயன்று கட்டுப்படுத்திக் கொண்டான்.

மேலும் சில நிமிடங்களும் சென்ற பிறகும் கூட அழுகை நிற்காமலிருக்க, ஏனோ அவனாலும் தாங்கிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஆனாலும் வேண்டாமென்று தடுக்கவோ சமாதானப் படுத்தவோ தோன்றாமல் அப்படியே அமர்ந்திருந்தான்.

மேலும் சில வினாடிகளில் தெளிந்திருந்த வாணி நிமிர்ந்து ஹரிவரதனைப் பார்த்தாள்.

''எனக்குத் தெரியும் ஹரி நீங்க எம்மேல கோபமா இருக்கீங்க, மனசாட்சியே இல்லாம நான் உங்கள எப்பிடியெல்லாம் வதைச்சட்டேன் இல்ல?''

''ஆனா அதுக்காக என்ன வெறுத்து ஒதுக்கிடுவீங்களா ஹரி, தண்டிச்சுடுவீங்களா ஹரி?'' என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கேட்டவளை அதே உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் பார்த்தான்.

''சின்ன வயசுலிருந்தே நல்லதையே அனுபவிச்ச தில்ல. அதான் உங்க மூலமா வந்த நல்லதையும் சந் தோஷமான மனப்பக்குவத்தோட ஏத்துக்க முடியாமப் போயிடுச்சுன்னு நினைக்கறேன்.''

''மூடியிருக்கற கதவுக்குப் பின்னாடி நல்லது தான் இருக்கும்னு எதிர்பாக்க விடாத பயம், தயக்கம்...''

''வாழ்க்கைய நம்பிக்கையோட எதிர்கொள்ள முடி யாத அளவுக்கு தாழ்வு மனப்பான்மையும், நமக்கெங்க நல்லது நடக்கப் போகுது. அப்படியே நடந்தாலும் அது நிலைக்குமாங்கற அவநம்பிக்கையும் தான். இத்தனை நாளும் என் நெஞ்சு முழுக்க இருந்தது.''

ஆனா உங்களப் பிரிஞ்சிருந்த இந்த மூணு மாசத்துல நான் அப்படியெல்லாம் நினைக்கவே இல்ல, அப்படியே நினைச்சிருந்தாலும் ரொம்ப அரிதா தான் ஹரி...



அதுக்கும் மேல இன்னொன்னையும் கொஞ்சம் லேட்டா தான் புரிஞ்சுக்கிட்டேன். உங்களோட இருக் கும்போது நான் என் இழப்புகள நினைக்கறதே இல்லேங் கறது தான் அது.''

வாணியின் காதலை யாசிக்கும் கண்களை இயல்பாக எதிர்கொள்ள இப்பொழுது ஹரிவரதனும் சற்றுச் சிரமப் பட்டுத்தான் போனான்.

மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வர அவ னுடைய காலடியில் அமர்ந்திருந்தவள் இப்பொழுது எழுந்து கொண்டிருந்தாள்.

எழ விடாமல் அப்படியே அள்ளித் தனது மார்போடு இறுக அணைத்துக் கொள்ள வேண்டும் போலத் துடித்த மனதை மிகவும் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண் டான் ஹரிவரதன்.

மீண்டும் என்ன தோன்றியதோ ஹரிவரதனின் இருக் கைக்கு முன்னால் வந்து நின்று அவனையே பார்த்தாள்.

''நீங்க என் உயிர் ஹரி.''

''எப்ப நான் உங்கள முதல் தடவையாப் பாத்தேனோ அப்பவே நான் புதுசாப் பிறந்துட்டேன்.''

''ஆனா அது என் புத்தில உறைச்சு மனசு ஏத்துக்க தான் இவ்வளவு நாள் ஆகியிருக்கு.''

''உங்கள மறக்கவோ வெறுக்கவோ இன்னும் எத்தன பிறவிகள் எடுத்து வந்தாலும் என்னால முடியாது ஹரி.''

''ஆனா...''

''ஆனா இந்தப் பிறவிலயே உங்கள மறுத்துட்டேனே.''

''வேண்டாம்னு சொல்லி முட்டாள்த்தனம் பண்ணிட் டேனே.''

''உங்க அன்ப நானே கொன்னுட்டேனே...''

''உங்க நேசமும் காதலும் இல்லாம இனிமேல் என்னால எப்பிடி ஹரி...''

''நான் செஞ்ச தப்புக்கு எனக்குப் பைத்தியம் புடிச் சுடுமோன்னு பயமா இருக்கே...''

''முடியலையே...''

அந்த வினாடியில் இருக்கையிலிருந்து எழுந்து நின் றிருந்த ஹரிவரதன் தனக்கு முன்னே நிற்பவளின் முகத்தை முக்கியமாகக் கண்களை ஊடுருவிப் பார்த் தான்.

அந்தக் கண்களில் தெரிந்த எதுவோ வாணியின் உயிர் நிலையைத் தொட்டு எழுப்பியிருக்க, ''ஹரி...'' என்று நடுங்கும் குரலில் எல்லையற்ற ஆவலுடன் அழைத் தாள்.

அவ்வளவுதான்.

அடுத்த வினாடி காட்டாற்று வெள்ளம் போலப் பொங்கி பெருகி வந்த ஹரிவரதனின் அணைப்பில் துணி போலத் துவண்டு வேரறுந்த கொடியாய் அவன் மீது படர்ந்திருந்தாள்.

இருவருமே சுற்றுப்புறத்தை ஏன் எதையும் உணரும் மனநிலையில் இருக்கவில்லை.

அப்படியே எவ்வளவு நேரம் சென்றதோ,

முதலில் நடப்பிற்கு வந்திருந்தது ஹரிவரதன்.



அப்படி வந்தவன் இன்னும் தனது அணைப்பில் தன்னை மறந்திருந்தவளை சற்று விலக்கி நிறுத்தியிருந் தான்.

ஹரிவரதனின் செயலில் வாணி அவனைப் பார்க்க, சில வினாடிகள் கொடுத்து ஆசுவாசப் படுத்திக் கொண்ட பின் ''கிளம்பு'' என்றிருந்தான்.

வாணியை அழைத்துக் கொண்டு நேராக அவன் சென்ற இடம் அவனுடைய வீடு.

அதாவது பெற்றவர்களிடம்,

இருவருமே இருக்க அவர்களிடம் தங்களுடைய உயிருக்குயிரான காதலைச் சொன்னான்.

அவன் எதிர்பார்த்தது போலவே அவனைப் பெற்ற வர்கள் சிறியவர்கள் இருவரையும் எல்லையற்ற சந் தோஷத்துடன் வாழ்த்த, ''நீங்க எங்களுக்காக, இன் னொன்னையும் செஞ்சு குடுக்கணும்'' என்று கேட்டுக் கொண்டான்.

அப்படி மகன் கேட்டது அவனைப் பெற்றவர்களுக்கு இப்பொழுது எல்லையற்ற அதிர்ச்சியைக் கொடுத் திருந்தது.

ஆனால் அது சில வினாடிகள்தான்.

உடனே மகனின் நிலையை அவர்களால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவன் விரும்பியது போல அன்றே வாணியைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டான் ஹரிவரதன்.

வாணியின் பக்கத்தில் அவளுடைய அத்தை மாமா வந்திருக்க ஹரிவரதனின் பெற்றோர் ஸ்மிர்த்தி என மிக எளிமையாகத் திருமணம் நடந்தேறியது.

அந்த அவசரத் திருமணத்திற்கான காரணமும் மீண்டும் மறுநாளே ஹரிவரதன் வெளிநாடு செல்ல வேண்டியிருந்ததே ஆகும்.

ஆனால் அது மற்றவர்களுக்குத் தான்.

வாணியைப் பிரிந்திருக்க முடியாதது தான் உண்மை யான காரணமென்பதை ஹரிவரதன் மட்டுமே அறிவான்.

கணவனின் அருகில் எதிர்காலக் கனவுகளுடன் தேவதையென ஒளி வீசி நின்ற வாணிக்கு இப்பொழுது உலகமே இன்ப மயமாகத் தெரிந்தது.

மறுநாள் வெளிநாடு கிளம்பிச் செல்லும் ஹரிவரதன் மேலும் பதினைந்து நாட்களில் நாடு திரும்பவிருக்க, அதற்கு மறுநாள் ஏற்கனவே பேசி முடிவு செய்தது போல மிகப் பிரமாண்டமான முறையில் திருமண வரவேற்பை ஏற்பாடு செய்யக் காலில் பம்பரங்களைக் கட்டிக் கொண்டு கிளம்பி விட்டிருந்தனர் அவனைப் பெற்றவர்கள்.

தொடர்ந்து சில நிமிடங்களில் கமலமும், வினாய கமும் கிளம்ப, இனி நீங்களும் என்னைப் பெற்றவர் களைப் போலத்தான் என்ன உதவி எப்பொழுது வேண்டு மானாலும் தயங்காமல் கேளுங்கள் என்று இன்முகத் துடன் அனுப்பி வைத்தான் ஹரிவரதன்.



மனைவியையும் அவ்வாறே விடை கொடுக்கச் செய்தான்.

''ம், இனி நானும் கிளம்ப வேண்டியது தான் இனியும் இங்க நின்னுட்டிருந்தா மரியாதையில்ல.''

ஸ்மிர்த்தி சொல்ல ''தெரிஞ்சா சரி'' என்றான் அவ ளுடைய அண்ணன் ஹரிவரதன்.

ஆனால் வாணிக்கு ஆனந்தத்தில் கண்கள் குளமாகி யிருந்தது.

நன்றிப் பெருக்குடன் தோழியின் கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

''அட என்னடி!''

''நான் உன்ன எவ்வளவோ காயப்படுத்திட்டேன் ஸ்மிர்த்தி என்ன மன்னிச்சுடு...''

''அட இதென்னப்பா இந்த நேரத்துல பழசெல்லாம் முடிஞ்சு போன கதை. அதை இப்ப யாரும் இப்பப் பேசக் கூடாது'' என்றிருந்தாள்.

''அது சரிதான். இனிமேல் பாக்க எத்தனை வேலை களிருக்கு'' என்ற கணவனின் பார்வையில் செங்கொழுந் தாகிப் போனாள் வாணி.

தோழியின் வெட்கத்தைத் தனது அண்ணனை விடவும் தான் அதிகம் ரசித்த ஸ்மிர்த்தி, மனதார மணமக்கள் இருவரையும் வாழ்த்தினாள்.

தொடர்ந்து சில வினாடிகளில் ''சரி நானும் கிளம்ப றேன்'' என்று அவள் விடைபெற்றுக் கொண்டு கிளம்பி யிருந்தாள்.

கடைசியாக மணமக்களும் காரில் ஏறியிருக்க, காரை ஸ்டார்ட் செய்திருந்தான் ஹரிவரதன்.

கார் சீரான பாதையில் செல்லத் தொடங்கியிருக்க தனது இடது கையால் மனைவியின் கரத்தை ஹரிவரதன் பற்றியிருக்க, கணவனின் ஸ்பரிசத்தில் சப்த நாடிகளும் ஸ்தம்பித்துப் போனாள் வாணி.